
# கர்நாடக சங்கீதம்



## ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி
## தரம் -10

அழகியல் கல்வித்துறை
மொழிகள், மானிடவியல், சமுக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

அச்சிடலும் விநியோகமும் - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

# கர்நாடக சங்கீதம்

## ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி
## தரம் - 10

அழகியல் கல்வித்துறை
மொழிகள், மானிடவியல், சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை

அச்சிடலும் விநியோகமும் - கல்வி வெளியீட்டுத்திணைக்களம்

தேசிய கல்வி நிறுவகம்
முதலாம் பதிப்பு : 2007
மீள் பதிப்பு : 2009

எல்லா உரிமையும் இலங்கை அரசினருக்கே

இந்நூல்.கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால், செள்வீள் தனியார் நிறுவனத்தில் அச்சிடப்பட்டு, வெளயிடப்பட்டது

# பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

தற்போதைய ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியானது ஆசிரியர்கள் தமது பாடங்களைக் கற்பிப்பதற்குப் பின்பற்ற வேண்டிய அவசியமான கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகளை மேற்கொள்வதற்கு சிறந்த ஒரு வழியாட்டியாகும்.

இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியானது நீங்கள், உங்கள் வகுப்பறைச் செயற்பாடுகளை மாணவர் - மையக் கற்றலுக்கு ஏற்ற வகையில் ஒழுங்கமைப்பதற்கான வழிகாட்டலை வழங்குகின்றது. இன்றைய வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை மாணவர் மையமாக ஒழுங்கமைப்பதென்பது எமது இலங்கை ஆசிரியருக்கும் வகுப்பறைக்கும் ஒரு புதிய அனுபவமன்று. எவ்வாறாயினும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி மூலம் மாணவர் மையக் கற்றல் - கற்பித்தல் முறைமையியலுக்கு ஒரு புதிய பண்புக் கூறு கிடைக்கிறது.

இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியானது மாணவர்களின் பங்குபற்றுதலை உறுதிப்படுத்தும் வகையில் பாடத்தைத் திட்டமிடுவதற்கு அவசியமான பாதையை வழங்குவதோடு மட்டுமல்லாது அதற்கு அவசியமான சூழலை மதிநுட்பத்துடன் கட்டியெழுப்பவும் உதவுகிறது.

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியின் உள்ளார்ந்த அடிப்படையானது ஆசிரியர் என்பவர் வெறுமனே அறிவை ஊடுகடத்துபவராக அல்லாது அறிவில் மாற்றத்தை ஏற்படுத்துபவராகவும் இருக்க வேண்டும் என்னும் தத்துவத்தைக் கொண்டுள்ளது. இச்செயற்பாடானது மாணவரை கற்பவர் என்னும் நிலையிலிருந்து அறிவைத் தேடுபவர் என்னும் நிலையை அடைவதற்கும், இதன் மூலம் புதிய அறிவை உருவாக்கவும் உதவுகின்றது. ஆகவே, ஆசிரியர் என்பவர் மாணவருக்கு புதிய அறிவை ஆய்ந்தறிந்து கண்டுபிடிப்பதற்கான வழிகாட்டியாகவும் தூண்டியாகவும் செயற்பட வேண்டும்.

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியின் உள்ளார்ந்த தத்துவமும் செயற்பாட்டு வடிவமைப்பும் பழமையான கற்பித்தல் முறைமையியலையும் சிந்தனைகளால் உண்டாகும் தடைகளையும் தகர்த்தெறிய ஆசிரியர்களைத் தூண்டும் என நம்பப்படுகின்றது. எனவே, ஆசிரியர்கள் புதிய கற்பித்தல் அணுகுமுறைகளையும் கற்பித்தல் முறைகளையும் அவசியம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். புதிய ஆயிரமாம் ஆண்டானது மிகப் பரந்த எல்லையற்ற புதிய அறிவின் தோற்றத்தையும் உருவாக்கத்தையும் கண்டுள்ளது. ஆகவே, ஒவ்வொருவரும் தமது புதிய செயற்பாடுகளை ஒரு முகப்படுத்தித் திட்டமிடுவதற்குப் பழைய முறைகளை மாற்றியமைக்க வேண்டிய தேவையுள்ளது.

ஆசிரியர் தனது கற்பித்தல் பணியில் பயன்படுத்தக்கூடிய அடிப்படையான அறிவுறுத்தல்களை வழங்குவதுடன் உயர் அணுகுமுறைகளை நோக்கி அவரை வழிநடத்துவதும் இவ்வகையான ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்களின் ஊடாக எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் ஆசிரியர், இவ் அறிவுரைப்பு வழிகாட்டியை உரிய முறையில் கற்று அதனுடைய நோக்கங்களைக் கொண்டு வகுப்பறையில் உச்ச பயனைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் மூலம், வகுப்பறையை வினைத்திறன் மிக்கதும் தரமானதுமாக்குவதுடன் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை உயர்வடையச் செய்வதற்கும் ஆசிரியர் பெரும் முயற்சி மேற்கொள்ளுவார் என்பது எனது நம்பிக்கையாகும்.

இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியைத் திறம்படத் தயாரித்து வெளியிடுவதற்கு தமது நேரத்தையும் சிறப்புத் திறமைகளையும் பங்களிப்பு செய்த தேசிய கல்வி நிறுவகத்தைச் சேர்ந்த பாட நிபுணத்துவர்களுக்கும் வெளி வளவாளர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

**பேராசிரியர் லால் பெரேரா**
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம

# கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகத்தின் செய்தி

யாவருக்கும் கல்வி என்னும் நோக்கத்தை மையமாகக் கொண்டு எமது அரசு நாட்டிலுள்ள சகல பாடசாலை மாணவர்களுக்கும் இலவசமாகப் பாடநூல்களை வழங்கி வருகின்றது. அத்துடன் ஆசிரியர்களுக்கு ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளை ஆக்கி வழங்குவதானது கற்றல் - கற்பித்தல் செயன்முறையில் பண்புத்தர விருத்தியை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வகுப்பறைக்குள்ளும் அதற்கு வெளியேயும் மாணவர்களின் அறிவுவிருத்திச் செயற்பாட்டுக்கு வழிகாட்டுவோர் ஆசிரியர்களே. மேலும், பாடத்திட்டத்தால் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சி மட்டங்களை நோக்கி மாணவர்களை வழிநடாத்தும் முக்கிய நபரும் ஆசிரியரேயாவார். இந் நோக்கத்தை அடைவதற்கு இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி உங்களுக்குக் கைகொடுக்கும். இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டல்களைக் கற்றுப் பின்பற்றுவதன் மூலம் கற்றல் - கற்பித்தல் செயன்முறையை அதிக பயனுறுதியுடையதாக மாணவர்களுக்கு வழங்கும் பொறுப்பு ஆசிரியர்களாகிய உங்களைச் சார்ந்ததாகும். இப் பொறுப்பை உணர்ந்து செயற்படும் நீங்கள் பெறுமதிமிக்க ஒரு வளம் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

அறிவு, திறன்கள், மனப்பாங்குகள், தேர்ச்சிகள் என்பவற்றையும் வலிமையான சமூக மற்றும் உள்ளார்ந்த திறன்களையும் கொண்ட முழுமையான பிரசைகளை சமூகத்திற்கு வழங்கும் பொறுப்பு உங்களுடையதே. தற்கால உலகின் சவால்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய எதிர்கால சந்ததியை நீங்கள் உருவாக்குவீர்கள் என்பதே என் எதிர்பார்ப்பாகும். உங்கள் ஆற்றலை உறுதியாக்குவதன் மூலம் அவ் எதிர்பார்ப்பை வெற்றிகரமாக்குவதற்கு இவ் அறிவுரைப்பு வழிகாட்டி உங்களுக்கு உதவும் என உறுதியாக நம்புகின்றேன்.

டபிள்யு.எம்.என்.ஜே புஸ்பகுமார

கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்

'இசுருபாய'

பத்தரமுல்ல

| | | |
|---|---|---|
| பணிப்பு | - | பேராசிரியர் J.W.விக்கிரமசிங்க.<br>பணிப்பாளர் நாயகம்<br>தேசிய கல்வி நிறுவகம். |
| மேற்பார்வையும் வழிகாட்டலும் | - | திரு. விமல் சியம்பளாகொட<br>உதவிப்பணிப்பாளர் நாயகம்<br>மொழிகள், மனிடவியல், சமூக விஞ்ஞானபீடம்<br>தேசிய கல்வி நிறுவகம்.<br><br>திரு.சுதத் சமரசிங்க<br>பணிப்பாளர்<br>அழகியல் துறை<br>தேசிய கல்வி நிறுவகம்<br><br>திரு. து. இராசேந்திரம்<br>சிரேஷ்ட விரிவுரையாளர் - கல்வித்துறை<br>இலங்கை திறந்த பல்கலைக்கழகம். |
| ஆக்கியோர் | - | திருமதி. சுனேத்திரா அன்ரோனீனா ஜோண் ஜெஸ்லி<br>செயற்றிட்ட அதிகாரி<br>செயற்றிட்டத் தலைவர் - தமிழ்மொழிமூல அழகியல் பாடநெறிகள்<br>அழகியல்துறை<br>தேசிய கல்வி நிறுவகம்.<br><br>திருமதி. தேவிகராணி முருகுப்பிள்ளை<br>பிரதிக்கல்விப்பணிப்பாளர் (இளைப்பாறிய)<br>திருகோணமலை.<br><br>திருமதி. ய. பாலேஸ்வரன்<br>ஆசிரிய ஆலோசகர் - கொழும்பு<br><br>திருமதி. கமலராணி ஜெயபாலசிங்கம்<br>ஆசிரிய ஆலோசகர் - யாழ்ப்பாணம்<br><br>திரு. வை. கணேசலிங்கம்<br>ஆசிரிய ஆலோசகர் - களுத்துறை<br><br>திருமதி. P. M. M. சில்வா<br>உதவிக் கல்விப் பணிப்பாளர், மன்னார்<br><br>திருமதி. C. V. மகேந்திரஜோதி<br>ஆசிரிய ஆலோசகர் - திருகோணமலை<br><br>திருமதி. C. C. வினித்தா யேசுரட்ணம்<br>ஆசிரியை, புனித அன்னம்மாள் ம.ம.வி, வத்தளை.<br><br>செல்வி. ரஜனி நடராஜா<br>உதவிக் கல்விப் பணிப்பாளர் - மட்டக்களப்பு<br><br>செல்வி. க. கந்தையா<br>உதவிக் கல்விப் பணிப்பாளர், வவுனியா<br><br>திருமதி. ஜெகதாம்பிகை கிருபானந்தமூர்த்தி<br>ஆசிரியை, இந்துக்கல்லூரி கொழும்பு - 04. |
| பதிப்பாசிரியர் | - | திருமதி. சுனேத்திரா அன்ரோனீனா ஜோண் ஜெஸ்லி<br>செயற்றிட்ட அதிகாரி<br>செயற்றிட்ட தலைவர் - தமிழ்மொழி மூல அழகியல் பாடநெறிகள்<br>அழகியல் துறை<br>தேசிய கல்வி நிறுவகம் |

# உள்ளடக்கம்


பக்கம்

பகுதி - I

10.1.0. பாடத்திட்டம்

10.1.1. அறிமுகம் 03

10.1.2. பாடத்திட்டத்தின் நோக்கங்கள் 04

10.1.3. வகுப்பிற்குரிய தேர்ச்சிகள் 05

10.1.4. பாடசாலைக் கொள்கைகளும் நிகழ்ச்சித்திட்டங்களும் 06

10.1.5. தர உள்ளீடு 08

10.1.6. கற்றல் - கற்பித்தலுக்கான நேரஒதுக்கீடு 09

10.1.7. பாடத்திட்டம்

- தேர்ச்சி 10
- தேர்ச்சிமட்டம்
- விடய உள்ளடக்கம்

பகுதி - II

10.2.0 செயற்பாடுகளின் தொடர்

10.2.1. கற்றல் - கற்பித்தல் முறை விளக்கம் 23

10.2.2. பொருளடக்கம் - செயற்பாடுகள் 26

10.2.3. செயற்பாடுகளின் தொடர் 29

பகுதி - III

10.3.0. கணிப்பீடும் மதிப்பீடும்

10.3.1. கணிப்பீடும் மதிப்பீடும் - விளக்கம் 271

10.3.2. கற்றல் - கற்பித்தலை மேலும் விரிவுபடுத்தலுக்கான கருவிகள் 273

## பகுதி I

# பாடத்திட்டம்

## 10.1.1 அறிமுகம்

சமூகமாற்றத்தோடு கலைத்திட்டமாற்றம் ஏற்படுவது இன்றியமையாததொன்றாகும். சமூகத்தேவைகள் மாறுவதற்கமைய கலைத்திட்டத்திலும் மாற்றங்கள் காலத்திற்குக் காலம் செய்யப்படுவதுண்டு. இதனை அடிப்படையாகக் கொண்டு பாடசாலைக் கலைத்திட்டமானது தற்காலத் தேவைகட்கமைய அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என்பது கல்வியியலாளர்களின் ஏகோபித்த கருத்தாகும்.

"நாதமே பிரம்மம், இறைவன் நாதவடிவினன்" 'நாதோ பாசனை செய்தால்' இறைவனை அடையலாம் என்பது முன்னோர் கூற்று. இக்கூற்றுக்கமைய சங்கீதமும்மூர்த்திகள் கர்நாடக இசைக்கும், தேவாரமுதலிகள் பண்ணிசைக்கும் சாதனையில் செய்து காட்டியுள்ளார். இசையைக் கற்பதன் மூலம் நன்மனப்பாங்கு விருத்தி பெற்ற ஒரு சமூகத்தை உருவாக்க வாய்ப்பு ஏற்படுகிறது.

மாணவர் விருப்பத்தோடு கற்றலில் ஈடுபடுவதற்கும் இரசித்தல், ஆக்கத்திறன், செயன்முறை, அறிமுறை, கலாசாரப்பின்னணி ஆகியவற்றின் அடிப்படையில் கற்றல் தேர்ச்சிகள் தீர்மானிக்கப்பட்டு அவற்றிற்கமைய இக்கலைத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. கனிஷ்ட இடைநிலை பாடத்திட்டத்தின் மூலம் மாணவர் பெற்றுக்கொண்ட அடிப்படை அறிவை நிலைநிறுத்துவதோடு சிரேஷ்ட இடைநிலை வகுப்புக்களில் கற்கவேண்டிய கற்றல் தேர்ச்சிகளை வளர்ப்பதற்குரிய வகுப்பாகவும் 10ஆம் தரம் அமைகிறது. கர்நாடக சங்கீதத்தில் தேர்ச்சி பெற்று உயர்தர வகுப்புக்களில் இப்பாடத்தினைக் கற்பதற்குத் தயார்படுத்தக்கூடிய முறையில் இச்சிரேஷ்ட இடைநிலைப் பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இத்தேர்ச்சி மட்டப் பாடத்திட்டமானது மாணவர்கள் விடயங்களைக் கண்டுபிடிக்கும் சந்தர்ப்பங்களை அதிகரிப்பதற்கும், கற்றலானது கூடியளவு மாணவர் மையமாக்கப் படுவதற்கும் கற்றல் - கற்பித்தல் குறிக்கோள்களை மிகத்தெளிவாகவும், மாணவர்கள் கற்றலுக்கு விருப்பத்தோடு ஈடுபடுவதற்கும் ஏற்றவகையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்கள் பாடவிடயங்கள் தொடர்பாகத் தம்மை தற்காலப்படுத்துவதோடு அறிமுகஞ் செய்யப்பட்டுள்ள தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்கள் என்பனவற்றை விளங்கிக்கொண்டு மாணவர்களிடம் இயல்பாகவுள்ள திறன்களை உபயோகித்து தாமே தொழிற்பட்டு முன்னேறும் வகையில் அவர்களுக்கு கற்றல் அனுபவங்களைப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்ற வகையில் திட்டங்களை வகுக்கக்கூடிய திறன்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

## 10.1.2. பாடத்திட்டத்தின் நோக்கங்கள்

01. கர்நாடக சங்கீதத்தின் அறிமுறை சார்ந்த அறிவினை விருத்தி செய்வதன் மூலம் பாடும் திறன், இரசனை, விமர்சிக்கும் திறன் ஆகியவற்றை வளர்த்தல்.

02. கர்நாடக சங்கீதத்தின் செய்ம்முறைத்திறனை விருத்தி செய்வதன் மூலம் ஆற்றுகைத்திறன், உருப்படிகளைப் பாடுதல், இசையமைத்தல் ஆகியவற்றை விருத்தி செய்தல்.

03. கர்நாடக இசையை இரசித்து அனுபவிக்கும் திறனை விருத்தி செய்தலும், ஏனைய இசை வகைகளை மதித்தலும் இரசித்தலும்.

04. கர்நாடக இசையின் தோற்றம், வளர்ச்சி, அதன் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தோர் என்பவற்றை அறிந்து, சமூக கலாசார விழுமியங்களைப் பேணவும், ஆய்வுகளை மேற்கொள்ளவும் ஊக்குவித்தல்.

05. அறிவு, திறன், மனப்பாங்கு, விழுமியங்கள் என்பன அமையப்பெற்று சமநிலை ஆளுமையை விருத்தி செய்தல்.

06. இசை மூலம் தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்கம், புரிந்துணர்வு என்பவற்றை மேம்படுத்தல்.

## 10.1.3. வகுப்பிற்குரிய தேர்ச்சிகள்

1.0 இசை நிகழ்ச்சிகளில் இரசித்தவற்றை வெளிப்படுத்துவார். (சாஸ்திரிய இசை, வாத்திய இசை, நாட்டுக்கூத்துப்பாடல்கள்)

2.0 பல்வேறு இசை நிகழ்ச்சிகளைத்தாமே தயாரிப்பதன் மூலம் தமது ஆற்றுகைத்திறனை வெளிப்படுத்துவார்.

3.0 இசை உருப்படிகளைச் சுருதி, இராக தாளத்துடன் பாடிக்காட்டுவார்.

4.0 கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார்.

5.0 கர்நாடக இசையின் வளர்ச்சிக்கு வாக்கேயகாரர்கள் ஆற்றிய பங்களிப்பினை மதிப்பிடுவார்.

6.0 கர்நாடக இசையின் தோற்றம், வளர்ச்சி தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வார்.

## 10.1.4. பாடசாலைக் கொள்கைகளும் நிகழ்ச்சித்திட்டங்களும்

கர்நாடகசங்கீத பாடங்களை வகுப்பறையில் கற்பிப்பதுடன் வகுப்பறைக்கு வெளியேயும் இணைப்பாட விதானச் செயற்பாடுகளை உள்ளடக்கும் வகையில் பாடசாலைக் கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் வகுத்துக் கொள்ளல் விரும்பத்தக்கதாகும். குறிப்பாகக் கர்நாடகசங்கீதத்திற்கு வாரத்திற்கு 03 பாடவேளைகளே ஒதுக்கப்பட்டிருப்பதால் இத்தகைய இணைப்பாடவிதானச் செயற்பாடுகளை ஒழுங்கு செய்வதன் மூலம் நாம் ஏற்கனவே குறிப்பிட்ட குறிக்கோள்களையும் தேர்ச்சிகளையும் அடையக்கூடியதாக இருக்கும்.

இவ்வாறு பாடசாலைக் கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் திட்டமிடும்பொழுது பாடசாலையில் உள்ள வளங்களும், மாணவர்களிடையே காணப்படும் தனியாள் வேறுபாடுகளும் கருத்திற்கொள்ளப்படுதல் வேண்டும்.

### நேரசூசி

கர்நாடகசங்கீதம் அறிமுறையும், செய்ம்முறையும் இணைந்த ஒரு பாடமாகும். அறிமுறை அறிவில் மட்டும் தேர்ச்சி பெறல் பயனளிக்காது. மாணவர் செய்ம்முறையில் உயர் தேர்ச்சி மட்டத்தை அடையவேண்டும் என்பதால் நேரசூசியில் அதிக பாடவேளைகள் செய்ம்முறைப் பயிற்சிக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. பாடசாலையில் உள்ள வசதிக்கேற்ப செய்ம்முறைப் பயிற்சிக்காக இரு பாடவேளைகள் தொடர்ச்சியாகவும் வழங்கப்படலாம்.

### ஆசிரியர் தகைமைகள்

கர்நாடகசங்கீத பாடத்தைக் கற்பிப்பதற்கு இத்துறையில் முறைப்படி பயிற்சி பெற்றவர்களே பொருத்தமானவர்களாவர். பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இல்லாத பட்சத்தில் இப்பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவர், கர்நாடகசங்கீதத்துறையில் நிபுணத்துவம் பெற்ற மற்றொரு ஆசிரியரது உதவியைப் பெறல் இன்றியமையாததாகும்.

### அதிபரின் கற்பித்தல் தலைமைத்துவப்பங்கு

பாடசாலை அதிபர் ஒருவர் முகாமைத்துவத் தலைமைத்துவத்தோடு கற்பித்தல் தலைமைத்துவம் உடையவராகவும் இருத்தல் வேண்டும். எனவே கர்நாடக சங்கீதத்தினைக் கற்பிப்பதற்கு பயிற்சி பெற்ற ஆசிரியர் ஒருவரைப் பெற்றுக்கொள்ளல், இப்பாடத்தைக் கற்பிப்பதற்கென தனியான ஓர் அறையை ஒழுங்கு செய்தல், தேவைப்படும் தரஉள்ளீடுகள், பாடத்திட்டம், வழிகாட்டி நூல்கள் முதலியவற்றைப் பெற்றுக் கொடுத்தல் அவருடைய கடமையாகும்.

### இணைப்பாட விதானச் செயற்பாடுகள்

இவை தொடர்பான சில ஆலோசனைகள் இங்கு தரப்படுகின்றன.

01. பாடசாலை நாளாந்த செயற்பாடுகளுடன் பொறுத்தமான இடங்களில் இசையையும் சேர்த்துக் கொள்வதற்கான செயற்றிட்டங்கள் அதிபரால் உருவாக்கப்படுதல்.
    உதாரணமாகப் பாடசாலைக்கீதம், தேசிய கீதம், தமிழ்மொழி வாழ்த்து, பிரார்த்தனை பாடல்கள்.

02. பாடல்களைக் கற்பிக்கும்போது ஒன்றிணைந்த தன்மை பேணப்பட வேண்டும் என்பது வலியுறுத்தப்படுவதால் சங்கீத ஆசிரியருக்கும் ஏனைய ஆசிரியர்கட்கும் இடையே தொடர்பிருப்பது இன்றியமையாதது ஆகும். இதற்கான ஏற்பாடுகள் அதிபரின் ஊடாக செய்யப்படுதல் வேண்டும்.
    உதாரணம்: தமிழ்மொழி ஆசிரியர் செய்யுள் கற்பிப்பதற்கு இசை ஆசிரியரின் உதவியைப் பெறலாம். இதுபோன்று ஏனைய பாட ஆசிரியர்களின் உதவியை இசை ஆசிரியர் பெறலாம்.

03. வருடத்தொடக்கத்திலேயே இணைப்பாடவிதானச் செயற்பாடுகளுக்கான திட்டம் வகுக்கப்படல். இலக்கிய மன்றங்கள், வகுப்பறை மாணவர் மன்றங்கள், இசை மன்றங்கள் போன்றவற்றை உருவாக்கி இசை நிகழ்ச்சிகளுக்கு முக்கியத்துவம் வழங்குதல்.

04. இவை தவிர வருடாந்த பாடசாலை வைபவங்களாகக் கொண்டாடப்படும் பரிசளிப்பு விழா, கலைவிழா, தமிழ்மொழித்தினவிழா, இலக்கியவிழா, சமயவிழாக்கள், இசை மன்றத்தின் இசைப்போட்டிகள் முதலானவற்றில் மாணவர் பங்குபற்றுவதற்கு மட்டுமன்றி தாமே சுயமாக இசை நிகழ்ச்சிகளை ஆக்கிக் கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்படுதல்.

05. சமுதாயத்தைப் பாடசாலைக்குள் கொண்டு வருவதற்கும் பாடசாலையை சமுதாயத்திற்குள் கொண்டு செல்வதற்கும் கலை, கலாசார நிகழ்ச்சிகள் ஊடகமாகக் கருதப்படுகின்றன. எனவே இத்தகைய நிகழ்ச்சிகளில் மாணவர் பங்களிப்புச் செய்வதற்கு வசதியும் வாய்ப்புகளும் வழங்கப்படுதல்.

06. இசை தொடர்பான கண்காட்சி ஒழுங்கு செய்யப்படுதல் மாணவர்களுடைய ஆக்கத்திறன் விருத்திக்கும் நயக்கும் திறனுக்கும் துணைபுரியும்.

07. நாடக இசை, நாட்டார் இசை போன்றவற்றை கற்பிக்கும்போது பாடசாலைச் சூழலில் உள்ள இசைக்கலைஞர்களின் உதவியை நாடுதல்.

08. சங்கீத வாக்கேயகாரர்களின் தினத்தைக் கொண்டாடுதல்.

09. வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் மாணவர் பங்குபற்றக் களம் அமைத்துக் கொடுத்தல்.

## 10.1.5. தர உள்ளீடுகள் (கற்பித்தல் உபகரணங்கள்)

கர்நாடக சங்கீதப்பாடக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளின்போது கீழ்க்காணப்படுகின்ற தர உள்ளீடுகளைப் பயன்படுத்துவது விரும்பத்தக்கதாகும்.

- சுருதிப்பெட்டி அல்லது தம்புரா
- ஹார்மோனியம் அல்லது ஆர்கன் *(Organ)*
- ஒலிப்பதிவுக்கருவி
- ஒலிப்பதிவு நாடா (அழகியற்கலை, இசை, நடனம், நாடகம், வில்லுப்பாட்டு, வாத்திய இசை, இசைக்கச்சேரி, இசை உருப்படிகள், வெவ்வேறு சமயப் பாடல்கள், இசைநாடகம், நாட்டிய நாடகம், நாட்டுக்கூத்து)
- வானொலி
- இசைக்கருவிகள் (தோல், துளை, நரம்பு, கஞ்சற கருவிகள்)
- இசை வெளியீடுகள் (நூல்கள், சஞ்சிகைகள்)
- பிரிஸ்டல் அட்டைகள் (விளக்கப்படங்கள், விளக்க அட்டைகள் தயாரித்தல்)
- டிமை தாள்கள்
- நிறப்பேனைகள்
- தட்டச்சுக் கடதாசி *(Typing Sheet)*
- அச்சுப்பிரதிக் கடதாசி *(Photocopy paper)*
- கத்தரிக்கோல்
- பெயர்ப்பலகை
- மேல் தலைஎறியி *(OHP)*
- ஒளி ஊடுகடத்தும் கடதாசி
- தொலைக்காட்சிப்பெட்டி
- ஒளிப்பதிவுக்கருவி
- ஒளிப்பதிவு நாடா (அழகியற்கலை, இசை, நடனம், நாடகம், வில்லுப்பாட்டு, வாத்திய இசை, இசைக்கச்சேரி, இசை உருப்படிகள், வெவ்வேறு சமயப் பாடல்கள், இசைநாடகம், நாட்டிய நாடகம், நாட்டுக்கூத்து)
- கணினி
- இணையம்

10.1.6. கற்றல் - கற்பித்தலுக்கான நேர ஒதுக்கீடு

தரம் - 10

பாடத்திட்டம்

| பிரதான தேர்ச்சிகள் | பாடவேளைகள் |
|---|---|
| 1. தேர்ச்சி 1.0 - (இரசித்தல்) | 06 |
| 2. தேர்ச்சி 2.0 - (ஆக்கத்திறன்) | 06 |
| 3. தேர்ச்சி 3.0 - (செய்ம்முறை) | 40 |
| 4. தேர்ச்சி 4.0, 5.0 - (அறிமுறை) | 29 |
| 5. தேர்ச்சி 6.0 - (கலாசாரப்பின்னணி) | 09 |
| மொத்தம் | 90 |

## 10.1.7. பாடத்திட்டம் - தரம் 10

| தேர்ச்சி / தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | பாட வேளைகள் |
|---|---|---|
| 1.0<br>இசை நிகழ்ச்சிகளில் இரசித்தவற்றை வெளிப்படுத்துவார்.<br><br>1.1<br>வெவ்வேறு இசை நிகழ்ச்சிகளின் தனித்துவமான அம்சங்களை இனம் கண்டு வெளிப்படுத்துவார். | • சாஸ்திரிய இசை<br>- பதம்<br>- ஸ்வரஜதி<br>* சாஸ்திரிய இசை உருப் படிகளுள் பதம், ஸ்வரஜதி ஆகியவற்றை இனங்காணல்.<br>* அங்க வேறுபாடுகள்<br>* உதாரணங்கள்<br>* ஸ்வரஜதி, பதம்<br>- இராகம்<br>- தாளம்<br>- இயற்றிய மகான்கள்<br>- பதத்தின் ரஸம், கருத்து | 01 |
| | • வாத்திய இசை<br>- புல்லாங்குழல்<br>- வீணை<br>- மிருதங்கம்<br>* அமைப்பு<br>* ஒலிவேறுபாடு<br>* வாத்தியப்பிரிவு<br>* கச்சேரிகளில் இவ்வாத்தியங்களின் பங்கு<br>* பிரபல்யமான கலைஞர்கள் | 01 |
| | • நாட்டுக் கூத்துப் பாடல்கள்<br>உ-ம் : காத்தவராயன் கூத்து அரிச்சந்திர புராணம் ஞானசவுந்தரி வாலிவதம்<br>* நாட்டுக்கூத்துப் பாடல்களை இனங்காணல்.<br>* நாட்டுக்கூத்துப் பாடல்களில் கூறப்படும் கதைச் சம்பவங்கள்<br>* நாட்டுக்கூத்துப் பாடல்களில் வரும் தாள, ஜதிகள்<br>* இசையமைப்பு<br>* நாட்டுக்கூத்துக் கலைஞர்கள் | 01 |

| தேர்ச்சி / தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | பாட வேளைகள் |
|---|---|---|
| 1.2<br>இசை நிகழ்ச்சிகளில் தாம் அனுபவித்தவற்றை விமர்சிப்பார். | • சாஸ்திரிய இசை<br>- பதம்<br>- ஸ்வரஜதி<br><br>• வாத்திய இசை<br>- புல்லாங்குழல்<br>- வீணை<br>- மிருதங்கம்<br><br>• நாட்டுக்கூத்துப் பாடல்கள்<br>* நிகழ்ச்சிகளைப் பார்த்தல் / கேட்டல்<br>* பார்த்த அல்லது கேட்ட நிகழ்ச்சிகள் தொடர்பான அனுபவப் பகிர்வு (நிகழ்ச்சியின் தன்மை, தரம், வெளிப்பாடு, ஒத்திசைவு, நிகழ்ச்சியின் குறை, நிறை...)<br>* விமர்சனக் கட்டுரை | 03 |
| 2.0<br>பல்வேறு இசை நிகழ்ச்சிகளைத் தாமே தயாரிப்பதன் மூலம் தமது ஆற்றுகைத் திறனை வெளிப் படுத்துவார். | | |
| 2.1<br>இசை நிகழ்ச்சிகளைத் தாமே தயாரிப்பார். | • சிறுவர் பாடல்களுக்கு மெட்டமைத்தல்<br>* மாணவர் தரத்திற்கேற்ற பாடல்.<br>* சங்கராபரணம், மோகனம், ஆனந்தபைரவி போன்ற இராகங்களில் மெட்டமைத்தல். | 02 |
| | • வில்லுப்பாட்டு<br>* கதை<br>* கதைக்கேற்ற பாடல்கள்<br>* வில்லுப்பாட்டிற்கேற்ற கருவிகள்<br>* வில்லுப்பாட்டுத் தயாரித்தல். | 02 |

| தேர்ச்சி / தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | பாட வேளைகள் |
|---|---|---|
| 2.2<br>நிகழ்ச்சிகளைக் கூட்டாகத் தயாரிப்பதன் மூலம் கூட்டுமனப் பாங்கினை வெளிப்படுத்துவார். | • வருட இறுதியில் மாணவர் ஆக்கங்களைக் கொண்ட நிகழ்ச்சிகள்.<br>- நிகழ்ச்சிகள்<br>உ-ம்: தனி இசை, குழுஇசை,பல்லியம், நாடகம், வில்லுப்பாட்டு போன்ற நிகழ்ச்சிகள்<br>* திட்டமிடல்<br>* பயிற்சி<br>* மேடையேற்றல் | 02 |
| 3.0<br>இசை உருப்படிகளைச் சுருதி, இராக, தாளத்துடன் பாடிக் காட்டுவார். | | |
| 3.1<br>இராகங்களின் ஆரோகண, அவரோகணங் களை ஸ்வரஸ்தான சுத்தத்துடன் பாடுவார். | • பின்வரும் இராகங்களின் ஆரோகண அவரோகணம்.<br>- சங்கராபரணம்<br>- மலஹரி<br>- ஹம்சத்வனி<br>- சுத்தசாவேரி<br>- பிலஹரி<br>- மோகனம்<br>- மத்யமாவதி<br>- கல்யாணி<br>- கமாஸ்<br>- மாயமாளவகௌளை<br>* ஸ்வரஸ்தானசுத்தம் | 02 |
| 3.2<br>அப்பியாசகான உருப்படிகளை இராக, தாளத்துடன் பாடுவார். | • சப்த தாள அலங்காரம்.<br>* அலங்காரங்கள் அமைந்துள்ள தாளங்களின் அங்க அடையாளங்கள், மொத்த அட்சரங்கள்.<br>* தாளம் போடும் முறை<br>* இராகம்<br>* தாளம்<br>* ஸ்வரஸ்தான சுத்தம்<br>* 3 காலப் பயிற்சி | 05 |

| தேர்ச்சி / தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | பாட வேளைகள் |
|---|---|---|
| | • கீதங்கள்<br>- சிவபெருமானே - மத்யமாவதி<br>- வரவீணா - மோகனம்<br>- ஸ்வாமிநாதா - சுத்தஸாவேரி<br>- ஏழுமலை - சங்கராபரணம்<br>- அன்பேதான் - பிலஹரி<br>- கணநாதா குணம் நீதா - மலஹரி<br>* இராகம்<br>* தாளம்<br>* ஸ்வரம்<br>* ஸாகித்யம் | 09 |
| | • ஸ்வரஜதி<br>- சம்போமஹாதேவா - கமாஸ்<br>* அங்கவேறுபாடு<br>* இராகம்<br>* தாளம்<br>* ஸ்வரம்<br>* ஸாகித்யம் | 03 |
| | • வர்ணம்<br>- நின்னுகோரி - மோகனம்<br>அல்லது<br>- ஆலிலைமேல் - மோகனம்<br>அல்லது<br>- ஸாமிநின்னே - சங்கராபரணம்<br>* இராகம், தாளம்<br>* ஸ்வரம், ஸாகித்யம்<br>* 1ஆம், 2ஆம் காலப் பயிற்சி | 06 |
| 3.3<br>இசை உருப்படிகளை இராக, தாளத்துடன் பாடுவார். | • கீர்த்தனை<br>- இந்த இன்பம் - பிலஹரி<br>- மூலாதாரமூர்த்தி - ஹம்சத்வனி<br>- ஸ்ரீராஜ ராஜேஸ்வரி - கல்யாணி<br>* கருத்து<br>* அமைப்பு<br>* இராகம்<br>* தாளம்<br>* பாவம்<br>* உச்சரிப்புத் தெளிவு | 06 |

| தேர்ச்சி / தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | பாட வேளைகள் |
|---|---|---|
| | • திருப்புகழ்<br>- வசனமிகவேற்றி<br>- திமிரவுததி<br>- நாடித்தேடி<br>* இயற்றியவர்<br>* அமைப்பு<br>* தலம்<br>* இராகம்<br>* தாளம்<br>* பாவம்<br>* உச்சரிப்பு | 03 |
| | • தேவாரம்<br>- அங்கமும் வேதமும்<br>- தாயினும் நல்ல<br>- என்ன புண்ணியம்<br>* பண்<br>* இராகம்<br>* தாளம்<br>* அருளியவர்<br>* தலம்<br>* சந்தர்ப்பம்<br>* பொழிப்பு | 03 |
| | • அவரவர் சமயத்திற்கேற்ற பாடல்<br>உ-ம் : மாணிக்க வீணை<br>தலைவா உனை வணங்க<br>இறைவனிடம் கையேந்துங்கள்<br>* பாடலின் இயல்பு<br>* பக்தி உணர்வு<br>* சுருதிசுத்தம்<br>* இராகம், தாளம் | 01 |
| | • தாளத்தில் அமைந்த ஸ்வர சஞ்சாரங்களைப் பார்த்துப் பாடல்.<br>- மாயாமாளவகௌளை<br>- மோகனம்<br>* இராகங்களில் அமைந்த ஸ்வரக் கோர்வைகள்<br>* இராகம்<br>* தாளம்<br>* ஸ்வரஸ்தானசுத்தம் | 02 |

| தேர்ச்சி / தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | பாட வேளைகள் |
|---|---|---|
| 4.0<br>கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார். | | |
| 4.1<br>கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களை விளக்குவார். | • சங்கீதம்<br>• நாதம் (இருபிரிவுகள்)<br>• சுருதி (பிரிவுகள், சுருதி சேர்க்கும் ஸ்வரங்கள்)<br>• ஸ்வரம் (பெயர்கள், தமிழிசைப் பெயர்கள்)<br>• பிரக்ருதி, விக்ருதிஸ்வரங்கள்<br>• ஸ்வரஸ்தானம்<br>• ஆரோகண, அவரோகணம்<br>• குறில், நெடில் ஸ்வரங்கள்<br>• ஆவர்த்தம்<br>• அட்சரகாலம், லயம்<br>• தாது, மாது<br>• ஸ்தாயி<br>• திஸ்ர, சதுஸ்ர நடைகள்<br>• நிபந்தம், அநிபந்தம்<br>• 35 தாள விளக்கம்<br>• ஷடங்கம்<br>• திரியாங்கம்<br>• லகுவின் ஜாதி பேதம்<br>• சப்த தாளங்களும் அங்க அடையாளங்களும்<br>  * அரும்பத விளக்கம் | 04 |
| 4.2<br>இராகத்தின் பிரிவுகளைக் குறிப்பிடுவார்<br><br>03 | • ஜனக, ஜன்னிய இராக விளக்கம்<br>- ஜனக, ஜன்னிய இராக விளக்கங்கள்<br>- ஜனக இராகத்திற்கு இருக்க வேண்டிய இலட்சணங்கள்<br>- ஜனக இராகங்களின் தொகை<br>- ஜன்னிய இராகங்கள்<br><br>• ஜன்னிய இராகப் பிரிவுகள்<br>- உபாங்கம், பாஷாங்கம், வர்ஜம், வக்ரம்<br>- நிஷாதாந்திய, தைவதாந்திய, பஞ்சமாந்தியம் | |

| தேர்ச்சி / தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | பாட வேளைகள் |
|---|---|---|
| 4.3<br>பண்ணிசையின் சிறப்பினை விளக்குவார். | • பண்ணிசை<br>* பண்கள் தோன்றிய வரலாறு பண்களும், ஆலயங்களும்.<br>* பண்ணிசையை வளர்த்தவர்கள்<br>* பண்கள் குறிக்கும் கர்நாடக இராகங்கள் | 02 |
| 4.4<br>இராகங்களின் இலட்சணங்களை விளக்குவார். | • தோடி<br>• கரஹரப்பிரியா<br>• கல்யாணி<br>• பிலஹரி<br>• மாயாமாளவகௌளை<br>• மோகனம்<br>• சங்கராபரணம்<br><br>* ஜனக இராகமா, ஜன்னிய இராகமா என இனங்காணல்.<br>* மேளஎண் (ஜனகராகம்)<br>* ஜன்னிய இராகம் (தாய் இராகம்)<br>* ஆரோகண, அவரோகணம்<br>* ஸ்வரஸ்தானங்கள்<br>* விசேஷ பிரயோகங்கள்<br>* ஜீவ, அம்ச, நியாசஸ்வரங்கன்<br>* உருப்படிகள்<br>* சஞ்சாரங்கள்<br>* இராகங்களைப் பாடுவதில் பிரபல்யமானவர்கள்.<br>* ஏனைய அம்சங்கள் | 06 |
| 4.5<br>இசைக்கருவிகளின் அமைப்பு, பயன்பாடு பற்றி விளக்குவார். | • வீணை<br>• தம்புரா<br>• புல்லாங்குழல்<br>• நாதஸ்வரம்<br>* வாத்தியப்பிரிவு<br>* அமைப்பு<br>* படம்வரைந்து பாகம் குறித்தல்<br>* வாசிக்கும் முறை<br>* சுருதி சேர்க்கும் முறை<br>* சிறப்பம்சங்கள்<br>* பிரபல்யம் பெற்ற வித்துவான்கள்<br>* கச்சேரிகளில் இவ்வாத்தியங்களின் பங்களிப்பு | 05 |

| தேர்ச்சி / தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | பாட வேளைகள் |
|---|---|---|
| 4.6<br>உருப்படிகளின் இலட்சணங்கள் பற்றி விளக்குவார். | • ஜதீஸ்வரம்<br>• ஸ்வரஜதி<br>• கீதம்<br>• வர்ணம் (தானவர்ணம், பதவர்ணம்)<br>• பதம்<br>* அமைப்பு<br>* சிறப்பு, தனித்துவம்<br>* உருப்படிகளுக்கான உதாரணங்கள்<br>* இயற்றியோர் | 03 |
| 5.0<br>கர்நாடக இசையின் வளர்ச்சிக்கு வாக்கேயக்காரர்கள் ஆற்றிய பங்களிப்பினை மதிப்பிடுவார். | | |
| 5.1<br>வாக்கேயகாரர்களின் வாழ்க்கை வரலாற்றையும், இசைத் தொண்டையும் மதிப்பிடுவார். | • புரந்தரதாஸர்<br>• முத்துத்தாண்டவர்<br>• கோபால கிருஷ்ணபாரதியார்<br>• பாபநாசம்சிவன்<br>- வாழ்க்கைக் காலம்<br>- பெற்றோரின் பெயர்<br>- வாழ்க்கை வரலாறு<br>- சிறப்புப் பெயர்கள்<br>- இசைப்பணி<br>(முத்திரை, இயற்றிய உருப்படிகள், நூல்கள், பட்டங்கள்.....) | 06 |
| 6.0<br>கர்நாடக இசையின் தோற்றம், வளர்ச்சி தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வர் | | |
| 6.1<br>கர்நாடக இசையின் தோற்றம், வளர்ச்சி தொடர்பான விடயங்களை விபரிப்பார். | • சங்கீதக் கலையின் ஆரம்பம்<br>• நாட்டார் பாடல்களின் கலாசாரப் பின்னணி<br>• ஆலயங்களும் இசையும்<br>• இந்தியாவின் 7ஆம், 8ஆம் நூற்றாண்டில் கர்நாடக இசையின் கலாசாரப் பின்னணி<br>• இந்தியாவில் 14ஆம், 15ஆம் நூற்றாண்டில் கர்நாடக இசையின் கலாசாரப்பின்னணி | 09 |

| தரம் - 10 | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 1ஆந் தவணை | பாட வேளை | 2ஆந் தவணை | பாட வேளை | 3ஆந் தவணை | பாட வேளை |
| நயத்தல் | 10.1.1<br>சாஸ்திரிய இசையை இரசித்தல் (பதம், ஸ்வரஜதி) | 02 | 10.1.1<br>வாத்திய இசையை இரசித்தல் (வீணை, புல்லாங்குழல், மிருதங்கம்) | 02 | 10.1.1<br>நாட்டுக்கூத்துப் பாடல்களை இரசித்தல் | 02 |
| ஆக்கத் திறன்களை வளர்த்தல் | 10.2.1<br>சிறுவர் பாடல்களுக்கு மெட்டமைத்தல் | 02 | 10.2.1<br>வில்லுப்பாட்டு நிகழ்ச்சி தயாரித்தல். | 02 | 10.2.2<br>வருட இறுதியில் மாணவர் ஆக்கங்களைக் கொண்ட நிகழ்ச்சி தயாரித்தல் | 02 |
| செய்முறை | 10.3.1<br>இராகங்களின் ஆரோகண அவரோ கணங்களை ஸ்வரதான சுத்தத்துடன் பாடுதல் (பிலஹரி, மோகனம், மத்தியமாவதி, கமாஸ், மாயாமாளவ கௌளை) | 01 | 10.3.1<br>இராகங்களின் ஆரோகண அவரோகணங்களை ஸ்வரஸ்தான சுத்தத்துடன் பாடுதல் (சங்கராபரணம், மலஹரி, ஹம்சத்வனி, சுத்தசாவேரி, கல்யாணி) | 01 | 10.3.2<br>சப்த தாள அலங்காரங்களை மூன்று காலங்களிலும் பாடுதல். | 01 |
| | 10.3.2<br>சப்ததாள அலங்காரம் (ஜம்பை, திரிபுடை) | 02 | 10.3.2<br>சப்த தாள அலங்காரம் (துருவம், அட) | 02 | 10.3.2<br>கீதம் - அன்பேதான்<br>கணநாதாகுணம்நீதா | 02<br>02 |
| | 10.3.2<br>கீதம் - சிவபெருமானே<br>வரவீணா, ஸ்வாமிநாதா | 02<br>01 | 10.3.2<br>கீதம் - ஏழுமலை மேல் | 02 | 10.3.3<br>கீர்த்தனை - ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி | 02 |
| | 10.3.2<br>ஸ்வரஜதி - சம்போமஹா தேவா | 03 | 10.3.2<br>ஆதிதாள வர்ணம் (நின்னுகோரி/ ஆலிலைமேல்/ ஸாமிநின்னே) | 06 | 10.3.3<br>திருப்புகழ் - நாடித்தேடி | 01 |
| | 10.3.3<br>கீர்த்தனை - இந்தஇன்பம் | 02 | 10.3.3<br>கீர்த்தனை - மூலாதார மூர்த்தி | 02 | 10.3.3<br>தேவாரம்-என்ன புண்ணியம் | 01 |
| | 10.3.3<br>திருப்புகழ் - வசனமிகவேற்றி | 01 | 10.3.3<br>திருப்புகழ் - திமிரவுததி | 01 | 10.3.3<br>அவரவர் சமயத்திற்கேற்ற பக்திப்பாடல் | 01 |
| | 10.3.3<br>தேவாரம் - அங்கமும் வேதமும் | 01 | 10.3.3<br>தேவாரம்- தாயினும் நல்ல | 01 | 10.3.3<br>தாளத்திலமைந்த ஸ்வர சஞ்சாரங்களைப் பார்த்துப் பாடல் | 02 |
| அறிமுறை | 10.4.1<br>கர்நாடக இசையின், அடிப்படை அம்சங்கள் (சங்கீதம், நாதம், சுருதி, ஸ்வரம், ப்ரக்ருதி விக்ருதி ஸ்வரங்கள், ஸ்வரஸ்தானம், ஆரோகண, | 02 | 10.4.2<br>ஜன்னிய இராகம் பிரிவுகள் (உபாங்கம், பாஷாங்கம், வர்ஜம், வக்ரம்)<br><br>10.4.3<br>பண்ணிசை | 01<br><br><br>02 | 10.4.1<br>35 தாள விளக்கம்<br><br>10.4.1<br>ஷடங்கம், திரியாங்கம், லகுவின் ஜாதிபேதம், சப்ததாளங்களும் அங்க அடையாளங்களும். | 01<br><br><br>01 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | அவரோகணம், குறில், நெடில் ஸ்வரங்கள், ஆவர்த்தனம், அட்சரகாலம், லயம், தாது, மாது, ஸ்தாயி, திஸ்ர, சதுஸ்ர நடைகள், நிபந்தம், அநிபந்தம்<br><br>10.4.2<br>ஜனக, ஜன்னிய இராகவிளக்கம்<br><br>10.4.4<br>இராக லட்சணம் - தோடி<br>கரஹரப்பிரியா<br><br>10.4.5<br>இசைக்கருவி - வீணை<br>தம்புரா<br><br>10.4.6<br>உருப்படி இலட்சணம் - கீதம், ஜதிஸ்வரம், ஸ்வரஜதி<br><br>10.5.1<br>வாக்கேயகாரர் சரித்திரம்<br>- புரந்தரதாஸர்<br>முத்துத்தாண்டவர். | 01<br><br>01<br>01<br><br>02<br><br>01<br><br>01<br>01 | 10.4.4 இராகலட்சணம்<br>- கல்யாணி<br>- பிலஹரி<br><br>10.4.5 இசைக்கருவி - புல்லாங்குழல்<br><br>10.4.6 உருப்படி இலட்சணம் - -வர்ணம் (தானவர்ணம், பதவர்ணம்)<br><br>10.5.1 வாக்கேயகாரர் சரித்திரம்- கோபாலகிருஷ்ண பாரதியார். | 01<br>01<br><br>01<br><br>01<br><br>02 | 10.4.2 ஜன்னிய இராகப் பிரிவுகள் (நிஷாதாந்திய, தைவதாந்திய, பஞ்சமாந்தியம்)<br><br>10.4.4 இராகலட்சணம் - மாயாமாளவ- கௌளை, மோகனம், சங்கராபரணம்<br><br>10.4.5 இசைக்கருவி - நாதஸ்வரம்<br><br>10.4.6 உருப்படி இலட் சணம் - பதம்<br><br>10.5.1 வாக்கேயகாரர் சரித்திரம் - பாபநாசம் சிவன். | 01<br><br>01<br><br>01<br>02<br><br>01<br><br>02 |
| கலாசாரப் -பின்னனி | 10.6.1<br>சங்கீதக் கலையின் ஆரம்பம்<br><br>நாட்டார் பாடல்களின் கலாசாரப் பின்னணி<br>ஆலயங்களும் இசையும் | 01<br><br>01<br>01 | 10.6.1 இந்தியாவில் 7ஆம் 8ஆம் நூற்றாண்டில் கர்நாடக இசையின் கலாசாரப் பின்னணி | 03 | 10.6.1 இந்தியாவில் 14ஆம், 15ஆம் நூற்றாண்டில் கர்நாடக இசையின் கலாசாரப் பின்னணி | 03 |
| | | 30 | | 31 | | 29 |

# பகுதி II

# செயற்பாடுகளின் தொடர்

### 10.2.1. கற்றல் - கற்பித்தல் முறைமை

இப்பாடத்திட்டத்திற்கு ஏற்ப கற்றல் - கற்பித்தல் முறைமைகளைத் தீர்மானிக்கும் போது ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டதாக மாணவர்களிடத்தில் தேர்ச்சிகளை உருவாக்குவதற்கு ஏற்ற வகையில் கற்றல் - கற்பித்தற் செய்கைகளைத் திட்டமிடுவது தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. தேர்ச்சி மட்டக் கல்விக்கு ஆயத்தம் ஆகும்போது ஆசிரியர் பங்கில் தெளிவான மாற்றம் எதிர்பார்க்கப்படுகிறது.

எமது வகுப்பறைகளில் கடந்த காலங்களில் பரவலாகச் செயற்படுத்தப்பட்டு வந்த 'ஊடு கடத்தும் பங்களிப்பு' (Transmission Role), பின்னர் அறிமுகப்படுத்தப்பட்ட 'கொடுக்கல் வாங்கல் பங்களிப்பு' (Transaction Role) என்பன வகுப்பறையில் இப்போதும் காணப்படுகின்றன. பாடசாலையை விட்டு விலகிச் செல்லும் பிள்ளைகளிடத்தில் காணப்படும் சிந்தனைத் திறன்கள், தனியாள் திறன்கள், சமூகத் திறன்கள் போன்றவற்றிலுள்ள குறைபாடுகளை கருத்திற் கொள்வதன் மூலம் கற்றல் - கற்பித்தல் முறைமைகளில் செய்ய வேண்டிய அபிவிருத்தி மாற்றங்களையும், அவை எவ்வாறு செய்யப்படல் வேண்டுமென்பதையும் இனங் காண்பது கடினமன்று.

ஊடுகடத்தும் பங்களிப்பில், கற்பிக்கப்பட வேண்டிய விடயங்கள் யாவற்றையும் ஆசிரியர் தான் தெரிந்துள்ளதாக எடுத்துக் கொண்டு, மாணவர்கள் இவ்விடயங்கள் தொடர்பாக ஒன்றுமே அறிந்திராதவர் எனக் கருதிக் கொண்டு விடய அறிவை மாணவர்களுக்குச் செலுத்தும் ஒருவராகவே ஆசிரியர் மாறியுள்ளார். இம்முறையில் ஆசிரியர் விரிவுரையாளர் போலத் தொழிற்படுவதோடு, மாணவர்களின் சிந்தனையைத் தூண்டுவதற்கோ, மாணவர்களின் தனியாள் திறன்களை, சமூகத் திறன்களை விருத்தி செய்வதற்கோ செய்யும் பங்களிப்பு போதுமானதல்ல.

ஆசிரியர் வகுப்பறையில் மாணவர்களுடன் கலந்துரையாடுவது, கொடுக்கல் வாங்கல் பங்களிப்பின் ஆரம்பக் கட்டமாக அமைகிறது. இதன்போது ஆசிரியரிடமிருந்து மாணவர்களுக்கும், மாணவர்களிடமிருந்து ஆசிரியருக்கும் கருத்துக்கள் பரிமாறப்படுவதோடு, அதைத் தொடர்ந்து மாணவர் - மாணவர் இடைத்தொடர்பும் ஏற்படுத்தப்பட்டு அவர்களுக்கிடையிலும் கருத்துப் பரிமாறல் நடைபெறுவதோடு, அது தர்க்கரீதியான கலந்துரையாடலாக மாறும். தெரிந்ததிலிருந்து தெரியாததற்கும், எளியதிலிருந்து சிக்கலானதற்கும், தூல விடயத்திலிருந்து கேவல (கருத்துநிலை) விடயத்திற்கும் மாணவர்களைக் கொண்டு செல்லும் வகையில் ஆசிரியர் தொடர்ந்து வினாக்களைத் தொடுப்பதில் ஈடுபடல் வேண்டும்.

தேர்ச்சி மட்டக் கல்வியில் மாணவர் செயற்பாடுகள் வலுவான இடத்தைப் பெறுவதோடு, வகுப்பிலுள்ள ஒவ்வொரு பிள்ளையும் அந்தந்தத் தேர்ச்சி மட்டங்கள் தொடர்பாகக் குறைந்தது அண்மிய தேர்ச்சிமட்டங்களையாவது பெற்றுக் கொள்வதற்கு ஏற்ற வகையில் ஆசிரியர் ஒரு வளவாளராக (Resource Person) மாறுகிறார். கற்றலுக்குத் தேவையான உபகரணங்களும் மற்றும் வசதிகளும் கொண்ட கற்றற் சூழலொன்றைத் திட்டமிடுதல், மாணவர்கள் கற்கும் விதத்தை அருகிலிருந்து அவதானித்தல், மாணவர்களின் இயலும், இயலாமை என்பவற்றை இனங்காணுதல், தேவையான முன்னூட்டல், பின்னூட்டல் என்பவற்றை வழங்கல் மூலம் கற்றலை விருத்தி செய்வதோடு வகுப்பறைக்கு வெளியிலும் மாணவர்கள் கற்பதற்கும், கற்பதைத் தூண்டுவதற்கும் உரியவாறு கற்றல் உபகரணங்களைத் திட்டமிடுவதும் ஆசிரியரின் அடிப்படைக் கடமைகளாகும். இவ்வாறான ஆசிரியர் பங்களிப்பு 'உருமாற்றப் பங்களிப்பு' (Transformation Role) எனப்படும்.

ஆசிரியர் வழிகாட்டியின் முதற்பகுதியாக இங்கு அறிமுகஞ் செய்யப்பட்டுள்ள பாடத்திட்டமும், அதனை அமுல்படுத்தும்போது பயன்படுத்தக்கூடிய செயற்பாடுகளின் தொடரகம் இரண்டாம் பகுதியாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இச் செயற்பாடுகள் ஒவ்வொன்றும் குறைந்தது மூன்று படிகளைக் கொண்டதாக விருத்தி செய்யப்பட்டுள்ளன. செயற்பாட்டின் முதற்படியில் மாணவர்களைக் கற்றலுக்குத் தயார் செய்வதில் ஈடுபடுத்திக் கொள்வது எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வாறு மாணவர்களைத் தயார் செய்து கொள்ளும்படி 'ஈடுபடுத்தும் படி' (Engagement Step) எனப்படும். இப்படியில் ஆரம்பத்தில் ஆசிரியர் கொடுக்கல் வாங்கல் பங்களிப்பின் மூலம் மாணவர்களுடன்

கலந்துரையாடலை ஆரம்பிப்பார். பின்னர் மாணவர்கள் விடயங்களை நன்கு ஆராய்ந்து செயற்படுத்துவதற்குத் தேவையான முன்னறிவை மீட்கும் வகையிலும், செயற்பாட்டுக்குத் தேவையான சாடைகளைக் கொடுக்கும் வகையிலும் கலந்துரையாடலை விரிவுபடுத்திக் கொள்க. இக்கலந்துரையாடலில் கருத்துப் பரிமாறலுக்குப் பயன்படுத்தக்கூடிய நுட்பங்கள் ஆசிரியரிடம் இருத்தல் வேண்டும். வினாக்களை முன்வைத்தல் / படங்கள், பத்திரிகை விளம்பரங்கள், அறிவித்தல்கள், காட்சி அட்டைகள் (Flash Cards) போன்ற ஆர்வம் ஊட்டுவனவற்றைப் பயன்படுத்தல் / பிரசினங்கள், புதிர்கள், விடய ஆய்வுகள் / கலந்துரையாடல், நடித்தல், கவிதைகள், பாடல்கள், செய்துகாட்டல்கள் (Demonstrations), கட்புல, செவிப்புல சாதனங்கள் போன்றன பயன்படுத்துவதும் இங்கு அடங்கும். முதலாம் படி பின்வரும் மூன்று நோக்கங்களையும் நிறைவேற்றிக் கொள்வதை அடிப்படையாகக் கொண்டதாகும்.

- வகுப்பு மாணவர்களின் கவனத்தை ஈர்த்துக் கொள்ளல்.
- தேவையான முன்னறிவை மீட்டிக் கொள்வதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குதல்.
- செயற்பாட்டின் இரண்டாம் படியில் மாணவர்களிடம் எதிர்பார்க்கப்படும் ஆய்வு முறையான கண்டுபிடிப்புகளுக்குத் தேவையான ஆரம்ப விடயங்களை வழங்குதல்.

செயற்பாட்டின் இரண்டாம் படியில் மாணவர்களுக்கு ஆய்வு ரீதியான பேறுகளைக் கண்டு பிடிப்பதற்குச் (Exploration) சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது. மாணவர்கள் பேறுகளைக் கண்டுபிடிப்பது, அதற்கென விசேடமாகத் தயாரிக்கப்பட்ட அறிவுறுத்தல் படிவத்தினை அடிப்படையாகக் கொண்டாகும். பிரசினத்தோடு தொடர்பான பல்வேறு விடயங்களையும் கூட்டாகச் செயற்பட்டு ஆராய்ந்து குழுவாகக் கற்பதற்கு ஏற்ற வகையில் ஆசிரியர் செயற்பாட்டைத் திட்டமிடல் வேண்டும். வழங்கப்பட்டுள்ள உபகரணங்களையும், மற்றும் வளங்களையும் பயன்படுத்தித் தெளிவான விளக்கத்துடன், தர்க்க ரீதியான கலந்துரையாடலுடன் ஆராய்ந்து பெறுபேறுகளைக் கண்டுபிடிப்பது போன்றன இப்படிமுறையில் எதிர்பார்க்கப்படும் முக்கிய பண்புகள் சிலவாகும். இவ்வாறான செயற்பாடுகளில் மாணவர்கள் தொடர்ந்து ஈடுபடுவதால் சுயகட்டுப்பாடு, ஒழுக்கம், ஏனையோரின் கருத்துக்களுக்குச் செவிமடுத்தல், ஏனையோருடன் கூட்டாகச் செயற்படல், ஏனையோருக்கு உதவுதல், நேர முகாமைத்துவம், உயர் தரத்துடனான முடிவுப் பொருளைப் பெறல், நேர்மை போன்ற அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான முக்கிய பண்புகளை விருத்தி செய்துகொள்ளல் போன்றன மாணவர்களிடத்தில் விருத்தியாகும்.

மாணவர்கள் கண்டுபிடிப்புக்களில் ஈடுபடும்போது குழுத்தலைவர்களைத் தெரிவு செய்வதை ஆசிரியர் தவிர்த்துக் கொள்வதோடு தலைவர் குழுவிலிருந்து உருவாவதற்குச் சந்தர்ப்பம் அளிக்கக்கூடிய பின்னணியை மட்டும் ஆசிரியர் ஏற்படுத்த வேண்டும். மறைந்திருக்கும் ஆற்றல்களை வெளிப்படுத்துவதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கின்றது.

செயற்பாட்டின் மூன்றாம் படியில் குழுக்களின் கண்டுபிடிப்புக்களையும் பேறுகளையும் ஏனைய மாணவர்களும் அறிந்து கொள்ளும் வகையில் வகுப்பில் சமர்ப்பிப்பதற்கு ஒவ்வொரு குழுவிற்கும் சந்தர்ப்பம் அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு குழுவும் பேறுகளைச் சமர்ப்பிக்கும் போது அக்குழுவின் ஒவ்வொரு அங்கத்தவரும் அதில் பங்கெடுத்துக் கொள்ளும் வகையில் அவர்களுக்கு வேலைப் பகிர்வு இருப்பது பயனுடையதாகும். கண்டுபிடிப்புக்களுக்கான விளக்கமளித்தல் (Explanation) இப்படியின் முக்கிய எதிர்பார்ப்பு ஆகும். வகுப்பறையில் வழக்கமாக ஒலிக்கும் ஆசிரியர் குரலுக்கு மேலதிகமாக மாணவர்களின் குரல்களும் கருத்துள்ளவாறு ஒலிக்கத் தொடங்குகிறது. இது இப்படியில் உள்ள முக்கிய அம்சமாகும்.

செயற்பாட்டின் மூன்றாம் படியில் குழுக்களின் கண்டுபிடிப்புக்களையும் பேறுகளையும் மேலும் விருத்தி செய்து ஆழமாக விளங்கிக் கொள்வதற்கு (Eleboration) மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்க வேண்டும். ஒவ்வொரு குழுவும் பேறுகளைச் சமர்ப்பித்த பின் அவற்றை மேலும் அபிவிருத்தி செய்யும் வகையிலான கருத்துக்களை வழங்குவதற்கு முதலில் அக்குறிப்பிட்ட குழுவின் அங்கத்தவர்களுக்கும், பின்னர் ஏனைய குழுக்களின் அங்கத்தவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்குதல் மூலம், இது நிறைவேற்றப்படுகிறது. எவ்வாறாயினும், இறுதியில் பேறுகளைத் தொகுப்பது ஆசிரியரின் பொறுப்பாகும். இதன்போது மாணவர்கள் ஆராய்ந்த விடயங்களை அடிப்படையாகக் கொண்ட

முக்கிய விடயங்கள், எண்ணக்கருக்கள், கோட்பாடுகள், விதிகள் போன்றவற்றை மாணவர்களிடையே உறுதிப் படுத்திக் கொள்வது எதிர்பார்க்கப்படுகிறது.

வகுப்பறைக் கற்றல் - கற்பித்தற் செய்கை எதிர்பார்க்கப்பட்ட விதத்தில் வெற்றிகரமாக நடைபெறுகிறதாவெனத் தொடர்ந்து தேடிப் பார்ப்பது இம்முறையின் கீழ் ஆசிரியரது பிரதான கடமையாகும். இதற்காகக் கணிப்பீட்டு முறையைப் பயன்படுத்த வேண்டியதோடு, இது கற்றல் - கற்பித்தற் செய்கையினுள் இடம்பெறுவதற்கு, திட்டமிட்ட செயற்பாடுகளைத் தயாரிப்பதற்குரிய சந்தர்ப்பத்தை ஆசிரியருக்கு வழங்குகிறது. செயற்பாட்டின் இரண்டாம் படியில் மாணவர்கள் விடயங்களை ஆராயும்போது கணிப்பீட்டையும் (Assessment), செயற்பாட்டின் மூன்றாம் படியில் மாணவர்கள் அவர்களது பேறுகளை விளக்கும்போது கணிப்பீட்டோடு சார்ந்த மதிப்பீட்டையும் (Evaluation) நிகழ்த்துவதற்கு ஆசிரியருக்கு வாய்ப்பு ஏற்படுகிறது. கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான விளக்கம் வேறாகத் தரப்பட்டுள்ளது.

இதுவரை விவரிக்கப்பட்ட கற்றல் - கற்பித்தல் முறைமை உருமாற்றப் பங்களிப்பைச் செய்வதற்கு ஆசிரியரை உட்படுத்துகின்றது. இங்கு குழு ஆய்வுக்கு முதலிடம் அளிக்கப்படுவதோடு கொடுக்கல் வாங்கல், தர்க்க ரீதியான கலந்துரையாடல் என்பவற்றோடு சிறிதளவாக ஆசிரியரின் விரிவுரைக்கும் இடமுண்டு. பாடப் பிரதேசத்தின்போது கொடுக்கல் வாங்கல், கலந்துரையாடல் முறை என்பன நடைபெறுவதோடு, இறுதிப் படியில், தொகுப்பின் கீழ் சிறிய விரிவுரைக்கும், அத்தோடு எண்ணக்கரு உருவாக்குவதற்கும் இடம் ஏற்படுகிறது.

புதிய ஆயிரமாம் ஆண்டின் முதலாவது பாடத்திட்ட மறுசீரமைப்பின் கீழ் தயாரிக்கப்பட்ட இப்பாடத்திட்டத்தோடு தொடர்பான கற்றல் - கற்பித்தல் முறைமைகளை அபிவிருத்தி செய்யும் போது உருமாற்றப் பங்களிப்புக்கு மேலதிகமாக ஊடுகடத்தும் பங்களிப்பிலும், கொடுக்கல் வாங்கல் பங்களிப்பிலும் காணப்படக்கூடிய முக்கிய இயல்புகளும் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளமை இம்முறையின் விசேட தன்மையாகும்.

இப்புதிய பாடத்திட்டத்திற்கேற்ப கர்நாடகசங்கீத பாடத்திற்கான கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை ஒழுங்கமைக்கும் போது பின்வரும் அணுகுமுறைகளையும் கையாள்வது விரும்பத்தக்கதாகும்.

- கற்றல் என்பது கட்டுருவாக்கச் செயன்முறையாக அமையவேண்டும் என்பதே இன்றைய கல்வி நிலைப்பாடாகும். எனவே தான் கற்பித்தலைப் பார்க்கிலும் கற்றலுக்கு முன்னுரிமை வழங்கப்படல்.

- பெறத்தக்க வளங்களை கவனத்திற்கொண்டு அவற்றுக்கேற்ப மேலதிக செயற்பாடுகளை ஆசிரியர் மேற்கொள்ளல்.

- ஒவ்வொரு தேர்ச்சி மட்டத்தை நோக்கி மாணவர்கள் அடைந்துள்ள அடைவை இனங்கண்டு தேவையான இடங்களில் மீளவூட்டல்.

- மாணவரது சுய ஆக்கங்களுக்குப் பாராட்டுத் தெரிவித்து, மாணவரை உற்சாகப்படுத்தி அவற்றை மேடையேற்றவும் வழிவகுத்துக் கொடுத்தல்.

- கற்றல் - கற்பித்தலில் குழுச் செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தல்.

- கற்றல் - கற்பித்தல் உபகரணங்களைப் பயன்படுத்துதல்.

- பொருத்தமான சந்தர்ப்பங்களில் வெகுசனத்தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்துதல்.

- செயற்பாடுகளின்போது மாணவர்களுடன் கலந்துரையாடி மாணவரே செயற்படுவதற்கு நெறிப்படுத்துதல்.

## 10.2.2. பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | பதம், ஸ்வரஜதி ஆகிய உருப்படிகளின் தனித்துவமான அம்சங்களை இனங்கண்டு வெளிப்படுத்துவோம். | 29 |
| 2. | பதம், ஸ்வரஜதி ஆகிய உருப்படிகளை இரசித்து அனுபவித்தவற்றை விமர்சிப்போம். | 32 |
| 3. | சங்கராபரணம், மோஹனம், ஆனந்தபைரவி ஆகிய இராகங்களில் சிறுவர் பாடல்களுக்கு மெட்டமைத்துப் பாடுவோம். | 35 |
| 4. | பிலஹரி, மோகனம், மத்தியமாவதி, கமாஸ், மாயாமாளவகௌளை ஆகிய இராகங்களின் ஆரோகண, அவரோகணங்களை சுருதி, ஸ்வரஸ்தான சுத்தத்துடன் பாடுவோம். | 38 |
| 5. | ஐம்பை, திரிபுடைதாள அலங்காரங்களை இராக, தாளத்துடன் பாடுவோம். | 42 |
| 6. | "சிவபெருமானே" என்னும் கீதத்தை இராக, தாளத்துடன் பாடுவோம். | 46 |
| 7. | "வரவீணா", "ஸ்வாமிநாதா" என்னும் கீதங்களை இராக, தாளத்துடன் பாடுவோம். | 49 |
| 8. | "சம்போமஹாதேவா" என்னும் ஸ்வரஜதியை இராக, தாளத்துடன் பாடுவோம். | 53 |
| 9. | "இந்த இன்பம்" என்னும் கீர்த்தனையை இராக, தாளத்துடன் பாடுவோம். | 56 |
| 10. | "வசனமிகவேற்றி" என்னும் திருப்புகழை இராக, தாளத்துடன் பாடுவோம். | 59 |
| 11. | "அங்கமும் வேதமும்" என்னும் தேவாரத்தைப் பண்ணோடு பாடுவோம். | 61 |
| 12. | கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களுள் ஏற்கனவே கற்றுக்கொண்ட அரும்பத விளக்கங்களை சிறிய செயற்பாடொன்றின் மூலம் மீள வலியுறுத்தல் செய்வோம். | 64 |
| 13. | ஜனக, ஜன்ய இராகங்கள் பற்றிய விளக்கத்தைப்பெறுவோம். | 75 |
| 14. | தோடி இராகத்தின் இலட்சணத்தை அறிந்து கொள்வோம். | 78 |
| 15. | கரஹரப்ரியா இராகத்தின் இலட்சணத்தை அறிந்து கொள்வோம். | 82 |
| 16. | வீணையின் அமைப்பு, பயன்பாடு பற்றி அறிந்து கொள்வோம். | 86 |
| 17. | தம்புராவின் அமைப்பு, பயன்பாடு பற்றி அறிந்து கொள்வோம். | 93 |
| 18. | கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களுள் ஷடங்கம், திரியாங்கம், லகுவின் ஜாதிபேதம், சப்த தாளங்களும் அங்க அடையாளங்களும் பற்றி அறிவோம். | 98 |
| 19. | கீதம், ஜதீஸ்வரம், ஸ்வரஜதி ஆகிய உருப்படிகளின் இலட்சணங்களை அறிந்து கொள்வோம். | 105 |

| | | |
|---|---|---|
| | | பக்கம் |
| 20. | முத்துத்தாண்டவரின் வாழ்க்கை வரலாற்றையும், இசைத்தொண்டினையும் அறிந்துகொள்வோம். | 112 |
| 21. | புரந்தரதாஸரின் வாழ்க்கை வரலாற்றையும், இசைத் தொண்டினையும் அறிந்துகொள்வோம். | 118 |
| 22. | சங்கீதக் கலையின் ஆரம்பம் பற்றி அறிந்து கொள்வோம் | 122 |
| 23. | நாட்டார் பாடல்களின் கலாசாரப்பின்னணியை அறிந்து கொள்வோம். | 125 |
| 24. | ஆலயங்களும் இசையும் பற்றி அறிந்துகொள்வோம். | 129 |
| 25. | வீணை, புல்லாங்குழல், மிருதங்கம் ஆகிய வாத்தியங்களின் தனித்துவமான அம்சங்களை இனங்கண்டு வெளிப்படுத்துவோம். | 133 |
| 26. | வீணை, புல்லாங்குழல், மிருதங்கம் ஆகிய வாத்தியங்களின் இசையை இரசித்து அனுபவித்தவற்றை விமர்சிப்போம். | 137 |
| 27. | வில்லுப்பாட்டு நிகழ்ச்சியைத் தயாரிப்போம் | 141 |
| 28. | சங்கராபரணம், மலஹரி, ஹம்சத்வனி, சுத்தசாவேரி, கல்யாணி ஆகிய இராகங்களின் ஆரோகண, அவரோகணங்களை சுருதி, ஸ்வரஸ்தான சுத்தத்துடன் பாடுவோம். | 144 |
| 29. | துருவ, அடதாள அலங்காரங்களை இராக, தாளத்துடன் பாடுவோம். | 147 |
| 30. | "ஏழுமலைமேல்" என்னும் கீதத்தை இராக, தாளத்துடன் பாடுவோம். | 150 |
| 31. | தானவர்ணத்தின் பூர்வாங்கப்பகுதியை இராக, தாளத்துடன் பாடுவோம். (நின்னுகோரி / ஆலிலைமேல் / ஸாமிநின்னே) | 153 |
| 32. | தானவர்ணத்தின் உத்தராங்கப் பகுதியை இராக, தாளத்துடன் பாடுவோம். (நின்னுகோரி / ஆலிலைமேல் / ஸாமிநின்னே) | 159 |
| 33. | "மூலாதார மூர்த்தி" என்னும் கீர்த்தனையை இராக, தாளத்துடன் பாடுவோம். | 161 |
| 34. | "திமிரவுததி" என்னும் திருப்புகழை இராக, தாளத்துடன் பாடுவோம். | 164 |
| 35. | "தாயினும் நல்ல" என்னும் தேவாரத்தைப் பண்ணோடு பாடுவோம். | 167 |
| 36. | ஜன்ய இராகத்தின் பிரிவுகளில் உபாங்க, பாஷாங்க, வர்ஜ, வக்ர இராகங்களின் விளக்கத்தைப் பெறுவோம். | 170 |
| 37. | பண்ணிசையின் சிறப்பினை அறிவோம். | 173 |
| 38. | கல்யாணி இராகத்தின் இலட்சணத்தை அறிந்து கொள்வோம். | 179 |
| 39. | பிலஹரி இராகத்தின் இலட்சணத்தை அறிந்துகொள்வோம். | 183 |

| | | பக்கம் |
|---|---|---|
| 40. | புல்லாங்குழல் அமைப்பு, பயன்பாடு பற்றி அறிந்துகொள்வோம். | 187 |
| 41. | வர்ணத்தின் இலட்சணத்தை அறிந்துகொள்வோம். | 191 |
| 42. | கோபாலகிருஷ்ணபாரதியாரின் வாழ்க்கை வரலாற்றையும், இசைத் தொண்டினையும் அறிந்துகொள்வோம். | 195 |
| 43. | இந்தியாவில் 7ஆம், 8ஆம் நூற்றாண்டில் கர்நாடக இசையின் கலாசாரப்பின்னணியை அறிந்துகொள்வோம். | 200 |
| 44. | நாட்டுக்கூத்துப் பாடல்களின் தனித்துவமான அம்சங்களை இனங்கண்டு வெளிப்படுத்துவோம். | 204 |
| 45. | நாட்டுக்கூத்துப் பாடல்களை இரசித்து அனுபவித்தவற்றை விமர்சிப்போம். | 206 |
| 46. | வருட இறுதியில் மாணவர் ஆக்கங்களைக் கொண்ட நிகழ்ச்சிகளை மேடையேற்றுவோம். | 208 |
| 47. | சப்த தாள அலங்காரங்களை இராக, தாளத்துடன் பாடுவோம். | 210 |
| 48. | "அன்பேதான்" என்னும் கீதத்தை இராக, தாளத்துடன் பாடுவோம். | 213 |
| 49. | 'கணநாதா குணம்நீதா' என்னும் கீதத்தை இராக தாளத்துடன் பாடுவோம். | 216 |
| 50. | "ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி" என்னும் கீர்த்தனையை இராக, தாளத்துடன் பாடுவோம். | 219 |
| 51. | 'நாடித்தேடி' என்னும் திருப்புகழை இராக, தாளத்துடன் பாடுவோம். | 222 |
| 52. | "என்ன புண்ணியம்" என்னும் தேவாரத்தை பண்ணோடு பாடுவோம். | 224 |
| 53. | அவரவர் சமயத்திற்கேற்ற பக்திப்பாடலைப் பாடுவோம். | 227 |
| 54. | மாயாமாளவகௌளை, மோகனம் ஆகிய இராகங்களில் அமைந்த ஸ்வரக்கோர்வைகளை இராக, தாள, ஸ்வரஸ்தான சுத்தத்துடன் பாடுவோம். | 229 |
| 55. | 35 தாள விளக்கத்தைப் பெறுவோம். | 232 |
| 56. | ஜன்ய இராகத்தின் பிரிவுகளில் நிஷாதாந்திய, தைவதாந்திய, பஞ்சமாந்திய இராகங்கள் பற்றிய விளக்கத்தைப் பெறுவோம். | 236 |
| 57. | மாயாமாளவகௌளை, மோகனம் ஆகிய இராகங்களின் இலட்சணங்களை அறிந்து கொள்வோம். | 239 |
| 58. | சங்கராபரண இராகத்தின் இலட்சணத்தை அறிந்துகொள்வோம். | 245 |
| 59. | நாதஸ்வரத்தின் அமைப்பு, பயன்பாடு பற்றி அறிந்துகொள்வோம். | 249 |
| 60. | 'பதம்' என்னும் இசை உருப்படியின் இலட்சணத்தை அறிந்துகொள்வோம். | 255 |
| 61. | பாபநாசம்சிவனின் வாழ்க்கை வரலாற்றையும், இசைத்தொண்டினையும் அறிந்துகொள்வோம். | 259 |
| 62. | இந்தியாவில் 14ஆம், 15ஆம்நூற்றாண்டில் கர்நாடக இசையின் கலாசாரப் பின்னணியை அறிந்துகொள்வோம். | 265 |

## 10.2.3. செற்பாடுகளின் தொடர்

**தேர்ச்சி 1.0** : இசை நிகழ்ச்சிகளில் இரசித்தவற்றை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சிமட்டம் 1.1** : வெவ்வேறு இசைநிகழ்ச்சிகளின் தனித்துவமான அம்சங்களை இனங்கண்டு வெளிப்படுத்துவார்.

**செயற்பாடு 1.1.1** : பதம், ஸ்வரஜதி ஆகிய உருப்படிகளின் தனித்துவமான அம்சங்களை இனங்கண்டு வெளிப்படுத்துவோம்.

**நேரம்** : 40 நிமிடங்கள் (01 பாடவேளை)

**தர உள்ளீடு** : சுருதிப்பெட்டி, பதம், ஸ்வரஜதி ஆகிய உருப்படிகள் அடங்கிய ஒலி, ஒளி நாடாக்கள், ஒலிப்பதிவுக்கருவி, தொலைக்காட்சிப்பெட்டி, செயற்பத்திரம் 1.1.2.1

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு** :

**படி 1.1.1**

- பதம், ஸ்வரஜதி ஆகிய உருப்படிகளை ஒலிப்பதிவுக்கருவியில் ஒலிக்கச் செய்தோ தொலைக்காட்சிப்பெட்டியில் போட்டுக் காட்டியோ ஆசிரியர் பாடிக்காட்டியோ மாணவர்களைச் செவிமடுக்கச் செய்க.
- செவிமடுப்பதன் மூலம் மாணவர் பதம், ஸ்வரஜதி ஆகிய உருப்படிகளை இனங்காணச் செய்க.
- மாணவர் பார்த்தும், கேட்டும், இனங்கண்ட விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடல் ஒன்றினை நிகழ்த்துக.
- கலந்துரையாடலின் பின்வரும் விடயங்களை வலியுறுத்துக.

- பதம் -இது நாட்டிய நிகழ்ச்சிகளில் இடம்பெறும் உருப்படியாகும்.
- பெரும்பாலும் தமிழ்ப்பதங்கள் முருகக்கடவுள் மீதும், ஏனைய தெய்வங்கள் மீதும் பாடப்படுகின்றன. தெலுங்குப் பதங்கள் கிருஷ்ணபகவான் மீது பாடப்படுவன.
- பதம் - நாயக, நாயகி பாவத்தை உள்ளடக்கி, சிருங்கார பாவத்தை வெளிப்படுத்தும்.
- இது (பதம்) சபாகானத்தைச் சேர்ந்த ஓர் உருப்படியாகும்.
- பதம் - அங்கங்கள்.
- குறிப்பிட்ட (ஆசிரியரால்த் தெரிவுசெய்யப்பட்ட) பதத்தின் இராகம், தாளம், இயற்றியவர் பெயர் தொடர்பான விளக்கம்.
- ஸ்வரஜதி - இது அப்பியாச கானத்தைச் சேர்ந்த உருப்படியாகும்.
- ஸ்வரஜதிகளின் சாகித்தியம் பகவத்ஸ்தோத்திரமாகவோ, சிருங்காரமாகவோ அமைந்திருக்கும்.
- ஸ்வரஜதி - அங்கங்கள்.
- குறிப்பிட்ட (ஆசிரியரால் தெரிவுசெய்யப்பட்ட) ஸ்வரஜதியின் இராகம், தாளம் இயற்றியவர் பெயர் தொடர்பான விளக்கம்.
- பதம் ஸ்வரஜதி ஆகிய உருப்படிகளின் மூலம் வெளிப்படுத்தப்படும் உணர்வுகள்.

(10 நிமிடம்)

படி 1.1.2

* மாணவர்களை இரு குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரங்களை வழங்குக.

* ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளைச் சமர்ப்பிக்கும் வகையில் ஆயத்தம் செய்விக்க.

* ஒவ்வொரு குழுவினதும் செயற்பாட்டினை உறுதிப்படுத்துக.

(15 நிமிடம்)

படி 1.1.3

* ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குக.

* ஒரு குழு சமர்ப்பிக்கும் பொழுது மற்றைய குழுவும் அதனை அவதானித்துக் கருத்துக் கூற இடமளிக்க.

* குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்க.

* கலந்துரையாடலில் பின்வரும் விடயங்களை மீளவும் வலியுறுத்துக.

- பதம் - பல்லவி, அனுபல்லவி, சரணம் என்னும் அங்கங்களுடன் கூடிய உருப்படியாகும்.
- நாட்டிய நிகழ்ச்சிகளில் இவ்வுருப்படி இடம்பெற்றாலும் மனதைக் கவரும் இசைமெட்டினால், இசைக்கச்சேரிகளிலும் பாடப்படும் ஓர் சபாகான உருப்படியாகும்.
- பதத்தின் மூலம் சிருங்கார ரசமும், பக்தி உணர்வும் வெளிப்படுத்தப்படும்.
- ஸ்வரஜதி அப்பியாசகானத்தைச் சேர்ந்த உருப்படியாகும்.
- ஸ்வரஜதி பல்லவி, அனுபல்லவியுடன் ஒன்றுக்கு மேற்பட்ட சரணங்களைக் கொண்ட உருப்படியாகும். இதன் சரணங்கள் வெவ்வேறு தாதுக்களில் அமைந்திருக்கம்.
- ஸ்வரஜதிகளின் சாகித்தியம் பகவத் ஸ்தோத்திரமாகவோ, சிருங்காரமாகவோ அமைந்திருக்கும்.
- எடுத்துக்கொண்ட பதம், ஸ்வரஜதியின் இராகம், தாளம் இயற்றியவர் பெயர் என்பவற்றினை மாணவர் கூறுவதற்கு இடமளிக்க.
- பதம், ஸ்வரஜதி ஆகிய உருப்படிகளை இயற்றிய வாக்கேயகாரர்களின் பெயர்கள்:-

  பதம் உ-ம் - முத்துத்தாண்டவர்
  - கனம் கிருஷ்ணய்பர்
  - மாம்பழங்கவிராயர்

  ஸ்வரஜதி உ-ம் : - சியாமாசாஸ்திரிகள்
  - சின்னிசிருஷ்ணதாஸர்
  - ஸ்வாதித் திருநாள் மகாராஜா
  - K. பொன்னையாப்பிள்ளை
- பதம், ஸ்வரஜதி ஆகிய உருப்படிகளை இரசிக்கும் போது அமைதி, மகிழ்ச்சி, பக்தி போன்ற உணர்வுகள் வெளிப்படுத்தப் படும்.

(15 நிமிடம்)

**கணிப்பீட்டு, மதிப்பீட்டு நியதிகள் :**

* பதத்தில் வரும் அங்கங்களைச் கூறுவர்.
* பதத்தின் மூலம் சிருங்கார ரசமும், பக்தி உணர்வும் வெளிப் படுத்தப்படும் என்பதனை ஏற்றுக் கொள்வர்.
* ஸ்வரஜதியின் அங்கங்களைக் கூறுவர்.
* ஸ்வரஜதியின் சாகித்தியம் எவ்வாறு அமைந்திருக்கும் என்பதைக் கூறுவர்.
* பதம், ஸ்வரஜதி ஆகிய உருப்படிகளை இரசிப்பதன் மூலம் மகிழ்ச்சி, அமைதி, பக்தி போன்ற உணர்வுகள் ஏற்படும் என்பதை ஏற்றுக் கொள்வர்.

செயற்பத்திரம் 1.1.2.1

*குழுவில் உள்ள சகல அங்கத்தவர்களுக்கும் தனித்தனியாக இச் செயற்பத்திரத்தினை வழங்குக.

குழு I

நீங்கள் செவிமடுத்த பதம் தொடர்பாக பின்வரும் வினாவிற்கு விடைதருக.

(1) பதம் என்னும் உருப்படியின் தனித்துவமான அம்சங்களை இனங்கண்டு பட்டியற்படுத்துக.

குழு II

நீங்கள் செவிமடுத்த ஸ்வரஜதி தொடர்பாக பின்வரும் வினாவிற்கு விடைதருக.

(1) ஸ்வரஜதி என்னும் உருப்படியின் தனித்துவமான அம்சங்களை இனங்கண்டு பட்டியற்படுத்துக.

**தேர்ச்சி 1.0** : இசை நிகழ்ச்சிகளில் இரசித்தவற்றை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 1.2** : இசை நிகழ்ச்சிகளில் தாம் அனுபவித்தவற்றை விமர்சிப்பார்.

**செயற்பாடு 1.2.1** : பதம், ஸ்வரஜதி ஆகிய உருப்படிகளை இரசித்து அனுபவித்தவற்றை விமர்சிப்போம்.

**நேரம்** : 40 நிமிடம் (01 பாடவேளை)

**தர உள்ளீடு** : சுருதிப் பெட்டி, பதம், ஸ்வரஜதி ஆகிய உருப்படிகள் அடங்கிய ஒலி, ஒளி நாடாக்கள், ஒலிப்பதிவுக் கருவி, தொலைக்காட்சிப் பெட்டி, செயற்பத்திரம் 1.2.2.1

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

படி 1.2.1

: சில விமர்சனக்கட்டுரைகளை வாசித்துப்பாடத்தினை ஆரம்பிக்க.

: பதம், ஸ்வரஜதி அடங்கிய ஒலி/ஒளிப்பதிவு நாடாக்களைப் போட்டுக் காட்டியோ ஆசிரியர் பாடிக் காட்டியோ மாணவரை அவதானிக்கச் செய்க.

: அவதானித்த/செவிமடுத்த விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுக.

: கலந்துரையாடலில் பின்வரும் விடயங்களை வலியுறுத்துக.

- பதம், ஸ்வரஜதி ஆகிய உருப்படிகளை கேட்டும், பார்த்தும் இரசிக்கும் போது ஏற்படும் உணர்வுகள்.
- பாடகரின் குரல் வளம்.
- அனுசரணையாக ஒலித்த வாத்தியங்களின் அணிசேர் தன்மை.
- பாடலில் வெளிப்படுத்தப்படும் இராகம், தாளம், இசையமைப்பு, உருப்படியின் அமைப்பு, இயற்றியவர்.
- பதம், ஸ்வரஜதி ஆகிய உருப்படிகளின் தரம், தன்மை பற்றிய மாணவரின் சுயமான இரசனை அனுபவப் பகிர்வு.

(10 நிமிடம்)

படி: 1.2.2 : * வகுப்பிலுள்ள மாணவர்களை இரண்டு குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தினை வழங்குக.

: * அறிவுரைக்கேற்ப செயற்பாட்டில் குழுக்களை ஈடுபடச் செய்க.

: * ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளைச் சமர்ப்பிக்கும் வகையில் ஆயத்தம் செய்கிறார்களா என்பதனை உறுதிப்படுத்துக.

(15 நிமிடம்)

படி 1.2.3 : * குழுக்கள் தமது பேறுகளைச் சமர்ப்பிக்க சந்தரப்பம் வழங்குக.

: * மற்றைய குழு அதனை அவதானித்துக் கருததுக் கூறஇடமளிக்க.

: * குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடல் ஒன்றை நடத்துக.

: * கலந்துரையாடலில் பின்வரும் அம்சங்களை மீளவும் வலியுறுத்துக.

* பதம், ஸ்வரஜதி ஆகிய உருப்படிகளை கீழ்வரும் அம்சங்களின் அடிப்படையில் இரசிக்க முடியும்.
  - உருப்படியின் தரம், தன்மை.
  - அணிசேர் வாத்தியங்கிளன் ஒத்திசைவு.
  - சாகித்திய சுத்தம்.
  - பாவம், உருப்படி அமைப்பு, இயற்றியவர், இராகம், தாளம்.
  - பாடியவரின் குரல்வளம்.

* வேறு பதம் , ஸ்வரஜதிகளைக் கேட்டு இரசிக்கும் ஆற்றலைத் தூண்டுக.

(15 நிமிடம்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்:**

- பதம், ஸ்வரஜதி ஆகிய உருப்படிகளின் விசேட அம்சங்களைக் குறிப்பிடுவர்.
- இவ்வுருப்படிகளை இரசிப்பதன் மூலம் பாடகரின் ஆற்றலை மதிப்பிடுவர்.
- பதம், ஸ்வரஜதி ஆகியவற்றை இரசித்து அனுபவித்தவற்றை விமர்சிப்பர்.
- இரசிப்பதன் மூலம் பிறரது ஆற்றுகைத் திறனை மதிப்பர்.

## செயற்பத்திரம் 1:2:2:1

### குழு I

* கொடுக்கப்பட்ட பதத்தைக் கேட்டும்/பார்த்தும் இரசித்து பின்வரும் அம்சங்களை உள்ளடக்கியதாக ஒரு விமர்சனக் கட்டுரையைக் குழுவில் உள்ள அங்கத்தவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாக எழுதுக.

(1) உருப்படியின் தரம், அதன் தன்மை
(2) வாத்தியங்களின் ஒத்திசைவு
(3) சாகித்திய சுத்தம்
(4) இராகம், பாவம், தாளம், உருப்படி அமைப்பு, இயற்றியவர்.
(5) பாடியவரின் குரல் வளம்.

### குழு II

* கொடுக்கப்பட்ட ஸ்வரஜதியைக் கேட்டும்/பார்த்தும் இரசித்துப் பின்வரும் அம்சங்களை உள்ளடக்கியதாக ஒரு விமர்சனக் கட்டுரையைக் குழுவில் உள்ள அங்கத்தவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாக எழுதுக.

(1) உருப்படியின் தரம், அதன் தன்மை
(2) வாத்தியங்களின் ஒத்திசைவு
(3) சாகித்திய சுத்தம்
(4) இராகம், தாளம், பாவம், உருப்படி, அமைப்பு, இயற்றியவர்
(5) பாடியவரின் குரல் வளம்

**தேர்ச்சி 2.0** : பல்வேறு இசை நிகழ்ச்சிகளை தாமே தயாரிப்பதன் மூலம் தமது ஆற்றுகைத் திறனை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 2.1** : இசை நிகழ்ச்சிகளைத் தாமே தயாரிப்பார்.

**செயற்பாடு 2.1.1** : சங்கராபரணம், மோஹனம், ஆனந்தபைரவி, ஆகிய இராகங்களில் சிறுவர் பாடல்களுக்கு மெட்டமைத்துப் பாடுவோம். (மாணவர் தரத்திற்கேற்ற சிறுவர் பாடல்கள்)

**நேரம்** : 1 மணி 20 நிமிடம் (02 பாடவேளைகள்)

**தர உள்ளீடு** : சங்கராபரணம், மோஹனம், ஆனந்தபைரவி, ஆகிய இராகங்களில் அமைந்த பாடல்கள் அடங்கிய ஒலிப்பதிவு நாடா, ஒலிப்பதிவுக் கருவி. செயற்பத்திரம் 2.1.2.1

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**

**படி 2.1.1** : குறிப்பிட்ட இராகங்களில் ஏற்கனவே கற்ற பாடல்களைப் பாடியோ ஒலிப்பதிவு நாடா மூலம் ஒலிக்கச் செய்தோ அவற்றின் சாயல்களை மனத்திற் கொண்டு இசையமைக்கத் தூண்டுக.

: இசையமைத்தல் தொடர்பாக பின்வரும் விடயங்களைக் கலந்துரையாடுக.

- மெட்டமைக்க வேண்டிய இராகங்கள்
  - சங்கராபரணம்
  - மோகனம்
  - ஆனந்தபைரவி
- இந்த இராகங்களின் ஆரோகண, அவரோகணம்.
- மெட்டமைப்பதற்குரிய இலகுவான பாடல்கள் (நான்கு வரிகள் கொண்ட பாடல்கள் விரும்பத்தக்கது)
- அதிக கமகங்கள் இன்றி, எளிமையான முறையில் மெட்டமைத்து இராக, தாளத்துடன் பாடுவதற்கு நெறிப்படுத்துக.

(20 நிமிடம்)

**படி 2.1.2** :
- மாணவரை மூன்று குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் ஒவ்வொரு இராகத்தைக் கொடுத்து மெட்டமைக்கச் செய்க.
- ஒவ்வொரு குழுவும் சரியாக மெட்டமைக்கின்றார்களா என உறுதிப்படுத்துக.
- ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளைச் சமர்ப்பிக்கும் வகையில் ஆயத்தம் செய்ய ஊக்கமளிக்குக.

(30 நிமிடம்)

**படி 2.1.3** :
- ஒவ்வொரு குழுவும் தமது பெறுபேறுகளை முன்வைக்க சந்தர்ப்பம் வழங்குக.

: • ஏனைய குழுக்களும் அதனை அவதானித்துத் தத்தமது கருத்துக்களைக் கூற இடமளிக்குக.

: • குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்க.

- மெட்டமைக்கப்பட வேண்டிய இராகங்கள் சங்கராபரணம், மோஹனம், ஆனந்தபைரவி என்பதைக் குறிப்பிடுக.
- இந்த ராகங்களின் ஆரோஹண அவரோஹணங்களை முதலாம் இரண்டாம் காலங்களில் பாடி அவற்றின் சாயலை மனதில் கொண்டு இசையமைக்க வேண்டும் என்பதை வலியுறுத்துக.
- இசையமைக்கும் போது அதிக கமகங்கள் இல்லாது எளிமையான முறையிலும் இலகுவான மெட்டிலும் இசையமைக்க நெறிப்படுத்துக.
- ஆசிரியரின் ஆலோசனைப்படி தாம் இசையமைத்த பாடல்களைத் திருத்தமாக இராக தாளத்துடன் பாடி செய்க.

(30 நிமிடம்)

**கணிப்பீட்டு, மதிப்பீட்டு நியதிகள் :**

- சிறுவர் பாடலுக்கு சங்கராபரணம், மோகனம், ஆனந்தபைரவி ஆகிய இராகங்களில் மெட்டமைக்கும் திறனைப் பெறுவர்.
- மெட்டமைத்த பாடல்களை இராக, தாளத்துடன் பாடுவர்.

## செயற்பத்திரம் 2.1.2.1

- ஒரே பாடலைத் தெரிவு செய்து மூன்று குழுக்களுக்கும் வழங்குக.

**குழு I**

- கொடுக்கப்பட்ட பாடலுக்கு மோகன இராகத்தில் மெட்டமைக்குக.
- மெட்டமைத்த பாடலை இராக, தாளத்துடன் பாடுக.

**குழு II**

- கொடுக்கப்பட்ட பாடலுக்கு சங்கராபரண இராகத்தில் மெட்டமைக்குக.
- மெட்டமைத்த பாடலை இராக, தாளத்துடன் பாடுக.

**குழு III**

- கொடுக்கப்பட்ட பாடலுக்கு ஆனந்தபைரவி இராகத்தில் மெட்டமைக்குக.
- மெட்டமைத்த பாடலை இராக, தாளத்துடன் பாடுக.

இணைப்பு -

இசையமைக்கக் கூடிய பாடல்கள்.

உ+ ம்

1. சுற்றிவரக் கடல் முத்தமிடும் - எங்கள்
   சுந்தரச் செந்தமிழ் நாட்டினிலே
   கூவும் குயிலோசை தாலாட்டிலே - என்றும்
   கூடி மகிழ்ந்திடும் கூடமம்மா

2. கூடையைத் தூக்கிக் கொண்டு
   போறவளே - கறுப்பாயி
   நீயிருக்கும் - கூடாரம்
   சொந்தமோடி - கறுப்பாயி

தேர்ச்சி 3.0 : இசை உருப்படிகளைச் சுருதி, இராக, தாளத்துடன் பாடிக் காட்டுவார்.

தேர்ச்சி மட்டம் 3.1 : இராகங்களின் ஆரோஹண அவரோஹணங்களை ஸ்வரஸ்தான சுத்தத்துடன் பாடுவார்.

செயற்பாடு 3.1.1 : பிலஹரி, மோஹனம், மத்தியமாவதி, கமாஸ்,மாயாமாளவ கௌளை ஆகிய இராகங்களின் ஆரோஹண அவரோஹணங் களை சுருதி, ஸ்வரஸ்தான சுத்தத்துடன் பாடுவோம்.

நேரம் : 40 நிமிடம் (01 பாடவேளை)

தர உள்ளீடு :

- சுருதிப்பெட்டி, வயலின்/ஹார்மோனியம்,
- பிலஹரி, மோஹனம், மத்தியமாவதி, கமாஸ், மாயாமாளவகௌளை ஆகிய இராகங்களின் ஆரோஹணம், எழுதப்பட்ட அட்டை, ஸ்வரஸ்தான வரைபடம், செயற்பத்திரம் 3.1.2.1

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :

படி 3.1.1 :

- பிலஹரி, மோஹனம், மத்தியமாவதி, கமாஸ், மாயாமாளவகௌளை ஆகிய இராகங்களின் ஆரோஹண அவரோஹணங்களை ஒவ்வொரு இராகமாகப் பாடிக் காட்டியும், வாத்தியத்தில் வாசித்தும் செவிமடுக்கச் செய்க.

: • செவிமடுத்த இராகங்களை இனங்காணச் செய்க.

: • இனங்கண்ட இராகங்களை அடிப்படையாகக் கொண்டு பின்வரும்விடயங்கள் வலியுறுத்தப்படும் வகையில் கலந்துரையாடுக.

| | | | | |
|---|---|---|---|---|
| • பிலஹரி - | ஆ | - | ஸரிகபதஸ் | 29 |
| | அ | - | ஸ்நிதபமகரிஸ | |
| மோகனம் | ஆ | - | ஸரிகபதஸ் | 28 |
| | அ | - | ஸ்தபகரிஸ | |
| மத்தியமாவதி | ஆ | - | ஸரிமபநிஸ் | 22 |
| | அ | - | ஸ்நிபமரிஸ | |
| கமாஸ் | ஆ | - | ஸமகமபதநிஸ் | 28 |
| | அ | - | ஸ்நிதபமகரிஸ | |
| மாயாமாளவகௌளை | ஆ | - | ஸரிகமபதநிஸ் | 15 |
| | அ | - | ஸ்நிதபமகரிஸ | |

- ஸ்வரஸ்தான வரைபடத்தினைக் காண்பித்து மேலே குறிப்பிட்ட இராகங்களின் ஸ்வரஸ்தானங்களை மாணவர் இனங்கண்டு கூறுவதற்கு இடமளிக்க.

I. பிலஹரி இராகம் : - ஸட்ஜம், சதுஸ்ருதிரிஷபம், அந்தரகாந்தாரம், சுத்தமத்திமம், பஞ்சமம், சதுஸ்ருதிதைவதம், காகலிநிஷாதம், கைசிகிநிஷாதம்

II. மோஹன இராகம் : ஸட்ஜம், சதுஸ்ருதிரிஷபம், அந்தரகாந்தாரம், பஞ்சமம், சதுஸ்ருதி தைவதம்.

III. மத்தியமாவதி இராகம் : ஸட்ஜம், சதுஸ்ருதிரிஷபம், சுத்தமத்திமம், பஞ்சமம், கைசிகிநிஷாதம்.

IV. கமாஸ் இராகம் : ஸட்ஜம், சதுஸ்ருதிரிஷபம், அந்தரகாந்தாரம், சுத்தமத்திமம், பஞ்சமம், சதுஸ்ருதிதைவதம், கைசிகிநிஷாதம்

V. மாயாமாளவகௌளை இராகம் : ஸட்ஜம், சுத்தரிஷபம், அந்தரகாந்தாரம், சுத்தமத்திமம், பஞ்சமம், சுத்ததைவதம், காகலிநிஷாதம்

- இவ் இராகங்களின் ஆரோஹண, அவரோஹணங்களை முழுமையாகப்பாடி மாணவர்களைச் செவிமடுக்கச் செய்க.
- குறித்த இவ் இராகங்களின் ஆரோஹண, அவரோஹணங்களைப் பாட மாணவர் அதைக் கேட்டுப் பாடுவதற்கு வழிப்படுத்துக.
- மாணவருடன் சேர்ந்து குறித்த இராகங்களின் ஆரோஹண அவரோஹணங்களைப் பாடுக.
- மாணவர்களைக் குழுக்களாகவும் எழுமாற்றாகத் தெரிவு செய்து தனியாகவும் பாடச் செய்க.

(15 நிமிடங்கள்)

படி 3.1.2 :

- மாணவர்கள் ஒவ்வொருவரிடமும் செயற்பத்திரத்தினை இணைப்புடன் வழங்குக.
- செயற்பத்திரத்தில் கொடுக்கப்பட்ட அறிவுறுத்தலுக்கேற்ப பாடிப்பழகச் சந்தர்ப்பம் அளிக்குக.
- தனியாகப் பாடும்போது சரியாகப் பாடுகின்றார்களா என்பதை உறுதி செய்க.

(15 நிமிடங்கள்)

படி 3.1.3 :

- ஒவ்வொரு மாணவர்களும் தத்தமது பேறுகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குக.
- ஒவ்வொருவரும் தத்தமது பேறுகளைச் சமர்ப்பிக்கும் போது ஏனையவர்களும் அதனை அவதானித்துக் கருத்துக் கூறுவதற்கு இடமளிக்க.
- மாணவர்களது குறை இனங்கண்டு முழுமைப்படுத்துக.

பின்வரும் விடயங்களை மீளவும் வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடுக.

- இராகங்களின் ஆரோஹண அவரோஹணங்களை ஸ்வரஸ்தான சுத்தத்துடன் பாடுவதற்கு வழிப்படுத்துக.
- மாணவருடன் சேர்ந்து தரப்பட்ட இராகங்களின் ஆரோஹண அவரோஹணங்களைப் பாடுக.

(10 நிமிடங்கள்)

கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்:

- பிலஹரி, மோகனம், மத்தியமாவதி, கமாஸ், மாயாமாளவகௌளை ஆகிய இராகங்களின் ஆரோஹண அவரோஹணங்களைக் குறிப்பிடுவர்.
- இராகங்களின் ஸ்வரதானங்களைக் குறிப்பிடுவர்.
- இராகங்களின் ஸ்வரஸ்தானங்களை சுருதியுடன் பாடிக்காட்டுவர்.
- பிலஹரி, மோகனம், மத்தியமாவதி, கமாஸ், மாயாமாளவகௌளை ஆகிய இராகாக்களின் ஆரோகண, அவரோகணங்களைப்பாடுக்போது குறித்த இராகங்களை இனங்கண்டு கூறுவர்.

## செயற்பத்திரம் 3.1.2.1

- ஒவ்வொரு மாணவருக்கும் இச் செயற்பத்திரத்தை வழங்குக.

- பிலஹரி, மோஹனம், மத்தியமாவதி, கமாஸ், மாயாமாளவகௌளை ஆகிய இராகங்களின் ஆரோஹண, அவரோஹணங்களை சுருதி, ஸ்வரஸ்தான சுத்தத்துடன் பாடிப் பயிற்சி செய்க.
- கொடுக்கப்பட்ட இராகங்களின் ஆரோகண, அவரோகணத்தை சுருதி, ஸ்வரஸ்தான சுத்தத்துடன் பாடுக.

| இராகம் | ஆரோகண, அவரோகணம் | ஸ்வரஸ்தானம் |
|---|---|---|
| 1) பிலஹரி | 1) ஸரிகபதஸ் ஸ்நிதபமகரிஸ } 29 | 1.) ஸட்ஜம், சதுஸ்ருதிரிஷபம், அந்தரகாந்தாரம், சுத்தமத்திமம் பஞ்சமம், சதுஸ்ருதிதைவதம், காகலிநிஷாதம், கைசிகிநிஷாதம் |
| 2) மோகனம் | 2) ஸரிகபதஸ் ஸ்தபகரிஸ } 28 | 2.) ஸட்ஜம், சதுஸ்ருதிரிஷபம், அந்தரகாந்தாரம், பஞ்சமம், சதுஸ்ருதிதைவதம் |
| 3) மத்யமாவதி | 3) ஸரிமபநிஸ் ஸ்நிபமரிஸ } 22 | 3.) ஸட்ஜம், சதுஸ்ருதிரிஷபம் சுத்தமத்திமம், பஞ்சமம், கைசிகிநிஷாதம் |
| 4) கமாஸ் | 4) ஸமகமபதநிஸ ஸ்நிதபமகரிஸ } 28 | 4.) ஸட்ஜம், சதுஸ்ருதிரிஷபம், அந்தரகாந்தாரம், சுத்தமத்திமம், பஞ்சமம், சதுஸ்ருதிதைவதம், கைசிகிநிஷாதம் |
| 5) மாயாமாளவகௌளை | 5) ஸரிகமபதநிஸ் ஸ்நிதபமகரிஸ } 15 | 5.) ஸட்ஜம், சுத்தரிஷபம், அந்தரகாந்தாரம், சுத்தமத்திமம், பஞ்சமம், சுத்ததைவதம், காகலி நிஷாதம் |

**தேர்ச்சி 3.0** : இசை உருப்படிகளைச் சுருதி, இராக, தாளத்துடன் பாடிக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.2** : அப்பியாசகான உருப்படிகளை இராக, தாளத்துடன் பாடுவார்.

**செயற்பாடு 3.2.1** : ஜம்பை, திரிபுடைதாள அலங்காரங்களை இராக, தாளத்துடன் பாடுவோம்.

**நேரம்** : 01மணி 20 நிமிடம் (02 பாடவேளைகள்)

**தர உள்ளீடு** : சுருதிப்பெட்டி, அலங்காரம் எழுதப்பட்ட அட்டை, மாயாமாளவகௌளை இராக ஸ்வரஸ்தான வரைபடம். செயற்பத்திரம் 3.2.2.1

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு** :

படி 3.2.1

: ஆசிரியர் அலங்காரம் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தி ஜம்பை, திரிபுடைதாள அலங்காரங்களைப் பாடிக் காட்டி மாணவரைச் செவிமடுக்கச் செய்க.

: • செவிமடுப்பதன் மூலம் அதனை இனங்காணச் செய்க.

: • இனங்கண்ட அலங்காரங்களில் பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுக.

- மிரஸ்ஜாதி ஜம்பைதாள அங்க அடையாளம் -$1_7$∪O, மொத்த அட்சரம் 10.
- திஸ்ரஜாதி திரிபுடைதாள அங்க அடையாளம் - $1_3$00 மொத்த அட்சரம் 7. என்பதை விளக்குக
- மாயாமாளவகௌளை இராகத்தின் ஆரோகண, அவரோகணத்தைத் ஸ்வரஸ்தான சுத்தமாகப்பாடுவதற்கு வழிப்படுத்துக.
- ஜம்பை, திரிபுடை தாளங்களை ஆசிரியர் போட்டுக்காட்டி *நெறிப்படுத்துவதற்கேற்ப மாணவரும் அதே போன்று செயற்பட* வழிப்படுத்துக.
- ஜம்பை, திரிபுடை தாள அலங்காரங்களை ஒவ்வோர் ஆவர்தனமாகப்பாட மாணவர் தொடர்ந்து பாடவதற்கு வழிப்படுத்துக.
- இவ் அலங்காரங்களை தாளத்தோடு பாட மாணவர் தொடர்ந்து தாளம் போட்டுப் பாடுவதற்கு இடமளிக்க.
- மூன்று காலங்களிலும் அலங்காரங்களைப் பாடிப் பயிற்சி பெற வழிப்படுத்துக.

- மூன்று காலங்களிலும் பாடும்போது ஏற்படும் தாள அட்சர வேறுபாட்டை மாணவர் அறிந்து கொள்ளச் செய்க.

- மாணவருடன் சேர்ந்து இராக, தாளத்துடன் அலங்காரங்களை மூன்று காலங்களிலும் பாடுக.

- மாணவரைக் குழுவாகவும் எழுமாற்றாகத் தெரிவு செய்து தனியாகவும் பாடச் சந்தர்ப்பம் வழங்குக.

(30 நிமிடம்)

படி 3.2.2 :

- வகுப்பிலுள்ள மாணவர்களை சிறுகுழுக்களாகப் பிரித்து செயற்பத்திரங்களை இணைப்புடன் வழங்குக.

- அறிவுரைக்கேற்ப ஒவ்வொரு குழுவும் சரியாகப் பாடிப் பயிற்சி செய்கிறார்களா என்பதனை உறுதிப்படுத்துக.

(30 நிமிடம்)

படி 3.2.3 :

- ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குக.

- ஏனைய குழுக்களும் அவற்றை அவதானித்துக் கருத்துக் கூற இடமளிக்குக.

- குறைகளை இனங்கண்டு முழுமைப்படுத்துக.

- குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்க.

- மிரஸ்ஜாதி ஜம்பைதாள அலங்காரத்தின் அங்கம் $1_7$UO
  மொத்த அட்சரம் - 10
- திஸ்ரஜாதி திரிபுடைதாள அலங்காரத்தின் அங்கம் - $1_3$00
  மொத்த அட்சரம் 7.

- ஒரு அலங்காரத்தில் 10 ஆவரத்தங்கள் உள்ளது என்பதனை மாணவர் அறிந்து கொள்ளச் செய்க.
- மாணவருடன் சேர்ந்து மூன்று காலங்களிலும் ஜம்பை, திரிபுடைதாள அலங்காரங்களை இராக தாளத்துடன் முழுமையாகப் பாடுக.

(20 நிமிடம்)

**கணிப்பீட்டு நியதிகள் / மதிப்பீட்டு :**

- மிஸ்ரஜாதி ஜம்பை தாளத்தின் அங்க அடையாளங்களையும் மொத்த அட்சர காலத்தையும் குறிப்பிடுவர்.
- திஸ்ரஜாதி திரிபுடைதாளத்தின் அங்க அடையாளங்களையும் மொத்த அட்சர காலத்தையும் குறிப்பிடுவர்.
- திஸ்ர ஜாதி திரிபுடை தாளத்தினை அங்க சுத்தமாகப் போட்டுக் காட்டுவர்.
- மிஸ்ரஜாதி ஜம்பை தாளத்தினை அங்க சுத்தமாகப் போட்டுக் காட்டுவர்.
- ஒரு அலங்காரத்தில் பத்து ஆவர்த்தங்கள் உள்ளது என்பதனை ஏற்றுக் கொள்வர்.
- மிஸ்ரஜாதி ஜம்பை தாள, திஸ்ர ஜாதி திரிபுடைதாள அலங்காரத்தை இராக, தாளத்தோடு மூன்று காலங்களிலும் பாடுவர்.

## செயற்பத்திரம் 3.2.2.1

- சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தை வழங்குக

| |
|---|
| • மிஸ்ரஜாதி ஜம்பை தாள அலங்காரத்தையும், திஸ்ரஜாதி திரிபுடைதாள அலங்காரத்தையும் இராக, தாளத்துடன் மூன்று காலங்களிலும் பாடிப் பயிற்சி செய்க. |
| • கொடுக்கப்பட்ட அலங்கரங்களை இராக, தாளத்துடன் மூன்று காலங்களிலும் பாடுக. |

இராகம் : மாயாமாளவகெளளை
தாளம் : மிஸ்ரஜாதி ஜம்பை தாளம்
அங்கங்கள் : $1_7$ U O
மொத்த அட்சரங்கள் : 10

| $1_7$ | U | O |
|---|---|---|
| ஸ ரி க ஸ ரி ஸ ரி | க | மா // |
| ரி க ம ரி க ரி க | ம | பா // |
| க ம ப க ம க ம | ப | தா // |
| ம ப த ம ப ம ப | த | நீ // |
| ப த நி ப த ப த | நி | ஸ்ா // |
| ஸ் நி த ஸ் நி ஸ் நி | த | பா // |
| நி த ப நி த நி த | ப | மா // |
| த ப ம த ப த ப | ம | கா // |
| ப ம க ப ம ப ம | க | ரீ // |
| ம க ரி ம க ம க | ரி | ஸா // |

இராகம் : மாயாமாளவகெளளை
தாளம் : திஸ்ர ஜாதி திரிபுடை தாளம்
அங்கங்கள் : $1_3$ O O
மொத்த அட்சரங்கள் - 07

| $1_3$ | O | O |
|---|---|---|
| ஸ ரி க | ஸ ரி | க ம // |
| ரி க ம | ரி க | ம ப // |
| க ம ப | க ம | ப த // |
| ம ப த | ம ப | த நி // |
| ப த நி | ப த | நி ஸ் // |
| ஸ் நி த | ஸ் நி | த ப // |
| நி த ப | நி த | ப ம // |
| த ப ம | த ப | ம க // |
| ப ம க | ப ம | க ரி // |
| ம க ரி | ம க | ரி ஸ // |

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 3.0 | : | இசை உருப்படிகளைச் சுருதி, இராக, தாளத்துடன் பாடிக் காட்டுவர். |
| தேர்ச்சி மட்டம் 3.2 | : | அப்பியாசகான உருப்படிகளை இராக, தாளத்துடன் பாடுவர். |
| செயற்பாடு 3.22 | : | "சிவபெருமானே" என்னும் கீதத்தை இராக, தாளத்துடன் பாடுவோம். |
| நேரம் | : | 01மணி 20 நிமிடம் (02 பாடவேளைகள்) |
| தர உள்ளீடு | : | சுருதி பெட்டி, ஒலிப்பதிவு நாடா, ஒலிப்பதிவுக் கருவி, கீதம் எழுதப்பட்ட அட்டை, செயற்பத்திரம் 3.2.2.2 |

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :**

படி 3.2.1

- கீதத்தை ஒலிப்பதிவு நாடாவில் ஒலிக்கச் செய்தோ ஆசிரியர் பாடிக்காட்டியோ மாணவரைச் செவிமடுக்கச் செய்க.
- செவிமடுப்பதன் மூலம் அதனை இனங்காணச் செய்க.
- இனங்கண்ட பாடலில் பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுக.

> - கீதம் அமைந்த இராகம் - மத்தியமாவதி
> - தாளம் - ஆதி
> - அப்பியாசகான உருப்படிகளில் அலங்காரங்களுக்குப் பின் கீதம் கற்பிக்கப்படுகிறது.
> - முதன் முதலில் சாகித்திய ரூபமாகக் கற்கும் அப்பியாசகான உருப்படிவகை கீதமாகும்.
> - கீதத்தில் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற அங்க வேறுபாடுகள் இல்லை.
> - மாணவர் மத்தியமாவதி இராகத்தின் ஆரோகண, அவரோகணத்தைப் பாடுவதற்கு வழிப்படுத்துக.
> - கீதத்தைக் காட்சிப்படுத்தி அதனைப் பகுதி பகுதியாக ஸ்வரசாகித்தியமாகப் பாட மாணவர் தொடர்ந்து பாடுவதற்கு இடமளிக்க.
> - மாணவருடன் சேர்ந்து இராக, தாளத்துடன் கீதத்தை முழுமையாகப் பாடுக.
> - மாணவரைச் சிறிய குழுக்களாகவும், எழுமாற்றாகத் தெரிவுசெய்து தனித்தனியாகவும் பாடச் சந்தர்ப்பம் வழங்குக.

(30 நிமிடம்)

படி 3.2.2

- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப, மாணவரைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தை இணைப்புடன் வழங்குக.
- ஒவ்வொரு குழுவும் கீதத்தைச் சரியாகப் பாடிப் பயிற்சி செய்கிறார்களா என்பதை உறுதி செய்க.

(30 நிமிடம்)

படி 3.2.3

- ஒவ்வொரு குழுவும், குழுவாகவும், தனியாகவும் கீதத்தைப் பாடச் சந்தர்ப்பம் வழங்குக.

- ஒரு குழு பாடும் போது, ஏனைய குழுக்கள் அதனை அவதானித்து தமது கருத்துக்களைத் தெரிவிக்க இடமளிக்க.

- மாணவரின் குறைகளை இனங்கண்டு முழுமைப்படுத்துக.

- பின்வரும் விடயங்களை மீனவும் வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடுக.

> - சிவபெருமானே என்னும் கீதம் மத்தியமாவதி இராகத்தில், ஆதி தாளத்தில் அமைந்துள்ளது.
>
> - அப்பியாசகான உருப்படிகளில் அலங்காரங்களுக்குப் பின் கீதம் கற்பிக்கப்படுகிறது.
>
> - முதன் முதலில் சாகித்திய ரூபமாகக் கற்கும் அப்பியாசகான உருப்படிவகை கீதமாகும்.
>
> - பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற அங்க வேறுபாடுகள் கீதத்தில் இல்லை.
>
> - மாணவருடன் சேர்ந்து கீதத்தை இராக, தாளத்துடன் முழுமையாகப் பாடுக.

(20 நிமிடம்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- சிவபெருமானே எனும் கீதம் அமைந்துள்ள இராக, தாளத்தைக் குறிப்பிடுவர்.

- கீதத்தை இராக, தாளத்துடன் பாடுவர்.

**செயற்பத்திரம் - 3.2.2.2**

- சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குக.

> - 'சிவபெருமானே' என்னும் கீதத்தை இராக, தாளத்துடன் பாடிப் பயிற்சி செய்க.
>
> - குறித்த கீதத்தை இராக, தாளத்துடன் பாடுக.

## சஞ்சாரி கீதம் - சிவபெருமானே

இராகம் : மத்தியமாவதி தாளம் : ஆதி

ஆரோகணம் : ஸரிமபநிஸ்
அவரோகணம் : ஸ்நிபமரிஸ

22 வது மேளகர்த்தாவின் ஜன்யம்

ஸ்வரஸ்தானங்கள் :- ஸட்ஜம், சதுஸ்ருதிரிஷபம், சுத்தமத்திமம், பஞ்சமம், கைசிகிநிஷாதம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| $1_4$ | 0 | 0 | $1_4$ | 0 | 0 |
| ரிஸரிம / | பா/ | பா// | மபநிம / | பா / | பா // |
| சிவபெரு | மா | னே | செழுஞ்சுட | ரோ | னே |
| பமமப / | பநி/ | நீ// | பநிபப / | மம / | ரிஸ // |
| தீ.வினை | யா | வும் | தீர்த்தருள் | வோ | னே |
| ரிரிபம / | பா/ | பா// | மபநிப / | மப / | நீ // |
| உமை மண | வா | ளா | உவந்தெனை | யா. | ளாய் |
| ரிரிமம / | பப/ | நிநி// | பநிஸ்நி / | ஸ்ா / | ஸ்ா // |
| அமரர் | பணி | யும் | அம்புயத் | தா | ளா |
| ரீ. ரீ / | ஸ்நி/ | ஸ்ா// | நிபநிஸ் / | நிப / | மம // |
| மூ வா | முத | லே | முதுகண் | நுத | லே |
| பரிபம / | நிப / | நீ // | பநிஸ்நி / | பரி / | ரீ // |
| பா. வார் | பொரு | ளே | பண்ணின் | பய | னே |
| ஸ்ஸ்ரிநி / | நிநி/ | ஸ்ப // | பநிஸ்நி / | ஸ்ரீ / | ம்ரி // |
| அருவாய் | உரு | வாய் | அமர்வா | .. | யே |
| ப்ம்ரிஸ் / | நிப/ | ரீ // | ஸ்நிபம / | ரிம / | ரிஸ // |
| வருவாய் | அரு | ளே | தருவா | .. | யே |

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 3.0 | : | இசை உருப்படிகளைச் சுருதி, இராக, தாளத்துடன் பாடிக் காட்டுவார். |
| தேர்ச்சி மட்டம் 3.2 | : | அப்பியாசகான உருப்படிகளை இராக, தாளத்துடன் பாடுவார். |
| செயற்பாடு 3.2.3 | : | "வரவீணா, ஸ்வாமிநாதா" என்னும் கீதங்களை இராக, தாளத்துடன் பாடுவோம். |
| நேரம் | : | 40 நிமிடம் (01 பாடவேளை) |
| தர உள்ளீடு | : | சுருதி பெட்டி ஒலிப்பதிவு நாடா, ஒலிப்பதிவுக் கருவி, கீதம் எழுதப்பட்ட அட்டை செயற்பத்திரம் 3.2.2.3 |

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :**

படி 3.2.1

- ஏற்கனவே கற்ற வரவீணா, ஸ்வாமிநாதா என்னும் கீதங்களை ஆசிரியர் பாடிக்காட்டியோ ஒலிப்பதிவு நாடாவில் ஒலிக்கச் செய்தோ மாணவரைச் செவிமடுக்கச் செய்க.
- செவிமடுப்பதன் மூலம் அதனை இனங்காணச் செய்க.
- இனங்கண்ட பாடல்களில் பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுக.

- "வரவீணா" என்னும் கீதம் மோகன இராகத்தில் ருபக தாளத்தில் அமைந்துள்ளது.
- 'ஸ்வாமி நாதா' எனும் கீதம் சுத்தசாவேரி இராகத்தில் ருபக தாளத்தில்அமைந்துள்ளது.
- அப்பியாசகான உருப்படிகளில் அலங்காரங்களுக்குப் பின் கீதம் கற்பிக்கப்படுகிறது.
- முதன் முதலில் சாகித்தியபமாகக் கற்கும் அப்பியாச கான உருப்படிவகை கீதமாகும்.
- கீதத்தில் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்னும் அங்க வேறு பாடுகள் இல்லை.
- மாணவர் மோகனம், சுத்தசாவேரி ஆகிய இராகங்களின் ஆரோகண, அவரோகணத்தைப் பாடுவதற்கு வழிப்படுத்துக.
- கீதங்களைக் காட்சிப்படுத்தி, அவற்றைப் பகுதி பகுதியாக ஸ்வர சாகித்தியமாகப் பாட மாணவர் தொடர்ந்து பாடுவதற்கு இடமளிக்க.
- மாணவருடன் சேர்ந்து இராக, தாளத்துடன் கீதங்களை முழுமையாகப் பாடுக.
- மாணவரைச் சிறிய குழுக்களாவும் , எழுமாற்றாத் தெரிவு செய்து தனித்தனியாகவும் பாடச் சந்தர்ப்பம் வழங்குக.

(15 நிமிடம்)

படி 3.2.2

- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப மாணவரைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தை இணைப்புடன் வழங்குக.
- ஒவ்வொரு குழுவும் கீதங்களைச் சரியாகப் பாடிப் பயிற்சி செய்கிறார்களா என்பதை உறுதி செய்க.

(15 நிமிடம்)

படி 3.2.3

- ஒவ்வொரு குழுவும், குழுவாகவும், தனியாகவும் கீதங்களைப் பாடச் சந்தர்ப்பம் வழங்குக.
- ஒரு குழு பாடும் போது ஏனைய குழுக்கள் அதனை அவதானித்து தமது கருத்துக்களைத் தெரிவிக்க இடமளிக்க.
- மாணவரின் குறைகளை இனங்கண்டு முழுமைப்படுத்துக.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடுக.

> - "வரவீணா" என்னும் கீதம் மோகன இராகத்தில் ரூபக தாளத்தில் அமைந்துள்ளது
> - "ஸ்வாமிநாதா" என்னும் கீதம் சுத்தசாவேரி இராகத்தில் ரூபக தாளத்தில் அமைந்துள்ளது
> - அப்பியாசகான உருப்படிகளில் அலங்காரங்களுக்குப்பின் கீதம் கற்பிக்கப்படுகிறது.
> - முதன் முதலில் சாகித்தியமாகக் கற்கும் அப்பியாசகான உருப்படிவகை கீதமாகும்.
> - பல்லவி, அனுபல்லவி, சரணம் என்னும் அங்க வேறுபாடுகள் கீதத்தில் இல்லை.
> - மாணவருடன் சேர்ந்து "வரவீணா, ஸ்வாமிநாதா" எனும் கீதங்களை இராக, தாளத்துடன் முழுமையாகப் பாடுக.

(15 நிமிடம்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- "வரவீணா" என்னும் கீதம் அமைந்துள்ள இராக, தாளத்தைக் குறிப்பிடுவர்
- "ஸ்வாமிநாதா" என்னும் கீதம் அமைந்துள்ள இராக, தாளத்தைக் குறிப்பிடுவர்
- "வரவீணா", "ஸ்வாமிநாதா" என்னும் கீதங்களை இராக தாளத்துடன் பாடுவர்.

# செயற்பத்திரம் 3.2.2.3

சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குக.

- "வரவீணா", "ஸ்வாமிநாதா" எனும் கீதங்களை இராக, தாளத்துடன் பாடிப்பயிற்சி செய்க
- குறித்த கீதங்களை இராக, தாளத்துடன் பாடுக

இணைப்பு - I

## சஞ்சாரி கீதம் (வரவீணா)

இராகம் : மோகனம் தாளம் : ரூபகம்

ஆரோகணம் : ஸரிகபதஸ்
அவரோகணம் : ஸ்தபகரிஸ } 28 வது மேளகர்த்தாவின் ஜன்யம்

இதன் ஸ்வரஸ்தானங்கள் : ஸட்ஜம், சதுஸ்ருதிரிஷபம், அந்தரகாந்தாரம், பஞ்சமம், சதுஸ்ருதிதைவதம்.

| 0 | $1_4$ | 0 | $1_4$ |
|---|---|---|---|
| கக / | பாபா // | தப / | ஸ்ாஸ்ா // |
| வர | வீணா | ம்ருது | பாணி |
| ரிஸ் / | ததபா // | தப / | ககரீ // |
| வன | ருகலோ | சனு | ரா-ணி |
| கப / | தஸ்தா // | தப / | ககரீ // |
| கரு / | சிரபம் // | பர / | வேணி // |
| கக / | தபகா // | பக / | கரிஸா // |
| சுர / | ஜுதகல் | யா - | --ணி- // |
| கக / | ககரிக // | பக / | பாபா // |
| நிரு / | பமசுப | குண | லோலா |
| கக / | தபதா // | தப / | ஸ்ாஸ்ா // |
| நிர / | தஜயா // | ப்ரத / | சீ-லா // |
| தக் / | ரீரிஸ்ஸ் // | தஸ் / | தததப // |
| வர / | தாப்ரிய // | ரங்க / | நா.யகி // |
| கப / | தஸ்தப // | தப / | ககரிஸ // |
| வம் / | சிதபல // | தா- | ...யகி // |
| ஸக / | காகா // | கரி / | பகரீ // |
| ஸர / | ஸீ-ஜா // | ஸன | ஜனனீ // |
| ஸரி / | ஸகரிஸ // | | |
| ஜய | ஜயஜய | | |

## சஞ்சாரி கீதம் (சாமிநாதா அருள்வாயே)

இராகம் : சுத்தஸாவேரி தாளம் : ரூபகம்

ஆரோகணம் : ஸரிமபதஸ்
அவரோகணம் : ஸ்தபமரிஸ } 29 வது மேளகர்த்தாவின் ஜன்யம்

இயற்றியவர் : பெரியசாமித்தூரன்

இதன் ஸ்வரஸ்தானங்கள் : ஸட்ஜம், சதுஸ்ருதிரிஷபம், சுத்தமத்திமம், பஞ்சமம், சதுஸ்ருதிதைவதம்.

| 0 | $1_3$ | 0 | $1_3$ |
|---|---|---|---|
| பா / | மரீஸ // | த.த. / | ஸாஸா // |
| சா. | மிநா-தா | அருள் | வா.யே |
| தத / | ரிஸரீ // | ஸரி / | தஸரிம // |
| திரு | வடியே | சர | ணம் சரணம் |
| பப / | மரிபம // | ரிஸ / | ரிமபத // |
| சர | வணபவ | சிவ | குமரனே |
| தப / | மபதா // | பம / | பதஸ்ஸ் // |
| ஆறு | முகனே | கரு | முகில்நிகர் |
| ஸ்த / | ஸ்ரரி // | ம்ரி / | ஸ்தபத // |
| திரு | மாலோன் | மரு | கமுருக |
| ஸ்த / | ரிஸ்ரித // | ஸ்ப / | தமபத // |
| கும | ரபுலவ | குற | மகள்மகிழ் |
| ஸ்ரி / | ம்ர்ரி // | ம்ரி / | ம்ரிஸ்த // |
| கண | வவே-லை | கத | றிடவடி |
| ரீ / | ஸ்தபம // | பம / | ரிஸரிம // |
| வே. | லைவாங்கும் | கை. | யாசரணம் |

**தேர்ச்சி 3.2** : இசை உருப்படிகளைச் சுருதி, இராக, தாளத்துடன் பாடிக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.2** : அப்பியாசகான உருப்படிகளை இராக, தாளத்துடன் பாடுவார்.

**செயற்பாடு 3.2.4** : "சம்போமஹாதேவா" என்னும் ஸ்வரஜதியை இராக, தாளத்துடன் பாடுவோம்.

**நேரம்** : 02 மணித்தியாலம் (03 பாடவேளைகள்)

**தர உள்ளீடு** : சுருதி பெட்டி, ஸ்வரஜதி எழுதப்பட்ட அட்டை
செயற்பத்திரம் 3.2.2.4

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :**

**படி** 3.2.1

- ஆசிரியர் ஸ்வர சாகித்தியமாக ஸ்வரஜதியை முழுமையாகப் பாடிக்காட்டி மாணவர்களைச் செவிமடுக்கச் செய்க.
- செவிமடுப்பதன் மூலம் அதனை இனங்காணச் செய்க.
- மாணவர் இனங்கண்ட பாடலில் பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுக.

- ஸ்வரஜதி எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்துக.
- சம்போமஹாதேவா என்னும் ஸ்வரஜதி கமாஸ் இராகத்தில் ஆதி தாளத்தில் அமைந்தள்ளமை.
- இதனை இயற்றியவர் T.V. பிச்சையப்பா ஆவார்.
- பல்லவி, அனுபல்லவி, சரணம் என்னும் அங்கங்களைக் கொண்டுள்ளமை.
- ஸ்வரஜதியில் பல சரணங்கள் இருப்பினும் ஒவ்வொரு சரணமும் வெவ்வேறு தாதுக்களில் காணப்படும்.
- அமைப்பில் ஜதீஸ்வரத்தை ஒத்திருப்பினும் ஸ்வரங்களுக்கு சாகித்தியம் உள்ளதால் சாகித்ய மாகப்பாடப்படும்.
- மாணவர் கமாஸ் இராகத்தின் ஆரோகண, அவரோகணத்தைப் பாடுவதற்கு நெறிப்படுத்துக.
- ஸ்வரஜதியைக் பகுதி பகுதியாக ஸ்வர சாகித்தியமாகப் பாட மணவர் தொடர்ந்து பாடுவதற்கு இடமளிக்க.
- தாளத்துடன் பாட மாணவர் தாளம் போட்டுப் பாடுவதற்கு வழிப்படுத்துக.
- மாணவருடன் சேர்ந்து இராக, தாளத்துடன் பாடுக.
- மாணவரைச் சிறிய குழுக்களாகவும், எழுமாற்றாகத் தெரிவு செய்து தனித்தனியாகவும் பாடச் சந்தர்ப்பம் வழங்குக.

(30 நிமிடம்)

படி 3.2.2

- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப மாணவரைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தை இணைப்புடன் வழங்குக.
- ஒவ்வொரு குழுவும் அறிவுறுத்தலுக்கேற்ப சரியாகப் பாடிப் பயிற்சி செய்கிறார்களா என்பதை உறுதி செய்க.

(45 நிமிடம்)

படி 3.2.3

- ஒவ்வொரு குழுவும் குழுவாகவும், தனியாகவும் ஸ்வரஜதியினைப் பாடச் சந்தர்ப்பம் வழங்குக.
- ஒரு குழு பாடும்போது ஏனைய குழுக்கள் அதனை அவதானித்துக் கருத்துக்களைத் தெரிவிக்க இடமளிக்க.
- மாணாவரின் குறைகளை இனங்கண்டு முழுமைப்படுத்துக.
- மாணவர்களின் பேறுகளைத் தொகுத்துப் பின்வரும் விடயங்களை மீளவும் வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடுக.

> - ஸ்வரஜதி அமைந்துள்ள இராகம் - கமாஸ்
>   தாளம் - ஆதி
>   இயற்றியவர் - T.V.பிச்சையப்பா
> - பல்லவி, அனுபல்லவி, சரணம் என்னும் அங்கங்களைக் கொண்டுள்ளது.
> - ஸ்வரஜதியில் பல சரணங்கள் இருப்பினும் ஒவ்வொரு சரணமும் வெவ்வேறு தாதுக்களில் காணப்படும்.
> - ஸ்வரஜதியை மாணவருடன் சேர்ந்து இராக, தாளத்துடன் முழுமையாகப் பாடுக.

(45 நிமிடம்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்** :

- ஸ்வரஜதியின் இராகம், தாளம் இயற்றியவர் பெயரைக் குறிப்பிடுவர்.
- ஸ்வரஜதியின் அங்கங்கங்களை கூறுவர்.
- ஸ்வரஜதியை இராக, தாளத்துடன் பாடுவர்.
- இசை உருப்படிகளுள் ஸ்வரஜதியை இனங்காண்பர்.

## செயற்பத்திரம் - 3.2.2.4

சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தை வழங்குக.

> - சம்போமஹா தேவா என்னும் ஸ்வரஜதியை இராக, தாளத்துடன் பாடிப் பயிற்சி செய்க.
> - குறித்த ஸ்வரஜதியை இராக தாளத்துடன் பாடுக.

# ஸ்வரஜதி

இயற்றியவர்: T.V. பிச்சையப்பா

இராகம் : கமாஸ்
ஆ. ஸமகமபதநிஸ் } 28
ஆ. ஸ்நிதபமகரிஸ } 28
தாளம் : ஆதி

| $1_4$ | 0 | 0 |
|---|---|---|
| | பல்லவி | |
| 1. ஸ்ா, நீ, தா பா ; மா கா | மா ; ; கா | மா பா தா நீ |
| சம். போ. ம. ஹா . தே . | வா . . சா | ம் ப சி வ |
| 2 ஸ்ா, நீ, த ம ப நி த ப தமாகா | மா ; ; மக | மா பா தா நீ |
| சம். போ. ம. .ஹா. .தே. | வா . . சா | ம் ப சி வ |
| | அனுபல்லவி | |
| ஸ்ா ; தநீ; - பமா, நிதா , ப | மா,க மா, த | மா, பதா நீ |
| சங் . கரா. சதா சிவா . ம | னம் .கனிந். த | ருள். தர வா |
| | சரணம் | |
| 1. ஸ்ஸ்ரி நிஸ்ாநித - பபதம பாமக | ஸ ஸா ம கா மா | பமா பா த நீ |
| அகில சராசர பசுபதி யாகிய | ப ரம் பொரு ளே | பரம் ஜோ தி யே |
| 2 நீஸ் தா நி பத - ப மா நி தா; | ப ம ப-மா க மா | க ா ம பா த நீ |
| ஸ்ரீமனோக ரனே மகேஸ்வரா | ம துரை மீ னாட்சி | சொக்க நாதனே. |
| 3. தா, த ஸ் நிதா- பா, த மக மா | ஸா , மா க மா | பத நித நீ; |
| நீலோத் பல மாது மருவும் | த்யா . கே ச னே | சுந் தர னே. |
| ஸ்ாரி நீ, நிநிஸ்தா, மப த நி | ஸ்ா , த நீ , ப | தமா - பாத நீ |
| நித்யனே. நிமலனே. அரனே | நீ ல கண். ட | மஹா தேவனே |

**தேர்ச்சி 3.0** : இசை உருப்படிகளைச் சுருதி, இராக தாளத்துடன் பாடிக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.3** : இசை உருப்படிகளை இராக, தாளத்துடன் பாடுவார்.

**செயற்பாடு 3.3.1** : "இந்த இன்பம்" என்னும் கீர்த்தனையை இராக, தாளத்துடன் பாடுவோம்.

**நேரம்** : 01 மணி 20 நிமிடம் (02 பாடவேளைகள்)

**தர உள்ளீடு** : சுருதி பெட்டி, ஒலிப்பதிவு நாடா, ஒலிப்பதிவுக் கருவி, கீதம் எழுதப்பட்ட அட்டை, செயற்பத்திரம் 3.3.2.1

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :**

படி 3.3.1

- கீர்த்தனையை ஆசிரியர் பாடிக்காட்டியோ அல்லது ஒலிப்பதிவு நாடாவில் ஒலிக்கச் செய்தோ மாணவரைச் செவிமடுக்கச் செய்க.
- செவிமடுப்பதன் மூலம் அதனை இனங்காணச் செய்க.
- இனங்கண்ட பாடலில் பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுக.

> - கீர்த்தனையின் இராகம் - பிலஹறி
> - கீர்த்தனையின் தாளம் - ரூபகம்
> - பல்லவி, அனுபல்லவி, சரணம் என்னும் அங்க வித்தியாசங்களுடன் கூடிய அமைப்பு முறையை கீர்த்தனை கொண்டுள்ளது.
> - மாணவர் பிலஹறி இராகத்தின் ஆரோகண, அவரோகணத்தைப் பாடுவதற்கு வழிப்படுத்துக.
> - கீர்த்தனையைக் காட்சிப்படுத்தி, அதனைப் பகுதி பகுதியாகப் பாட மாணவர் தொடர்ந்து பாடுவதற்கு இடமளிக்க.
> - மாணவருடன் சேர்ந்து தாளத்துடன் கீர்த்தனையை முழுமையாகப் பாடுக.
> - மாணவரைச் சிறிய குழுக்களாகவும் எழுமாற்றாகத் தெரிவு செய்து தனித்தனியாகவும் பாடச் சந்தர்ப்பம் வழங்குக.

(20 நிமிடம்)

படி 3.3.2

- வகுப்பிலுள்ள மாணவரின் எண்ணிக்கைக்கேற்ப மாணவரைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தை இணைப்புடன் வழங்குக.
- ஒவ்வொரு குழுவும் கீர்த்தனையைச் சரியாகப் பாடி பயிற்சி செய்கிறார்களா என்பதை உறுதிசெய்க.

(30 நிமிடம்)

படி 3.3.3 :

- ஒவ்வொரு குழுவும், குழுவாகவும், தனியாகவும் கீர்த்தனையைப் பாடச் சந்தர்ப்பம் வழங்குக.
- ஒரு குழு பாடும் போது, ஏனைய குழுக்கள் அதனை அவதானித்து தமது கருத்துக்களைத் தெரிவிக்க இடமளிக்குக.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடுக.

> - கீர்த்தனை அமைந்துள்ள இராகம் - பிலஹரி
> - தாளம் - ரூபகம்
> - கீர்த்தனையானது பல்லவி, அனுபல்லவி, சரணம் என்னும் அங்க வித்தியாசங்களையுடைய உருப்படியாகும்.
> - கீர்த்தனையை மாணவருடன் சேர்ந்து இராக, தாளத்துடன் முழுமையாகப் பாடுக.

(20 நிமிடம்)

**கணிப்பீட்டு, மதிப்பீட்டு நியதிகள்** :

- "இந்த இன்பம்" என்னும் கீர்த்தனை அமைந்துள்ள இராகத்தைக் கூறுவர்.
- அதன் தாளத்தைக் குறிப்பிடுவர்
- கீர்த்தனையை இராக, தாளத்துடன் பாடுவர்.

## செயற்பத்திரம் - 3.3.2.1

சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குக.

> - இந்த இன்பம்' என்னும் கீர்த்தனையை இராக, தாளத்துடன் பாடிப்பயிற்சி செய்க.
> - குறித்த கீர்த்தனையை இராக, தாளத்துடாக பாடுக.

# மத்திமகால கீர்த்தனை (இந்த இன்பம்)

இராகம் : பிலஹறி　　　　　தாளம் : ரூபகம்

ஆ : ஸரிகபதஸ்
அ் : ஸ்நிதபமகரிஸ
} 29 ஆவது மேளகர்த்தாவின் ஜன்யம்

ஸட்ஜ பஞ்சமத்தை தவிர இவ்விராகத்தில் வரும் ஸ்வரஸ்தானங்கள் சதுஸ்ருதிரிஷபம், அந்தரகாந்தாரம், சுத்தமத்திமம், சதுஸ்ருதிதைவதம், காகலிநிஷாதம், கைசிகிநிஷாதம்.(அன்னியஸ்வரம்)

## பல்லவி

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஸ்ா ; | ஸ்ாஸ்நி | தபதா | // | தாஸ்நி | தபதப | மகரீ | // |
| இந் | த இன் | ...பம் | | எந்.. | த-நா | -ளும் | |
| காபா | மாகா | ரீஸா | // | ஸாரீ | காகா | பாதா | // |
| தந் - | தருள் | புரி | | தா.. | ஸர | தே.. | |
| ஸ்ா; | ஸ்ாஸ்நி | தபதா | // | தாஸ்நி | தபதப | மகரீ | // |
| இந் | த இன் | ..பம் | | எந்.. | த-நா | ...ளும் | |
| ரீரிப | மாகா | ரீஸா | // | ஸரிகா | ரிகபா | மகபத | // |
| தந்- | தருள் | புரி | | தா.. | ஸ-ர | தே.. | |
| ஸ்ரிக்ரி | ஸ்ாஸ்நி | தபதா | // | தரிஸ்நி | தபதப | மகரீ | // |
| இந் .. | த இன் | ..பம் | | எந்.. | த-நா | ..ளும் | |
| ரீரிப | மாகா | ரீஸா | // | ஸரிகா | ரிகபாதப | மகபத | // |
| தந்- | தருள் | புரி | | தா.. | ஸ-ர | தே... | |

## அனுபல்லவி

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ; கா | பாதா | ஸ்ாஸ்ா | // | ஸ்ா ; | ஸ்நிநித | ஸ்ா; | // |
| செந் | தா- | ம ரைக் | | கண் | ............. | ணா | |
| ; கா | பாதா | ஸ்ாஸ்ா | // | ஸ்ாக்ரி | ஸ்ா, நி | தபதா | // |
| -செந் | தா- | ம ரைக் | | கண்.. | ணா.. | உந்தன் | |
| தரிஸ்ா | ஸ்ாஸ்நி | தபதா | // | ஸ்நிதா | பாமக | பாதா | // |
| தி-ரு | மல - | ர - டி | | ப-ணிந் | தும - | கி-ழும் | |
| ; கா | பாதா | ஸ்ாஸ்ா | // | ஸ்ரிக்ப் | ம்க்ரீ | ஸ்தஸ்ா | // |
| -செந் | தா- | ம ரைக் | | கண் | ணா.. | உந்தன் | |
| ஸ்ரிக்ப் | ம்க்ரிஸ் | நிதபரி | // | ஸ்நிதா | பாதப | மகபத | // |
| தி-ரு | மல - | ர - டி | | ப-ணிந் | தும - | கி-ழும் | |

## சரணம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| பாபா | பாமக | ரிகபா | // | தரிஸ்நி | தபதப | மகரீ | // |
| ஜன | க ரா- | .. ஜன் | | த-ணை | யை-ம | கி-ழ | |
| ரீரிப | மகரிக | ஸாஸா | // | ஸரிகா | ரீரிக | பாபா | // |
| தம் | பி - யர் | சூழ | | மா .. | ரு - தி | தொழ | |

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 3.0 | : | இசை உருப்படிகளைச் சுருதி, இராக, தாளத்துடன் பாடிக் காட்டுவார். |
| தேர்ச்சி மட்டம் 3.3 | : | இசை உருப்படிகளை இராக, தாளத்துடன் பாடுவார். |
| செயற்பாடு 3.3.2 | : | "வசனமிகவேற்றி" என்னும் திருப்புகழை இராக, தாளத்துடன் பாடுவோம். |
| நேரம் | : | 40 நிமிடம் (01 பாடவேளை) |
| தர உள்ளீடு | : | சுருதிப்பெட்டி/ஹார்மோனியம் திருப்புகழ் எழுதப்பட்ட அட்டை செயற்பத்திரம் 3.3.2.2 |

கற்றல்- கற்பித்தல் செயலொழுங்கு :

படி 3.3.1

: "வசனமிகவேற்றி" என்னும் தேவாரத்தினைப் பாடிக்காட்டி மாணவர் செவிமடுத்து அதனை இனங்கண்டு கூறுவதற்கு இடமளிக்க.

: மாணவர் இனங்கண்ட பாடலை அடிப்படையாகக்கொண்டு பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுக.

- சந்தங்களைப் பிரதானமாகக் கொண்ட உருப்படி திருப்புகழ் ஆகும்.
- திருப்புகழ் அருணகிரிநாதரால் பாடப்பட்டதாகும். இதனால் இவர் சந்தப்பாவலர் என எல்லோராலும் போற்றப்படுகிறார்.
- திருப்புகழ் என்னும் உருப்படியானது பெருமாளே என்ற சொல்லில் முடிவடையும்.
- "வசனமிகவேற்றி" என்னும் திருப்புகழானது பழனி முருகன் மீது பாடப்பட்டதாகும்.
- திருப்புகழை சந்த அமைப்பிற்கேற்ப விரும்பிய இராகங்களில் பாடலாம்.
- "வசனமிக வேற்றி" என்னும் திருப்புகழை ஸிம்மேந்திரமத்திம இராகத்தில் பாடலாம். இதன் தாளம் ஆதி.
- இதன் சந்தம் - தானதன தான தனதானா
- திருப்புகழைக் காட்சிப்படுத்தி அதனைப் பகுதி பகுதியாகப் பாட மாணவர் தொடர்ந்து பாடுவதற்கு இடமளிக்க.
- மாணவருடன் சேர்ந்து திருப்புகழை அமைப்பிற்கேற்ப இராக, தாளத்துடன் முழுமையாகப் பாடுக.
- மாணவரைச் சிறிய குழுக்களாகவும், எழுமாற்றாகத் தெரிவு செய்து, தனித்தனியாகவும் பாடச் சந்தர்ப்பம் வழங்குக.

(15 நிமிடம்)

படி 3.3.2

- வகுப்பிலுள்ள மாணவர் தொகைக்கேற்ப மாணவரைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தை இணைப்புடன் வழங்குக.

- ஒவ்வொரு குழுவும் அறிவுறுத்தலுக்கேற்ப திருப்புகழைப் பாடிப் பயிற்சி செய்கிறார்களா என்பதை உறுதி செய்க.

(15 நிமிடம்)

படி 3.3.3

- ஒவ்வொரு குழுவும் குழுவாகவும், தனியாகவும் திருப்புகழைப் பாடச் சந்தர்ப்பம் வழங்குக.
- ஒரு குழு பாடும் போது ஏனைய குழுக்கள் அதனை அவதானித்துக் கருத்துக்களை கூற இடமளிக்க.
- மாணவரின் குறைகளை இனங்கண்டு முழுமைப்படுத்துக.
- பின்வரும் விடயங்களை மீளவும் வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலொன்றை மேற்கொள்க.

- இத்திருப்புகழை சிம்மேந்திரமத்திம இராகத்தில், ஆதி தாளத்தில் சந்த அமைப்பிற்கேற்ப மாணவருடன் சேர்ந்து முழுமையாகப் பாடுக.

(10 நிமிடம்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- வசனமிகவேற்றி என்னும் திருப்புகழ் பாடப்பட்ட தலத்தினைக் கூறுவர்.
- திருப்புகழை இராக, தாளத்துடன் பாடுவர்.

## செயற்பத்திரம் - 3.3.2.2

சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குக.

- 'வசனமிகவேற்றி' என்னும் திருப்புகழை இராக, தாளத்துடன் பாடிப் பயிற்சி செய்க.
- குறித்த திருப்புகழை இராக, தாளத்துடன் பாடுக.

இணைப்பு

## திருப்புகழ் (வசனமிகவேற்றி)

இராகம் - ஸிம்ஹேந்த்ரமத்திமம் தாளம் - ஆதி

ஆ - ஸரிகமபதநிஸ்
அ - ஸ்நிதபமகரிஸ
} 57 ஆவது மேளகர்த்தா

வசனமிக வேற்றி மறவாதே
மனது துயராற்றி லுழலாதே
இசை பயில் கடாக்ஷ ரமதாலே
இகபர சௌபாக்ய மருள்வாயே
பசுபதி சிவாக்ய முணர்வோனே
பழநி மலை வீற்றருளும் வேலா
அசுரர் கிளைவாட்டி மிகவாழ
அமரர் சிறை மீட்ட பெருமாளே

தேர்ச்சி 3.0 : இசை உருப்படிகளைச் சுருதி, இராக, தாளத்துடன் பாடிக் காட்டுவார்.

தேர்ச்சி மட்டம் 3.3 : இசை உருப்படிகளை இராக, தாளத்துடன் பாடுவார்.

செயற்பாடு 3.3.3 : "அங்கமும் வேதமும்" என்னும் தேவாரத்தினை பண்ணோடு பாடுவோம்.

நேரம் : 40 நிமிடம் (01 பாடவேளை)

தர உள்ளீடு : சுருதிப்பெட்டி சல்லாரி திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரின்படம் தேவாரம் எழுதப்பட்ட அட்டை ஒலிப்பதிவு நாடா, ஒலிப்பதிவுக் கருவி, செயற்பத்திரம் 3.3.2.3

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :**

படி 3.3.1

- தேவாரத்தை ஆசிரியர் பாடிக்காட்டியோ அல்லது ஒலிப்பதிவு நாடாவில் ஒலிக்கச் செய்தோ மாணவரைச் செவிமடுக்கச் செய்க.
- செவிமடுப்பதன் மூலம் அதனை இனங்காணச் செய்க.
- இனங்கண்ட பாடலில் பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுக.

- தேவாரத்தின் பண் - நட்டபாடை
  இராகம் - கம்பீர நாட்டை
  தாளம் - ஆதி
  அருளியவர் - திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்
  தலம் - திருமருகல் திருச்செங்காட்டங்குடி
  என்பவற்றை மாணவர் அறிந்து கொள்ளச் செய்க.
- மாணவர் இத்தேவாரத்தினை பொருள் உணர்ந்து உச்சரிப்புத் தெளிவுடன் சொல்லுவதற்கு வழிப்படுத்துக.
- தேவாரத்தினைக் காட்சிப்படுத்தி அதனைப் பகுதி பகுதியாகக் பாட மாணவர் தொடர்ந்து பாடுவதற்கு இடமளிக்க.
- மாணவருடன் சேர்ந்து பண்முறைக்கேற்ப தாளத்துடன் தேவாரத்தினை முழுமையாகப்பாடுக.
- மாணவரைச் சிறிய குழுக்களாகவும், எழுமாற்றாகத் தெரிவு செய்து தனித்தனியாகவும் பாடச் சந்தர்ப்பம் வழங்குக.

(10 நிமிடம்)

படி 3.3.2 : 
- வகுப்பிலுள்ள மாணவரின் எண்ணிக்கைக்கேற்ப சிறு குழுக்களாகப் பிரித்து, செயற்பத்திரத்தை இணைப்புடன் வழங்குக.
- ஒவ்வொரு குழுவும் அறிவுரைக்கேற்ப சரியாகப் பாடிப் பயிற்சி செய்கிறார்களா என்பதை உறுதிசெய்க.

(15 நிமிடம்)

படி 3.3.3
- ஒவ்வொரு குழுவும், குழுவாகவும், தனியாகவும் தேவாரத்தினைப் பாடச் சந்தர்ப்பம் வழங்குக.
- ஒரு குழு பாடும் போது, ஏனைய குழுக்கள் அதனை அவதானித்து தமது கருத்துக்களைத் தெரிவிக்க இடமளிக்குக.
- மாணவரின் குறைகளை இனங்கண்டு முழுமைப்படுத்துக.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடுக.

- "அங்கமும் வேதமும்" என்னும் தேவாரம் அமைந்துள்ள இராகம் - கம்பீரநாட்டை.

| | | |
|---|---|---|
| தாளம் | - | ஆதி |
| பண் | - | நட்டபாடை |
| தலம் | - | திருமருகல் திருச்செங்காட்டங்குடி |
| அருளியவர் | - | திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் |

தேவாரத்தினை மாணவருடன் சேர்ந்து பண்ணுடனும், தாளத்துடனும் முழுமையாகப்பாடுக.

(10 நிமிடம்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**
- அங்கமும் வேதமும் என்னும் தேவாரம் அமைந்துள்ள இராகத்தைக் கூறுவர்.
- அதன் பண், தாளம், பாடப்பட்ட தலம், அருளியவர் பெயர் ஆகியவற்றைக் குறிப்பிடுவர்.
- பண்முறைக்கேற்ப தேவாரத்தினைத் தாளத்துடன் பாடுவர்.

## செயற்பத்திரம் - 3.3.2.3

சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குக.

- அங்கமும் வேதமும் என்னும் தேவாரத்தினை பண்முறைக்கேற்ப தாளத்துடன் பாடிப் பயிற்சி செய்க.
- குறித்த தேவாரத்தை பண்முறைக்கேற்ப தாளத்துடன் பாடுக.

## (அங்கமும் வேதமும்)
## தேவாரம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பண் | : | நட்டபாடை | தாளம் | : | ஆதி |
| இராகம் | : | கம்பீரநாட்டை | பாடியவர் | : | திருஞானசம்பந்தர் |
| | | | தலம் | : | திருமருகல், திருச்செங் காட்டங்குடி |

அங்கமும் வேதமும் ஓது நாவர்
அந்தணர் நாளும் அடிபரவ
மங்குல் மதி தவழ் மாட வீதி
மருகல் நிலாவி அமைந்த சொல்லாய்
செங்கயலார் புனல் செல்வமல்கு
சீர் கொள் செங்காட்டங் குடியதனுள்
கங்குல் விளங்கெரி ஏந்தியாடும்
கணபதீச்சரம் காமுறவே.......

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ;, ஸ, | கமாபா; | மாபா /; | மா பா | மா / | பா, நி | பா மா | // |
| --அங் | கமும் | வே -தமும் | ஓ- து | – | நா .. | வ -ர் | |
| ;, மா | பாமா | மகபம | கமகஸ /; | ஸஸ, | பமா/ | பா ; ; ; | // |
| --அ | ந்தணர் | நா .. | ளும்.. | அடி | பர | வ.............. | |
| ;, ம, | கமா | பா; | ஸ்ாஸ்ா/ | ;ஸ்ா | ;ஸ்ா/ஸ்நிரிஸ் நிஸ்நிப// | | |
| --மங் | குல்ம | தி - | தவழ் | - மா – ட | வீ – | தி — | |
| ; பப | ;ஸ்நி | பநிஸ்நி | பா மா / | ; க ம, | பமா/ | மகபம கமகஸ | // |
| - மரு | கல்நி | லா .. | வி-ய-- | மைந்தர்சொல் | | லா............ய் | |

இதேபோன்று மிகுதி நான்கு அடிகளையும் பாடுங்கள்.

### அங்கமும் வேதமும்

**பொருள்:-**

வேதங்களையும் அவற்றின் அங்கங்களையும் அத்தியயனம் செய்யும் பிராமணர்கள் திருவடிகள் எப்போதும் துதிக்க, மாடமாளிகைகள் நிறைந்த வீதியுள்ள திருமறுகலில் உறையும் வல்லாளரே, நீர்வளமும் செல்வச் செழிப்பும் மிதுந்த செங்காட்டங்குடியிலே, அனல் தாங்கிக் கூத்தாடும் ஈசுவரன் அமைந்துள்ள கணபதீச்சரம் மீது மையல் கொள்ளலாமா? விடை கூறுவீராக.

தேர்ச்சி 4.0 : கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார்.

தேர்ச்சி மட்டம் 4.1 : கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களை விளக்குவார்.

செயற்பாடு 4.1.1 : கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களுள் ஏற்கனவே கற்றுக் கொண்ட அரும்பத விளக்கங்களை சிறிய செயற்பாடு ஒன்றின் மூலம் மீள வலியுறுத்தல் செய்வோம்.

நேரம் : 01 மணி 20 நிமிடம் (02 பாடவேளைகள்

தர உள்ளீடு : அரும்பத விளக்கங்களின் விளக்கப்படங்கள், அட்டவணைகள், செயற்பத்திரம் 4.1.2.1

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :**

படி 4.1.1

- அரும்பத விளக்கங்களின் விளக்கப்படங்கள் அட்டவணைகளை காட்சிப்படுத்தி மாணவர் இனம் காண வழிப்படுத்துக.

- மாணவர் இனம் கண்ட, ஏற்கனவே கற்ற விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்க.

- சங்கீதம் என்பது காதால் கேட்டுணரக்கூடிய த்வனிகளைப் பற்றிய கலை. லலித கலைகளில் மேன்மையானது. காந்தர்வ வேதம் எனவும் அழைக்கப்படுகிறது.
- செவிக்கு இனிமையைக் கொடுக்கும் த்வனி நாதம்
- நாதம் - இரைச்சல் வேறுபாடு.
- நாதத்தின் இரு வகைகள் - அவற்றின் விளக்கம்.
- காதால் கேட்டு உணரப்படும் நுட்பமான த்வனி ஸ்ருதி.
- ஸ்ருதியின் இரு வகைகள் அவற்றின் விளக்கம்.
- இயற்கையாகவே ரஞ்சனையைக் கொடுக்கும் த்வனி ஸ்வரம்- ஸ்வரங்கள் 7 - அவற்றின் பெயர்கள் தமிழிசைப் பெயர்கள்.
- பிரக்ருதி - விக்ருதி ஸ்வரம், கோமள-தீவிர பேதம்.
- ஸ்வரம் ஒலிக்கும் இடம் ஸ்வரஸ்தானம்.
  ஸ்வரஸ்தானங்கள் 12-அவை உருவாகிய விதம் பற்றிய விளக்கம் - அவற்றின் பெயர்கள்.
- ஆரோகணம், அவரோகணம் - விளக்கம்
- குறில், நெடில் ஸ்வரம், ஆவர்த்தம், அட்சரகாலம் - இவற்றின் விளக்கம்.
- தாளத்தின் உட்பிரிவு லயம் - லயத்தின் வகைகள்.
- தாது - ஸ்வரம்
  மாது - சாகித்தியம்
- திஸ்ர, சதுஸ்ர நடைகள் விளக்கம்
- ஸரிகமபதநி என்பது ஒரு ஸ்தாயி - ஸ்தாயி மூன்று வகை - அவற்றின் விளக்கம் - ஸ்தாயிக்குறியீடு
- நிபந்தம் - அநிபந்தம் - விளக்கம்

(20 நிமிடம்)

படி 4.1.2 : • மாணவர்களை இரு குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரங்களை இணைப்புடன் வழங்குக.

• ஒவ்வொரு குழுவும் அறிவுறுத்தலுக்கேற்ப செயற்பாட்டில் ஈடுபடுகிறார்களா என்பதை உறுதி செய்க.

(30 நிமிடம்)

படி 4.1.3 • ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குக.

• ஒரு குழு சமர்ப்பிக்கும் போது மற்றய குழுவும் அதனை அவதானித்துக் கருத்துக்களை கூற இடமளிக்க.

• குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்க.

• கலந்துரையாடலில் பின்வரும் விடயங்களை மீள வலியுறுத்துக.

- சங்கீதம் என்பது காதால் கேட்டு இன்பம் பெறக் கூடிய கலையாகும். சிரவண கலை என அழைக்கப்படுகிறது. கீதம், வாத்தியம், நிருத்தியம் மூன்றும் சேர்ந்தது சங்கீதமெனக் கருதப்பட்டது. பின்னர் கீதம் ,வாத்தியம் இரண்டும் சேர்ந்தது சங்கீதம் எனக் கருதப்பட்டது. இறைவன் இசை வடிவினன். இசைபயில்வதனால் அன்பு, அடக்கம், பக்தி, நட்பு முதலிய நற்குணங்கள் விருத்தியாகின்றன.

- செவிக்கு இனிமையைக் கொடுக்கும் த்வனி நாதம் ஒலி ஒழுங்கான முறையில் உண்டாக்கப்படும் போது நாதம் உண்டாகிறது. ஒழுங்கற்ற முறையில் உண்டாக்கப்படும் போது இரைச்சல் உண்டாகிறது. நாதம் இருவகைப்படும். அவை ஆகதநாதம், அனாகதநாதம். மனிதனுடைய முயற்சியால் உண்டாவது ஆகத நாதம். மனித முயற்சியின்றி இயற்கையாகவே உண்டாவது அனாகத நாதம். நாதத்தில் இருந்து ஸ்ருதியும், ஸ்ருதியிலிருந்து ஸ்வரங்களும் ஸ்வரங்களில் இருந்து இராகங்களும் உண்டாகின்றன.

- காதாற் கேட்டுணரக் கூடிய நுட்பமான த்வனி ஸ்ருதி எனப்படும். ஸ்ருதி தாய்க்குச் சமானமானது. "ஸ்ருதி லயமாதா பிதா" என்பது ஸ்லோகம். ஸ்ருதி பஞ்சம ஸ்ருதி, மத்திம ஸ்ருதி என இருவகைப்படும் பஞ்சம ஸ்ருதி - ஸ ப ஸ் ஸ்வரங்களில் மத்திய ஸ்தாயி ஸட்ஜத்தை ஆதாரமாக வைத்துக் கொண்டு பாடுவது.
  மத்திம ஸ்ருதி - ஸ ம ஸ் ஸ்வரங்களில் மத்தியஸ்தாயி மத்திமத்தை ஆதாரமாக வைத்துக் கொண்டு பாடுவது.
- இயற்கையாகவே ரஞ்சனையைக் கொடுக்கும் ஸ்வரம் எனப்படும். சங்கீதத்திற்கு ஆதாரமானவை ஸ ரி க ம ப த நி என்னும் ஏழுஸ்வரங்கள். இவற்றின் பெயர்கள் முறையே ஸட்ஜம், ரிஷபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் ஆகும். ஸப்த ஸ்வரங்களின் தமிழிசைப் பெயர்கள் - குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் ஆகும்.

- ஸப்த ஸ்வரங்களில் பேதமற்ற ஸ்வரங்கள் பிரக்ருதி ஸ்வரங்கள் எனப்படும். உ-+ம் ஸ,ப இவை கமகமின்றிப் பாடப்படுவதால் அசல ஸ்வரங்கள் என்றும் அழைக்கப்படும்.

- பேதமுள்ள ஸ்வரங்களாகிய ரி, க, ம, த, நி ஐந்தும் விக்ருதி ஸ்வரங்கள் எனப்படும். இவை கோமள தீவிர பேதங்களுடையவை.

- விக்ருதி ஸ்வரங்களின் கோமள தீவிர பேதத்தால் 7 ஸ்வரங்கள் 12 ஸ்வரஸ்தானங்களாகின்றன.

- ஸ்வரம் ஒலிக்கும் இடம் ஸ்வரஸ்தானம், ஸப்தஸ்வரங்களில் விக்ருதி ஸ்வரங்கள் ஐந்தும் கோமள, தீவிர பேதத்தால் 10 ஸ்வரஸ்தானங்களாகின்றன. இத்துடன் பிரக்ருதி ஸ்வரங்கள் இரண்டும் சேர்ந்து 12 ஸ்வரஸ்தானங் களாகின்றன. 12 ஸ்வரஸ்தானப் பெயர்கள் - ஸட்ஜம், சுத்தரிஷபம் சதுஸ்ருதிரிஷபம், சாதாரணகாந்தாரம், அந்தரகாந்தாரம், சுத்தமத்திமம், பிரதிமத்திமம், பஞ்சமம், சுத்ததைவதம், சதுஸ்ருதிதைவதம், கைசிகிநிஷாதம், காகலி நிஷாதம்.

- ஸ்ருதியில் முறையே உயர்ந்து கொண்டு போகும் ஸ்வரத்தொகுதி ஆரோகணம் எனப்படும் தமிழிசையில் ஆரோசை எனவும் அழைக்கப்படும்.

- ஸ்ருதியில் முறையே குறைந்து கொண்டு போகும் ஸ்வரத் தொகுதி அவரோகணம் எனப்படும். தமிழிசையில் அமரோசை எனவும் அழைக்கப்படும்.

- ஒரு அட்சர காலம் கொண்ட ஸ்வரம் குறில் ஸ்வரம் ஆகும்.

- இரண்டு அட்சர காலம் கொண்ட ஸ்வரம் நெடில் ஸ்வரமாகும்.

- ஒரு தாளத்திற்குரிய அங்கங்கள் யாவும் ஒரு முறை கிரமமாகப் போட்டு முடித்தால் அது ஒரு ஆவர்த்தம் எனப்படும். ஆவர்த்த முடிவைக்காட்டும் குறியீடு // ஆகும்

- ஒரு ஸ்வரத்தின் கால அளவு அட்சரகாலம் எனப்படும்.

- தாளத்தின் உட்பிரிவு லயம் எனப்படும். லயம் மூன்று வகைப்படும். அவையாவன விளம்பித லயம், மத்திம லயம், துரித லயம்.

- தாளத்தில் ஒரு எண்ணிக்கைக்கு 3 எண்ணிக்கை கொண்டது திஸ்ர நடை ஆகும். இதன் சொற்கட்டு தகிட ஆகும் தாளத்தில் ஒரு எண்ணிக்கைக்கு நான்கு எண்ணிக்கை கொண்டது. சதுஸ்ர நடை எனப்படும் இதன் சொற்கட்டு தகதிமி என்பதாகும்.

- ஸ ரி க ம ப த நி என்பது ஒரு ஸ்தாயி. இது கீழ்ஸ்தாயி, மத்தியஸ்தாயி, மேல்ஸ்தாயி என மூவகைப்படும்.
  மத்திய ஸ்தாயி ஸட்ஜத்திற்கு கீழுள்ள ஸ்தாயி மந்திர ஸ்தாயி அல்லது கீழ்ஸ்தாயி எனப்படும். மத்திய ஸ்தாயி நிஷாதத்திற்கு மேலுள்ள ஸ்தாயி மேல் ஸ்தாயி அல்லது ஹெச்சுஸ்தாயி எனப்படும். கீழ்ஸ்தாயி ஸ்வரங்களுக்கு ஸ்வரங்களின் கீழ் புள்ளியும் மேல் ஸ்தாயி ஸ்வரங்களுக்கு ஸ்வரங்களின் மேல் புள்ளியும் போடப்படும். மத்திய ஸ்தாயி ஸ்வரங்களுக்கு கீழோ, மேலோ புள்ளிகள் போடப்படுவதில்லை.

- தாளக் கட்டுப்பாட்டுக்குள் அடங்கும் உருப்படிகள் நிபந்தம் என்றும் தாளக்கட்டுப்பாட்டுள் அடங்காத உருப்படிகள் அநிபந்தம் என்றும் அழைக்கப்படும்.

(30 நிமிடம்)

**கணிப்பீட்டு, மதிப்பீட்டு நியதிகள் :**

- செவிக்கு இனிமையைக் கொடுக்கும் த்வனிகளைப் பற்றிய கலை சங்கீதம் என்பதைக் குறிப்பிடுவர்.

- சங்கீதத்திற்கு ஆதாரம் நாதம் என்பதையும் நாதத்தில் ஸ்ருதியும், ஸ்ருதியில் இருந்து ஸ்வரங்களும், ஸ்வரங்களில் இருந்து இராகங்களும் உண்டாகின்றன என்பதை ஏற்றுக் கொள்வர்.

- ஸப்த ஸ்வரங்களின் பெயர்களையும், அவற்றின் தமிழிசைப் பெயர்களையும் கூறுவர்.

- பேதமற்ற ஸ்வரம் ஸ, ப என்றும், பேதடையும் ஸ்வரம் ரி, க,ம, த, நி என்றும் குறிப்பிடுவர்.

- திஸ்ர, சதுஸ்ர நடைகளை விளக்குவர்.

- குறில் ஸ்வரம் 1 அட்சரத்தையும் நெடில் ஸ்வரம் 2 அட்சரத்தையும் கொண்டது என்பதை வலியுறுத்துவர்.

- லயத்தின் பிரிவுகளை குறிப்பிடுவர்.

- ஸ்தாயி அட்சரகாலம், தாது, மாது, நிபந்தம் அநிபந்தம், ஸ்வரஸ்தானம் போன்ற அரும்பதங்களை விளக்குவர்.

## செயற்பத்திரம் 4.1.2.1

- குழுவிலுள்ள சகல அங்கத்தவர்களும் தனித்தனியாக செயற்படச் செய்க.

### குழு I

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக

1. சங்கீதம் என்றால் என்ன.
2. நாதம் எத்தனை வகைப்படும்.
3. ஸரீகாமபதநீ என்னும் ஸ்வரத் தொடரில் உள்ள குறில் ஸ்வரங்களின் எண்ணிக்கை யாது.
4. பிரக்ருதி ஸ்வரங்கள் எவை.
5. ஆரோகணத்தை தமிழிசையில் எவ்வாறு அழைப்பர்.
6. தகதிமி என்னும் சொற்கட்டு எந்த நடையைக் குறிக்கும்.
7. சப்த ஸ்வரங்களில் நான்காவது ஸ்வரம் யாது.
8. மத்திம ஸ்ருதியில் ஒலிக்கும் ஸ்வரங்கள் எவை.
9. ஒரு உருப்படியின் ஸ்வரப்பகுதி எவ்வாறு அழைக்கப்படும்.
10. லயம் என்றால் என்ன.
11. ஸ்தாயி எத்தனை வகைப்படும்.
12. அட்சர காலம் என்றால் என்ன.

### குழு II

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக

1. சங்கீதத்திற்கு ஆதாரமாய் விளங்குவது யாது.
2. விக்ருதி ஸ்வரங்கள் எவை.
3. அவரோகணத்தை தமிழிசையில் எவ்வாறு அழைப்பர்.
4. திஸ்ர நடைக்குரிய சொற்கட்டு யாது.
5. மனித முயற்சியால் உருவாகும் நாதத்தை எவ்வாறு அழைப்பர்.
6. மத்திமத்திற்குரிய தமிழிசைப் பெயரைக் குறிப்பிடுக.
7. லயத்தின் பிரிவுகளைக் குறிப்பிடுக.
8. நிபந்தம், அநிபந்தம் என்னும் பிரிவுகளில் கீதம், கீர்த்தனை ஆகிய உருப்படிகள் எப்பிரிவைச் சேர்ந்தது.
9. பத்தாவது ஸ்வரஸ்தானம் யாது.
10. ஸ்வரங்களுக்கு மேலே புள்ளியிடப்பட்டால் அது எந்த ஸ்தாயியைக் குறிக்கும்.
11. ஆவர்த்தம் என்றால் என்ன.

# அரும்பத விளக்கம்

கர்நாடக சங்கீதத்தில் இசைக்கலைச் சொற்கள் சிலவற்றைக் கற்றுக் கொள்வோம்.

**சங்கீதம்**

சங்கீதம் என்பது காதால் கேட்டு இன்பம் பெறக்கூடிய கலையாகும். இதன் காரணமாக இது சிரவண கலையெனச் சிறப்பாக அழைக்கப்படுகிறது. சிறந்த கலைகளாகிய லலித கலைகளில் மிகவும் மேன்மையானது இசைக்கலை. உயிரினங்கள் எல்லாவற்றையும் பரவசப்படுத்தி தெய்வீக நிலையை ஏற்படுத்தும். கீதம், வாத்தியம், நிருத்தியம் என்னும் மூன்றும் சேர்ந்தது சங்கீதம். இவற்றுள் கீதம் என்பது குரலில் இருந்து வெளிப்படும் இசையையும், வாத்தியம் என்பது இசைக்கருவிகளில் இசைக்கப்படும் இசையையும், நிருத்தியம் என்பது நாட்டியம் அல்லது நடனத்தைச் சார்ந்த இசையையும், நிருத்தியம் என்பது நாட்டியம் அல்லது நடனத்தைச் சார்ந்த இசையையும் குறிக்கும் ஆனால் பிற்காலத்தில் சங்கீதக்லை விஷேடமாக விருத்தியானதினால், நிருத்தியக் கலை பிரிக்கப்பட்டு கீதம், வாத்தியம் என்னும் இரண்டும் கலைகளுமே சங்கீதமெனக் கருதப்பட்டு வந்தன. பண்டைக்காலத்தில் சங்கீதத்தை நாட்டியக் கலைக்கு அனுசரணையான ஓர் உபகலையாகக் கருதினார்கள். பிற்காலத்தில் மகான்களுடைய முயற்சியினால் சங்கீதக்கலை விஷேட விருத்தியடைந்து அது ஒரு தனிக் கலையாகவும், பூரண கலையாகவும் பிரகாசிக்க ஆரம்பித்தது.

சங்கீதத்திற்கு காந்தர்வ வேதம் என்றும் பெயர் உண்டு. சிவபெருமான் கையில் டமருகமும் (உடுக்கு), கண்ணன் கையில் குழலும், சரஸ்வதி கையில் வீணையும் இருப்பதிலிருந்து இக்கலை தெய்வீகமானது என்பது தெளிவாகின்றது. “பண்ணென்ற இசைபாடும் அடியார்கள்” என்று சம்பந்தரும் “தமிழோடிசை பாடல் மறந்தறியேன்” என்று அப்பரும், “ஏழிசையால் இசைப் பயனாய்” என்று சுந்தரரும், “நாதவிந்து கலாதி நமோ நம” என்று அருணகிரிநாதரும் பாடிய பாடல்கள், இறைவன் இசை வடிவினன் என்பதையும், இசைப் பிரியன் என்பதையும் எடுத்துக்காட்டுகின்றன.

சங்கீதம் பயில்வதனால் அன்பு, அடக்கம், பக்தி, நட்பு, மனத்திருப்தி, சாந்தி முதலிய நற்குணங்கள் விருத்தியாகின்றன. அத்துடன் அறிவு, புத்திக்கூர்மை, கற்பனாசக்தி, ஞாபகசக்தி, நல்லொழுக்கம் முதலியவையும், பல தேசத்து மக்களை ஒருங்கு சேர்க்கும்படியான சக்தியும் (உலக ஐக்கிய பாவம்) ஏற்படுகின்றன.

சங்கீதமானது மெலோடிக்கல் சங்கீதம் என்றும், ஹார்மனிக்கல் சங்கீதம் என்றும் இரு வகைப்படும். மெலோடிக்கல் சங்கீதத்தில் ஸ்வரங்கள் ஒவ்வொன்றும் ஒன்றன் பின் ஒன்றாக வரும். உ+ம் - கர்நாடக இசை, ஹார்மனிக்கல் சங்கீதத்தில் ஸ்வரத் தொகுதிகள் அல்லது ஸ்வர அடுக்குகள் ஒன்றன் பின் ஒன்றாக வரும். உ+ம் ஐரோப்பிய இசை

## நாதம் (இசை, ஒலி)

செவிக்கு இனிமையைக் கொடுக்கும் த்வனி நாதம் எனப்படும். ஒலியானது ஒழுங்கான முறையில் உண்டாக்கப்படும் போது நாதம் உண்டாகிறது. ஒழுங்கற்ற முறையில் உண்டாக்கப்படும் போது அது இரைச்சல் எனப்படுகிறது.

நமது உடலிலிருக்கும் காற்று, நெருப்பு ஆகிய இரண்டும் சேர்வதனால் நாதம் உண்டாகிறது. இக்காற்றும், நெருப்பும் நமது உடலினுள்ளே இருக்கின்றன. நாதமே சங்கீதத்திற்கு ஆதாரம் நாதத்திலிருந்து சுருதிகளும், சுருதிகளில் இருந்து ஸ்வரங்களும், ஸ்வரங்களிலிருந்து இராகங்களும், இராகங்களிலிருந்து பாடல்களும் உண்டாகின்றன.

நாதம் இரண்டு வகைப்படும்

1. ஆகத நாதம்
2. அநாகத நாதம்

### 1. ஆகத நாதம் :-

நமது செவிப்புலனால் உணரப்படும் நாதம், இந்நாதம் மனிதனுடைய முயற்சியினால் உண்டாக்கப்படுகிறது. அதாவது நாம் கேட்கும் சங்கீதம், பாடும் சங்கீதம், இசைக்கருவியினால் இசைக்கும் சங்கீதம் யாவும் ஆகத நாதத்தை சேர்ந்தனவாகும்.

### 2. அநாகத நாதம் :

இது இயற்கையாகவே உண்டாகும் நாதம் என்பதனால் இயற்கை நாதம் என்றும் கூறுவர். ஆகாய மண்டலத்தினின்றும் தனித்து உற்பத்தியாகும் நாதமும், நம்முடைய தேகத்தில் மூலாதாரம் என்னும் ஸ்தானத்தில் உற்பத்தியாகும் நாதமும் அநாகத நாதமாகும். இதனை சித்தம் தெளிந்து சிவமயமாய் விளங்கும் யோகிகள் மட்டும் உணருவர். தியாகராஜ சுவாமிகள் ஒரு சிறந்த நாத யோகியாவார். அநாகத நாதத்தினை உணர்ந்த தியாகராஜர் தமது அனுபத்தை "ஸ்வரராக சுதாரச" என்ற கிருதியில் "முலாதாரஜ நாதமெருகுட" போன்ற வரிகள் மூலம் வெளியிட்டு இருக்கின்றார்.

## சுருதி (கேள்வி)

செவிப்பொறியால் உணரப்பட்ட நுட்பமான ஒலியே ஸ்ருதி எனப்படும். இச் சுருதியே இசைக்கு ஆதாரமானது. இதனையே "சுருதி மாதா லய பிதா" என்ற முதுமொழி குறிக்கிறது. சுருதியின் மறு பெயர் கேள்வி எனப்படும். தமிழிசையில் ஸ்ருதிக்கு அலகு என்று பெயர். ஸ்ருதி இரண்டு வகைப்படும்.

1. பஞ்சம சுருதி - ஸ்ருதிப் பெட்டியில் ஸபஸ் என்னும் ஸ்வரங்களை வைத்துக் கொண்டு மத்திய ஸ்தாயி ஸட்ஜத்தை ஆதார ஸட்ஜமாகக் கொண்டு பாடுவது பஞ்சம ஸ்ருதியாகும்.

2. மத்திம சுருதி - ஸ்ருதிப் பெட்டியில் ஸமஸ் என்னும் ஸ்வரங்களை வைத்துக் கொண்டு மத்தியஸ்தாயி மத்திமத்தை ஆதார ஸட்ஜமாக கொண்டு பாடுவது மத்திம ஸ்ருதியாகும்.

தாரஸ்தாயி ஸட்ஜத்திற்கு மேல் சஞ்சாரம் இல்லாத இராகங்களும் அநேகமான நாட்டுப் பாடல்களும் மத்திம சுருதியில் பாடப்படுகின்றன.

## ஸ்வரம் (கோவை) :-

இயற்கையாகவே ரஞ்சனையைக் கொடுக்கும் த்வனிக்கு ஸ்வரம் என்று பெயர். இதனைத் தழிசையில் கோவை என்று அழைப்பர். சங்கீதத்திற்கு ஆதாரமாயுள்ளவை ஸப்த (ஏழு) ஸ்வரங்கள். இதனால் இவை ஸப்தகம் என்று அழைக்கப்படும். இந்த ஸப்த ஸ்வரங்களின் பெயர்களையும் அவற்றைப் பாடுவதற்காக ஏற்பட்ட ஸங்கேதாக்ஷரங்களையும் அவற்றிற்குப் பண்டைய தமிழிசையில் உள்ள பெயர்களையும் கீழ்வரும் அட்டவணை விளக்குகிறது.

| இல | ஸ்வரங்களின் பெயர்கள் | ஸங்கேதாக்ஷரங்கள் | தமிழ்பெயர்கள் |
|---|---|---|---|
| 01 | ஸட்ஜம் | ஸ | குரல் |
| 02 | ரிஷபம் | ரி | துத்தம் |
| 03 | காந்தாரம் | க | கைக்கிளை |
| 04 | மத்திமம் | ம | உழை |
| 05 | பஞ்சமம் | ப | இளி |
| 06 | தைவதம் | த | விளரி |
| 07 | நிஷாதம் | நி | தாரம் |

வானவில்லில் ஏழு நிறங்கள் இருப்பதைப் போலவும் வாரத்திற்கு ஏழு நாட்கள் உள்ளதைப்போலவும் சங்கீதத்தில் ஏழு ஸ்வரங்கள் இருக்கின்றன. நாரதர், மதங்கர் முதலிய பூர்வாசாரியார்கள் இந்த ஏழு ஸ்வரங்களின் த்வனிகளையும் முறையே, மயில், ரிஷபம், ஆடு, க்ரௌஞ்சம், கோகிலம், குதிரை, யானை என்பவை தமது இயற்கையான நிலையிலிருக்கும் பொழுது பாடும் அல்லது முழங்கும் த்வனிக்கு சமனாகக் கூறியிருக்கிறார்கள்.

## * பிரக்ருதி ஸ்வரம் :-

சப்த ஸ்வரங்களில் பேதம் அற்ற ஸ்வரங்கள் (இயற்கை ஸ்ரம்) என்றழைக்கப்படும். ஸ, ப ஆகிய இரண்டு ஸ்வரங்களுமே பேதமற்ற ஸ்வரங்களாகும். இவை அவிக்ருதி ஸ்வரங்கள் என்றும் அழைக்கப்படும். இவ் ஸ்வரங்கள் அசைவின்றி பாடப்படுவதால் அசல ஸ்வரங்கள் எனவும் அழைக்கப்படும்.

## * விக்ருதி ஸ்வரம் :

சப்த ஸ்வரங்களில் பேதம் அடைகின்ற ஸ்வரங்கள் விக்ருதி ஸ்வரங்கள் (செயற்கை ஸ்வரம்) என்றழைக்கப்படும், ரி. க, ம, த, நி ஆகிய ஐந்து ஸ்வரங்களுமே பேதம் அடைகின்ற ஸ்வரங்களாகும். இவை அடையும் பேதங்கள் கோமள, தீவிர பேதம் எனப்படும்.


## * ஸ்வரஸ்தானம் :-

ஸ்வரத்திற்குரிய இடத்தைக் குறிப்பது ஸ்வரஸ்தானமாகும். ஸ்வரஸ்தானங்கள் 12 ஆகும். பேதமடைகின்ற ஸ்வரங்களாகிய ரி, க, ம, த, நி ஆகிய 5 ஸ்வரங்களும் கோமள, தீவிர பேதத்திற்குட்பட்டு 5X2=10 ஸ்வரஸதானங்களாகின்றன. இவற்றுடன் பேதமற்ற ஸ்வரங்களாகிய ஸ, ப ஸ்வரங்களும் சேர்ந்து 12 ஸ்வரஸ்தானங்கள் ஆகின்றன. இதனை பின்வரும் அட்டவணை விளக்குகின்றது.

| | ஸ்வரங்கள் | பெயர்கள் | குறிகள் |
|---|---|---|---|
| 01 | ஸட்ஜம் | ஸ | ஸ |
| 02 | சுத்த ரிஷபம் | கோமள ரி | ரி $_1$ |
| 03 | சதுஸ்ருதிரிஷபம் | தீவிர ரி | ரி $_2$ |
| 04 | சாதாரணகாந்தாரம் | கோமள க | க $_1$ |
| 05 | அந்தரகாந்தாரம் | தீவிர க | க $_2$ |
| 06 | சுத்தமத்திமம் | கோமள ம | ம $_1$ |
| 07 | பிரதிமத்திமம் | தீவிர ம | ம $_2$ |
| 08 | பஞ்சமம் | ப | ப |
| 09 | சுத்ததைவதம் | கோமள த | த $_1$ |
| 10 | சதுஸ்ருதிதைவதம் | தீவிர த | த $_2$ |
| 11 | கைசிகிநிஷாதம் | கோமள நி | நி $_1$ |
| 12 | காகலிநிஷாதம் | தீவிர நி | நி $_2$ |


*** ஆரோகணம் :-**

ஸ்வரங்கள் சுருதியில் முறையே ஒன்றன் மேல் ஒன்றாக உயர்ந்து கொண்டு செல்லுதல் ஆரோகணம் எனப்படும். இதனைத் தமிழிசையில் ஆரோசை (ஏற்றம்) என அழைப்பர்.




*** அவரோகணம் :-**

ஸ்வரங்கள் சுருதியில் ஒன்றன் கீழ் ஒன்றாக இறங்கி வருதல் அவரோகணம் எனப்படும். இதனை தமிழிசையில் அமரோசை (இறக்கம்) என அழைப்பர்.




*** குறில் ஸ்வரம் :-**

ஒரு அட்சரகாலத்தினை உடைய ஸ்வரம் ஸ்வரமாகும் (உ+ம்):- ரி

*** நெடில் ஸ்வரம் :-**

இரண்டு அட்சர காலத்தினை உடைய ஸ்வரம் நெடில் ஸ்வரமாகும். (உ+ம்) :- ரீ

*** ஆவர்த்தம் :-**

ஒரு தாளத்தின் அங்கங்கள் யாவற்றையும் ஒரு முறை கிரமமாகப் போட்டு முடிப்பதற்கு ஆவர்த்தம் என்று பெயர் உதாரணமாக ($1_4$ 0 0) ஆதி தாளத்தை எடுத்துக் கொண்டால் ஒரு லகுவையும் இரண்டு துருதங்களையும் போட்டு முடித்தால் ஒரு ஆவர்த்தம் என்று கூறப்படும். ஆவர்த்தன முடிவைக்காட்டும் குறியீடு // ஆகும்.

## * அட்சர காலம் :-

இசை உருப்படிகளை எழுதுவதில் ஸ்வரங்களின் கால அளவு எண்ணிக்கை, அந்த பாட்டின் தாளத்தைப் பொறுத்து இருக்கும். இப்படி அமைந்திருக்கும் ஸ்வரங்களின் கால எண்ணிக்கைக்கு அட்சரகாலம் என்று பெயர்.

| ஸ்வரங்கள் | மொத்த அட்சரகாலங்கள் |
|---|---|
| ஸ | 1 அட்சரகாலம் |
| ஸா | 2 அட்சரகாலங்கள் |
| ஸா, அல்லது ஸ,, | 3 அட்சரகாலங்கள் |
| ஸா; அல்லது ஸா ,, | 4 அட்சரகாலங்கள் |
| ஸா; , அல்லது ஸா ,,, | 5 அட்சரகாலங்கள் |
| ஸா;; அல்லது ஸா ,,,, | 6 அட்சரகாலங்கள் |

தாளத்தில் நாம் நாம் பயன்படுத்தும் அடிப்படையான எண்ணிக்கைக்கும் அட்சரகாலம் என்று சொல்வதுண்டு. அட்சரங்களின் எண்ணிக்கை தாளத்திற்குத் தாளம் மாறுபடும்.

(உ+ம்):- ஆதி தாளத்திற்கு 8 அட்சரங்கள்
ரூபக தாளத்திற்கு 6 அட்சரங்கள்

இவ்வாறே மற்றைய தாளங்களுக்கும் அட்சர எண்ணிக்கை மாறுபடும்.

## * லயம்

தாளத்தின் உட்பிரிவு லயம் எனப்படும். இது ஒரு தாளத்தின் சம அளவினாலான போக்கினைக் குறிக்கும். லயம் மூன்று வகைப்படும்.

1. விளம்பித லயம் - 1ஆம் காலம்
2. மத்திம லயம் - 2ஆம் காலம்
3. துரித லயம் - 3ஆம் காலம்

இது பாட்டின் காலப் பிரமாணத்தைக் குறிக்கும். சுருதி மாதா, லயம் பிதா என்னும் கூற்றுக்கிணங்க லயம் தந்தையின் ஸ்தானத்தை வகிக்கிறது. தாளத்தை ஒரே காலப் பிரமாணத்திற்கமைய நடத்திச் செல்லுதல் லயம் என்றும் கூறலாம். லயம் இல்லாத தாளத்திற்குப் பெருமை இல்லை.

## * தாது :-

தாது என்பது ஸ்வரத்தைக் குறிக்கிறது. ஒரு உருப்படியின் இசை அல்லது வர்ணமெட்டை நிலையாகக் குறித்து வைப்பதற்கு ஸ்வரம் உதவுகிறது.

உ+ம் :- ஸாஸரீரி ககரிஸா
பாடிப்பாடி பழகுவோம்
இதில் ஸாஸரீரி என்ற பகுதி தாதுப்பகுதியாகும்.

## * மாது :-

மாது என்பது உருப்படியின் ஸாஹியத்தைக் குறிக்கும். ஓர் இசை உருப்படியின் ஸ்வர அமைப்புக் கேற்றவாறு சாகித்தியத்தைத் தெளிவாகக் கற்றுக் கொள்வதற்கு ஸ்வர சாகித்திய அமைப்பு முறை மிகுந்த உதவியாக இருக்கிறது.

உ+ம்:- ஸாஸரீரி ககரிஸா

பாடிப்பாடி பழகுவோம்

இதில் பாடிப்பாடி பழகுவோம் என்ற பகுதி மாது ஆகும்.

## * திஸ்ர நடை:-

தாளத்தில் ஒரு அட்சரத்திற்கு மூன்று எண்ணிக்கையைக் கொண்டது. திஸ்ர நடை ஆகும். இதன் சொற்கட்டு தகிட என்பதாகும். இதன் அட்சரம் மூன்று ஆகும்.

உ+ம் :- ஸ்வரம் - ஸஸஸ ரிரிரி ககக மமம

## * சதுஸ்ர நடை:-

தாளத்தில் ஒரு அட்சரத்திற்கு நான்கு எண்ணிக்கையைக் கொண்டது. சதுஸ்ர நடை ஆகும். இதன் *சொற்கட்டு தகதிமி என்பதாகும். இதன் அட்சரம் நான்காகும்.*

(உ+ம்):- ஸ்வரம் - ஸரிகம ரிகமப கமபத மபதநி

## * ஸ்தாயி :-

ஒரு ஸ்தாயியில் ஏழு ஸ்வரங்களைக் கொண்டுள்ளதால் இதனை சப்தகம் எனவும் அழைப்பர். இது மூன்று வகைப்படும்.

1. கீழ்ஸ்தாயி
2. மத்தியஸ்தாயி
3. மேல்ஸ்தாயி

கீழ்ஸ்தாயியை மந்திரஸ்தாயி, தக்குஸ்தாயி எனவும், மத்தியஸ்தாயியை சமஸ்தாயி, நடுஸ்தாயி எனவும், மேல்ஸ்தாயியை உச்சஸ்தாயி, தாரஸ்தாயி, ஹச்சுஸ்தாயி எனவும் அழைப்பர்.

உ+ம் :-

கீழ்ஸ்தாயி - ஸரிகமபதநி

மத்தியஸ்தாயி - ஸரிகமபதநி

மேல்ஸ்தாயி - ஸ்ரிக்ம்ப்த்நி

தேர்ச்சி 4.0 : கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார்

தேர்ச்சி மட்டம் 4.2 : இராகத்தின் பிரிவுகளைக் குறிப்பிடுவார்.

செயற்பாடு 4.2.1 : ஜனக, ஜன்னிய இராகங்கள் பற்றிய விளக்கத்தைப் பெறுவோம்.

நேரம் : 40 நிமிடம் (01 பாடவேளை)

தர உள்ளீடு : சுருதிப்பெட்டி, ஒலிப்பதிவுக் கருவி, ஒலிப்பதிவு நாடா (முன்னைய தரங்களிற் கற்றுக் கொண்ட ஜனக, ஜன்னிய இராகப் பாடல்கள்) ஜனக இராகங்களின் அட்டவணைகள், ஜனக, ஜன்னிய இராக வரைபடங்கள். செயற்பத்திரம் 4.2.2.1

கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கு :

படி 4.2.1

- பாடல்களைப் பாடிக்காட்டியோ அல்லது ஒலிப்பதிவுக் கருவி மூலம் ஒலிக்கச் செய்தோ மாணவரை செவிமடுக்கச் செய்க.
- செவிமடுத்த பாடல்கள் அமைந்துள்ள இராகங்கள், தர உள்ளீட்டில் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணைகள், வரை படங்களைக் காட்சிப்படுத்தி ஜனக, ஜன்னிய இராகங்களை மாணவர் இனங்கண்டு கூறுவதற்கு இடமளிக்க.
- இனங்கண்ட விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுக.
- கலந்துரையாடலின் போது பின்வரும் விடயங்களை வலியுறுத்துக.

> - ஜனக இராகத்திற்குரிய பெயர்கள்.
> - ஜனக இராகத்திற்கு இருக்க வேண்டிய நான்கு இலட்சணங்கள்.
> - ஜனக இராகத்திற்கு உதாரணங்கள்.
> - ஜனக இராகங்களின் எண்ணிக்கை.
> - ஜனக இராகத்தில் இருந்து பிறந்தவை ஜன்ய இராகங்கள்.
> - ஜன்ய இராகத்திற்குரிய வேறு பெயர்கள்.
> - ஜன்ய இராகத்தின் பிரிவுகள்.
> - ஜன்ய இராகத்திற்கு உதாரணங்கள்.

(10 நிமிடம்)

படி 4.2.2

- மாணவர்களை இரண்டு குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தை வழங்குக.
- அறிவுறுத்தலுக்கேற்ப செயற்பாட்டில் ஈடுபடுகிறார்களா என்பதை உறுதிசெய்க.

(15 நிமிடம்)

படி 4.2.3 : • குழுக்களின் பேறுகளைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குக.

: • ஏனைய குழுவும் அதனை அவதானித்து கருத்துக்களைக் கூறுவதற்கு இடமளிக்க.

: • குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடலொன்றை மேற்கொள்க.

- ஜனக இராகத்திற்கு மேளஇராகம், இராகாங்க இராகம், தாய் இராகம், கர்த்தா இராகம், மேளகர்த்தா இராகம், சம்பூர்ண இராகம் என்னும் பெயர்களும் உண்டு.

- ஜனக இராகங்கள் முக்கியமான நான்கு இலட்சணங்களைக் கொண்டுள்ளன.
  அவையாவன:-
  1.) சம்பூர்ணமான ஆரோகண, அவரோகணத்தை உடையதாக இருத்தல்.
  2.) கிரம சம்பூர்ண ஆரோகண, அவரோகணத்தை உடையதாக இருத்தல்.
  3.) ஆரோகணத்தில் வரும் அதே ஸ்வரஸ்தானங்கள் அவரோகணத்திலும் வருதல்.
  4.) ஆரோகணமும் அவரோகணமும் அஷ்டகமாக இருத்தல்.

- இத்தகைய இலட்சணங்களைக் கொண்ட ஜனக இராகங்களின் எண்ணிக்கை 72 ஆகும்.
- ஜனக இராகத்திலிருந்து பிறந்த இராகம் ஜன்னிய இராகம் என அழைக்கப்படும்.
- ஜன்னிய இராகம், பிறந்த இராகம், சேய் இராகம் எனவும் பொருள்படும்.
- ஜனக இராகத்திலிருந்து பிறந்த இராகங்கள் ஜன்னிய இராகம் என்பதால் ஜன்னிய இராகத்தின் ஸ்வரஸ்தானங்கள் ஜனக இராகத்தை அனுசரித்தே இருக்கும்.
- ஒவ்வொரு ஜனக இராகத்திற்கும் அநேக ஜன்னிய இராகங்கள் உள்ளன.
- ஜன்னிய இராகம் வர்ஜம், வக்ரம், உபாங்கம், பாஷாங்கம், நிஷாதாந்திய, தைவதாந்திய, பஞ்சமாந்திய என்ற ஏழு பிரிவுகளையும் கொண்டுள்ளது.
- ஜன்னிய இராகங்களின் தொகை எண்ணில் அடங்காதவை.
- ஜன்னிய இராகம் - பிறந்த இராகம்
- ஜன்னிய இராகங்களுக்கு உதாரணம் :-
  மோகனம், பிலஹரி, சுத்தசாவேரி
- கற்றுக் கொண்ட உருப்படிகளில் ஜனக, ஜன்னிய இராகங்களை இனங்கண்டு கூறுவதற்கு வழிப்படுத்துக.

(15நிமிடம்)

கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :

- ஜனக, ஜன்னிய இராகங்களை வகைப்படுத்துவர்.
- ஜனக இராகத்தின் இலட்சணத்தை விளக்குவர்.
- ஜன்னிய இராகம் பற்றி கூறுவர்.
- ஜன்னிய இராகங்கள் இரண்டினை குறிப்பிடுவர்.
- உருப்படிகளின் மூலம் ஜனக, ஜன்னிய இராகங்களை இனங்கண்டு கூறுவர்.

## செயற்பத்திரம் 4.2.2.1

சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தை வழங்குக

1.) ஜனக இராகத்தின் இலட்சணங்களைத் தருக.
2.) ஜனக இராகங்களின், மொத்த எண்ணிக்கையைக் குறிப்பிட்டு அவற்றில் ஐந்து இராகங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
3.) ஜன்னிய இராகம் பற்றி விளக்குக.
4.) ஜன்னிய இராகங்கள் ஐந்தின் பெயர்களைக் குறிப்பிடுக.

தேர்ச்சி 4.0 : கர்நாடக இசையின் அடிப்படையில் அம்சங்களை வெளிப்படுத்துவார்

தேர்ச்சி மட்டம் 4.4 : இராகங்களின் இலட்சணங்களை விளக்குவார்.

செயற்பாடு 4.4.1 : தோடி இராகத்தின் இலட்சணத்தை அறிந்து கொள்வோம்.

நேரம் : 40 நிமிடங்கள் (01 பாடவேளை)

தர உள்ளீடு : தோடி இராகத்தின் ஆரோகண, அவரோகண வரைபடம், ஸ்வரஸ்தான வரைபடம், சுருதிப்பெட்டி/வயலின், இராகலட்சணம் எழுதப்பட்ட பிரதி, செயற்பத்திரம் 4.4.2.1

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :

படி 4.4.1 :

- தோடி இராகத்தின் ஆரோகண, அவரோகணத்தையும், உருப்படி ஒன்றினையும் பாடிக்காட்டியோ வயலினில் வாசித்துக் காட்டியோ மாணவரை செவிமடுக்கச் செய்க.
- செவிமடுப்பதன் மூலம் மாணவர் இந்த இராகத்தினை இனம் காணச் செய்க.
- இனம் கண்ட இராகத்தினை அடிப்படையாகக் கொண்டு கலந்துரையாடலொன்றை மேற்கொள்க.
- கலந்துரையாடலில் பின்வரும் விடயங்களை வலியுறுத்துக.

- நேத்ர சக்கரத்தின் 2வது இராகம் (நேத்ர- ஸ்ரீ)
- கடபயாதி ஸங்க்யைக்காக ஹனுமதோடி என்று அழைக்கப்பட்டது.
- அநேக ஜன்னிய இராகங்களையுடைய மேளராகங்களில் இதுவும் ஒன்று.
- ஆரோகணம் - ஸ ரி க ம ப த நி ஸ
  அவரோகணம் - ஸ நி த ப ம க ரி ஸ
  ஸ, ப தவிர இந்த இராகத்தில் வரும் ஸ்வரங்கள் சுத்தரிஷபம், சாதாரணகாந்தாரம், சுத்தமத்திமம், சுத்ததைவதம், கைசிகிநிஷாதம்.
- சம்பூர்ண இராகம், எல்லா ஸ்வரங்களும் கோமள ஸ்வரங்களாக அமைந்திருக்கும்.
- க,ம,த இராகச்சாயா ஸ்வரங்கள்
- பஞ்சம வர்ஜ பிரயோகங்கள், ஜண்டை, நாட்டு பிரயோகங்கள் இராக ரஞ்சகமானவை.

(10 நிமிடம்)

படி 4.4.2 :
* மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தை இணைப்புடன் வழங்குக.
* அறிவுறுத்தலுக்கேற்ப செயற்பாட்டில் குழுக்களை ஈடுபடச் செய்க.
* ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளைச் சமர்ப்பிக்கும் வகையில் ஆயத்தம் செய்கிறார்களா என்பதை உறுதிப்படுத்துக.

(15 நிமிடம்)

படி 4.4.3 : ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வரங்குக.

* ஏனைய குழுக்கள் அதனை அவதானித்து தத்தமது கருத்துக்களை கூறுவதற்கு இடமளிக்க.

* குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்க

* கலந்துரையாடலில் பின்வரும் விடயங்களை மீளவும் வலியுறுத்துக

- தோடி இராகம் ஒரு ஜனக இராகம் ஆகும்.
- தோடி இராகத்தின் மேளகர்த்தா எண் 8 ஆகும்.
- இந்த இராகத்தின் ஆரோகண, அவரோகணங்கள் முறையே
  ஆ : ஸரிகமபதநிஸ
  அ : ஸ்நிதபமகரிஸ
- இந்த இராகத்தின் ஸ்வரஸ்தானங்கள் ஸட்ஜம்,சுத்தரிஷபம், சாதாரணகாந்தாரம்,சுத்தமத்திமம்,பஞ்சமம்,சுத்ததைவதம், கைசிகிநிஷாதம்.
- ஸர்வ, ஸ்வர,கமக,வரிக,ரக்தி ராகம் எப்பொழுதும் பாடத் தகுந்த இராகம். பஞ்சமத்தில் நின்று சஞ்சாரம் செய்யலாம். திரிஸ்தாயி இராகம்.

- மூர்ச்சனாகாரக மேள இராகம் தோடியில் ரி,க,ம,த,நி ஸ்வரங்களை ஸட்ஜமாக வைத்துக் கொண்டால் (கிரகபேதம்) கல்யாணி, ஹரிகாம்போதி,நடபைரவி,சங்கராபரணம்,கரஹரப்பிரியா ஆகிய மேளங்கள் ஒலிக்கும்.
- விஸ்தாரமான ஆலாபனைக்கு இடம் கொடுக்கும் இராகம் எல்லா உருப்படிகளையும் இந்த இராகத்தில் காணலாம்.
- தோடி ஸீதாராமய்யர் இந்த இராகத்தைப் பாடுவதில் தேர்ச்சி பெற்றவர். புராதன சங்கீதக் கிரந்தங்களில் இந்த இராகம் காணப்படுகிறது.
- சஞ்சாரம் - தநிஸ்ாஸ்ா ஸ்நிதா - தநிஸ்ரிரிஸ்ா - பதநீதநீ ஸ்ாஸ்ா ஸ்நிதா - தநிஸ்ரீ-க்ாரீஸ்நி - தநிஸ்ரிக்ம்க்ாரீரிஸ் ஸ்நிதபா-காமபா தநிதபா-பமகாரிரிஸா - ஸ்நிதா-த.நி.ஸரிஸா
- உருப்படிகள்
  கீதம் - கலைமகளே - ரூபகம் - பெரியசாமித்தூரன்
  தானவர்ணம் - ஏராநாபை - ஆதி - பட்டணம் சுப்பிரமணியர்
  கனகாங்கி - அட - பல்லவி கோபாலய்யர்

| | | |
|---|---|---|
| க்ருதி | - | கொலுவமரகதா - ஆதி - ஸ்ரீ தியாகராஜர் |
| | | தாசரதே - ஆதி - ஸ்ரீ தியாகராஜர் |
| | | ஆரகிம்பவே -ரூபகம் - ஸ்ரீ தியாகராஜர் |
| | | கடைக்கண்நோக்கி - ஆதி - பாபநாசம்சிவன் |
| | | எந்துக்குராதுரா - திரிபுடை- ஸ்ரீ தியாகராஜர் |
| | | தாமதமேன்ஸ்வாமி - ஆதி - பாபநாசம்சிவன் |

பதம் - எல்லா அருமைகளும் -ஆதி - கனம் கிருஷ்ணய்யர்

- தாயே யசோதா-உந்தன்-ஆதி- ஊத்துக்காடு வெங்கடசுப்பையர்

(15 நிமிடம்)

கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :

- தோடி இராகத்தின் மேள எண், ஆரோகணம், அவரோகணம், ஸ்வரஸ்தானங்களைக் கூறுவர்.
- தோடி இராகத்தின் எல்லா ஸ்வரங்களும் கோமள ஸ்வரங்களாய் அமைந்துள்ளதைக் குறிப்பிடுவர்.
- தோடி இராகத்தில் அமைந்துள்ள உருப்படிகளை இனம் காண்பர்.
- தோடி இராகத்திலமைந்த சஞ்சாரங்களைப் பாடுவர்.
- இவ்விராகத்திலமைந்த ரஞ்சகப் பிரயோகங்களைக் குறிப்பிடுவர்.

## செயற்பத்திரம் 4.4.2.1

சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தை வழங்குக

(குழுவிலுள்ள அங்கத்தவர்கள் அனைவரும் செயற்பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளச் செய்க.

தோடி இராகத்தின் இலட்சணத்தை தரப்பட்டுள்ள இணைப்பின் உதவியுடன் கீழே தரப்பட்ட அம்சங்களை உள்ளடக்கி எழுதுக.

1. மேள எண்
2 ஆரோகண அவரோகணம்
3. ஸ்வரஸ்தானங்கள்
4. இரஞ்சகப்பிரயோகங்கள்
5. உருப்படிகள்
6. ட்சஞ்சாரம்
7. வேறுபண்புகள்

**இராக இலட்சணம்**

**இராகம் - தோடி**

இவ்விராகம் 8ஆவது மேளகர்த்தா இராகம், நேத்ர சக்கரத்தின் இரண்டாவது இராகம் (நேத்ர-ஸ்ரீ) கடபயாதி ஸங்க்யைக்காக ஹநுமதோடியென்று அழைக்கப்பட்டது. அநேக ஜன்னிய இராகங்களையுடைய மேளராகங்களில் இதுவுமொன்று.

| | | |
|---|---|---|
| ஆரோகணம் | - | ஸரிகமபதநிஸ் |
| அவரோகணம் | - | ஸ்நிதபமகரிஸ |

ஸட்ஜ பஞ்சமங்களைத் தவிர இந்த இராகத்தில் வரும் ஸ்வரங்கள்:-
சுத்தரிஷபம், சாதாரணகாந்தாரம், சுத்தமத்திமம், சுத்ததைவதம், கைசிகிநிஷாதம்.

சம்பூர்ண இராகம், பூர்வாங்கமும் உத்தராங்கமும் ஒரே சீராய் அமைந்துள்ள மேள இராகங்களில் இதுவுமொன்று. க,ம,த இராகச் சாயா ஸ்வரங்கள். பஞ்சமம் வர்ஜ ஜண்டை ஸ்வரப் பிரயோகங்களும் நீகரிநி / தநிரிநிதம / ககமநிதமகரிஸ போன்ற தாடு ஸ்வரப் பிரயோகங்களும் இராக ரஞ்சகமானவை.

தரிஸ்தா ரிஸ்தா போன்ற சஞ்சாரங்கள் விசேட பிரயோகங்களாகும். ஸர்வ ஸ்வர கமக வரிக ரக்தி இராகம். எப்பொழுதும் பாடத் தகுந்த இராகம். பஞ்சமத்தில் நின்று சஞ்சாரம் செய்யலாம். திரிஸ்தாயி இராகம். மூர்ச்சனாகாரக மேள இராகம். தோடியின் ரி, க, ம, த, நி ஸ்வரங்களை முறையே ஸட்ஜமாக வைத்துக் கொண்டால் (கிரக பேதம்) கல்யாணி, ஹரிகாம்போதி, நடபைரவி, சங்கராபரணம், கரஹரப்பிரியா ஆகிய மேளங்கள் ஒலிக்கும். விஸ்தாரமான ஆலாபனைக்கு இடம் கொடுக்கும் இராகம். எல்லா உருப்படி வகைகளையும் இந்த இராகத்தில் காணலாம். சுலோகங்கள், பத்யங்கள், விருத்தங்கள், பாடுவதற்கேற்ற இராகம். இசை நாடகங்களிலும், நிருத்திய நாடகங்களிலும் உபயோகிக்கப்படும் இராகம்.

தோடி ஸீதாராமய்யர் இந்த இராகத்தைப் பாடுவதில் தேர்ச்சி பெற்றவர். புராதன சங்கீத கிரந்தங்களில் இந்த இராகம் காணப்படுகிறது.

## சஞ்சாரம் :-

தநிஸ்ாஸ்ா ஸ்நிதா - தநிஸ்ரிரிஸ்ா - ஸ்நிதபம - பதநீதநீ
ஸ்ாஸ்ா ஸ்நிதா - தநிஸ்ரி - க்ரிஸ்நி - தநிஸ்ரிக்ம்க்ாரிரிஸா
ஸ்நிதபா - காமபா தநிதபா - பமகாரிரிஸா - ஸநிதா - தநிஸரிஸா

## உருப்படிகள்

| | | | | |
|---|---|---|---|---|
| கீதம் | - | கலைமகளே | - ரூபகம் | - பெரியசாமித் தூரன் |
| தானவர்ணம் | - | ஏராநாபை | - ஆதி | - பட்டணம் சுப்ரமணியர் |
| | - | கனகாங்கி | - அட | - பல்லவி கோபாலய்யர் |
| க்ருதி | - | கொலுவமரெகதா | - ஆதி | - ஸ்ரீ தியாகராஜர் |
| | - | தாசரதே | - ஆதி | - ஸ்ரீ தியாகராஜர் |
| | | ஆரகிம்பவே | - ரூபகம் | - ஸ்ரீ தியாகராஜர் |
| | | கடைக்கண்நோக்கி | - ஆதி | - பாபநாசம் சிவன் |
| | | எந்துக்கு ராதுரா | - திரிபுடை | - ஸ்ரீ தியாகராஜர் |
| | | தாமஸமேன் ஸ்வாமி- | ஆதி | - பாவநாசம் சிவன் |
| பதம் | - | எல்லா அருமைகளும்- | ஆதி | - உத்துக்காடு வெங்கட ஸுப்பய்யர் |

தேர்ச்சி 4.0 : கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார்.

தேர்ச்சி மட்டம் 4.4 : இராகங்களின் இலட்சணங்களை விளக்குவார்.

செயற்பாடு 4.4.2 : கரஹரப்ரியா இராகத்தின் இலட்சணங்களை அறிந்து கொள்வோம்.

நேரம் : 40 நிமிடம் (01 பாடவேளை)

தர உள்ளீடு :
* கரஹரப்ரியா இராகத்தின் ஆரோகண அவரோகண வரைபடம்.
* ஸ்வரஸ்தான வரைபடம், சுருதிப்பெட்டி இராகலட்சணம் எழுதப்பட்ட பிரதி செயற்பத்திரம் 4.4.2.2

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :

படி 4.4.1 :

- கரஹரப்ரியா இராகத்தில் பிரபல்யம் பெற்ற பாடல்கள் சிலவற்றைப் (பக்கல நிலபடி, மாயவித்தை செய்கிறானே, சக்கனிராஜ) பாடி குறிப்பிட்ட இராகத்தினை இனம் காணச் செய்க.

- கரஹரப்ரியா இராகத்தின் ஆரோகண, அவரோகண வரைபடம், ஸ்வரஸ்தான வரைபடங்களின் உதவியுடன் குறிப்பிட்ட இராகத்தின் ஆரோகண அவரோகணத்தைப் பாடிக்காட்டி இராகத்தின் சொருபத்தை விளங்கச் செய்க.

- கரஹரப்ரியா இராகத்தினை அடிப்படையாகக் கொண்டு கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்க.

- கலந்துரையாடலில் பின்வரும் அம்சங்களை வலியுறுத்துக.

- கரஹரப்பிரியா 22 வது மேளராகமாகும்.
- இதன் ஆ : ஸரிகமபதநிஸ்
  அ : ஸ்நிதபமகரிஸ
- ஸ்வரஸ்தானங்கள் : ஸட்ஜம், சதுஸ்ருதிரிஷபம் சாதாரணகாந்தாரம், சுத்தமத்திமம், பஞ்சமம், சதுஸ்ருதிதைவதம், கைசிகிநிஷாதம்.
- ரி, க, த, நி இராகச்சாயா ஸ்வரங்களாகும். நீதபமகாரீ, நீதபதநிஸ், நீதபாமகாரி என்பன ரஞ்சகப் பிரயோகங்கள்.
- ஹிந்துஸ்தானி சங்கீதத்திலுள்ள காபி என்பது இந்த *இராகமே ஆகும்.*
- திரிஸ்தாயி இராகம். எந்நேரமும் பாடலாம்.
- தியாகராஜ சுவாமிகள் இந்த ராகத்தில் பல கிருதிகளை இயற்றி பிரபல்யம் அடையச் செய்தார்.
- சாமகானம் இந்த இராகத்திலேயே பாடப்பட்டதாக கூறப்படுகிறது.

(10 நிமிடம்)

படி 4.4.2 :

- மாணவர்களை இரு குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தை இணைப்புடன் வழங்குக.
- அறிவுறுத்தலுக்கேற்ப செயற்பாட்டில் குழுக்களை ஈடுபடச் செய்க.
- பேறுகளைச் சமர்ப்பிக்கும் வகையில் ஆயத்தம் செய்கிறார்களா என்பதை உறுதிப்படுத்துக.

(15 நிமிடம்)

படி 4.4.3

- ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளை முன் வைக்க சந்தர்ப்பம் வழங்குக.
- ஏனைய குழுக்கள் அதனை அவதானித்து தமது கருத்துக்களை கூறுவதற்கு இடமளிக்க.
- குழுக்களின் பேறுகளை தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடலை மேற்கொள்க.

- கலந்துரையாடல் பின்வரும் விடயங்களை மீளவும் வலியுறுத்துக.
- கரஹரப்ரியா இராகம் ஒரு ஜனகராகமாகும். இதன் மேள எண் 22..
- ஆரோகணம் : ஸரிகமபதநிஸ்,
  அவரோகணம் : ஸ்நிதபமகரிஸ
- ஸ்வரஸ்தானம்: ஸட்ஜம், சதுஸ்ருதிரிஷபம், சாதாரண காந்தாரம், சுத்தமத்திமம், பஞ்சமம், சதுஸ்ருதிதைவதம், கைசிகி நிஷாதம்.
- பூர்வாங்கமும் உத்தராங்கமும் ஒரே சீராய் அமைந்துள்ள இராகம்.
- மூர்ச்சனாகாரக மேள இராகம் இதன் ரி, க, ம, ப, த, நி ஆகிய ஸ்வரங்களை முறையே கிரக பேதம் செய்தால் ஹனுமதோடி, மேசகல்யாணி, ஹரிகாம்போஜி, நடபைரவி, தீரசங்கராபரணம் ஆகிய இராகங்கள் வரும்.
- ரி, க, த, நி இராகச்சாயாஸ்வரங்கள்
- ஹிந்துஸ்தானி சங்கீதத்தில் காபி என்பது இந்த இராகம் ஆகும்
- தியாகராஜ சுவாமிகள் இந்த இராகத்தில் நிறைய கிருதிகளை இயற்றியுள்ளார்.
- திரிஸ்தாயி இராகம், எந்நேரமும் பாடலாம்.
- உருப்படிகள்: க்ருதி-சக்கனிராஜா -ஆதி தாளம்
  க்ருதி-பக்கலநிலபடி-மிஸ்ரசாபு தாளம்
  மாயவித்தை - ஆதி தாளம்
- சஞ்சாரம்
  நிதமபமாகரி - நிதபதநிதபாமகரி -ரிகமபதநிஸ்ா-ஸ்நிதபமகாரி

(15 நிமிடம்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- கரஹரப்பிரியா இராகத்தின் மேள எண், ஆரோகண அவரோகணம், ஸ்வரஸ்தானங்களைக் கூறுவர்.
- ஹிந்துஸ்தானி சங்கீதத்தில் காபி என அழைக்கப்படும் இராகம் கரஹரப்பிரியா என்று குறிப்பிடுவர்.
- தியாகராஜசுவாமிகளால் கரஹரப்பிரியா இராகம் பிரபல்யம். அடைந்ததைக் கூறுவர்.
- ஸாமகானம் கரஹரப்பிரியா இராகத்திலேயே பாடப்பட்டது என்பதைக் குறிப்பிடுவர்.
- கரஹரப்பிரியா இராகத்தில் அமைந்துள்ள உருப்படிகளை கூறுவர்.

## செயற்பத்திரம் 4.4.2.2

இரு குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தை இணைப்புடன் வழங்குக.
(குழுவில் உள்ள சகல அங்கத்தவர்களுக்கும் தனித்தனியாக செயற்பத்திரத்தை வழங்குக.)

பின்னிணைப்பின் உதவியுடன் செயற்பாட்டில் ஈடுபடச் செய்க

கரஹரப்பிரியா இராகத்தின் இலட்சணத்தை கீழ்வரும் அம்சங்களை உள்ளடக்கி எழுதுக.

1. மேள எண்
2. ஆரோகண, அவரோகணம்
3. ஸ்வரஸ்தானங்கள்
4. விசேஷ பிரயோகங்கள்
5. ஹிந்துஸ்தானி இசையில் வழங்கும் பெயர்
6. இந்த இராகத்தை பிரபல்யம் அடையச் செய்த வாக்கேயகாரர்
7. உருப்படிகள்
8. சஞ்சாரம்
9. வேறு பண்புகள்

## இராகம் - கரஹரப்ரியா

22ஆவது மேளகர்த்தா இராகம். வேத சக்கரத்தில் நான்காவது இராகம் (வேத-பூ) இதன்

ஆரோகணம் - ஸரிகமபதநிஸ்

அவரோகணம் - ஸ்நிதபமகரிஸ

ஸட்ஜ பஞ்சமங்களைத் தவிர இந்த இராகத்தில் வரும் ஸ்வரங்கள் சதுஸ்ருதி ரிஷபம், சாதாரண காந்தாரம், சுத்த மத்திமம், சதுஸ்ருதி தைவதம், கைசிகி நிஷாதம்.

பூர்வாங்கமும் உத்ராங்கமும் ஒரே சீராய் அமைந்துள்ள மேள இராகங்களில் இதுவுமொன்று. ஸர்வ ஸ்வர கமக வரிக ரக்தி இராகம். ரி, க, த, நி இராகச் சாயா ஸ்வரங்களும், நியாஸ ஸ்வரங்களுமாகும். பிரத்யாகத கமகம் இந்த இராகத்தின் ஸ்வரூபத்தை தெளிவாகப் புலப்படுத்தும் நீதபமகாரீ, நீதபதநிஸ், நீதபாமகாரி என்பன ரஞ்சகப் பிரயோகங்கள். எந்நேரமும் பாடலாம். அநேக ஜன்னிய இராகங்களை உடைய ஜனக இராகங்களில் இதுவுமொன்று. கிருதிகள் ஸ, ரி, ப, நி ஆகிய ஸ்வரங்களில் ஆரம்பிக்கின்றன. திரிஸ்தாயி இராகம். ஹிந்துஸ்தானி சங்கீதத்திலுள்ள காபி என்பது இந்த இராகமே. தியாகராஜ ஸ்வாமிகள் அநேக கிருதிகளை இந்த இராகத்தில் இயற்றி இவ்விராகத்தை பிரபல்யமடையச் செய்தார். கானரஸப் பிரதான இராகம்.

மூர்ச்சனாகாரக மேள இராகம், இதன் ரி, க, ம, ப, த, நி ஆகிய ஸ்வரங்களை முறையே கிரகபேதம் செய்தால் ஹநுமதோடி, மேசகல்யாணி, ஹரிகாம்போதி, நடபைரவி, தீரசங்கராபரணம் ஆகிய இராகங்கள் வரும்.

ஸாமகானம் இவ்விராகத்திலேயே பாடப்பட்டதாகக் கூறப்படுகிறது.

## சஞ்சாரம் :-

நிதமபமகாரி -நிதபதநித பாமகாரி - ரிகமப தநிஸா - ஸ்நிதப மகாரி- ரிகமப தநிஸாஸ்நிதா-
தநிஸ்ரிக்ரி - ஸ்நிஸ்ரி -க்ம்க்ாக்ரிரீ - ரீஸ்ாஸ்நிதா - பதநிஸ்ரி -ஸ்ஸ்நீ தநிபதபதநிஸ்-
நீநிதப - மபநிதபமகாரீ - நீநிதநி பபமம ககரிரீ - ஸாநித - நிஸாரிஸா - நிதபநித-
பாமகதரிஸா - நிதநி ஸரிஸா

## உருப்படிகள் :-

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கிருதி | - சக்கனிராஜ | - | ஆதி | -தியாகராஜ ஸ்வாமிகள் |
| கிருதி | - நடசி நடசி | - | ஆதி | -தியாகராஜ ஸ்வாமிகள் |
| கிருதி | - விடமுஸேய | - | ஆதி | -தியாகராஜ ஸ்வாமிகள் |
| கிருதி | - பக்கல நிலபடி | - | மிஸ்ரசாபு | -தியாகராஜ ஸ்வாமிகள் |
| கிருதி | - ராமநீஸமான | - | ருபகம் | -தியாகராஜ ஸ்வாமிகள் |
| கிருதி | - ஸங்கல்பபே | - | ஆதி | -தியாகராஜ ஸ்வாமிகள் |
| கிருதி | - தியாகராஜா | - | ஆதி | -தியாகராஜ ஸ்வாமிகள் |
| கிருதி | - மாயவித்தை | - | ஆதி | -பாபநாசம் சிவன் |

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 4.0 | : | கர்நாடக இசையின் அடிப்படையில் அம்சங்களை வெளிப்படுத்துவார் |
| தேர்ச்சி மட்டம் 4.5 | : | இசைக்கருவிகளின் அமைப்பு, பயன்பாடு பற்றி விளக்குவார். |
| செயற்பாடு 4.5.1 | : | வீணையின் அமைப்பு பயன்பாடு பற்றி அறிந்து கொள்வோம். |
| நேரம் | : | 40 நிமிடம் (01 பாடவேளை) |
| தர உள்ளீடு | : | வீணை வாத்தியத்தின் பாகங்கள் குறிக்கப்பட்ட படம், வீணை வாத்தியம், வீணை இசையடங்கி ஒலிநாடா ஒலிப்பதிவுக் கருவி செயற்பத்திரம் 4.5.2.1 |

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :**

படி 4.5.1

- வீணை இசையடங்கிய ஒலிப்பதிவு நாடாவைப் போட்டுக் காட்டியோ வீணையை மீட்டிக் காட்டியோ மாணவரைச் செவிமடுக்கச் செய்க.
- செவிமடுப்பதன் மூலம் அதனை இனங்காணச் செய்க.
- இனங்கண்டதில் பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடலொன்றினை மேற்கொள்க.

> - வீணை வாத்தியத்தின் சிறப்புகள்.
> - வீணை வாத்தியத்தின் அமைப்பு
> - வாசிப்புத் தந்திகள், தாளத்தந்திகளின் பெயர்கள்.
> - வீணையின் பாகங்கள் குறிக்கப்பட்ட படம்.
> - வீணை வாத்தியத்தினை வாசிக்கும் முறையும், சுருதி சேர்க்கும் முறை.
> - வீணை வாசிப்பதில் பிரபல்யமடைந்த வித்துவான்கள்.

(10 நிமிடம்)

படி 4.5.2 : மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரங்களை இணைப்புடன் வழங்குக.

: அறிவுறுத்தலுக்கேற்ப செயற்பாட்டில் ஈடுபடுகிறார்களா என்பதை உறுதிசெய்க.

(15 நிமிடம்)

படி 4.5..3 :

- ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குக.
- ஏனைய குழுக்கள் அதனை அவதானித்து கருத்துக்களைக் கூறுவதற்கு இடமளிக்க.
- குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடலொன்றை மேற்கொள்க.
- கலந்துரையாடலில் பின்வரும் விடயங்களை மீளவும் வலியுறுத்துக.

- வீணை இந்திய சங்கீதத்திற்கு அணிகலனாக விளங்குகிறது.
- வீணை இந்தியாவின் தேசிய வாத்தியம்.
- வீணை, வேணு, மிருதங்கம் எனும் வாத்தியத்தில் முதலாவதாக இவ்வாத்தியம் கருதப்படுகிறது.
- கலைமகளின் கையில் இவ்வாத்தியம் இருப்பதிலிருந்து இதன் பெருமை நன்கு புலப்படுகிறது.
- இவ்வாத்தியத்தில் இந்திய சங்கீதத்தின் பலநுட்பங்களையும், தத்துவங்களையும், நுணுக்கங்களையும் வாசிக்கக் கூடியதாக இருப்பதால் இதனை சங்கீத அளவுகோல் என்று கூறுவர்.
- வேதகாலம் தொடக்கம் இவ்வாத்தியமானது வாசிக்கப்பட்டு வந்துள்ளது.
- 17 ஆம் நூற்றாண்டிலேயே தற்காலத்து உருவத்தையும், அமைப்பையும் பெற்றது.
- தஞ்சாவூரை அரசுபுரிந்த இரகுநாத மன்னர் காலத்திலேயே இவ்வாத்தியம் முழுவளர்ச்சியடைந்ததாகையால் இதனை இரகுநாத வீணையென்றும் அழைப்பர்.
- வீணை ஒரு நரம்புக் கருவியாகும், சுருதிக்காகவும், தாளத்திற்காகவும் இவ்வாத்தியத்திலேயே தந்திகள் இணைக்கப்பட்டிருப்பதால் இதனை சகல வாத்தியம் என்றும் கூறுவர்.
- ஒரே நேரத்தில் வெவ்வேறு ஸ்தாயிகளில் 2, 3 ஸ்வரங்களை வாசிக்கக்கூடிய வசதியைக் கொண்டுள்ள வாத்தியங்களுள் வீணையுமொன்று, இதனால் இவ்வாத்தியம் பஹூத்வனி வாத்தியம் என்று அழைக்கப்படும்.

- வீணை வாத்தியத்தில் 3 $^{1}/_{2}$ ஸ்தாயிகள் வாசிக்கலாம்.

- வீணையின் பாகங்கள் குறித்த படத்தினைக் காட்சிப்படுத்துக.

- நான்கு தந்திகள் வாசிப்பதற்காகவும், மூன்று தந்திகள் சுருதிக்காவும், தாளத்திற்காகவும் அமைந்துள்ளன.

- வாசிக்கும் தந்திகளுக்காகக் குடத்தின் மேற்பாகத்தின் நடுப்பகுதியில் ஒரு குதிரையும் (பாலம்) தாள, சுருதித் தந்திகளுக்காக பக்கவாட்டில் மற்றொரு குதிரை (பக்கம் பாலம் உள்ளன)

- பலாமரத்தினால் இவ்வாத்தியம் செய்யப்படுகிறது.

- இவ்வாத்தியத்தின் பாகங்கள் -
  குடம், மேற்பலகை, தண்டி, சுரைக்காய்,பிரடைகள், யாழிமுகம்,மேளச்சட்டம், மெழுகுச் சட்டம், 24 மெட்டுக்கள் இரண்டு குதிரைகள், லங்கர், நாகபாகம், உருட்டுக்கள்.

- தண்டியின் ஒரு பக்கத்தில் குடமும் மற்றொரு பக்கத்தில் யாழி முகமும் இணைக்கப்பட்டிருக்கும். தண்டியானது குடப்பக்கத்தில் சற்றுப் பெருத்தும் யாழி முகப்பக்கத்தில் சற்றுச் சிறுத்தும் இருக்கும்.

- தண்டியின் இருபக்கங்களிலும் மெழுகுச் சட்டங்கள் இருக்கும். அவற்றின் மேலாக 2 ஸ்தாயிகளைத் தழுவிய 24 மெட்டுக்கள் வெண்கலத்தினாலாவது, வெள்ளியிலாவது, எஃகினாலாவது செய்யப்பட்டிருக்கும்.

- யாழி முகத்திற்கு அருகில் இருக்கும் சுரக்காய் ஒரு தாங்கியாகவும், ஒலிபெருக்கும் சாதனமாகவும் பயன்படுகிறது.

- வாசிக்கும் தந்திகள் நான்கு அவையாவன. -
  ஸாரணி (ஸ)
  பஞ்சமம் (ப)
  மந்தரம் (ஸ)
  அனுமந்தரம் (ப)

  - தாளத்தந்திகள் மூன்று அவையாவன
    பக்கஸாரணி (ஸ)
    பக்க பஞ்சமம் (ப)
    ஹச்சு ஹாரணி (ஸ்)

- வாசிக்கும் தந்திகள் நான்கும் லங்கர்களின் நுனியிலுள்ள வளையங்களில் முடியப்பட்டு குதிரையின் மேலும் மெட்டுக்களின் மேலும் சென்று பிரடைகளில் பிணைக்கப்பட்டிருக்கும் லங்கர்கள் வீணையின் மூலாதாரம் எனப்படும் நாகபாசத்தில் இணைக்கப்பட்டிருக்கும்.

- லங்கர்களின் மேலுள்ள உள்ள சிறு உருட்டுக்கள் (வளையங்கள்) நுட்பமாகச் சுருதி சேர்ப்பதற்கு உதவும். இந்த உருட்டுக்களை நாகபாசப் பக்கம் தள்ளினால் சுருதி அதிகரிக்கும், யாழி முகப்பக்கம் தள்ளினால் சுருதி குறையும்.

- இதேபோன்று பிரடைகளை யாழிமுகப்பக்கம் திருப்பினால் சுருதி அதிகரிக்கும். நாகபாசப் பக்கம் திருப்பினால் சுருதி குறையும்.

- வாசிக்கும் தந்திகளில் ஸாரணித் தந்தியை மத்திம ஸ்தாயி ஸட்ஜத்திற்கும், பஞ்சமத் தந்தியை மந்திரஸ்தாயி பஞ்சமத்திற்கும், மந்திரத்தந்தியை மந்திரஸ்தாயி ஸட்ஜத்திற்கும், அனுமந்திரத் தந்தியை அனுமந்திரஸ்தாயி பஞ்சமத்திற்கும் சுருதி சேர்க்க வேண்டும்.

- சுருதிக்காவும் தாளத்திற்காகவும் பயன்படும் தந்திகளில் பக்க ஸாரணித்தந்தியை மத்தியஸ்தாயி ஸட்ஜத்திற்கும், பக்க பஞ்சமத் தந்தியை மத்தியஸ்தாயி பஞ்சமத்திற்கும், ஹச்சு ஸாரணித் தந்தியை தாரஸ்தாயி ஸட்ஜத்திற்கும் சுருதி சேர்க்க வேண்டும்.

- தந்திகளை மீட்டுவதற்கு வலது கையின் ஆட்காட்டி விரலும், நடுவிரலும், தாளத்தந்தி - சுருதித்தந்திகளை மீட்டுவதற்கு வலது கையின் சிறிய விரலும் பயன்படும்.

- இடது கையின் ஆட்காட்டி விரலும், நடுவிரலும் ஸ்வரஸ்தானங்களை உரிய இடத்தில் தந்திகளில் அழுத்துவதற்கும் பயன்படும்.

- தந்திகளை மீட்டுவதற்கு மீட்டி அல்லது நெளி எனப்படும். சுற்றுக் கம்பிகளைப் போட்டு மீட்டுவர். வீணை வாசிப்பதில் தேர்ச்சி பெற்றவர்களை வைணீகர் என்று அழைக்கப்படும்.

- வீணை வாத்தியத்தில் தானத்தினை சிறப்புற வாசிக்கலாம்.

- வீணை வாசிப்பதில் பிரபல்யமடைந்த வித்துவான்கள்.
    - வீணை தனம்மாள்
    - காரைக்குடி சாம்பவசிவம்
    - எஸ்.பாலசந்தர்
    - சிட்டிபாபு

(15 நிமிடம்)

**[redacted]ப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- வீணை வாத்தியத்தின் சிறப்பினை கூறுவர்.
- வீணை வாத்தியத்தின் அமைப்பை விளக்குவர்.
- வீணையில் சுருதி சேர்க்கும் முறையினைக் கூறுவர்.
- வீணையை வாசிக்கும் முறையினைக் கூறுவர்.
- வீணையின் படம் வரைந்து பாகங்களைக் குறிப்பர்.
- வீணை வாசிப்பதில் பிரபல்யமான வித்துவான்களின் பெயர்களைக் கூறுவர்.

## செயற்பத்திரம் 4.5.2.1

குழு I

| |
|---|
| I வீணை வாத்தியத்தின் அமைப்பினை விளக்குக.<br>II வீணை வாத்தியத்தின் படத்தினை வரைந்து பாகங்களைக் குறிக்குக. |

குழு II

| |
|---|
| "வீணை வாத்தியத்தின் சிறப்பு" என்ற தலைப்பின் கீழ் ஆராய்க. |

குழு III

| |
|---|
| வீணை வாத்தியத்தில் சுருதி சேர்க்கும் முறையினையும், வாசிக்கும் முறையினையும் விளக்கமாகத் தருக. |

# இசைக்கருவி - வீணை

இசைக்கருவிகளில் சிறப்பான வாத்தியமாக விளங்குவது வீணையாகும். இது இந்திய சங்கீதத்திற்கு அணிகலனாக விளங்குவதுடன் இந்தியாவின் தேசிய வாத்தியமாகவும் விளங்குகிறது. வீணா, வேணு. மிருதங்கம் எனும் வாத்தியத்தில் முதலாவதாக இவ்வாத்தியம் கருதப்படுகிறது. கலைமகளின் கையில் இவ்வாத்தியம் இருப்பதிலிருந்து இதன் பெருமை நன்கு புலப்படுகிறது. இவ்வாத்தியத்தில் இந்திய சங்கீதத்தின் பல நுட்பங்களையும், தத்துவங்களையும், நுட்பங்களையும் வாசிக்கக் கூடியதாக இருப்பதனால் இதனைச் சங்கீத அளவுகோல் என்று கூறுவர்.

இவ்வாத்தியமானது வேதகாலந் தொட்டு வாசிக்கப்பட்டு வந்துள்ளது. ஆனாலும் 17 ஆம் நூற்றாண்டிலேயே தற்காலத்து உருவத்தையும் அமைப்பையும் பெற்றது. இரகுநாத மன்னர் தஞ்சாவூரை அரசு புரிந்த காலத்திலேயே இவ்வாத்தியம் முழு வளர்ச்சியடைந்ததாகையால் தஞ்சாவூர் வீணையென்றும் இரகுநாத வீணையென்றும் இது அழைக்கப்படுகின்றது.

வீணையானது ஒரு நரம்புக் கருவியாகும். சுருதிக்காகவும், தாளத்திற்காகவும் இவ்வாத்தியலேயே 3 தந்திகள் இணைக்கப்பட்டுள்ளன. இதனால் இவ்வாத்தியம் சகல வாத்தியம் என்று கூறப்படுகிறது. சுருதிக்காகத் தனியே தந்திகள் பொருத்தப்படாத வாத்தியம் நிஷ்கள வாத்தியம் எனப்படும். ஒரேநேரத்தில் வெவ்வேறு ஸ்தாயிகளில் 2, 3 ஸ்வரங்கள் வாசிக்கக்கூடிய வசதியைக் கொண்டுள்ள வாத்தியங்களில் வீணையும் ஒன்று. இதனால் இவ்வாத்தியம் பஹுத்வனி வாத்தியம் என்று அழைக்கப்படும். வீணை வாத்தியத்தில் 3 1/2 ஸ்தாயிகள் வாசிக்கலாம். நான்கு தந்திகள் வாசிப்பதற்காகவும், 3 தந்திகள் சுருதிக்காகவும், தாளத்திற்காகவும் அமைந்துள்ளன. வாசிக்கும் தந்திகளுக்காகக் குடத்தின் மேற்பாகத்தில் நடுப்பகுதியில் ஒரு குதிரை (பாலம்) யும், தாள, சுருதித் தந்திகளுக்காக பக்கவாட்டில் மற்றொரு குதிரை (பக்கம் பாலம்)யும் உள்ளன. பலா மரத்தினால் இவ்வாத்தியம் செய்யப்படுகிறது.

**இவ்வாத்தியத்தின் பாகங்கள் :-**

| | | | |
|---|---|---|---|
| 01. | குடம் | 07. | மேளச்சட்டம் |
| 02. | மேற்பலகை | 08. | மெழுகுச் சட்டம் |
| 03. | தண்டி | 09. | 24 மெட்டுக்கள் |
| 04. | சுரைக்காய் | 10. | குதிரைகள் 2 |
| 05. | பிரடைகள் | 11. | லங்கர் |
| 06. | யாழிமுகம் | 12. | நாகபாசம் |
| | | 13. | உருட்டுக்கள் (சிறுவளையங்கள்) |

**வீணையின் அமைப்பு:-**

தண்டியின் ஒரு பக்கத்தில் குடமும், மற்றொரு பக்கத்தில் யாழி முகமும் இணைக்கப்பட்டிருக்கும். தண்டியானது குடப்பக்கத்தில் சற்றுப்பருத்தும், யாழிமுகப்பக்கத்தில் சற்றுச் சிறுத்தும் இருக்கும். தண்டியின் இருபக்கங்களிலும் மெழுகுச் சட்டங்கள் உண்டு. அவற்றின் மேலாக 2 ஸ்தாயிகளைத் தழுவிய 24 மெட்டுக்கள் வெண்கலத்தினாலாவது, வெள்ளியினிலாவது, எஃகினாலாவது செய்யப்பட்டிருக்கும். யாழி முகத்திற்கு அருகிலிருக்கும் சுரைக்காய் ஒரு தாங்கியாகவும், ஒலி பெருக்கும் சாதனமாகவும் பயன்படுகிறது. வாசிக்கும் தந்திகள் நான்கும் லங்கர்களின் நுனியிலுள்ள வளையங்களில் முடியப்பட்டு குதிரையின் மேலும், மெட்டுக்களின் மேலும் சென்று பிரடைகளில் பிணைக்கப்பட்டிருக்கும். லங்கர்கள் வீணையின் மூலதாரம் எனப்படும் நாகபாசத்தில் இணைக்கப்பட்டிருக்கும் லங்கர்களின் மேல் உள்ள சிறு உருட்டுக்கள் (வளையங்கள்) நுட்பமாகச் சுருதி சேர்ப்பதற்கு உதவும். இந்த உருட்டுக்களை நாகபாசப் பக்கம் தள்ளினால் சுருதி அதிகரிக்கும். யாழி முகப்பக்கம் தள்ளினால் சுருதி குறையும். இதேபோன்று பிரடைகளை யாழிமுகப்பக்கம் திருப்பினால் சுருதி அதிகரிக்கும். நாகபாசப்பக்கம் திரும்பினால் சுருதி குறையும். வாசிப்புத் தந்திகள் நான்கின் பெயர்கள்:-

| | | | |
|---|---|---|---|
| 1. | ஸாரணி (ஸ) | 3. | மந்தரம் (ஸ) |
| 2. | பஞ்சமம் (ப) | 4. | அனுமந்தரம் (ப) |

**தாளத் தந்திகள் மூன்றின் பெயர்கள் :-**

1. பக்க ஸாரணி (ஸ)
2. பக்க பஞ்சமம் (ப)
3. ஹெச்சு ஸாரணி (ஸ்)

வாசிக்கும் தந்திகளில் ஸாரணித் தந்தியை மத்திம ஸ்தாயி ஸட்ஜத்திற்கும், பஞ்மத் தந்தியை மந்திரஸ்தாயி பஞ்சமத்திற்கும், மந்தரத் தந்தியை மந்திரஸ்தாயி ஸட்ஜத்திற்கும், அனுமந்தரத் தந்தியை அனுமந்திரஸ்தாயி பஞ்சமத்திற்கும் சுருதி சேர்க்க வேண்டும்.

சுருதிக்காவும், தாளத்திற்காகவும் பயன்படும் தந்திகளில் பக்க ஸாரணித் தந்தியை மத்தியஸ்தாயி ஸட்ஜத்திற்கும் பக்க பஞ்சமத் தந்தியை மத்தியஸ்தாயி பஞ்சமத்திற்கும் ஹெச்சுஸாரணித் தந்தியைத் தாரஸ்தாயி ஸட்ஜத்திற்கும் சுருதி சேர்க்க வேண்டும்.

வீணை வாத்தியத்தில் தாளத்தினை சிறப்புற வாசிக்கலாம்.

## வாசிக்கும் முறை :-

வாசிக்கும் தந்திகளை மீட்டுவதற்கு வலது கையின் ஆள்காட்டி விரலும், நடுவிரலும், தாளத்தந்தி - சுருதித்தந்திகளை மீட்டுவதற்கு வலது கையின் சிறிய விரலும் பயன்படும். இடது கையின் ஆள்காட்டி விரலும், நடுவிரலும் ஸ்வரஸ்தானங்களை உரிய இடத்தில் தந்திகளில் அழுத்துவதற்கும் பயன்படும். தந்திகளை மீட்டுவதற்கு "மீட்டி" அல்லது நெளி எனப்படும் சுற்றுக்கம்பிகளைப் போட்டு மீட்டுவர். வீணை வாசிப்பதில் தேர்ச்சி பெற்றவர்களை வைணீகர் என அழைக்கப்படும். வீணை வாசிப்பதில் பிரபல்யமடைந்த வித்துவான்கள்: வீணை தனம்மாள், காரைக்குடி சாம்பசிவம், எஸ்.பாலசந்தர், சிட்டிபாபு ஆவர்.

தேர்ச்சி 4.0 : கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார்.

தேர்ச்சி மட்டம் 4.5 : இசைக்கருவிகளின் அமைப்பு, பயன்பாடு பற்றி விளக்குவார்.

செயற்பாடு 4.5.2 : தம்புராவின் அமைப்பு பயன்பாடு பற்றி அறிந்து கொள்வோம்.

நேரம் : 40 நிமிடம் (01 பாடவேளை)

தர உள்ளீடு : தம்புரா வாத்தியத்தின் பாகங்கள் குறிக்கப்பட்ட படம் தம்புரா
தம்புரா இசையடங்கிய ஒலிநாடா, ஒலிப்பதிவுக் கருவி
செயற்பத்திரம் 4.5.2.2

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :

படி 4.5.1

- சுருதி சேர்க்கப்பட்ட தம்புராவின் நாதஒலி அடங்கிய ஒலிப்பதிவு நாடாவைப் போட்டுக்காட்டியோ தம்புராவை மீட்டிக் காட்டியோ மாணவரைச் செவிமடுக்கச் செய்க.
- செவிமடுப்பதன் மூலம் அதனை இனங்காணச் செய்க.
- இனங்கண்டதில் பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடலொன்றினை மேற்கொள்க.

| |
|---|
| • தம்புராவின் அமைப்பு, சுருதி சேர்க்கும் முறை, வாசிக்கும் முறை.<br>• தம்புராவின் பாகங்கள் குறிக்கப்பட்ட படம்.<br>• இசைக் கச்சேரிகளில் சுருதிக்காகப் பயன்படும் வாத்தியம் தம்புரா.<br>• நன்றாக சுருதி சேர்க்கப்பட்ட தம்புராவில் அந்தரகாந்தாரமும், சதுஷ்ருதி ரிஷபமும் ஒலிக்கும்.<br>• தம்புரா செய்யப்படும் இடங்கள் |

(10 நிமிடம்)

படி 4.5.2

- மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தை இணைப்புடன் வழங்குக.
- அறிவுறுத்தலுக்கேற்ப செயற்பாட்டில் ஈடுபடுகிறார்களா என்பதை உறுதிசெய்க.

(15 நிமிடம்)

படி 4.5.3 : 

- ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குக.
- ஏனைய குழுக்கள் அதனை அவதானித்து கருத்துக்களைக் கூறுவதற்கு இடமளிக்க.
- குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடலொன்றை மேற்கொள்க.
- கலந்துரையாடலில் பின்வரும் விடயங்களை மீளவும் வலியுறுத்துக.

---

- சுருதி வாத்தியங்களுள் மிகவும் சிறப்புப் பெற்ற தந்திவாத்தியம் தம்புராவாகும்.
- இவ்வாத்தியத்தை தம்புரா, தம்பூரா, தம்பூரு, தம்பூர் எனப் பலவிதமாக அழைப்பர்.
- தும்புரு கையாண்ட கருவி என்ற காரணத்தினாலும் சுரக்காய் கொண்டு செய்யப்பட்டதனாலும் தம்புரா என்ற பெயர் வந்திருக்கலாம் எனவும் ஆய்வாளர் கருதுகின்றனர்.
- தம்புரா பலாமரத்தினாற் செய்யப்படுகிறது.
- தம்புராவின் பாகங்கள் குறித்த படத்தினைக் காட்சிப்படுத்துக.
- முதலில் சதுரமாகவுள்ள பலாமரத்துண்டு ஒன்றை எடுத்து மேல்பாகத்தைச் செதுக்கி அரைக்கோள வடிவமாக்குவர். பின் உட்பாகத்தைக் குடைந்து எடுத்துவிட்டு "குடம்" என்ற இசையொலி பெருக்கும் பகுதியைத் தயார் செய்வர். குடத்தின் மேற்பலகை சிறிது வளைவாக இருக்கும். பின்னர் "தண்டி" என்ற நீண்ட பகுதியைத் தயார் செய்து குடத்துடன் பிணைப்பர்.
- தண்டியின் இடது ஓரத்தில் நான்கு பிரடைகள் போடுவதற்காக துளைகள் இடப்பட்டு அதிலே பிரடைகள் காணப்படும். குடத்தின் வலது ஓரத்தில் உள்ள தந்தித் தாங்கியில் நான்கு தந்திகள் பிணைக்கப்பட்டிருக்கும். அத்தந்திகள் உருண்டை வடிவமாகவுள்ள மணிக்காய்களின் துளைகள் வழியாகக் குதிரையின் மேல் செலுத்தப்பட்டு பின்னர் மேருவின் பாகத்திலுள்ள மற்றொரு குதிரையின் நடுவிலுள்ள சில துளைகள் மூலமாகச் செலுத்தப்பட்டு பிரடைகளில் சுற்றப்பட்டிருக்கும்.
- குடத்தின் மேலுள்ள குதிரை (பாலம்) அகலமாகவும் குடத்தின் மேல் செம்மையாகவும் பதிந்திருக்கும்.
- குடத்தின் மேற்பகுதியிலும் தண்டியிலும் கமலவேலைகள் பதிக்கப்பட்டிருக்கும்.
- தம்புராவின் பாகங்கள் - குடம், தண்டி, கழுத்து, நான்கு பிரடைகள், குதிரை, மணிக்காய்கள், நான்கு தந்திகள், மேரு, ஜீவாளி என்பனவாகும்.

* தம்புராவின் நான்கு தந்திகளும் பஸஸஸ என்ற ஸ்வரங்களுக்கு சுருதி சேர்க்கப்படுகின்றன.

* நான்கு தந்திகளும் முறையே பஞ்சம், ஸாரணி, அனுஸாரணி, மந்தரம் ஆகும்.

* நடுத்தந்திகள் இரண்டும் மத்தியஸ்தாயி ஸட்ஜத்திற்கும், முதல் தந்தி மந்திரஸ்தாயி பஞ்சமத்திற்கும், நான்காவது தந்தி மந்தரஸ்தாயி ஸட்ஜத்திற்கும் சுருதி சேர்க்கப்படுகின்றன.

* நன்கு சுருதி சேர்ந்துள்ள தம்புராவை கச்சேரியின் ஆரம்பத்தில் சில நிமிடங்கள் மீட்டினால் மேளக்கட்டு ஏற்படும்.

* குடத்தின் மேலுள்ள குதிரைக்கும் தந்தித்தாங்கிக்கும் நடுவில் 4 மணிக்காய்கள் உள்ளன. இவற்றைத் தந்தித் தாங்கியின் பக்கம் தள்ளினால் சுருதி அதிகரிக்கும். எதிர்ப்புறம் தள்ளினால் சுருதி குறையும்.

* நாதம் கணீர் எனக் கேட்பதற்காக ஜீவாளி என்று சொல்லப்படும் பட்டுநூல்/கம்பளி நூல் துண்டுகள் குதிரைக்கும், தந்திக்கும் இடையில் தக்க இடத்தில் வைக்கப்படும்.

* தம்புராவை செங்குத்தாக வைத்துக்கொண்டும் கிடையாக வைத்துக்கொண்டும் வாசிக்கலாம்.தந்திகள் ஆட்காட்டி விரலினால் மீட்டப்படும்.

* மைசூர், திருவனந்தபுரம், மிராஜ் ஆகிய இடங்களில் தம்புராக்கள் செய்யப்படுகின்றன.

(15 நிமிடம்)

**[redacted]ப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- தம்புராவின் அமைப்பை விளக்குவர்.
- தம்புராவின் தந்திகளின் பெயர்களைக் குறிப்பிடுவர்.
- தம்புராவில் சுருதி சேர்க்கும் முறையைக் கூறுவர்
- தம்புராவின் படம் வரைந்து பாகங்களைக் குறிப்பர்.
- தம்புரா ஓர் சுருதி வாத்தியம் என்பதனை ஏற்றுக் கொள்வர்.

## செயற்பத்திரம் 4.5.2.2

குழு I

1. தம்புரா வாத்தியத்தின் அமைப்பினை விளக்குக.
2. தம்புராவின் படத்தினை வரைந்து பாகங்களைக் குறிக்குக.

குழு II

தம்புராவில் சுருதி சேர்க்கும் முறையையும், வாசிக்கும் முறையையும் விளக்கமாகத் தருக.

குழு III

பின்வரும் வினாக்களுக்கு விடைதருக.

1. தம்புரா என்ற பெயர் வரக் காரணம் யாது.
2. நன்றாக சுருதி சேர்ந்துள்ள தம்புராவில் ஒலிக்கும் ஸ்வரங்கள் எவை.
3. தம்புரா எவ்விடங்களில் செய்யப்படுகின்றது.
4. தம்புராவின் பாகங்களைக் குறிப்பிடுக.
5. தம்புராவில் ஜீவாளியின் முக்கியத்துவம் என்ன.
6. தம்புராவின் சிறப்பினைக் கூறுக.

# இசைக்கருவி - தம்புரா

ஸ்ருதி வாத்தியங்களுள் மிகவும் சிறப்புப் பெற்ற தந்தி வாத்தியம் தம்புராவாகும். தும்புரு கையாண்ட கருவி என்ற காரணத்தினாலும், சுரைக்காயைக் கொண்டு செய்யப்பட்டதனாலும் (சுரைக்காய்க்கு இன்னொரு பெயர் தும்ப) தம்புரா என்ற பெயர் வந்திருக்கலாம் எனவும் ஆய்வாளர் கருதுகின்றனர். இவ்வாத்தியத்தைத் தம்புரா, தம்பூரா, தம்பூரி, தம்பூரு, தம்பூர் என ஐந்து விதமாக அழைப்பார்.

## தம்புராவின் அமைப்பு :-

தம்புரா பலா மரத்தினால் செய்யப்படுகின்றது. முதலில் சதுரமாக உள்ள பலாமரததுண்டு ஒன்றை எடுத்து மேல் பாகத்தைச் செதுக்கி அரைகோள வடிவமாக்கிப் பின் உட்பாகத்தை மெல்ல மெல்ல குடைந்து எடுத்துவிட்டு "குடம்" என்ற இசையொலி பெருக்கும் பகுதியைத் தயார் செய்வர். குடத்தின் மேற்பலகை சிறிது வளைவாக இருக்க வேண்டும். பின்னர் "தண்டி" என்ற நீண்ட பகுதியைத் தயார் செய்து குடத்துடன் பிணைப்பர். தண்டியின் இடது ஓரத்தில் (கழுத்துப் பாகத்தில் ) நான்கு பிரடைகள் போடுவதற்காக துளைகள் இடப்படும். குடத்தின் மேலுள்ள குதிரை (பாலம்) அகலமாகவும். குடத்தின் மேல் செம்மையாய்ப் பதிந்து இருக்கும். குடத்தின் வலது ஓரத்திலுள்ள தந்தித் தாங்கியில் நான்கு தந்திகள் பிணைக்கப்பட்டிருக்கும். அத்தந்திகள் உருண்டை வடிவமாகவுள்ள மணிக்காய்களின் துளைகள் வழியாகக் குதிரையின் மேல் செலுத்தப்பட்டு, பின்னர் மேருவின் பாகத்திலுள்ள மற்றொரு குதிரையின் நடுவிலுள்ள சில துளைகள் மூலமாகச் செலுத்தப்பட்டு பிரடைகளில் சுற்றப்பட்டிருக்கும். குடத்தின் மேற்பகுதியிலும், தண்டியிலும் அழகுக்காகப் பூவேலை செய்த தந்தத்தைப் பதிப்பர். இதற்குக் கமலவேலை என்று பெயர். தம்புராவின் பாகங்கள் குடம், தண்டி, கழுத்து, நான்கு பிரடைகள், குதிரை, மணிக்காய்கள், நான்கு தந்திகள், மேரு, ஜீவாளி என்பனவாகும். மைசூர், திருவனந்தபுரம், மிராஜ் ஆகிய இடங்களில் தம்புராக்கள் செய்யப்படுகின்றன.

## சுருதி சேர்க்கும் முறையும், வாசிக்கும் முறையும்.:-

தம்புராவின் நான்கு தந்திகளும் பஸஸஸ என்ற ஸ்வரங்களுக்கு சுருதி சேர்க்கப்படுகின்றன. அதாவது நடுத்தந்திகள் இரண்டும் மத்தியஸ்தாயி ஸட்ஜத்திற்கும் , முதல் தந்தி மந்திரஸ்தாயி பஞ்சமத்திற்கும் ,நான்காவது தந்தி மந்திரஸ்தாயி ஸட்ஜத்திற்கும் சுருதி சேர்க்கப்படுகின்றன. நான்கு தந்திகளுக்கும் முறையே பஞ்சமம், ஸாரணி, அனுஸாரணி, மந்தரம் என்ற பெயர்கள் உண்டு. மந்தர ஸட்ஜத்திற்கு சுருதி சேர்க்கப்பட்ட நான்காம் தந்தியினின்று ஸ்வயம்பு ஸ்வரங்கள் உண்டாவதைக் கேட்கலாம். நன்றாக சுருதி சேர்ந்துள்ள தம்புராவில் அந்தரகாந்தாரமும், சதுஸ்ருதிரிஷபமும் ஒலிப்பதைக் கேட்கக் கூடியதாக இருக்கும். நன்கு சுருதி சேர்ந்துள்ள தம்புராவை கச்சேரியின் ஆரம்பத்தில் சில நிமிடங்கள் மீட்டினால் மேளக்கட்டு ஏற்படும்.

சுருதி செம்மையாகக் கூட்டப்படுவதற்காகக் குடத்தின் மேல் உள்ள குதிரைக்கும் தந்தித்தாங் கிக்கும் நடுவில் 4 மணிக்காய்கள் உள்ளன. இவற்றைத் தந்தித் தாங்கியின் பக்கமாகத் தள்ளினால் சுருதி அதிகரிக்கும். எதிர்ப்புறம் தள்ளினால் சுருதி குறையும். நாதம் **"கணீர்"** எனக் கேட்பதற்காக **"ஜீவாளி"** என்று சொல்லப்படும் பட்டுநூல் அல்லது கம்பளி நூல் துண்டுகள் குதிரைக்கும், தந்திக்கும் இடையில் தக்க இடத்தில் வைக்கப்படும்.

தம்புராவின் தந்திகள் ஆட்காட்டி விரலினால் மீட்டப்படும். தம்புராவை செங்குத்தாக வைத்துக் கொண்டும், கிடையாக வைத்துக் கொண்டும் வாசிக்கலாம்.

தேர்ச்சி 4.0 : கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவர்

தேர்ச்சி மட்டம் 4.1 : கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களை விளக்குவார்.

செயற்பாடு 4.1.3 : கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களுள் ஷடங்கம், திரியாங்கம், லகுவின் ஜாதிபேதம், சப்த தாளங்களும் அங்க அடையாளங்களும் பற்றி அறிவோம்.

நேரம் : 40 நிமிடம் (01 பாடவேளை)

தர உள்ளீடு : விளக்க அட்டவணை, செயற்பத்திரம் 4.1.2

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :

படி 4.1.1 :

- ஷடங்கம், திரியாங்கம், லகுவின் ஜாதிபேதம், சப்த தாளங்களும் அங்க அடையாங்களும் எழுதப்பட்ட அட்டவணையைக் காட்சிப்படுத்தி அதனை மாணவர் இனங்காண வழிப்படுத்துக.
- மாணவர் இனங்கண்ட விடயங்கள் பற்றிக் கலந்துரையாடுக.
- கலந்துரையாடலில் பின்வரும் விடயங்களை வலியுறுத்துக.

> - திரியாங்கம் பற்றிய விளக்கம் அவற்றின் குறியீடு அட்சரகாலம், செய்கை முறைகள்.
> - லகுவின் ஜாதி பேதம் பற்றிய விளக்கம், குறியீடுகள், அட்சரகாலங்கள், செய்கைமுறைகள்.
> - ஷடங்கம் பற்றிய விளக்கம். குறியீடுகள், அட்சரகாலங்கள், செய்கைமுறைகள்.
> - சப்த தாளங்களும், அவற்றின் அங்க அடையாளங்களும் பற்றிய விளக்கம்.

(10 நிமிடம்)

படி 4.1.2 :

- வகுப்பிலுள்ள மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்துச் செயற்பத்திரத்தை இணைப்புடன் வழங்குக.
- அறிவுறுத்தலுக்கேற்ப மாணவர் செயற்பாட்டில் ஈடுபடு கின்றார்களா என்பதை உறுதிசெய்க.

(15 நிமிடம்)

படி 4.1.3 : • ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குக.

• ஏனைய குழுக்களும் அவற்றை அவதானித்துக் கருத்துக்களைக் கூற இடமளிக்க.

• குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணமும் விடயங்களை மீள வலியுறுத்தும் வகையிலும் கலந்துரையாடலொன்றை மேற்கொள்க.

- தாளத்தின் முதல் மூன்று அங்கங்களும் திரியாங்கம் ஆகும். அவையாவன: லகு, துருதம், அனுத்துருதம்.
- லகுவின் குறியீடு 1 ஆகும். இதன் ஜாதிக்கேற்ப மொத்த அட்சர எண்ணிக்கை மாறும் (3,4,5,7,9)
- துருதத்தின் குறியீடு 0 ஆகும். இதன் மொத்த அட்சர எண்ணிக்கை 2 ஆகும். இது ஒரு தட்டும் வீச்சும் கொண்டது.
- அனுத்துருதத்தின் குறியீடு U ஆகும். இதன் மொத்த அட்சர எண்ணிக்கை 1 ஆகும் இதனை ஒரு தட்டு மட்டும் போட்டுக் காண்பிப்பர்.
- லகுவானது ஐந்து வகையாக ஜாதிபேதம் அடைகின்றது. அவையாவன, திஸ்ரலகு, சதுஸ்ரலகு, கண்டலகு, மிஸ்ரலகு, சங்கீர்ண லகு ஆகும்.
- திஸ்ர லகுவானது, $1_3$ எனும் குறியீட்டையும் 3 அட்சர எண்ணிக்கையையும், ஒரு தட்டும் இரண்டு விரல் எண்ணிக்கையும் கொண்ட செய்கைமுறையையும் கொண்டது.
- *சதுஸ்ர லகுவானது, $1_4$ எனும் குறியீட்டையும், 4 அட்சர* எண்ணிக்கையையும், ஒரு தட்டும் மூன்று விரல் எண்ணிக்கையும் கொண்ட செய்கை முறையையும் கொண்டது.
- கண்ட லகுவானது, $1_5$ எனும் குறியீட்டையும், 5 அட்சர எண்ணிக்கையையும், ஒரு தட்டும் நான்கு விரல் எண்ணிக்கையும் கொண்ட செய்கை முறையையும் கொண்டது.
- மிஸ்ர லகுவானது, $1_7$ எனும் குறியீட்டையும், 7 அட்சர எண்ணிக்கையையும், ஒரு தட்டும் ஆறு விரல் எண்ணிக்கையும் கொண்ட செய்கை முறையையும் கொண்டது.
- சங்கீர்ண லகுவானது, $1_9$ எனும் குறியீட்டையும், 9 அட்சர எண்ணிக்கையையும், ஒரு தட்டும் எட்டு விரல் எண்ணிக்கையும் கொண்ட செய்கை முறையையும் கொண்டது.
- தாளத்தின் ஆறு அங்கங்களும் ஷடங்கம் என்றழைக்கப்படும் அவையாவன, அனுத்ருதம் , துருதம் , லகு, குரு , புலுதம், காகபாதம் ஆகும்.

- இவற்றின் குறியீடுகளும் மொத்த அட்சரகாலமும் செய்கை முறையும் பின்வருமாறு அமையும்.

  - அனுத்ருதம் - U -1 அட்சரம் - ஒருதட்டு மட்டும்
  - துருதம் - 0 -2 அட்சரங்கள் - ஒருதட்டும் வீச்சும்.
  - லகு - 1 -3,4,5,7,9 அட்சரங்கள் - ஒருதட்டும்விரல் எண்ணிக்கைகளும் கொண்டது.
  - குரு - 8 - 8 அட்சரங்கள் - 2 மாத்திரை காலம் கொண்டது.ஒரு ஸசப்த லகுவாயும் ஒரு நிசப்த லகுவாகவும் போடுவர்.
  - புலுதம் 8 - 12 அட்சரங்கள் - 3 மாத்திரை காலம் கொண்டது.ஒரு தட்டும் ஒரு க்ருஷ்யையும் ஒரு சர்ப்பிணியும் போடுவர்.
  - காகபாதம் - + - 16 அட்சரங்கள் - 4 மாத்திரை காலம் கொண்டது. ஒரு தட்டும் ஒரு பதாகமும் ஒரு க்ருஷ்யையும் ஒரு ஸர்ப்பிணியும் போடுவர்.

- ஸப்த தாளங்கள் ஏழு ஆகும். அவையாவன, துருவம், மட்டியம், ரூபகம், ஜம்பை, திரிபுடை, அட, ஏகம் என்பனவாகும்.

- துருவதாளத்தின் அங்க அடையாளம் 1 0 1 1 ஆகும். இது ஒரு லகுவையும் ஒரு துருதத்தையும், பின் இரு லகுவையும் கொண்டது.

- மட்டியதாளத்தின் அங்க அடையாளம் 1 0 1 ஆகும். இது ஒரு லகுவையும் ஒரு துருதத்தையும் ஒரு லகுவையும் கொண்டது.

- ரூபக தாளத்தின் அங்க அடையாளம் 0 1 ஆகும். இது ஒரு துருதத்தையும் ஒரு லகுவையும் கொண்டது.

- ஜம்பை தாளத்தின் அங்க அடையாளம் 1 U 0 ஆகும். இது ஒரு லகுவையும் ஒரு அனுத்ருதத்தையும் ஒரு துருதத்தையும் கொண்டது.

- திரிபுடை தாளத்தின் அங்க அடையாளம் 1 0 0 ஆகும். இது ஒரு லகுவையும் இரு துருதங்களையும் கொண்டது.

- ஏகதாளத்தின் அங்க அடையாளம் 1 ஆகும். இது ஒரு லகுவை மட்டும் கொண்டது.

(15 நிமிடம்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- திரியாங்கம் என்றால் என்ன என்பதைக் குறிப்பிடுவர்.
- திரியாங்கங்களின் குறியீகள், அட்சரகாலங்கள், செய்கை முறைகளை விளக்குவர்.
- லகுவின் ஜாதி பேதம் என்றால் என்ன என்பதைக் குறிப்பிடுவர்.
- லகுவின் ஐந்து ஜாதி பேதங்களினதும் குறியீடுகள் அட்சரகாலங்கள், செய்கை முறைகளை விளக்குவர்.
- ஷடங்கம் என்றால் என்ன என்பதைக் குறிப்பிடுவர்.
- ஷடங்கத்தில் இடம்பெறும் அங்கங்களை, விளக்குவர்.
- சப்த தாளங்கள் எவை எனக் குறிப்பிடுவர்.
- சப்த தாள அங்கங்களையும் குறியீடுகளையும் குறிப்பிடுவர்.

## செயற்பத்திரம் 4.1.2.3

**குழு I**

1. ஷடங்கம் என்றால் என்ன.
2. ஷடங்கத்தின் அங்கங்களைத் தருக.
3. ஷடங்கத்தின் அங்கங்களின் அட்ஷரங்களைத் தருக.

**குழு II**

1. திரியாங்கம் என்றால் என்ன.
2. திரியாங்கத்தில் இடம் பெறும் அங்கங்கள் யாது.
3. திரயாங்கத்தின் அங்கங்களின் அட்ஷரங்களைத் தருக.

**குழு III**

1. சப்த தாளங்களையும் அவற்றின் அங்க அடையாளங்களையும் தருக.
2. சப்த தாளங்களிலில் 2 லகுவை எடுத்துக் கொள்ளும் தாளங்களைக் குறிப்பிடுக.
3. துருவ தாளத்தின் கடைசி லகுவை நீக்கினால் வரும் தாளத்தைக் குறிப்பிடுக?

**குழு IV**

1. லகுவில் எத்தனை ஜாதிகள் உண்டு.
2. அவற்றின் பெயர்களைத் தருக.
3. லகுவின் ஜாதிகளின் அட்ஷரங்களைத் தருக.

# திரியாங்கம்

தாளத்தின் முதல் மூன்று அங்கங்களும் திரியாங்கம் என்று அழைக்கப்படும். அவையாவன.
லகு
துருதம்
அனுத்ருதம் ஆகும்

இவற்றை சப்ததாள அலங்காரங்களில் காணலாம். குறிப்பாக ஜம்பை தாள அலங்காரத்தில் இம் மூன்று அங்கங்களும் வருகின்றன. இம்மூன்று அங்கங்களின் அங்க அடையாளக் குறியீடு அட்சர எண்ணிக்கை, செய்கை முறை பின்வருமாறு:-

| இல | திரியாங்கத்தின் பெயர் | குறியீடு | அஷரகாலம் | செய்கை முறை |
|---|---|---|---|---|
| 1. | அனுத்ருதம் | U | 1 | ஒரு தட்டு |
| 2 | துருதம் | 0 | 2 | ஒரு தட்டும் வீச்சும் |
| 3 | லகு | 1 | லகுவின் ஜாதிக்கேற்ப மொத்த அட்சர எண்ணிக்கை மாறும். (3,4,5,7,9) | ஒரு தட்டும் விரல் எண்ணிக்கையும் கொண்டது. |

## லகுவின் ஜாதி பேதம்

லகு திரியாங்கத்தில் காணப்படும் , ஜாதி பேதம் அடையும் அங்கமாகும். இது ஐந்து வகைய[illegible] ஜாதி பேதம் அடைகின்றது. இதன் மூலம் லகுவின் மொத்த அஷரகாலம் முறையே 3, 4, 5, 7, 9 ஆ[illegible] மாறும். இவ் ஐந்து லகுவின் பெயர்கள்:-

1. திஸ்ர லகு
2. சதுஸ்ர லகு
3. கண்ட லகு
4. மிஸ்ர லகு
5. சங்கீர்ண லகு

இவற்றுக்குரிய குறியீடுகள் முறையே $1_3$ $1_4$ $1_5$ $1_7$ $1_9$ லகுவின் வகை, குறியீடு, மொத்த அட்சரம். செய்கை முறை பின்வருமாறு:-

| இல | லகுவின் வகை | குறியீடு | மொத்த அட்சரகாலம் | செய்கை முறை |
|---|---|---|---|---|
| 01 | திஸ்ரலகு | $1_3$ | 3 | ஒரு தட்டும் 2 விரல் எண்ணிக்கையும் |
| 02 | சதுஸ்ர லகு | $1_4$ | 4 | ஒரு தட்டும் 3 விரல் எண்ணிக்கையும் |
| 03 | கண்ட லகு | $1_5$ | 5 | ஒரு தட்டும் 4 விரல் எண்ணிக்கையும் |
| 04 | மிஸ்ர லகு | $1_7$ | 7 | ஒரு தட்டும் 6 விரல் எண்ணிக்கையும் |
| 05 | சங்கீர்ண லகு | $1_9$ | 9 | ஒரு தட்டும் 8 விரல் எண்ணிக்கையும் |

# ஷடங்கம்

தாளத்தின் ஆறு அங்கங்களும் ஷடங்கம் எனப்படும். அவற்றின் பெயர்கள் பின்வருமாறு.

1. அனுத்ருதம்
2. த்ருதம்
3. லகு
4. குரு
5. புலுதம்
6. காகபாதம்

இதில் முதல் மூன்று அங்கங்களும் அட்சரகால முறையாகவும் ஏனைய மூன்று மாத்திரை கால முறையாகவும் அமையும். ஷடங்கத்தை 108 தாளங்களில் நாம் காணலாம்.

| இல | ஷடங்கத்தின் பெயர்கள் | குறியீடு | மொத்த அட்சர காலம் | செய்கை முறை |
|---|---|---|---|---|
| 1. | அனுத்ருதம் | U | 1 | ஒரு தட்டு |
| 2 | த்ருதம் | 0 | 2 | ஒரு தட்டும் வீச்சும் |
| 3 | லகு | I | | ஒரு தட்டும் விரல் எண்ணிக்கைகளும் |
| 4. | குரு | 8 | 8 | இரண்டு மாத்தரை காலம் கொண்டது ஒரு ஸசப்த லகுவாகவும் ஒரு நிசப்த லகுவாகவும் எண்ணிப்போடுவர். |
| 5. | புலுதம் | 8 | 12 | மூன்று மாத்திரை காலம் கொண்டது ஒரு தட்டும் ஒரு க்ருஷ்யையும் ஒரு சர்ப்பிணியும் போடுவர். |
| 6. | காகப தம் | + | 16 | நான்கு மாத்திரைக் காலம் கொண்டது ஒரு தட்டும் ஒரு பதாகமும், ஒரு க்ருஷ்யையும் ஒரு ஸர்ப்பிணியும் போடுவர். |

க்ருஷ்யை - கையை இடது புறம் வீசுதல்
ஸர்ப்பிணி - கையை வலது புறம் வீசுதல்
பதாகம் · கையை உயரமாக எடுத்தல்.

# சப்த தாளங்களும் அங்க அடையாளங்களும்

ஸப்த தாளங்கள் ஏழு ஆகும். அவை முறையே துருவம், மட்டியம், ரூபகம், ஜம்பை, திரிபுடை, அட ஏகம் என்பனவாகும். ஏழு தாளங்களும் அவற்றின் அங்க அடையாளங்களும்.

பின்வருமாறு :-

| இல | தாளத்தின் பெயர் | அங்க அடையாளம் |
|---|---|---|
| 1. | துருவ தாளம் | 1 0 1 1 |
| 2. | மட்டிய தாளம் | 1 0 1 |
| 3. | ரூபக தாளம் | 0 1 |
| 4. | ஜம்பை தாளம் | 1 U 0 |
| 5. | திரிபுடை தாளம் | 1 0 0 |
| 6. | அட தாளம் | 1 1 0 0 |
| 7. | ஏக தாளம் | 1 |

* ஒரு அங்கத்தை உடைய தாளம் - ஏகதாளம் - 1
இரு அங்கங்களைக் கொண்ட தாளம் - ரூபக தாளம் - 0 1

மூன்று அங்கங்களைக் கொண்ட தாளம் -
- மட்டிய தாளம் - 1 0 1
- ஜம்பை தாளம் - 1 U 0
- திரிபுடை தாளம் - 1 0 0

நான்கு அங்கங்களைக் கொண்ட தாளம்
- துருவ தாளம் - 1 0 1 1
- அட தாளம் - 1 1 0 0

**தேர்ச்சி 4.0** : கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவர்.

**தேர்ச்சி மட்டம் 4.6** : உருப்படிகளின் இலட்சணங்கள் பற்றி விளக்குவார்.

**செயற்பாடு 4.6.1** : கீதம், ஜதீஸ்வரம், ஸ்வரஜதி ஆகிய இசை உருப்படிகளின் இலட்சணங்களை அறிந்து கொள்வோம்.

**நேரம்** : 40 நிமிடம் (01 பாடவேளை)

**தர உள்ளீடு** : சுருதிப்பெட்டி, ஒலிப்பதிவுக்கருவி, கீதம், ஜதிஸ்வரம், ஸ்வரஜதி ஆகிய உருப்படிகள் ஒலிப்பதிவு செய்த ஒலி நாடா, மேற் குறிப்பிட்ட இசை உருப்படிகள் எழுதப்பட்ட பாடல் அட்டை, செயற்பத்திரம் 4.6.2.1

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி 4.6.1** :

- மேற் குறித்த இசை உருப்படிகளை ஒலிப்பதிவுக் கருவியில் இசைக்கச் செய்க/பாடிக்காட்டுக.
- செவிமடுப்பதன் மூலம் அதனை இனங்காணச் செய்க.
- தர உள்ளீட்டிலுள்ள இசை உருப்படிகள் எழுதிய பாடல் அட்டைகளைக் காட்சிப்படுத்துக.
- இனம் கண்ட உருப்படிகளில், கீழ்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடலை மேற்கொள்க.

கீதம் * கீதத்தின் லட்சணம்.
* கீதத்தின் வகைகள் - அவற்றின் விளக்கம்.
* கீதங்களை இயற்றிய மகான்கள்.
* கீதங்களுக்குச் சில உதாரணங்கள்.

ஜதிஸ்வரம்
* ஜதிஸ்வரம் என்ற பெயர் வரக் காரணம்.
* ஜதிஸ்வரத்தின் இலட்சணம்.
* நாட்டியக் கச்சேரிகளில் ஜதிஸ்வரத்தின் பங்கு.
* ஜதிஸ்வரத்தை இயற்றியவர்கள்.
* ஜதிஸ்வரத்திற்கு உதாரணங்கள்.

ஸ்வரஜதி
* ஸ்வரஜதியின் இலட்சணம்.
* ஸ்வரஜதியை இயற்றிய மகான்கள்.
* ஸ்வரஜதிக்கு உதாரணங்கள்.

(10 நிமிடம்)

படி 4.6.2

- மாணவரை மூன்று குழுக்களாகப் பிரித்துச் செயற்பத்திரங்களை இணைப்புடன் வழங்கிச் செயற்பாட்டில் ஈடுபடச் செய்க.
- அறிவுறுத்தலுக்கேற்ப செயற்பாட்டில் ஈடுபடுகின்றனரா என்பதை உறுதிப்படுத்துக.

படி 4.6.3

- ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குக.
- ஏனைய குழுக்கள் இதனை அவதானித்துக் கருத்துக்களைக் கூற இடமளிக்க.
- குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்க.

**கீதம்**

- உருப்படிகளில் மிகவும் எளிதானது ஒரேகாலத்தில் அமைந்திருக்கும்.
- அப்பியாச கானத்தைச் சேர்ந்த உருப்படி.
- பல்லவி அனுபல்லவி சரணம் என்ற அங்க வித்தியாசங்கள் கீதங்களில் இல்லை.
- சங்கதிகளும் கடினமான வக்ரப் பிரயோகங்கள் கீதங்களில் வரமாட்டா.
- கீதத்தின் சாகித்தியத்தின் இடையே வரும் அஇய, திஇய, வஇய போன்ற சொற்கள் கீத அலங்காரச் சொற்கள் என்றும் மாத்ருகா பதங்கள் என்றும் அழைக்கப்படும்.
- கீதத்தை ஆரம்ப முதல் முடிவு வரை தொடர்ச்சியாகப் பாட வேண்டும்.
- தமிழ், தெலுங்கு, கன்னடம் வடமொழி ஆகிய மொழிகளில் கீதங்கள் இயற்றப்பட்டுள்ளன.
- கீதம் சஞ்சாரி கீதம், இலட்சண கீதம் என இரு வகைப்படும்.
- சஞ்சாரி கீதத்தின் சாகித்தியம் பகவத் ஸ்தோத்திரமா கவோ, வித்வான்களை ஆதரித்த பிரபுக்களைப் பற்றியதாகவோ இருக்கும்.
- இலட்சண கீதத்தின் சாகித்தியமானது, கீதம் எந்த இராகத்தில் அமைந்திருக்கிறதோ அந்த ராகத்தின் லட்சணத்தை சாகித்தியத்தின் மூலமாக விளக்கிக் காட்டும்.

* இலட்சண கீதங்களின் வாயிலாக ஆதிகாலத்தில் வழக்கத்தில் இருந்த இராகங்களின் லட்சணங்களை அறிய முடியும்.

- ஜனக ராகத்தில் அமைந்த இலட்சண கீதங்கள் இராகாங்க இராகலட்சண கீதங்கள் என்றழைக்கப்படும்.

- சஞ்சாரி கீதங்களை இயற்றிய சில மகான்கள்
  புரந்தரதாஸர், தஞ்சை K.பொன்னையாபிள்ளை
  பைடால குருமூர்த்திசாஸ்திரிகள், பெரிய சாமித்தூரன்.

- இலட்சண கீதங்களை இயற்றிய சில மகான்கள் பைடால குருமூர்த்தி சாஸ்திரிகள், வேங்கடமகி கோவிந்த தீட்சிதர், இராமாமாத்தியர்.

- சஞ்சார கீதம் உ+ம் :- கணநாதா,வரவீணா,ஏழுமலைமேல்.

- இலட்சண கீதம் உ+ம் - முகாரி ராகம், பிலகரிராகம்
  ஆரபிப் பண்ணின்

**ஜதிஸ்வரம்**

- ஜதிக் கோர்வைகளைக் கொண்ட மெட்டுக்களால் அமைக்கப்பட்டமையால் இவ்வுருப்படி ஜதிஸ்வரம் எனப்படும்.

- தாதுவின் அமைப்பில் ஸ்வரஜதியை ஒத்திருக்கும் இதற்கு சாகித்தியம் கிடையாது.

- ஸ்வர ரூபமாகப் பாடப்படுவதால் ஸ்வரபல்லவி என்றழைக் கப்படும்.

- பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற அங்க வித்தியாசங்களுண்டு. சில ஜதிஸ்வரங்கள் அனுபல்லவி இல்லாமலும் இருக்கும்.

- ஒன்றிற்கு மேற்பட்ட சரணங்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறு தாதுக்களில் அமைந்திருக்கும்.

- நாட்டியக் கச்சேரியில் இரண்டாவது அம்சமாக விளங்குகிறது.

- இராகமாலிகையாக அமைந்த ஜதிஸ்வரங்களும் உள்ளன.

- ஜதிஸ்வரம் இயற்றிய மகான்கள்
  ஸ்வாதி திருநாள் மஹாராஜா.
  தஞ்சை K. பொன்னையாபிள்ளை.

- ஜதிஸ்வரங்களுக்கு சில உதாரணம்
  ஸா, ரி காபா - பிலகரி
  ஸா; நீ தா பா - கல்யாணி
  ஸா, ரீஸதா - ஸாவேரி

**ஸ்வரஜதி** :

- பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற அங்க வித்தியாசங்கள் உண்டு.
- ஒன்றிற்கு மேற்பட்ட சரணங்கள் கொண்ட உருப்படிகளில் இதுவும் ஒன்று. சரணங்கள் வித்தியாசமான தாதுக்களில் அமைந்திருக்கும்.
- சாகித்தியம் பகவத்ஸ்தோத்திரமாகவாவது, வீரர்களைப் பற்றியாவது இருக்கும்.
- அப்பியாச கானத்தைச் சேர்ந்த உருப்படியாயினும் சியாமாசாஸ்திரிகளின் ஸ்வரஜதிகள் சபா கானத்திற்கும் ஏற்றவை.
- ஸ்வரஜதிகளைச் செய்த சில வாக்கேயக்காரர்கள் சியாமாசாஸ்திரி, ஸ்வாதிதிருநாள்மகாராஜா, தஞ்சை K. பொன்னையாபிள்ளை, சோபநாத்ரி.
- ஸ்வரஜதி சில உதாரணங்கள்

| | | |
|---|---|---|
| ராவேமேமகுவ | - | ஆனந்தபைரவி |
| சாம்பசிவாயனவே | - | கமாஸ் |
| நீ அருளாயோ | - | பைரவி |

(15 நிமிடம்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்** :

- கீதம், ஜதிஸ்வரம், ஸ்வரஜதி ஆகிய இசை உருப்படிகளை வேறுபடுத்தி இனம் காண்பர்.
- இவ்வுருப்படிகளின் அமைப்பைக் கூறுவர்.
- இவ்வுருப்படிகளைப் பாடும் முறையைக் குறிப்பிடுவர்.
- இவ்வுருப்படி வகைக்கு உதாரணங்களைக் குறிப்பிடுவர்.
- இவ்வுருப்படி வகைகளை இயற்றிய வாக்கேயகாரர்களைக் குறிப்பிடுவர்.

## செயற்பத்திரம் 4.6.2.1

குழு - 01

கீதத்தின் இலட்சணத்தை விளக்கி எழுதுக..

குழு - 02

ஜதிஸ்வரத்தின் இலட்சணத்தை விளக்கி எழுதுக.

குழு - 03

ஸ்வரஜதியின் இலட்சணத்தை விளக்கி எழுதுக.

# உருப்படிகளின் இலட்சணம்
# கீதம்

பொதுவாக கீதம் என்ற சொல்லுக்குப் பாட்டு என்பது பொருள். ஆனால் தற்போது கர்நாடக இசையில் கீதம் என்பது இசை உருப்படிகளில் மிகவும் இலகுவான ஒரு வகையைக் குறிக்கும். கீதம் அப்பியாச கானத்தைச் சேர்ந்த உருப்படியாகும். சங்கீத அப்பியாச முறையில் அலங்காரத்திற்குப் பின்னர் கீதங்கள் கற்பிக்கப்படும். இசை சாகித்தியம் என்னும் இரண்டின் சேர்க்கையே கீதமெனப் கருதப்படுகிறது.

உருப்படிகளில் மிகவும் எளிதானது கீதம். கீதங்கள் ஒரே காலத்தில் அமைந்திருக்கும்.

இராகத்தின் களையைக் காட்டும் சஞ்சாரக் கிரமங்கள் கீதத்தில் நன்கு விளக்கிக் காட்டப்பட்டிருக்கும்.

பல்லவி, அனுபல்லவி, சரணம் என்னும் அங்க வித்தியாசங்கள் கீதங்களில் இல்லை.

சங்கதிகளும் கடினமான வக்ரப்பிரயோகங்களும் கீதங்களில் வரமாட்டா. ஸ்வரத்தின் போக்கு ஒரே சீராய் இருக்கும்.

கீதங்களின் சாகித்தியத்தின் இடையே அஇய, திஇய, வஇய போன்ற சொற்களைக் காணலாம். இவற்றிற்கு மாத்ருகா பதங்கள் என்றும், கீத அலங்காரச் சொற்கள் என்றும் பெயர்.

கீதத்தை ஆரம்பம் முதல் முடிவு வரை தொடர்ச்சியாகப் பாட வேண்டும்.

தமிழிலும் தெலுங்கிலும் கன்னடத்திலும் வடமொழியிலும் கீதங்கள் இயற்றப்பட்டுள்ளன.

கர்த்தா இராகத்திலாவது, ஜன்ய ராகத்திலாவது சுலபமான மெட்டில், ஆதி, ரூபகம் போன்ற சுலபமான தாளங்களில் கீதங்கள் அமைந்திருக்கும்.

## கீதத்தின் வகைகள்

**கீ**தங்கள் இரு வகைப்படும் அவையாவன
1. சஞ்சாரி கீதம்
2. இலட்சண கீதம்

சஞ்சாரி கீதத்தை சாமான்ய கீதம் என்றும், சாதாரண கீதம் என்றும், லஷ்ய கீதம் என்றும் அழைப்பர். சஞ்சாரி கீதத்தின் சாகித்தியம் பகவத்ஸ்தோத்திரமாகவோ, வித்துவான்களை ஆதரித்த பிரபுக்களைப் பற்றியதாகவோ இருக்கும்.

சஞ்சாரி கீதங்களை இயற்றிய சில மகான்கள்

1. புரந்தரதாஸர்
2. தஞ்சை K.பொன்னையா பிள்ளை
3. பைடால குருமூர்த்தி சாஸ்திரிகள்
4. பெரிய சாமித் தூரன்

இலட்சண கீதத்தின் சாகித்தியமானது, கீதம் எந்த இராகத்தில் அமைந்திருக்கிறதோ அதே ராகத்தின் லட்சணத்தைத் சாகித்தியத்தின் மூலமாக விளக்கிக் காட்டும்.

இலட்சண கீதங்களின் வாயிலாக ஆதிகாலத்தில் வழக்கத்திலிருந்த இராகங்களின் லட்சணங்களை அறியக்கூடியதாக இருக்கிறது.

இலட்சண கீதங்களில் ஜனராகங்களில் அமைந்த இலட்சண கீதம், ஜன்ய இராகத்திலமைந்த இலட்சண கீதம் என இரு பிரிவுகள் உண்டு. ஜனக ராகத்திலமைந்த இலட்சண கீதங்கள் "இராகாங்க இராக லட்சண கீதங்கள்" என அழைக்கப்படும்.

*இலட்சண கீதங்களை இயற்றிய சில மகான்கள்*

1. பைடால குருமூர்த்தி சாஸ்திரிகள்
2. வேங்கடமகி
3. கோவிந்த தீட்சிதர்
4. இராமாமாத்தியர்

சஞ்சாரி கீதத்திற்கு உதாரணம்

| | | |
|---|---|---|
| கணநாதா | - | மாயாமாளவகௌளை |
| வரவீணா | - | மோகனம் |
| ஏழுமலை மேல் | - | சங்கராபரணம் |
| மந்தரதரரே | - | காம்போதி |
| வாசரவணனே | - | ஹிரிகாம்போதி |

இலட்சண கீதத்திற்கு உதாரணம்

| | | |
|---|---|---|
| முகாரி ராகம் | - | முகாரி |
| பிலகரி ராகம் | - | பிலகரி |
| மாயாமாளவகௌளை | - | சங்கராபரணம் |
| ஆரபிப் பண்ணின் | - | ஆரபி |
| ரேவதி ராகம் | - | ரேவதி |

## ஜதிஸ்வரம்

ஜதிக் கோர்வைகளைக் கொண்ட மெட்டுக்களால் அமைக்கப்பட்டமையால் இவ்வுருப்படி ஜதிஸ்வரம் எனப்படுகிறது. ஜதிஸ்வரம் தாதுவின் அமைப்பில் ஸ்வரஜதியை ஒத்திருக்கும். இதற்கு சாகித்தியம் கிடையாது. ஸ்வரரூபமாகப் பாடப்படுவதால் ஸ்வரபல்லவி என்றும் அழைக்கப்படும்.

ஜதிஸ்வரத்திற்குப் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்னும் அங்க வித்தியாசங்களுண்டு. சில ஜதிஸ்வரங்கள் அனுபல்லவி இல்லாமலும் இருக்கும்.

3-5 வரை சரணங்கள் இதில் இருக்கும். சரணங்கள் ஒவ்வொன்றும் வித்தியாசமான தாதுக்களில் அமைந்திருக்கும்.

இவ்வுருப்படி நாட்டியத்திற்கு உகந்தது. நாட்டியக் கச்சேரியில் இரண்டாவது அம்சமாக விளங்குகிறது.

சில ஜதிஸ்வரங்கள் இராகமாலிகையாகவும் அமைந்துள்ளன.

ஜதிஸ்வரங்கள் சில சௌககாலத்திலும், சில மத்திம காலத்திலும் அமைந்துள்ளன.

ஜதிஸ்வரங்களைக் கற்பதனால் மாணவர்களின் ஸ்வர, லய, ஞானம் விருத்தியடைகிறது. அழகிய ஸ்வரக் கோர்வைகளினால் மனோதர்மத் திறமை விருத்தியடைகிறது. பாடுபவர்களோடு இசைக் கருவிகளைக் கற்கும் அனைவரும் இப்பயனைப் பெறுவர்.

* ஜதிஸ்வரத்தை இயற்றிய மகான்கள்
  - ஸ்வாதித் திருநாள் மகாராஜா
  - தஞ்சை K.பொன்னையா பிள்ளை

ஜதிஸ்வரங்களுக்கு உதாரணம்

| | | |
|---|---|---|
| ஸா; ரிகாபா | - | பிலகரி |
| ஸ்ா; நீதாபா | - | கல்யாணி |
| ஸ்ா; ரீஸதா | - | ஸாவேரி |
| ஸ்ா; ஸ்நிதபாம | - | சரஸ்வதி |
| ஸ்ர்; நிஸ்ரிஸ்ா | - | இராகமாலிகை |

## ஸ்வரஜதி

ஸ்வரஜதிக்குப் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற அங்க வித்தியாசங்களுண்டு. பல சரணங்களையுடைய உருப்படிகளில் இதுவும் ஒன்று. சரணங்கள் வித்தியாசமான தாதுக்களில் அமைந்திருக்கும். சில ஸ்வரஜதிகளில் அனுபல்லவி இல்லாமலும் இருக்கும். சாகித்தியம் பகவத் ஸ்தோத்திரமாகமாவது, சிருங்கார விஷயமாகமாவது, வீரர்களைப் பற்றியாவது, சங்கீத வித்துவான்களை ஆதரித்த பிரபுக்களைப் பற்றியாவது இருக்கும். ஸ்வரஜதிகள் பொதுவாக அப்பியாசகானத்தைச் சேர்ந்த உருப்படிகளான போதிலும், சியாமா சாஸ்திரிகளின் (தோடி, பைரவி, யதுகுலகாம்போதி இராகங்களில் அமைந்துள்ளன) ஸ்வரஜதிகள் சபாகானத்திற்கும் உகந்தவை. நாட்டியத்திற்காக ஏற்பட்ட ஸ்வரஜதிகளில் ஆங்காங்கு ஜதிகள் காணப்படும். இதற்கு உதாரணம் "ஏமாயலாடிரா" என்னும் ஹுசேனி இராக ஸ்வரஜதி.

ஸ்வரஜதிகளைச் செய்த சில வாக்கேயகாரர்கள் :-

சியாமாசாஸ்திரிகள், சோபானாத்திரி, ஸ்வாதிதிருநாள்மஹாராஜா, மெரட்ரூர் வெங்கடராம சாஸ்திரிகள், வாலஜாபேட்டை கிருஷ்ணஸ்வாமி பாகவதர், பொன்னையா, சின்னி கிருஷ்ணதாஸர், ஸ்வரஜதிக்கு உதாரணங்களாவன.

| | | |
|---|---|---|
| * ராவேமேமகுவ | - | ஆனந்தபைரவி |
| * சாம்பசிவாயனவே | - | கமாஸ் |
| * காமாஷி நீபத | - | யதுகுல காம்போதி |
| * ராவேஹிமகிரிகுமாரி | - | தோடி |

தேர்ச்சி 5.0 : கர்நாடக இசையின் வளர்ச்சிக்கு வாக்கேயகாரர்கள் ஆற்றிய பங்களிப்பினை மதிப்பிடுவார்.

தேர்ச்சி மட்டம் 5.1 : வாக்கேயகாரர்களின் வாழ்க்கை வரலாற்றையும், இசைத்தொண்டினையும் மதிப்பிடுவார்.

செயற்பாடு 5.1.2 : முத்துத்தாண்டவரின் வாழ்க்கை வரலாற்றையும் இசைத்தொண்டினையும் அறிந்து கொள்வோம்.

நேரம் : 40 நிமிடம் (01 பாடவேளை)

தர உள்ளீடு : முத்துத்தாண்டவரின் படம், இவரது உருப்படிகள் அடங்கிய ஒலிப்பதிவு நாடா, ஒலிப்பதிவுக் கருவி, சுருதிப்பெட்டி, செயற்பத்திரம் 5.1.2.2

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :**

படி 5.1.1 :

- முத்துத்தாண்டவரின் படத்தைக் காட்சிப்படுத்தி இவரது உருப்படிகள் அடங்கிய ஒலிப்பதிவு நாடாவை ஒலிக்கச் செய்தோ ஆசிரியர் பாடிக்காட்டியோ வாக்கேயகாரரை இனங்காண வழிப்படுத்துக.
- முத்துத்தாண்டவர் தொடர்பான பின்வரும் விடயங்கள் வலியுறுத்தப்படும் வகையில் கலந்துரையாடுக.

> - வாழ்க்கைக்காலம்
> - பிறந்த இடம்
> - பெற்றோர் இட்ட பெயர்
> - சிறப்புப் பெயர்
> - அருள் கிடைத்த சந்தர்ப்பம் / வாழ்வில் ஏற்பட்ட திருப்பம்.
> - இசைப்பணி
> - இயற்றிய உருப்படிகள்

(10 நிமிடம்)

படி 5.1.2

- மாணவர்களை சிறு குழுக்களாகப் பிரித்துச் செயற்பத்திரத்தை இணைப்புடன் வழங்குக.
- அறிவுறுத்தலுக்கேற்ப செயற்படுகிறார்களா என்பதை உறுதிப் படுத்துக.

(15 நிமிடம்)

படி 5.1.3

- ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குக.
- ஏனைய குழுக்களும் அவதானித்து கருத்துக்களைக் கூற இடமளிக்க.

- குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடலொன்றை மேற்கொள்க. பின்வரும் விடயங்களை வலியுறுத்துக.
- கலந்துரையாடலில் கீழ்வரும் விடயங்களை மீளவும் வலியுறுத்துக.

- வாழ்க்கைக்காலம் - 17 நூற்றாண்டு
- பிறந்த இடம் - சீர்காழி
  பெற்றோர் இட்ட பெயர் - தாண்டவன்
  சிறப்புப் பெயர் - முத்துதாண்டவர்

- குழந்தைப்பருவம் முதல் ஈசனைப் பாடும் இசைப்பாடல்களைப் பாடி அபிநயித்து காட்டும் ஆடல்களில் லயித்துக் காலத்தைக் கழித்தார்.

- அவருக்கு ஏற்பட்ட சரும நோய் காரணமாகக் குலத் தொழிலை மேற்கொள்ள முடியாமல் போயிற்று. ஆலயத்தில் சிவபாக்கியம் எனும் கணிகையின் ஆடல், பாடல்கள் அவர் மனதைக் கவர்ந்தன.

- கணிகை மாதுவின் ஆடல், பாடல்களினால் கவரப்பட்டுக் குடும்பத்தவரால் வெறுத்து ஒதுக்கப்பட்டார்.

- ஆலயத்திலேயே தங்கியிருந்து யாரும் இரக்கத்தால் இட்ட உணவை உண்டு காலம் கழித்து வந்தார்.

- ஆலயத்தில் படுத்துறங்கையில் தேவியின் அனுக்ரகம் பெற்றுத் தில்லையில் எழுந்தருளியிருக்கும் தாண்டவனைப் புகழ்ந்து பாடினார்.

- இன்னிசை பாடும்படி பணிக்க "நான் பாடுவதை அறியேன்" என்று கூற, அம்மையார் நடராஜப் பெருமான் திருமுன் வழிபாடு செய்யும் போது அடியார் கூட்டத்தில் இருந்து எச்சொல் முதலாக வெளிப்படுகிறதோ அச்சொல்லையே வைத்துப் பாட இறைவன் அருள்வார் எனத் திருவாய் மலர்ந்தருளினார்.

- இறைவியே திருவாய் மலர்ந்தருளினார் என்ற செய்தி கேள்வியுற்ற மக்கள் வியப்புற்று அன்று முதல் அவரை "முத்துத்தாண்டவர்" என்று அழைத்தனர்.
- முத்துத்தாண்டவர் சிதம்பரம் சென்று நடராசப் பெருமானைத் தொழுது நின்றார். அச்சமயம் அடியார் கூட்டத்திலிருந்து அசரீரியாக வெளிப்பட்ட தொடரில் "பூலோக கைலாச கிரி சிதம்பரமல்லால் புவனத்தில் வேறும் உண்டோ" என்ற கீத்தனையை பவப்பிரியா இராகத்தில் மிஸ்ர ஜம்பை தாளத்திலும் இறைவன் திருவருளால் பாடி முடித்தார்.
- கீர்த்தனைகளைப் பாடிமுடித்ததும் தனக்கு முன் 5 பொற்காசுகள் இருப்பதை அறிந்து முத்துத்தாண்டவர் மிக்க மகிழ்ச்சியடைந்தார் அன்றே அவரது உடற்பிணியும் நீங்கியது.
- இறைவனிடம் இருந்து சொல் வெளிப்படாமையால் தன் கடமை தவறாது அப்பேச்சின்மையே முதலாகக் கொண்டு பாடியது "பேசாதே நெஞ்சமே" - சூரியகாந்தம்
  - மிஸ்ரஜம்பை

* சீர்காழியில் இருந்து சிதம்பரத்துக்கு வரும் வழியில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டபோது தன் வழிபாட்டுக்கு இடையூறு நேர்ந்ததை எண்ணி பாடியது "காணாமல் வீணிலே காலம் கழித்தோமே" தன்யாசி இராகம், மிஸ்ரசாபுதாளம்.

* பாடல்பாடிய பின் வெள்ளப்பெருக்கு தணிந்து வழிபட வழி கொடுத்தமையால் ஆற்றைக் கடந்து கரையேறி நின்று பாடியது "தரிசனம் செய்வேனே" வசந்தா - ஆதி.
சிதம்பரம் சென்று இறைவன் திருமுன் கண்டபின்
கண்குளிர்ந்தேன் - மலயமாருதம் - ரூபகம்

* சீர்காழியிலிருந்து சிதம்பரத்திற்கு வரும் வழியில் பாம்பொன்று தீண்டியது சிறிதும் உள்ளங் கலங்காமல்.
"அருமருந்தொரு தனிமருந்து அம்பலத்தில் கண்டேன்" என்ற பாடலைப் பாடி விஷம் நீங்கப் பெற்றார்.

* பல கீர்த்தனைகள், பதங்களை நடராசப் பெருமாள் மீது பாடியுள்ளார் இறுதியாக ஆவணித்திங்கள் பூச நன்னாளில் இறைவன் திருமுன் நின்று
"மாணிக்கவாசகர் பேறெனக்குத் தரவல்லாயோ" அறியேன்-கோகிலப்பிரியா -ரூபகம் என்ற பாடலைப் பாடி முடித்தார் அப்பொழுது சிதம்பரத்தில் இருந்து பேரொளி ஒன்று வெளிப்பட்டது. அப்பேரொளிப் பிழம்பில் முத்துத் தாண்டவர் இரண்டறக் கலந்தார்.

* இசைப் பணி-
இயற்றிய உருப்படிகள்
கீர்த்தனை-
    • பூலோக கைலாசகிரி - பவப்பிரியா - மிஸ்ர ஜம்பை
    • காணாமல் வீணிலே காலம் கழித்தோமே
      தன்யாசி - மிஸ்ரசாபு
    • தரிசனம் செய் வேனே - வசந்தா - ஆதி
    • பேசாதே நெஞ்சமே - சூரியகாந்தம் - மிஸ்ரஜம்பை
    • அருமருந்தொரு தனிமருந்து
    • மாணிக்கவாசகர் பேறெனக்கு தரவல்லாயோ
      கோகிலப்பிரியா - ரூபகம்
    • பதம் - தெருவில் வாரானோ - கமாஸ் - ரூபகம்
    • பல நூற்றுக்கணக்கான பாடல்களை இயற்றியுள்ளார்.
    • இவரது உருப்படிகள் பேரின்பப் பதங்கள் எனச் சிறப்பிக்கப்படுகின்றன.

(15 நிமிடம்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

* முத்துத்தாண்டவரின் வாழ்க்கை காலம் பிறந்த இடம் பெற்றோர் அவருக்கிட்ட பெயர் என்பவற்றைக் குறிப்பிடுவர்.

* இவரது இசைப்பணி பற்றி விளக்குவர்.

* இவரின் வரலாறு இசைப்பணி, என்பவற்றைக் கற்பதன் மூலம் இசைக்கலைஞர்களின் பங்களிப்பினை மதிப்பீடு செய்து மதிக்கும் மனப்பாங்கை ஏற்றுக் கொள்வர்.

## செயற்பத்திரம் 5.1.2.2

* முத்துத்தாண்டவரின் வாழ்க்கை வரலாற்றில் பின்வரும் விடயங்களைக் குறிப்பிடுக.
    - வாழ்க்கைக் காலம்
    - பிறந்த இடம்
    - பெற்றோர் இட்ட பெயர்
    - சிறப்புப்பெயர்
    - வாழ்க்கையில் திருப்பம் ஏற்படக் காரணமாய் அமைந்த சம்பவம்.

* இவரது இசைப்பணி பற்றி விளக்குக.

# வாக்கேயகாரர் சரித்திரம்
# முத்துத்தாண்டவர்

## இளமைக்காலம்

இவர் 17ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர். பெற்றோரால் இவருக்கு இடப்பட்ட பெயர் “தாண்டவன்” என்பதாகும். சீர்காழியில் இசைக்கலையே தம் குலத் தொழிலாகக் கொண்ட இசைவாணர் மரபிலே தோன்றியவர். குழந்தைப் பருவம் முதல் ஈசனைப்பாடும் இசைப் பாடல்களிலும் அவற்றை அபிநயத்தில் காட்டும் ஆடல்களிலும் லயித்துக் காலத்தைக் கழித்தார்.

அவருக்கு ஏற்பட்டிருந்த சரும நோய் காரணமாகக் குலத் தொழிலை மேற்கொள்ள அவரால் முடியாமற் போயிற்று. அக்காலத்திலே ஆலயத்தில் நாட்டியப்பணி புரிந்து வந்த சிவபாக்கியம் என்னுங்கணிகையின் ஆடல், பாடல்கள், தாண்டவனின் மனதைக் கவர்ந்தன. ஆலயத்திலே அவருடைய ஆடல், பாடல்களை இரசிக்க ஆரம்பித்தார். இச்செய்தி எங்கும் பரவியது. பெற்றோர் அப்பெண்ணின் தொடர்பை நிறுத்தும்படி தாண்டவனிடம் வேண்டினர். அவரோ தாய் தந்தையர் சொல்லை ஏற்க மறுத்தார். இதன் பயனாக குடும்பத்தவர்களால் வெறுத்து ஒதுக்கப்பட்டார். ஆகவே ஆலயத்திலேயே தங்கியிருந்து யாரும் இரக்கத்தால் இட்ட உணவை உண்டு காலம் கழித்து வந்தார்.

## எதிர்பாராத சம்பவமும் புதுவாழ்வும்

ஒரு நாள் பசியால் களைத்து ஆலயத்தினுள் படுத்துறங்குகையிலே நள்ளிரவு நேரம் சென்றபின் விழித்தெழுந்த தாண்டவர் உடற்பிணியாலும், பசிப்பிணியாலும் மிகத் துயர் அடைந்தவராய் அம்மையப்பரின் திருவடிகளை நினைந்து தொழுந்தார். அந்த நேரத்தில் தேவி கோயில் குருக்களின் 10வயது மகளைப் போன்ற உருவில் அங்கு தோன்றி, அவருடைய பசியைத் தீர்க்க உணவளித்தார். தாண்டவர் அந்த அம்மையிடம் தனது உடற் பிணியையும் ஒழிக்கும்படி வேண்டவே இறைவியார் அவரைத் தில்லையம்பதிக்குச் சென்று நடராசப் பெருமானை இன்னிசையால் வழிபடும்படி பணித்தார். அதைக் கேட்ட தாண்டவர் “நான் பாடும் வகை அறியேனே” என்று கூற, அம்மையார் நீ கூத்தப் பெருமான் திருமுன் வழிபாடு செய்யும் போது அன்பர் கூட்டத்திலிருந்து எச் சொல் முதன்முதலாக வெளிப்படுகின்றதோ அச்சொல்லையே முதலாக வைத்துப் பாடுக, பாடும் ஆற்றலை இறைவன் அருள்வார் என்று திருவாய் மலர்ந்தருளி மறைந்து விட்டார். அப்போதுதான் தாண்டவருக்கு உண்மை தெரிய வந்தது. தன்னிடம் அவ்வளவு நேரம் அளவளாவிக் கொண்டிருந்தது குருக்களின் மகள் அல்லள். இறைவியே என்று உள்ளம் தெளிந்தார். பொழுது விடிந்ததும். அவருக்கு நிகழ்ந்த அனைத்தையும் கேள்வியுற்ற மக்கள் வியப்புற்று அன்று முதல் அவரை “முத்துத்தாண்டவர்” என்று அழைக்க ஆரம்பித்தனர்.

முத்துத்தாண்டவர் சிதம்பரம் சென்று நடராசப் பெருமானைத் தொழுது நின்றார். அச்சமயம் அடியார் கூட்டத்திலிருந்து பூலோக கயிலாச கிரி சிதம்பரம் என்னும் தொடர் மொழி வெளிப்படவே அத்தொடரையே முதலாகக் கொண்டு “பூலோக கயிலாசகிரி சிதம்பரமல்லால் புவனத்தில் வேறும் உண்டோ” (பவப்பிரியா - மிஸ்ரஜம்பை) என்ற கீர்த்தனையை இறைவன் திருவருளால் பாடி முடித்தார். பாடி முடித்ததும் தனக்கு முன் ஐந்து பொற் காசுகள் இருப்பதை அறிந்த முத்துத்தாண்டவர் மிக்க மகிழ்ச்சியடைந்தார். அன்றே அவரது உடற் பிணியும் நீங்கியது.

ஒரு நாள் இறையடியாரிடமிருந்து யாதொரு சொல்லும் வெளிப்படவில்லை. இருப்பினும் தன் கடமையிலிருந்து தவற விரும்பாதவராய் அப்பேச்சின்மையே முதலாகக் கொண்டு “பேசாதே நெஞ்சமே” (சூர்ய காந்தம் - மிஸ்ரஜம்பை) என்று ஒரு பாடல் பாடி முடித்துப் பரிசும் பெற்றார்.

பின் ஒரு நாள் சீர்காழியிலிருந்து சிதம்பரத்துக்கு வரும் பொழுது கொள்ளிடம், வெள்ளப் பெருக்கெடுத்து ஓடியது. தன் வழிபாட்டுக்கு இடையூறு நேர்ந்ததை எண்ணி கலக்கமுற்று அக்கொள்ளிடக் கரையிலேயே நின்று கொண்டு “காணாமல் வீணிலே காலம் கழித்தோமே” (தன்யாசி - மிஸ்ரசாபு) என்று பாடத் தொடங்கினார். பாடல் முடிந்தவுடன் வெள்ளப்பெருக்கு குறைந்து, அவருக்கு வழி கொடுத்தது. ஆற்றைக் கடந்து கரையேறிக் களிப்பு நிரம்ப “தரிசனம் செய்வேனே” (வசந்தா - ஆதி) என்று பாடினார். பின் சிதம்பரம் அடைந்து இறைவன் திருமுன் “கண்ட பின் கண் குளிர்ந்தேன்” (மலையமாருதம் - ரூபகம்) என்னும் பாடலைப் பாடினார்.

சில நாட்கள் சென்ற பின் ஒரு நாள் சீர்காழியிலிருந்து சிதம்பரத்துக்கு வரும் இடை வழியில் அவரைப் பாம்பொன்று தீண்டியது. சிறிதும் உள்ளம் கலங்காமல் "அருமருந்தொரு தனிமருந்திது அம்பலத்தில் கண்டேன்" என்னும் பாலைப் பாடி விடம் நீங்கப் பெற்றார்.

இவ்வாறு கீர்த்தனங்களும் பதங்களுமாக நடராசப்பெருமான் மீது பற்பல இசைப்பாடல்கள் பாடியும், அருஞ்செயல்கள் பல நிகழ்த்தியும் இறுதியில் ஆவணித்திங்கள் பூச நன்னாளில் இறைவன் திருமுன் நின்று "மாணிக்கவாசகர் பேறெனக்குத் தரவல்லாயோ அறியேன்" (கோகிலப்பிரியா - ரூபகம்) என்னும் மணியான பாடலைப்பாடி முடித்தார். அந்தவேளையில் சிதம்பரத்திலிருந்து பேரொளியொன்று வெளிப்பட்டது. அந்தப் பேரொளிப் பிழம்பில் முத்துத் தாண்டவர் இரண்டறக் கலந்தார்.

## இவரது பாடற் சிறப்பு

இவர் இயற்றிய கீர்த்தனங்கள் அறுபது, பதங்கள் இருபத்தைந்தாகும். இவற்றைத் தவிர இன்னும் பல நூற்றுக்கணக்கான பாடல்களை இவர் இயற்றியுள்ளதாகவும் குறிப்புக்கள் கிடைத்துள்ளன. "தெருவில் வாரனோ" என்ற கமாஸ் இராகப்பதம் (ரூபக தாளம்) முத்துத்தாண்டவர் இயற்றிய பாடல்களில் சிறந்ததொன்று. இவர் பாடல்கள் யாவும் கற்பவர் கேட்பவர் உள்ளங்ளில் சிவபக்தியை விளைவிப்பனவாகவும் சொற்சுவை, பொருட்சுவை, இசை நுணுக்கம், எதுகைமோனை முதலிய தொடை நயங்களைக் கொண்டனவாயும், பழைய வரலாறுகள், சைவசித்தாந்தக் கருத்துக்கள் நிரம்பியுள்ளனவாயும் விளங்குகின்றன. இவரது பாடல்கள் பேரின்பப் பதங்கள் எனச் சிறப்பிக்கப்படுகின்றன.

தேர்ச்சி 5.0 : கர்நாடக இசையின் வளர்ச்சிக்கு வாக்கேயகாரர்கள் ஆற்றிய பங்களிப்பினை மதிப்பிடுவார்.

தேர்ச்சி மட்டம் 5.1 : வாக்கேயகாரர்களின் வாழ்க்கை வரலாற்றையும், இசைத் தொண்டினையும் மதிப்பிடுவார்.

செயற்பாடு 5.1.1 : புரந்திர தாஸரின் வாழ்க்கை வரலாற்றையும் இசைத்தொண்டினையும் அறிந்து கொள்வோம்.

நேரம் : 40 நிமிடங்கள் (01 பாடவேளை)

தர உள்ளீடு : வாக்கேயகாரரின் படம், இவரின் உருப்படிகள் அடங்கிய ஒலிப்பதிவு நாடா, ஒலிப்பதிவுக் கருவி, செயற்பத்திரம் 5.1.2.1

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :**

படி 5.1.1

- புரந்தரதாஸரின் படத்தைக் காட்சிப்படுத்தி இவரின் உருப்படிகள் அடங்கிய ஒலிப்பதிவு நாடாமூலம் பாடல்களைக் கேட்கச் செய்வதன் மூலம் வாக்கேயகாரரை இனங்காண வழிப்படுத்துக.

- பின்வரும் விடயங்கள் தொடர்பாக மாணவர்களுடன் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்க.

**புரந்தரதாஸர்**

- வாழ்க்கைக்காலம்
- பிறந்த இடம்
- பெற்றோர் பெயர்
- சிறப்புப் பெயர்
- முத்திரை
- மூக்குத்திச் சம்பவம்
- இசைப்பணி
- இயற்றிய உருப்படிகள்
- பட்டங்கள்

(10 நிமிடம்)

படி 5.1.2 : மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தை இணைப்புடன் வழங்குக.

: அறிவுறுத்தலுக்கேற்ப செயற்பாட்டில் குழுக்களை ஈடுபடச் செய்க.

: ஒவ்வொரு குழுவும் சரியாகச் செயற்படுகிறார்களா என்பதை உறுதி செய்க.

(15 நிமிடம்)

படி 5.1.3

- ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குக.
- ஏனைய குழுக்களும் அவற்றை அவதானித்துக் கருத்துக்களைக் கூற இடமளிக்க.
- பின்வரும் விடயங்கள் மீளவும் வலியுறுத்தப்படும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்க.

| | | | |
|---|---|---|---|
| • வாழ்க்கைக்காலம் | - | 1484 - 1564 | |
| பிறந்த இடம் | - | புரந்தரகட | |
| பெற்றோர் பெயர் | - | தந்தை | - வரதப்பநாயகர் |
| | | தாய் | - கமலாம்பாள் |
| சிறப்புப் பெயர் | - | ஸ்ரீனிவாசன், சீனப்ப, நவகேஷிநாராயணன் | |
| மொழி | - | கன்னடம், சமஸ்கிருதம் | |

புரந்தரதாஸர் தனது 16வது வயதில் சரஸ்வதிபாய் எனும் பெண்ணை மணமுடித்து தன் 20வது வயதில் பெற்றோரை இழந்து தனது தந்தையாரின் தொழிலாகிய இரத்தினக்கல் வியாபாரத்தைச் செய்யும் போது அந்தணர் ஒருவர் தன் மகனின் உபநயனத்திற்காக தாஸரை அனுகி உதவி கேட்க அவர் அதை மறுத்தபோது அவருடைய மனைவியிடம் இரந்து அவர் தம் மூக்குத்தியைப் பெற்று அம்மூக்குத்தியைப் புரந்தரதாஸரிடம் விற்கக் கொண்டு சென்றபோது அவருக்கு சந்தேகம் வர சேவகனை அனுப்பியபோது மனைவி பயந்து இறைவனைத் தியானித்த வேளையில் மூக்குத்தி தனது மூக்கில் இருந்ததை உணர்ந்தார், உடனே அதைக் கழற்றி வேலையாளிடம் கொடுத்தனுப்பினார். இதையறிந்த தாஸரவர்கள் தன் மனைவியிடம் நடந்தவற்றை அறிந்தார். இறைவன் தன்னை யாசிக்க வந்தமையினால் தனக்கு ஞானோதயம் ஏற்பட்டமையையும் உணர்ந்து அவர் அடானா இராகத்தில் "மோஸ கோதனல்லோ" எனும் பதத்தைப் பாடினார். இவ்வேளையில் சத்யதர்ம ஸ்வாமிகளின் அனுக்கிரகத்தைப் பெற்று "புரந்திரதாஸர்" எனும் பெயர் பெற்றார். இச்சம்பவம் அவருடைய வாழ்க்கையில் திருப்பத்தை ஏற்படுத்தி இசைப்பணியில் அவரைத் தொடர்ந்து ஈடுபட வைத்தமையை எமக்கு உணர்த்துகின்றது.

**இசைப்பணி:**

- இவர் ஆரம்ப இசைப்பயிற்சிக்கான ஸ்வராவளிகள், ஜண்டைவரிசைகள், கீதங்கள், அலங்காரங்கள், கீர்த்தனங்கள் என்பனவற்றை இயற்றியுள்ளார்.
- ஆரம்ப பயிற்சிக்கு ஏற்ற இராகம் மாயாமாளவகௌளை எனத் தெரிந்தெடுத்தவரும் இவரேயாவர். இவரது உருப்படிகள் கன்னடத்திலும், வடமொழியிலும் அமைந்துள்ளன.
- துருவம் மட்டியம், போன்ற சப்த தாளங்களும் இவருடைய காலத்திலேயே பிரசித்தி பெற்றன.
- தாய்மொழியிலே கீர்த்தனைகளைச் செய்த ஆதி இசைப்புல வர்களில் இவரும் ஒருவர்.
- இவர் இயற்றிய பதங்களின் தொகை 4,75,000 என்று இவர் இயற்றிய நாமாவளி என்ற உருப்படியில் தெரிய வருகிறது. தற்போது 8000 பதங்களே. வழக்கில் காணப்படுகின்றன.
- இனிய இசையிலும் எளிய வர்ண மெட்டுக்களிலும் அமைந்த இவ்வுருப்படிகளில் சொற்சுவை, பொருட்சுவை ஆகியவற்றுடன் பழமொழிகளையும் அழகிய உவமானங்களையும் காணலாம்.

- முத்திரை: இவரது முத்திரை புரந்திர விட்டல என்பதாகும்.

- இயற்றிய உருப்படிகள்
ஸ்வராவளிவரிசைகள், ஜண்டைவரிசைகள், அலங்காரங்கள், கீதங்கள்,பதங்கள், கீர்த்தனைகள் போன்றவற்றை இயற்றியுள்ளார்.
பட்டங்கள் : "சங்கீத பிதாமகர்"

(15 நிமிடம்)

**கணிப்பீட்டு, மதிப்பீட்டு நியதிகள் :**

- புரந்தரதாஸரின் வாழ்க்கைக் காலத்தைக் குறிப்பிடுவர்.
- இவரது முத்திரையைக் கூறுவர்.
- புரந்தரதாஸரின் இசைப்பணி பற்றி விளக்குவர்.
- இவரின் வரலாறு, இசைப்பணி என்பவற்றைக் கற்பதன் மூலம் இளங்கலைஞர்களின் பங்களிப்பினை மதிப்பீடு செய்து மதிக்கும் மனப்பாங்கை ஏற்றுக்கொள்வர்.

## செயற்பத்திரம் 5.1.2.1

- * புரந்தரதாஸரின் வாழ்க்கைக் காலத்தைக் கூறுக.
- * இவரது முத்திரையைக் குறிப்பிடுக.
- * இவரது இசைப்பணியை மதிப்பிடுக.

# வாக்கேயகாரர் சரித்திரம்
## புரந்தரதாஸர் (1484 - 1564)

இவர் 1484 ஆம் ஆண்டு கர்நாடக மாநிலத்திலே புரந்தரகட எனும் ஊரில் பிரபல செல்வந்தரான வரதப்பநாயகருக்கும், கமலாம்பாளுக்கும் மகனாகப் பிறந்தார். இவருக்கு பெற்றோர் சூட்டிய பெயர் ஸ்ரீனிவாசன் என்பதாகும். இவர் சீனப்ப எனவும் அழைக்கப்பட்டார்.

இவர் இளவயதினிலே கன்னடம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளையும், சங்கீதத்தையும் முறையாகப் பயின்று பாண்டித்தியம் பெற்றார். பதினாறு வயதில் இவருக்கு சரஸ்வதிபாய் என்ற பெண்ணை பெற்றோர் திருமணம் செய்து வைத்தனர். தமது 20 ஆவது வயதில் பெற்றோர்களை இழக்க நேரிட்டதால் தமது தந்தையாருடைய இரத்தினக்கல் வியாபாரத்தை தாம் ஏற்று மிகச் சிறப்புற நடாத்தி, செல்வத்தைப் பன்மடங்கு பெருக்கினார். செல்வந்தராக இருந்தமையால் இவர் "நவகோடி நாராயணன்" என்னும் பெயர் கொண்டு அழைக்கப்பட்டார். செல்வம் அதிகரிக்க அவர் மிகவும் கருமியாகவும், தான தருமம் செய்யும் சிந்தையற்றவராகவும், மிகவும் பகட்டான வாழ்வு வாழ்பவராகவும் திகழ்ந்தார்.

ஒருநாள் வயோதிப அந்தணர் ஒருவர் தன் மகனின் உபநயத்திற்காக புரந்தரதாஸரை அணுகினார். புரந்தரதாஸர் அந்தணருக்கு எதுவித உதவிகளையும் செய்யாது நாட்களைக் கடத்தி வந்தார். பொறுமையை இழந்த அந்தணர் புரந்தரதாஸரின் மனைவியிடம் சென்று இரந்தார். அந்தணரின் நிலையை அறிந்து அவர் தனது மிகவும் விலையுயர்ந்த மூக்குத்தியை அவருக்கு அளித்தார். அந்த அந்தணர் மூக்குத்தியை புரந்தரதாஸரிடமே விற்றுப்பணம் பெறச் சென்றார். புரந்தரதாஸர் அந்த மூக்குத்தியைப் பார்த்ததும் சந்தேகம் வரவே வேலையாள் ஒருவனிடம் மனைவியின் மூக்குத்தயைப் வாங்கி வரும்படி கூறி, மனைவியிடம் அனுப்பினார். சரஸ்வதிபாய் அச்செய்தி கேட்டு மிகவும் பயந்து கடவுளைத் தியானித்தார். அவ்போது அந்தணருக்குக் கொடுத்த மூக்குத்தயைப் போல இன்னுமொரு மூக்குத்தி தமது மூக்கில் இருப்பதை உணர்ந்தார். அதனைக் கழற்றி வேலையாளிடம் கொடுத்து அனுப்பினார். இரண்டு மூக்குத்திகளும் ஒரேமாதிரியாக இருப்பதை உணர்ந்த புரந்தரதாஸர் மனைவியிடம் சென்று உண்மையைக் கூறும்படி கேட்டார். மனைவியும் நடந்தவற்றைக் கூறினார். இறைவனே தன்னை யாசிக்க வந்துள்ளார் என்றதை உணர்ந்த புரந்தரதாஸருக்கு ஞானோதயம் ஏற்பட்டது. உடனே அவர் அடாணா இராகத்தில் "மோஸஹோதனலோ" என்னும் பதத்தைப் பாடினார்.

தனது 30 ஆவது வயதிலே ஞானோதயம் பெற்று வியாசராய சுவாமிகளிடம் உபதேசம் பெற்ற பின் சத்யதர்ம சுவாமிகளின் அனுக்கிரகத்தைப் பெற்று "புரந்தரதாஸர்" என்னும் பெயரைப் பெற்றுக் கொண்டார்.

இவர் ஒவ்வொரு நாளும் பக்திரசம் ததும்பும் பதங்களைப் பாடினார். சுலபமான மொழிநடையில் அமைந்துள்ள இவரது பதங்கள் யாவரும் அனுபவித்து பாடக் கூடியவையாக இருக்கின்றன.

புரந்தரதாஸர் "ஆதிகுரு" என்றும் " சங்கீத பிதாமகர்" என்றும் போற்றப்படுகிறார். ஆரம்ப இசைப் பயிற்சிக்கான ஸ்வராவளிகள், ஜண்டைவரிசைகள், அலங்காரங்கள், கீதங்கள் என்பவற்றை இயற்றியுள்ளார். ஆரம்பப் பயிற்சிக்கு எற்ற இராகம் மாயாமாளவகௌளை எனத் தேர்ந்தெடுத்தவரும் இவரேயாவார். இவரது உருப்படிகள் கன்னடத்திலும், வடமொழியிலும் அமைந்துள்ளன.

துருவம், மட்டியம் போன்ற சப்த தாளங்களும் இவருடைய காலத்திலேயே பிரசித்தி பெற்றன. தாய் மொழியின் கீர்த்தனைகளைச் செய்த ஆதி இசைப் புலவர்களில் இருவரும் ஒருவராவர். இலட்சக்கணக்கில் பாடல்களை இயற்றிய இசைஞானியும் இவரேயாவர். இவர் இயற்றிய பதங்களின் தொகை 4,75,000 என்று இவர் இயற்றிய வாசுதேவ நாமாவளி என்ற உருப்படியில் இருந்து தெரிய வருகிறது. தற்போது 8000 பதங்களே வழக்கில் காணப்படுகின்றன. மற்றையவை மறைந்து விட்டன. இவரது பதங்கள் தேவர் நாமாக்கள் என்றும், தாஸர்வாள் பதங்கள் என்றும் சிறப்பாக அழைக்கப்படுகின்றன.

தேர்ச்சி 6.0 : கர்நாடக இசையின் தோற்றம், வளர்ச்சி தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வார்.

தேர்ச்சி மட்டம் 6.1 : கர்நாடக இசையின் தோற்றம், வளர்ச்சி தொடர்பான விடயங்களை விபரிப்பார்.

செயற்பாடு 6.1.1 : சங்கீதக் கலையின் ஆரம்பம் பற்றி அறிந்து கொள்வோம்.

நேரம் : 40 நிமிடம் (01 பாடவேளை)

தர உள்ளீடு : வாத்தியக் கருவிகளுடனான சிற்பங்களின் படங்கள், ஆதிகால மனிதனின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் படங்கள், தொலைக்காட்சிப் பெட்டி, ஒளிநாடா, செயற்பத்திரம் 6.1.2.1

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :**

படி 6.1.1 :

- வாத்தியக் கருவிகளுடனான சிற்பங்களின் படங்கள், இசையோடு தொடர்பான ஆதிகால மனிதனின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் படங்களைக் காட்சிப்படுத்தி சம்பாஷனையை ஏற்படுத்துவதன் மூலம் அறிமுகம் செய்க.

- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் கலந்துரையாடல் ஒன்றை நிகழ்த்துக.

  - சங்கீதம் ஒரு புனிதமான கலை.
  - மனித நாகரிகம் அடையுமுன்னர் ஆதி மனிதன் ஓசைகளின் மூலம் உணர்வுகளை வெளிப்படுத்தினான்.
  - நாகரிகம் வளர வளர கலைகளும் வளர்ந்தன.
  - காதால் கேட்டு உணரப்படும் கலை சிரவண கலையாகும்.
  - வேதத்திலிருந்து சுத்த இசை பிறந்தது.
  - நிஸரி என்னும் மூன்று ஸ்வரங்களையும் அடிப்படையாகக் கொண்டு ஏழு ஸ்வரங்கள் பிறந்தன.
  - கீதம், வாத்தியம், நிருத்தியம் இவை மூன்றும் சேர்ந்தது சங்கீதம் எனப்பட்டது.
  - பிற்காலத்தில் கீதம், வாத்தியம் இரண்டும் சேர்ந்ததே சங்கீதம் எனக் கருதப்பட்டது. நிருத்தியக்கலை தனியாக வளர்ச்சியடைந்தது.

(10 நிமிடம்)

படி 6.1.2 :

- மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரிக்குக.
- ஒவ்வொரு குழுவுக்குமான செயற்பத்திரத்தினை இணைப்புடன் வழங்குக.
- ஒவ்வொரு குழுவினதும் செயற்பாட்டையும் உறுதிப்படுத்துக.

(15 நிமிடங்கள்)

படி 6.1.3 :
- ஒவ்வொரு குழுவும் தமது செயற்பாட்டை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குக.
- ஏனைய குழுக்களும் அதனை அவதானித்து கருத்துக் கூற இடமளிக்க.
- குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரை யாடலை நெறிப்படுத்துக.

- சங்கீதம் ஒரு புனிதமான கலையாகும்.
- மனிதன் நாகரிகம் அடையு முன்னரே இசை ஒரு தனிப்பாஷையாக விளங்கியது.
- மொழி மூலம் தனது உணர்ச்சிகளை வெளிப்படுத்த முடியாத காலத்தில் அதாவது சிந்து வெளி நாகரிகத்திற்கு முற்பட்ட காலத்தில் மனிதன் தனது உணர்ச்சிகளை ஓசை மூலம் வெளிப்படுத்தினான்.
- பறவைகள், மிருகங்கள் வெளிப்படுத்திய ஓசைகள் மனிதனுக்கு முன்னோடியாக அமைந்தன.
- மகிழ்ச்சியை வெளிப்படுத்த ஆரவாரித்தும் துன்பத்தின் போது ஓலமிட்டும், பயத்தை வெளிப்படுத்த இரைந்தும் மனிதன் தன் வாழ்க்கையை நடத்தினான்.
- இனிமையான ஓசையிலிருந்து பிறந்தவை எல்லாம் இசை யாகின.
- நாகரிகம் வளர வளரக் கலைகளும் வளர்ந்தன. வேதகாலத்தில் இறைவனை வழிபட்ட சாமகானம் எமது சுத்த இசைக்கு ஆரம்பம் எனக் கொள்ளலாம். சாமகானத்தில் நிஸரி என்ற மூன்று ஸ்வரங்களும் இசைக்கப்பட்டன. இவற்றை அடிப்படையாகக் கொண்டே ஏழு ஸ்வரங்களும் பிறந்தன.
- ஆதிகாலத்தில் கீதம், வாத்தியம், நிருத்தியம் என்ற மூன்றும் சேர்ந்ததே சங்கீதம் எனக் கருதப்பட்டது. பின்னர் சங்கீதக் கலை விசேஷமாக வளர்ச்சியடைந்ததால் கீதம், வாத்தியம் இரண்டும் சேர்ந்தது சங்கீதம் எனக் கருதப்பட்டது. நிருத்தியக்கலை தனியான வளர்ச்சியடைந்தது.

(15 நிமிடம்)

**கணிப்பீட்டு, மதிப்பீட்டு நியதிகள் :**

- சங்கீதம் ஒரு புனிதமான கலை, தெய்வீக கலை என்பதனைக் குறிப்பிடுவர்.
- சங்கீதக் கலையின் ஆரம்பம் பற்றி விபரிப்பர்.
- ஆதி மனிதன் ஓசை மூலம் உணர்வுகளை வெளிப்படுத்தினான் என்பதைக் கூறுவர்.
- கீதம், வாத்தியம், நிருத்தியம் பற்றி விளக்குவர்.

## செயற்பத்திரம் 6.1.2.1

மூன்று குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தினை வழங்குக.

* சங்கீதக் கலையின் ஆரம்பம் பற்றி சிறு கட்டுரை ஒன்றினை எழுதுக.

# சங்கீதக் கலையின் ஆரம்பம்

சங்கீதம் ஒரு புனிதமான கலை, மனிதன் நாகரிகம் அடையுமுன்னரே இசை ஒரு தனிப் பாஷையாக விளங்கியது எனலாம். மொழி மூலம் தனது உணர்ச்சிகளை வெளிப்படுத்த முடியாத காலத்தில் அதாவது சிந்துவெளி நாகரிகத்துக்கு முற்பட்ட காலத்தில் மனிதன் தனது உணர்ச்சிகளை ஓசை மூலம் வெளிப்படுத்தினான். பறவைகள், மிருகங்கள் வெளிப்படுத்திய ஓசைகள் மனிதனுக்கு முன்னோடியாக அமைந்தன என்று கூறலாம்.

மகிழ்ச்சியை வெளிப்படுத்த ஆரவாரித்தும், துன்பத்தின் போது ஓலமிட்டும், பயத்தை வெளிப்படுத்த இரைந்தும் தன் வாழ்க்கையை நடத்தினான். பறவைகளின் இனிமையான ஒலி ஆனந்தம் தந்தது. இனிமையான ஓசையில் இருந்து பிறந்தவை எல்லாம் இசையாகின.

நாகரிகம் வளரவளரக் கலைகளும் வளர்ந்தன. வேதகாலத்தில் இறைவனை வழிபட்ட சாமகானம் எமது சுத்த இசைக்கு ஆரம்பம் எனக் கொள்ளலாம். சாமகானத்தில் நிஸரி என்ற மூன்று ஸ்வரங்களும் இசைக்கப்பட்டன. இவற்றை அடிப்படையாகக் கொண்டே ஏழு ஸ்வரங்களும் பிறந்தன. ஆதிகாலததில் கீதம், வாத்தியம், நிருத்தியம் என்ற மூன்றும் சேர்ந்ததே சங்கீதம் எனக் கருதப்பட்டது. பின்னர் சங்கீதக் கலை விஷேசமாக வளர்ச்சியடைந்ததால், கீதம், வாத்தியம் இரண்டும் சேர்ந்தது சங்கீதம் எனக் கருதப்பட்டது. நிருத்தியக்கலை தனியாக வளர்ச்சி அடைந்தது. தற்போது இரு கலைகளும் பல்வேறு வகையில் விருத்தியடைந்துள்ளன.

தேர்ச்சி 6.0 : கர்நாடக இசையின் தோற்றம், வளர்ச்சி தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வார்.

தேர்ச்சி மட்டம் 6.1 : கர்நாடக இசையின் தோற்றம், வளர்ச்சி தொடர்பான விடயங்களை விபரிப்பார்.

செயற்பாடு 6.1.2 : நாட்டார் பாடல்களின் கலாசாரப் பின்னணி பற்றி அறிவோம்.

நேரம் : 40 நிமிடம் (01 பாடவேளை)

தர உள்ளீடு : நாட்டார் பாடல்கள் அடங்கிய ஒலிப்பதிவு நாடா, ஒலிப்பதிவுக் கருவி, பாடப்படும் சந்தர்ப்பங்களை விளக்கும் படங்கள். செயற்பத்திரம் 6.1.2.2

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு

படி 6.1.1 :

- நாட்டார் பாடல்கள் அடங்கிய ஒலிப்பதிவு நாடாவை ஒலிக்கச் செய்து மாணவரைச் செவிமடுக்கச் செய்வதன் மூலம் நாட்டார் பாடல்களை இனங்காண வழிப்படுத்துக.
- விளக்கப்படங்களைக் காட்சிப்படுத்தி, பின்வரும் விடயங்கள் வலியுறுத்தப்படும் வகையில் கலந்துரையாடலை நிகழ்த்துக.

| |
|---|
| * நாட்டார் பாடல்கள் என்றால் என்ன, அவை பாடப்படும் சந்தர்ப்பங்கள் மற்றும் அவற்றிற்குரிய சிறப்பம்சங்கள் பற்றிய விளக்கம். |
| * நாட்டார் பாடல் வகைகள் |
| * பிரதேசவாரியான நாட்டார் பாடல்கள் |
| * நாட்டார் பாடல்கள் பொதுவாக அமைந்துள்ள இராகங்கள். |

(10 நிமிடங்கள்)

படி 6.1.2

- வகுப்பிலுள்ள மாணவர்களை இரு குழுக்களாகப் பிரித்து செயற்பத் திரத்தை இணைப்புடன் வழங்குக.
- ஒவ்வொரு குழுவினரதும் செயற்பாட்டை உறுதி செய்து முழுமைப்படுத்துக.

(15 நிமிடங்கள்)

படி 6.13 : தமது செயற்பாட்டினை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குக.

: ஒரு குழு தமது செயற்பாட்டை முன்வைக்கும் போது மற்றைய குழு தமது கருத்துக்களைத் தெரிவிக்க இடமளிக்க.

: பின்வரும் விடயங்கள் வலியுறுத்தப்படும் வகையில் மீளவும் கலந்துரையாடுக.

- பாமர மக்கள் முதல் படித்தவர் வரை இரசிக்கக் கூடிய தன்மையுடையவை நாட்டார் பாடல்கள் ஆகும்.
- இவை பாமரஜனகானம், பொதுஜனகானம், எழுதாக்கவிதைகள், வாய்மொழி இலக்கியம் எனப் பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகின்றன.
- நாட்டார் பாடல்கள் பொதுவாக ஆனந்தபைரவி நாதநாமக்ரியை, புன்னாகவராளி, நவரோஜ், குறிஞ்சி போன்ற இராகங்களில் பாடப்படுகின்றன.
- இதில் அரிவு வெட்டுப்பாடல், ஏற்றப்பாடல், அறுவடைப்பாடல், ஓடப்பாடல், கப்பற்பாடல் எனப் பல்வேறு வகைகள் உள்ளன.
- மனிதனின் பிறப்புத் தொடக்கம் இறப்பு வரை அவனது வாழ்வோடு நாட்டார் பாடல்கள் தொடர்புடையனவாக விளங்குவதைக் காணலாம்.

(15 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு, மதிப்பீட்டு நியதிகள்**

- "நாட்டார் பாடல்" என்பதை வரைவிலக்கணப்படுத்துவர்.
- அதன் வகைகளைக் குறிப்பிடுவர்.
- பாடப்படும் சந்தர்ப்பங்களைக் கூறுவர்.
- நாட்டார்ப்பாடல்களின் கலாசாரப் பின்னணியை விளக்குவர்.

## செயற்பத்திரம் - 6.1.2.2

குழு - I

கொடுக்கப்பட்ட பாடலை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடையளிக்குக.

**மீன்பிடிகாரர் பாடல்**

புறப்படுவோமே மச்சான் புறப்படுவோமே
கட்டுவலை எடுத்துக்கிட்டுப் புறப்படுவோமே

கடல் கடந்து செல்வதற்கு தோணியுமுண்டு
கட்டைச்சுறா உழுவைமீன் கடலிலேயுண்டு
கடவுள் தந்த கைகளே முழுப்படவுண்டு
- மச்சான் முழுப்படவுண்டு

கடல் கடந்து மீன்பிடிப்போமே - வீண்
கவலையற்று வாழ்ந்திடுவோமே
முப்பது நாள் உழைத்துழைத்து நிறையப்பணம் வாங்கி-
அதை மூன்று நாளில் திண்டு விட்டுக் கடனையும் வாங்கி
பாக்கி நாளில் பெரும் பகுதியைப் பட்டினியாக்கி - மனப்
பதறலோடு மாரடிக்கும் சன்மமும் வேண்டாம்
- மாரடிக்கும் சன்மமும் வேண்டாம்

* இப்பாடல் பாடப்படும் சந்தர்ப்பம் யாது
* மீனவர் வாழ்க்கை முறை இப்பாடல் மூலம் எவ்வாறு வெளிப்படுத்தப்படுகிறது.
* மீனவத் தொழில் தொடர்பான உணர்வு வெளிப்படுத்தப்படும் பாங்கினை விளக்குக.

குழு II

கொடுக்கப்பட்ட பாடலை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடையளிக்குக

**தாலாட்டுப் பாடல்**

ஆராரோ ஆரிவரோ ஆராரோ ஆரிவரோ
ஆரடிச்சோ நீயழுகிறாய் அரிய கண்ணால் நீர் வழிய
அடிச்சாரைச் சொல்லியழு ஆக்கினைகள் பண்ணிவைப்போம்

மாமி அடிச்சாளோ மல்லிகைப்பூச் செண்டாலே?
பாட்டி அடிச்சாளோ பால்வார்க்குஞ் சங்காலே,

ஆச்சி அடிச்சாளோ அமுதூட்டுங் கையாலே?
அண்ணா அடிச்சானோ அரைஞாண் கயிற்றாலே.

ஆண்பனையில் நுங்கே! அணில் கோதா மாம்பழமே!
கூப்பிட்டு நான் கேட்பேன் குஞ்சரமே கண்வளராய்!

* இப்பாடல் பாடப்படும் சந்தர்ப்பம் யாது.
* இது ஒரு தாலாட்டுப்பாடல் என்பதை இனங்காணச் செய்யும் சொற்பதம் யாது.
* இதில் கிராமியச் சூழல் வெளிப்படுத்தப்படும் பாடல் வரிகளை எழுதுக.
* இப்பாடலில் குடும்ப அமைப்பு முறை எவ்வாறு எடுத்துக் காட்டப்படுகிறது.
* ஒரு தாயின் பாச உணர்வு வெளிப்படுத்தப்படும் முறையை விளக்குக.
* "ஆண்பனையில் நுங்கே" "அணில் கோதா மாம்பழமே" என்னும் சொற்பதங்கள் கூறும் சிறப்பினை விளக்குக.

# நட்டார் பாடல்களின் கலாசாரப் பின்னணி

பாமர மக்கள் முதல் படித்தவர் வரை சுவைத்து அனுபவிக்கக்கூடிய தன்மையைக் கொண்டவை நாட்டார் பாடல்கள் ஆகும். இவற்றை பொதுஜனகானம், பாமரஜனகானம், எழுதாக் கவிதைகள், வாய்மொழி இலக்கியம் எனப் பலவாறாக அழைக்கின்றனர். சாஸ்திரிய இசைக்கு முற்பட்டவை எனக் கருதப்படும் நாட்டார் பாடல்களுக்கு இலக்கணம் வகுக்கப்படவில்லை. தாளக்கட்டுப்பாடும் விஸ்தீரணப் படுத்தப்படவில்லை. இலகுவான தாளங்களில் அவை பாடப்படுகின்றன.

இப்பாடல்கள் அமைந்துள்ள வர்ண மெட்டுக்கள் சுலபமானவையாகவும், கவர்ச்சிகரமானவையாகவும் அமைந்திருப்பதோடு ஆனந்தபைரவி, நாதநாமக்கரிய, புன்னாகவராளி, நவரோஜ், குறிஞ்சி போன்ற இராகங்களிலும் பாடப்பட்டு வருகின்றன.

மனிதனின் பிறப்பிலிருந்து இறப்புவரை இப்பாடல்கள் தொடர்புடையனவாக உள்ளதை வாழ்வில் நாம் காணமுடிகின்றது. குழந்தை பிறந்தவுடன் மருத்துவிச்சி பாடும் வாழ்த்துப்பாடல் பாடப்படுகின்றது. அன்னை தாலாட்டு பாடிக் குழந்தையை உறங்க வைப்பாள். பாட்டுப்பாடி அக்குழந்தைக்கு அமுதூட்டுவாள். விளையாட்டுப்பாடல், வேடிக்கைப் பாடல், காதல் பாடல் போன்றவைகளையும், தொழில் செய்யும் போது அலுப்புத்தீர தொழிற்பாடல்களையும் பாடுவர். கடவுள் வழிபாட்டிலும் சமூகக் கொண்டாட்டங்களிலும் கலந்து கொள்ளும்போதும் பாடல்கள் பல பாடி மகிழ்வார். மனிதனின் இறப்பின் போது ஒப்பாரிப்பாடல்கள் பல பாடித் துயர் போக்குவர். இவ்வாறு வாழ்க்கையோடு ஒவ்வொரு கட்டத்திலும் நாட்டுப்பாடல்கள் முக்கியம் பெற்று விளங்குவதை அவதானிக்கலாம்.

பிரதேச ரீதியான சில வேறுபாடுகளைக் கொண்ட நாட்டார் பாடல்களும் உள்ளன. இவை அப்பிரதேசச் சூழலுக்கேற்ற முறையிலும், வாழ்க்கை முறையுடனும் தொடர்புடையனவாக அமைக்கப்பட்டு இசைக்கப்படுகின்றன. கடலில் மீன் பிடிக்கச் செல்லும் மீனவர் பாடும் ஓடப்பாடல், கப்பற்பாடல் போன்றனவும், வயலில் வேலை செய்யும் உழவர் பாடும் எற்றப்பாடல், அரிவுவெட்டுப்பாடல், அறுவடைப்பாடல் என்பனவும், மலைநாட்டில் வாழும் மக்கள் பாடும் கொழுந்துப்பாடல், காமன் கூத்து, ஒயிலாட்டம் என்பனவும், மட்டக்களப்பு, யாழ்ப்பாணப் பிரதேசங்களில் பாடப்படும் வசந்தன் பாடலும், மன்னார்ப் பிரதேசத்தில் பாடப்படும் தென்மோடிப் பாடல்களும் பிரதேச ரீதியாக எமக்குக் கிடைத்த நாட்டார் பாடல்களாகும்.

தேர்ச்சி 6.0 : கர்நாடக இசையின் தோற்றம், வளர்ச்சி தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வரார்.

தேர்ச்சி மட்டம் 6.1 : கர்நாடக இசையின் தோற்றம், வளர்ச்சி தொடர்பான விடயங்களை விபரிப்பரார்.

செயற்பாடு 6.1.3 : ஆலயங்களும் இசையும் பற்றி அறிந்துகொள்வோம்.

நேரம் : 40 நிமிடம் (01 பாடவேளை)

தர உள்ளீடு : ஆலயங்களோடு இசை, தொடர்புபட்டிருப்பதை விளக்கும் படங்கள். ஆலயங்களில் இசைக்கப்படும் இசைகள் அடங்கிய ஒலிப்பதிவு நாடா (உ+ம் -மல்லாரி, நவசந்திப்பண், பஞ்சபுராணம் போன்றவை) செயற்பத்திரம் 6.1.2.3

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :**

படி 6.1.1 :
- இசைகள் பதியப்பட்ட ஒலிப்பதிவு நாடாவை ஒலிக்கச் செய்து மாணவரைச் செவிமடுக்கச் செய்க.
- மாணவர் செவிமடுத்தவற்றை அடிப்படையாகக் கொண்டும், விளக்கப்படங்களைக் காட்சிப்படுத்தியும் பின்வரும் விடயங்கள் வலியுறுத்தப்படும் வகையில் கலந்துரையாடலை நிகழ்த்துக.

> - இசை வளர்ச்சியில் ஆலயங்களின் பங்கு.
>     - ஆலயங்களில் காணப்படும் இசை தொடர்பான ஓவியங்கள், சிற்பங்கள்.
>     - ஆலயங்களில் இடம்பெறும் தேவாரம் ஓதுதல், இசைக்கச்சேரிகள், புராணபடனம், கதாகாலஷேபம் நாட்டியநாடகம்.
>     - பயன்படுத்தப்படும் வாத்தியங்கள்.
>     - இசைக்கப்படும் இசைவகைகள்.

(10 நிமிடங்கள்)

படி 6.1.2 :
- வகுப்பில் மாணவர்களின் தொகைக்கேற்ப குழுக்களாக பிரித்து செயற்பத்திரத்தினை இணைப்புடன் வழங்குக.
- ஒவ்வொரு குழுவினரதும் செயற்பாட்டையும் உறுதிப்படுத்துக.

(15 நிமிடங்கள்)

படி 6.1.3

- ஒவ்வொரு குழுவும் தமது செயற்பாட்டை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குக.

- ஒரு குழு தமது செயற்பாட்டை முன்வைக்கும் போது ஏனைய குழுக்கள் தமது கருத்துக்களைத் தெரிவிக்க இடமளிக்க.

- பின்வரும் விடயங்கள் வலியுறுத்தப்படும் வகையில் மீளவும் கலந்துரையாடுக.

* ஆலயங்களோடு இசை தொடர்புபட்டிருப்பதற்குச் சான்று பகரும் அம்சங்கள்.

- இறைவனது நிருத்தம்
- வீணையுடன் கூடிய நாரதர், மத்தளத்துடன் கூடிய நந்தி போன்வற்றைச் சித்தரிக்கும் ஓவியங்கள், சிற்பங்கள்.
- மீனாட்சி கல்யாணம், பார்வதி கல்யாணம் போன்ற நாட்டிய நாடகங்களைக் கோயில்களில் நடித்துக் காட்டுவதற்கென கலைஞர்கள் இருந்தமை.
- இறைவழிபாட்டின் போது சங்கு, சேமக்கலம், கின்னரம், டமாரம் போன்ற வாத்தியங்கள் பயன்படுத்தப்பட்டமை.

- மங்கள வாத்தியங்களான தவில், நாதஸ்வரம் என்பன வாசிக்கப்பட்டமை.

- ஆலயம் தோற்றம் பெற்ற காலத்திலிருந்தே இசைப்பணியில் யாழ் வாசிப்போர், மங்கள வாத்தியம் வாசிப்போர் ஓதுவார்கள் போன்றோர் ஈடுபட்டிருந்தமை .

- யாழ், முரசு வாத்தியங்கள், கொம்பு வாத்தியங்கள், சுத்த மேளம், கொத்துமணி வாத்தியங்கள் பஞ்சமுக வாத்தியம் போன்றவையும் ஆலயங்களில் இசைக்கப்பட்டமை.

- ஆலயங்களில் இசைக்கப்படும் திருப்பள்ளி எழுச்சி, நவசந்திப்பண், பஞ்சபுராணம் போன்றவை.

- ஆலயங்களில் புராணபடனம், கதாகாலஷேபம் இசைக்கச்சேரி போன்றவை இடம்பெறுகின்றமை.

(15 நிமிடங்கள்)

கணிப்பீட்டு, மதிப்பீட்டு நியதிகள் :

- ஆலயங்களில் இசை வளர்ச்சி பற்றி விளக்குவர்.
- ஆலயங்களில் பயன்படுத்தப்படும் வாத்தியங்கள் பற்றிக் குறிப்பிடுவர்.
- இசைக்கப்படும் இசை வகைகள் பற்றிக் கூறுவர்.
- ஆலயங்களோடு இசை தொடர்புபட்டிருந்தமையை தற்காலத்துடன் ஒப்பிட்டு விளக்குவர்.

## செயற்பத்திரம் 6.1.2.3

சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குக

* இறைவழிபாட்டின் போது பயன்படுத்தப்படும் வாத்தியங்கள் எவை.
* மங்கள வாத்தியங்கள் எவை.
* ஆலயம் தோற்றம் பெற்ற காலத்திலிருந்தே இசைப்பணியில் ஈடுபட்டிருந்தோர் யாவர்.
* ஆலயங்களில் இசைக்கப்படும் இசைவகைகளைக் குறிப்பிடுக.
* தற்காலத்தில் இசையானது ஆலயங்களோடு தொடர்பட்டிருக்கும் விதத்தினை ஆராய்க.

# ஆலயங்களும் இசையும்

இறைவனது நிருத்தமே இசை, நடனம், நாடகத்திற்கு முதல் கண்ணாய் உள்ளதென்பதைப் புராணங்கள் வாயிலாக அறிய முடிகின்றது. இதிலிருந்து ஆலயங்களும் இசையும் ஒன்றோடொன்று தொர்புடையன என்பது தெளிவாகின்றது.

நாகரிகம் வளர்வதற்கு முற்பட்ட காலத்தில் பல்வகை நிலங்களிலும் வாழ்ந்த மக்கள் பலவகை இசை நுட்பங்களை அறிந்திருந்தனர். கற்கோயில், மரக்கோயில்களின் முன்னிலையில் பரந்து வாழ்ந்த மக்கள் பல வகைப் பாடல்களைப் பாடியும், வாத்தியங்களை மீட்டியும், பரவச நிலையில் ஆடியும் தங்களது பக்தியை இறைவனுக்குச் செலுத்தினர்.

தும்புரு நாரதர் வீணை யாழ் வாசிக்க
தொம் தொம் என நந்தி மத்தளம் கொட்ட

என்பதற்கமைய ஓவியங்களையும், சிற்பங்களையும் ஆலயங்களில் அமைத்தனர். இவை தவிர புராண வாயிலாக மீனாட்சி கல்யாணம், பார்வதி கல்யாணம் போன்ற நாட்டிய நாடகங்களைக் கோயில்களில் நடித்துக் காட்டுவதற்கென்றே கலைஞர்கள் இருந்தனர்.

இறைவழிபாட்டின் போதும் சங்கு, சேமக்கலம், கின்னரம், டமாரம் ஆகிய வாத்தியங்கள் ஒலிக்க அதற்கேற்ப நடன மாதர்கள் நடனம் ஆட, மங்கள வாத்தியங்களான தவில், நாதஸ்வரம் என்பன வாசிக்கப்பட மக்கள் வழிபாடு செய்தனர்.

ஆலயம் தோற்றம் பெற்ற காலத்தில் இருந்தே ஆலயங்களில் யாழ் வாசிப்போர், மங்கள வாத்தியம் வாசிப்போர், ஓதுவார்கள் போன்றவர்கள் இசையை வளர்க்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர். அத்தோடு, யாழ், நாதஸ்வரம், தவில், முரசு வாத்தியங்கள், கொம்பு வாத்தியங்கள், சுத்த மேளம், கொத்து மணி வாத்தியங்கள், சங்கு ஆகியவை ஆலயங்களில் கையாளப்பட்ட முக்கியமான சில வாத்தியங்களாகும்.

அதிகாலையில் பாடப்படுகின்ற திருப்பள்ளி எழுச்சி, ஆலய உற்சவ காலங்களில் இசைக்கப்படுகின்ற நவசந்திப் பண் (குறிப்பிட்ட விதிகளின்படி நவசந்திகளுக்கும் உரிய பண்களும், இராகங்களும்) என்பன ஆலயங்களில் இசைக்கப்படுகின்றன. பஞ்சமுக வாத்திய ஆலய முரசு வகைகளில் மிகவும் பிரபல்யமானது. இறைவனது ஐந்து திருமுகங்களையும் உருவகித்து இவ்வாத்தியத்தை அமைத்தனர்.

தேவார முதலிகள் காலத்தில் கூட்டுப்பிரார்த்தனை முறை இருந்தது என்பதை அறிகிறோம். தேவாரத் திருப்பதிகங்களை கூட்டுப் பிரார்த்தனையாக பாடும் வழக்கம் நாயன்மார் காலங்களில் இருந்ததாக புராண வாயிலாக அறியப்படுகின்றது. ஆலய பூசைகளில் பஞ்சபுராணம் ஓதப்படுகின்றது. புராணபடனம், கதாகாலஷேபம், இசைக் கச்சேரிகள் போன்றனவும் இன்று நடைபெறுவதனைக் காணலாம். இசை மரபு தவறாத விற்பன்னர்களால் புராணங்களை ஜனரஞ்சகமாக எடுத்துக் கூறும் மரபு தமிழ் நாட்டிலும், எமது நாட்டிலும் பிரபல்யமாகி சமய அறிவையும், இசையறிவையும் மக்களுக்கு ஊட்டுவதில் ஆலயங்கள் பெரும்பங்கு வகிக்கின்றன.

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 1.0 | : | இசை நிகழ்ச்சிகளில் இரசித்தவற்றை வெளிப்படுத்துவார். |
| தேர்ச்சிமட்டம் 1.1 | : | வெவ்வேறு இசை நிகழ்ச்சிகளின் தனித்துவமான அம்சங்களை இனங்கண்டு வெளிப்படுத்துவார். |
| செயற்பாடு 1.1.2 | : | வீணை, புல்லாங்குழல், மிருதங்கம் ஆகிய வாத்தியங்களின் தனித்துவமான அம்சங்கள் இனங்கண்டு வெளிப்படுத்துவோம். |
| நேரம் | : | 40 நிமிடங்கள் (01 பாடவேளை) |
| தர உள்ளீடு | : | வீணை, புல்லாங்குழல், மிருதங்கம் ஆகிய வாத்தியங்களின் படங்கள், வீணை, புல்லாங்குழல், மிருதங்கம் ஆகிய வாத்திய இசைகளடங்கிய ஒலி, ஒளி நாடாக்கள். ஒலிப்பதிவுக்கருவி, தொலைக்காட்சிப்பெட்டி, இசைக் கருவிகள், செயற்பத்திரம் 1.1.2.2 |

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :**

படி 1.1.1 : வீணை, புல்லாங்குழல், மிருதங்கம் ஆகிய வாத்தியங்களின் இசையை ஒலிப்பதிவுக் கருவியில் ஒலிக்கச் செய்க / ஆசிரியர் வாசித்துக் காட்டுக/ தொலைக்காட்சியில் போட்டுக் காட்டுக.

- இவ்வாத்தியங்களின் இசையை மாணவர்கள் இனங்காணச் செய்க.
- வாத்தியங்களின் படங்களைக் காட்சிப்படுத்துக.
- மாணவர் கேட்டும், பார்த்தும் இரசித்த விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்க.
- கலந்துரையாடலில் பின்வரும் விடயங்களை வலியுறுத்துக.

- வீணை ஓர் நரம்புக்கருவி, இதில் வாசிப்பதற்கான 4 தந்திகளும், தாளத்திற்காக 3 தந்திகளும் உள்ளன. இந்தியாவின் தேசிய வாத்தியமாகக் கருதப்படுகிறது. தாளம் வாசிப்பதற்கு வீணையே சிறப்பான வாத்தியமாகும்.
- குறிப்பிட்ட வீணை இசையில் இசைக்கப்பட்ட உருப்படிகள் அதன் இராகம், தாளம் வாசித்தவரின் பெயர் வாத்தியத்தைக் கையாளும் திறன் அணிசேர் வாத்தியங்கள் தொடர்பான விளக்கம்.
- புல்லாங்குழல் ஓர் துணைக்கருவி. இதன் ஓசையானது நீண்டதூரம் கேட்கக் கூடியது. கையில் எடுத்துச் செல்வதற்கு இலகுவான வாத்தியம். ஊதும் காற்றின் பரிமாணத்திற்கேற்ப மூன்று ஸ்தாயி ஸ்வரங்களையும் வாசிக்கலாம்.
- குறிப்பிட்ட புல்லாங்குழல் இசையில் இசைக்கப்பட்ட உருப்படி அதன் இராகம், தாளம் வாசித்தவரின் பெயர், வாத்தியத்தைக் கையாளும் திறன் அணிசேர் வாத்தியங்கள் தொடர்பான விளக்கங்கள்.
- மிருதங்கம் தாளத்திற்காகப் பயன்படுத்தப்படும் ஓர் தோற்கருவி, ஜதிக்கோர்வைகளைத் துல்லியமாக வெளிப்படுத்தும் வாத்தியம், நடனம் ஆடுபவர்களுக்கும், பாடுபவர்களுக்கும் அனுசரணையான பக்க வாத்தியமாக விளங்குகிறது.

- குறிப்பிட்ட மிருதங்க இசையில் இடம்பெற்ற தனியாவர்த்தனத்தின் சிறப்பு, தாளம், வாசித்தவரின் பெயர் வாத்தியத்தைக் கையாளும் திறன் அணிசேர் வாத்தியங்கள் தொடர்பான விளக்கம்.
- வீணை, புல்லாங்குழல் ஆகிய இரண்டும் அயன் வாத்தியங்களாக இருப்பினும் அவற்றின் இனிமை கருதி தற்காலத்தில் பக்கவாத்தியங்களாகவும் பயன்படுத்தப்படுகின்றன.
- வீணையை மீட்டுவதனாலும், புல்லாங்குழலை ஊதுவதனாலும், மிருதங்கத்தை தட்டி வாசிப்பதனாலும் நாதம் வெளிப்படுகிறது.
- வீணை, புல்லாங்குழல், மிருதங்கம் ஆகிய வாத்தியங்களின் தனித்துவமான அம்சங்கள் பற்றிய விளக்கம்.
- இவ்வாத்தியங்களை வாசிப்பதில் பிரபல்யமானவர்கள்.

(10 நிமிடம்)

படி 1.1.2

- வகுப்பில் உள்ள மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரிக்குக.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பத்திரத்தை வழங்குக.
- அறிவுறுத்தலுக்கேற்ப செயற்பாட்டில் ஈடுபடுகிறார்களா என்பதை உறுதிப்படுத்துக.

(15 நிமிடம்)

படி 1.1.3

- ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்க.
- ஏனைய குழுக்களும் அவற்றை அவதானித்துக் கருத்துக் கூற இடமளிக்குக.
- குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்க.
- கலந்துரையாடலில் பின்வரும் விடயங்களை மீளவும் வலியுறுத்துக.

  - வீணை, புல்லாங்குழல், மிருதங்கம் ஆகிய வாத்தியங்களும் வாத்யத்ரயம் என்று அழைக்கப்படும்.
  - இவ்வாத்தியங்கள் முறையே நரம்புக்கருவி, துறைக்கருவி, தோற்கருவி என்னும் பிரிவுகளைச் சேர்ந்தன.
  - இவ்வாத்தியங்கள் கச்சேரிகளில் தனிவாத்தியமாகவும், பக்கவாத்தியமாகவும் இசைக்கப்படும்.
  - இவ்வாத்தியங்களில் "வீணை" சரவஸ்வதியின் கையில் காணப்படும். ஏழு தந்திகளையுடையது. அதில் மூன்ற தந்திகள் தாளத்திற்காகவும், நான்கு தந்திகள் வாசிப்பதற்காகவும் பொருத்தப்பட்டுள்ளன. 24 மெட்டுக்களைக் கொண்டது. யாழி முகத்தையுடையது.
  - "புல்லாங்குழலானது" கிருஷ்ணபகவான் கையில் காணப்படும். வாயினால் ஊதி தூவாரங்களின் மேல் கைகளை வைத்து திறந்தும் மூடியும் வாசிப்பர். புல்லாங்குழல் வாயின் வலதுபக்கமாக வைத்து வாசிக்கப்படுகிறது. முத்திரைத் துளைக்குள் வாயின் வழியாகக் காற்றைச் செலுத்தி மிகுதி 7 துளைகளின் மீதும் விரல்களை வைத்து வாசிக்க வேண்டும். இடது பக்கம் வாய் வைத்தூதும் துளை உண்டு.

- இவ்வாத்தியங்களில் மிருதங்கம் நாட்டிய நிகழ்ச்சிகளில் மிகவும் இன்றியமையாதது. இவ்வாத்தியத்தின் இருபக்கங்களினாலும் கையினால் தட்டி வாசிக்கப்படும் மிருதங்கங்கத்திலுள்ள கரணை/ மார்ச்சனை என்னும் பகுதி மிருதங்கத்திற்குரிய தொனியைக் கொடுக்கிறது.

- வீணை, புல்லாங்குழல் ஆகிய வாத்தியங்களில் எல்லாவிதமான உருப்படிகளையும் வாசிக்கலாம்.

- மிருதங்கத்தில் தாள ஜதிகள் மூலம் தாளப் பிரஸ்தாரம் செய்யலாம்.

- இவ்வாத்தியங்களை (வீணை, புல்லாங்குழல், மிருதங்கம்) வாசிப்பதில் பிரபல்யமான வித்துவான்களின் பெயர்களை மாணவர் அறிந்து கூறுவதற்கு வழிப்படுத்துக.
  உ+ம்: வீணை வாசிப்பதில் வீணை தனம்மாள், காரைக்குடி சாம்பசிவம், S.பாலசந்தர், சிட்டிபாபு.
  புல்லாங்குழல் வாசிப்பதில் - T.R. மகாலிங்கம், ரமணி, சங்கீதகலாநிதி திரும்பாம்புரம் D.N.சுவாமிநாதப்பிள்ளை,T.R.நவநீதம்,
  மிருதங்கம் வாசிப்பதில் - நாராயணசாமி அப்பா, சுவாமிநாதபிள்ளை தட்சணாமூர்த்தி ஆசாரியார், பாலக்காட்டு மணிஐயர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

- குறிப்பிட்ட வீணை, புல்லாங்குழல் இசையில் இசைக்கப்பட்ட உருப்படி அதன் இராகம், தாளம், வாத்தியத்தை வாசித்தவரின் பெயர், அதனைக் கையாளும் திறன் அணிசேர் வாத்தியங்கள் என்பனவற்றை மாணவர் கூறுவதற்கு வழிப்படுத்துக.

- குறிப்பிட்ட மிருதங்க இசையில் இடம்பெற்ற தனியாவர்த்தனத்தின் சிறப்பு, தாளம், வாசிப்பரின் பெயர், வாத்தியத்தைக் கையாளும் திறன் அணிசேர்வாத்தியங்கள் தொடர்பானவற்றை மாணவர் கூறுவதற்கு இடமளிக்க.

(15 நிமிடம்)

**கணிப்பீட்டு, மதிப்பீட்டு நியதிகள் :-**

- வீணை, மிருதங்கம், புல்லாங்குழல் ஆகிய வாத்தியங்கள் வாத்தியத்ரயம் என்னும் சிறப்புப் பெயரால் அழைக்கப்படுவதைக் கூறுவர்.
- வீணையை நரம்பு வாத்தியம் எனவும், புல்லாங்குழலைத் துளை வாத்தியம் எனவும், மிருதங்கத்தைத் தோல் வாத்தியம் எனவும் குறிப்பிடுவர்.
- இவ்வாத்தியங்கள் இசைக் கச்சேரிகளிலும், நாட்டியக் கச்சேரிகளிலும் இசைக்கப்படும் என்பதனைக் கூறுவர்.
- வெவ்வேறு இசைக்கருவிகளுள் இசைகளுள் வீணை, புல்லாங்குழல், மிருதங்கம் ஆகியவற்றின் இசையை இனங்காண்பர்.
- வீணை, புல்லாங்குழல், மிருதங்கம் ஆகிய வாத்தியங்களின் தனித்துவமான அம்சங்களைக் குறிப்பிடுவர்.
- தாம் கேட்டு இரசித்த வாத்ய இசைக் கச்சேரிகளின் இடம் பெற்ற அணிசேர் வாத்தியங்களின் பெயர்களைக் கூறுவர்.

## செயற்பத்திரம் 1.1.2.2

குழு - I

1. வீணை இசையின் தனித்துவமான அம்சங்களைப் பட்டியற்படுத்துக.

2. நீர் இரசித்த வீணை இசையின் அணிசேர் வாத்தியங்களின் பெயர்களைத் தருக.

குழு - II

1. புல்லாங்குழல் இசையின் தனித்துவமான அம்சங்களை பட்டியற்படுத்துக.

2. நீர் இரசித்த புல்லாங்குழல் இசையின் அணிசேர் வாத்தியங்களின் பெயர்களைத் தருக.

குழு - III

1. மிருதங்க வாததியத்தின் தனித்துவமான அம்சங்களைப் பட்டியற்படுத்துக.

2. நீர் இரசித்த மிருதங்க இசையின் அணிசேர் வாத்தியங்களின் பெயர்களைத் தருக.

தேர்ச்சி 1.0 : இசை நிகழ்ச்சிகளில் இரசித்தவற்றை வெளிப்படுத்துவார்.

தேர்ச்சிமட்டம் 1.2 : இசை நிகழ்ச்சிகளில் தாம் அனுபவித்தவற்றை விமர்சிப்பார்.

செயற்பாடு 1.2.2 : வீணை, புல்லாங்குழல், மிருதங்கம் ஆகிய வாத்தியங்களின் இசையை இரசித்து அனுபவித்தவற்றை விமர்சிப்போம்.

நேரம் : 40 நிமிடங்கள் (01 பாடவேளை)

தர உள்ளீடு : வீணை, புல்லாங்குழல், மிருதங்கம் ஆகிய வாத்திய இசைகளடங்கிய ஒலி, ஒளி நாடாக்கள் ஒளிப்பதிவுக் கருவி, தொலைக்காட்சி, புல்லாங்குழல், வீணை, மிருதங்கம் ஆகிய இசைக் கருவிகளின் படங்கள், செயற்பத்திரம் 1.2.2.2

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :**

படி 1.2.1

- புல்லாங்குழல், வீணை, மிருதங்கம் ஆகிய வாத்தியங்களின் இசையை ஒலிப்பதிவு செய்த ஒலி, ஒளி நாடாக்களை போட்டுக் காட்டுக.
- வாத்தியங்களின் இசையை மாணவர்கள் இனங்காணச் செய்க.
- இவ்வாத்தியங்களின் படங்களைக் காட்சிப்படுத்துக.
- மாணவர் பார்த்தும் கேட்டும் இரசித்த விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுக.
- கலந்துரையாடலில் பின்வரும் விடயங்களை வலியுறுத்துக.

- புல்லாங்குழல், வீணை, மிருதங்கம் ஆகிய மூன்று இசைக்கருவிகளையும் இசைக்கும் போது வெளிப்படும் நாதம்.
- பார்த்தும் கேட்டும் இரசிக்கும் போது ஏற்படும் மன உணர்வு.
- வாத்திய இசைகளில் இடம்பெற்ற உருப்படிவகை, இராகம், தாளம், பாவம் என்பவற்றை மாணவர் கூறுவதற்கு இடமளிக்க.
- இவ்வாத்தியங்களுக்கு இசைக்கப்படும் அணிசேர் வாத்தியங்களின் ஒத்திசைவு.
- மிருதங்க வாத்தியத்தில் தனியாவர்த்தனத்தின் சிறப்பு.
- மிருதங்கம் பிரதான வாத்தியமாக இசைக்கப்படும்போது அணிசேர் வாத்தியங்களின் பங்களிப்பு.
- வாத்திய இசையைக் கேட்டு இரசித்து, மாணவரின் சுயமான இரசனை மற்றும் அனுபவப் பகிர்வு.

(10 நிமிடம்)

படி 1.2.2

- வகுப்பில் உள்ள மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தினை வழங்குக.
- மூன்று குழுக்களுக்கும் கொடுக்கப்பட்ட வாத்திய இசையின் ஒலி, ஒளி நாடாக்களைக் கேட்கச் செய்க.
- செயற்பத்திரத்திலுள்ள அறிவுறுத்தலுக்கேற்ப செயற்பாட்டில் ஈடுபடுகிறார்களா என்பதனை உறுதி செய்க.

(15 நிமிடம்)

படி 1.2.3

* ஒவ்வொரு குழுவினதும் பேறுகளைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குக.
* ஏனைய குழுக்களும் அவற்றை அவதானித்துக் கருத்துக் கூற இடமளிக்க.
* குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்க
* இக் கலந்துரையாடலில் பின்வரும் விடயங்களை மீளவும் வலியுறுத்துக.

- வீணை, புல்லாங்குழல் ஆகிய இரு வாத்தியங்களிலும் எல்லா வகையான உருப்படிகளையும் வாசிக்க முடியும்.
- இவ்விரு வாத்தியங்களும் கச்சேரிகளில் தனிவாத்தியமாக வாசிக்கப்படுகின்றன.
- வீணை இந்திய சங்கீதத்தில் எல்லா வாத்தியங்களுக்கும் அரசியாகவும் தேசிய வாத்தியமாகவும் திகழ்கிறது.
- புல்லாங்குழல் பழமையான துளைக்கருவி ஆகும்.
- சகல ஜீவராசிகளையும் மயக்கக் கூடிய தன்மை புல்லாங்குழலிசைக்கு உண்டு.
- வீணை, புல்லாங்குழல் வாத்திய இசைக்கு மிருதங்கம் அணிசேர் வாத்தியமாகத் திகழ்கிறது.
- மிருதங்கத்தில் ஜதிகள் வாசிக்கப்படுவதனால் நாட்டியக் கச்சேரியில் இன்றியமையாத தாள வாத்தியமாகத் திகழ்கின்றது.
- இசைக் கச்சேரிகளில் மிருதங்கம் பக்க வாத்தியமாக வாசிக்கப்படுகின்றது.
- மிருதங்கத்தில் ஜதிகள் வாசிப்பதைக் கேட்கும் பொழுது அருவியில் இருந்து நீர் கொட்டுவதைப் போன்ற மகிழ்ச்சியான இரசனை அனுபவம் எற்படும்.
- வீணை, மிருதங்கம், புல்லாங்குழல் ஆகிய வாத்திய இசையின் தரம், தன்மை, வாத்தியத்தைக் கையாழும் திறன், அணிசேர் வாத்தியங்களின் ஒத்திசைவு, இராகம், தாளம், பாவம் என்பவற்றை இரசிப்பதன் மூலம் முழுமையான விமர்சனத்தை வெளிப்படுத்தலாம்.

(15 நிமிடம்)

**கணிப்பீட்டு/மதிப்பீட்டு நியதிகள் :**

- புல்லாங்குழல், வீணை, மிருதங்கம் ஆகிய இசைக்கருவிகளின் விசேட அம்சங்கள் குறிப்பிடுவர்.
- வாத்திய இசையை இரசிப்பதன் மூலம் வாத்தியக் கலைஞரின் ஆற்றலை மதிப்பர்.
- வாத்திய இசையை இரசிக்கும்போது ஏற்படும் உணர்வுகளை பகிர்ந்து கொள்வர்.

### செயற்பத்திரம் 1.2.2.2

கொடுக்கப்பட்ட வாத்திய இசைகளைக் கேட்டும், பார்த்தும் இரசித்து பின்வரும் விடயங்களை உள்ளக்கியதாக ஒரு விமர்சனக் கட்டுரையை குழுவில்உள்ள சகல அங்கத்தவர்களும் தனிதனியாக எழுதுக.

**குழு - I புல்லாங்குழல் இசை நிகழ்ச்சி**

| | |
|---|---|
| 1. | வாத்தியத்தை வாசிப்பவரின் பெயர், திறமை. |
| 2. | ஸ்வரஸ்தான சுத்தம், சாகித்திய பாவம். |
| 3. | வாத்திய இசையைக் கேட்டு இரசிக்கையில் ஏற்படும் உணர்வு. |
| 4. | புல்லாங்குழல் இசைக்கும் போது அனுசரணையாக இசைக்கப்படும் அணிசேர் வாத்தியங்களின் பங்களிப்பு. |
| 5. | இசைக்கப்பட்ட உருப்படியின் இராகம், தாளம். |

**குழு - II வீணை இசை நிகழ்ச்சி**

| | |
|---|---|
| 1. | வாத்தியத்தை வாசிப்பவரின் பெயர், திறமை. |
| 2. | ஸ்வரஸ்தான சுத்தம், சாகித்திய பாவம்,ராகபாவம், லயசுத்தம். |
| 3. | வாத்திய இசைக் கேட்டு இரசிக்கையில் ஏற்படும் உணர்வு. |
| 4. | வீணை இசைக்கும் போது அனுசரணையாக இசைக்கப்படும் அணிசேர் வாத்தியங்களின் பங்களிப்பு. |
| 5. | இசைக்கப்பட்ட உருப்படியின் இராகம், தாளம். |

**குழு - III மிருதங்க இசை நிகழ்ச்சி**

| | |
|---|---|
| 1. | வாத்தியத்தை வாசிப்பவரின் பெயர், திறமை. |
| 2. | லயசுத்தம், வாசிக்கப்பட்ட சொற்கட்டுக்களின் வெளிப்பாடு, பாவம். |
| 3. | வாத்திய இசையைக் கேட்டு இரசிக்கையில் ஏற்படும் உணர்வு. |
| 4. | மிருதங்கம் பிரதான வாத்தியமாக இசைக்கும் போது அனுசரணையாக இசைக்கப்படும் அணிசேர் வாத்தியங்களின் பங்களிப்பு. |

தேர்ச்சி 2.0 : பல்வேறு இசை நிகழ்ச்சிகளைத் தாமே தயாரிப்பதன் மூலம் தமது ஆற்றுகைத்திறனை வெளிப்படுத்துவார்.

தேர்ச்சிமட்டம் 2.1 : இசை நிகழ்ச்சிகளைத் தாமே தாயரிப்பார்.

செயற்பாடு 2.1.2 : வில்லுப்பாட்டு நிகழ்ச்சியைத் தயாரிப்போம்.

நேரம் : 01 மணி 20 நிமிடங்கள் (02 பாடவேளைகள்)

தர உள்ளீடு : வில்லு, நாண், சலங்கை, விற்கடம், இருகோல்கள், மிருதங்கம், உடுக்கை, டோலக், தாளம், ஹார்மோனியம், ஒலிப்பதிவு/ஒளிப்பதிவுக்கருவி, வில்லுப்பாட்டு நிகழ்ச்சிப் பதியப்பட்ட ஒலி, ஒளி நாடாக்கள் செயற்பத்திரம் 2.1.2.2

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :**

படி 2.1.1

- வில்லுப்பாட்டு நிகழ்ச்சி ஒன்றினை ஒலிப்பதிவு கருவியில் ஒலிக்கச் செய்க அல்லது ஒளிப்பதிவுக் கருவியில் காண்பிக்குக.
- மாணவர் தாமாகவே வில்லுப்பாட்டினைத் தயாரிக்கும் வகையில் கீழ்வரும் விடங்களை வலியுறுத்தி கலந்துரையாடலை மேற்கொள்க.

- வில்லுப்பாட்டு நிகழ்ச்சிக்குரிய கதையை / கருத்தினைத் தெரிவு செய்க..
- தெரிவு செய்த கதை/கருத்தினை வில்லுப்பாட்டிற்கு ஏற்ற விதத்தில் பிரதியாக்கம் செய்க.
- வில்லுப்பாட்டு நிகழ்வின் கதை / கருத்திற்கு ஏற்றவிதத்தில் உரைக்கு இடையே பொருத்தமான பாடல்கள்.
- ஆக்கிய பாடல்களுக்குத் தகுந்தவாறு இசை.
- வில்லுப்பாட்டிற்கு ஏற்றவகையில் வில்லை அமைத்து சலங்கை, நாண் கயிற்றால் இணைத்து, வில்லின் இடது புறமாக விற்கடத்தை இணைத்து இருகோல்களால் தட்டி வில்லிசை நிகழ்த்திடத்தயாராகப்பணிக்க.
- வில்லுப்பாட்டு நிகழ்வின் பிரதான உரையை வில்லிசை நடாத்துபவர் கூற ஏனையோரும் உரையாடலின் இடையே பங்கு கொள்ள வழிப்படுத்துக.
- ஒத்திசைவுடன் பாடல்களையும் பாடிக் கொள்ள வழிப்படுத்துக.
- பாடல்களுக்குப் பக்க வாத்தியமாகக் குறிப்பிட்ட இசைக்கருவிகளை, ஏனையோர் இசைத்திட வழி செய்க.
- இடையே, கதைக்குப் பொருத்தமாக நகைச்சுவை கலந்த உரையாடலைச் சேர்த்துக் கொள்கப் பணிக்க.

(20 நிமிடம்)

படி 2.1.2

- மாணவர்களை இரு குழுக்களாகப் பிரித்து வில்லுப்பாட்டினைத் தயாரித்து நிகழ்த்திட சந்தர்ப்பம் வழங்குக
- அறிவுறுத்தலுக்கேற்ப செற்பாட்டில் ஈடுபடுகிறார்களா என்பதை உறுதிப்படுத்துக.

(30 நிமிடம்)

படி 2.1.3

- ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளைச் தகுந்த முறையில் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குக.
- ஏனைய குழுவினர் அவற்றை அவதானிக்வும் தமது கருத்துக் கூறவும் இடமளிக்க.
- குழுக்களின் பேறுகளைத் தொகுத்திடும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்க.
- கலந்துரையாடலிற் கீழ்வரும் விடயங்களை மீண்டும் வலியுறுத்துக.

> - வில்லுப்பாட்டு நிகழ்வுக்குரிய கருப்பொருள்
> - ஏற்ற விதத்தில் பிரதியாக்கம் செய்திட வழிகாட்டுக.
> - வில்லுப்பாட்டு நிகழ்வின் உரைக்கு இடையே ஏற்றவிதத்திற் பொருத்தமான பாடல்களை ஆக்கிட வலியுறுத்துக.
> - ஆக்கிய பாடல்களுக்குப் பொருத்தமான இசை அமைக்க வழிபடுத்துக.
> - வில்லை ஏற்றவகையில் விற்கடத்துடன் இணைத்து இரு கோல்களாற் தட்டி வில்லிசை நிகழ்திடத் தயாராக வழிகாட்டுக.
> - வில்லுப்பாட்டு நிகழ்வின் பிரதான உரையை. வில்லிசை நடாத்துபவர் கூற, ஏனையோரும் உரையாடலின் இடையே பங்கு கொள்ளச் செய்க.
> - இவ்வகையில் ஒத்திசைவுடன் பாடல்களைப் பாடிட வழிகாட்டுக.
> - பக்கவாத்தியங்களை ஏனையோர் இசைத்திட வழிகாட்டுக.
> - இடையே கதைக்குப் பொருத்தமாக நகைச்சுவை கலந்த உரையாடல்களைச் சேர்த்துக் கொள்க.
> - மாணவர் குழு முழுமையான வில்லுப்பாட்டினை நிகழ்த்திடச் சந்தர்ப்பமளிக்க.

(30 நிமிடம்)

கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்:

- மாணவர் வில்லுப்பாட்டிற்குரிய கருப்பொருளைத் தெரிவு செய்வர்.
- அதனை ஏற்ற விதத்திற் பிரதியாக்கம் செய்வர்.
- வில்லுப்பாட்டு நிகழ்வின் உரைக்கிடையே பாடல்களை ஆக்கிடுவர்.
- பாடல்களுக்குப் பொருத்தமான இசையை அமைத்திடுவர்.
- வில்லிசையின் பிரதான உரையை வில்லிசை நடாத்துபவர் கூறிட, ஏனையோரும் உரையாடலின் இடையே பங்கு கொள்வர்.
- ஒத்திசையுடன் பாடல்களைப் பாடுவர்.
- பக்கவாத்தியங்களைத் தகுந்த வகையில் இசைப்பர்.
- கதையினிடையே பொருத்தமான நகைச்சுவை உரையாடல்களைச் சேர்ப்பர்.
- மாணவர் முழுமையான வில்லுப்பாட்டினை தயாரிப்பர்.
- அதனை ஆற்றுகைப்படுத்துவர்.

## செயற்பத்திரம் 2.1.2.2

- இரண்டு குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தை வழங்குக.

| |
|---|
| • வில்லுப்பாட்டிற்கு ஏற்றவகையில் அமைந்த புராண இதிகாச, சமய, சமூக, பண்பாட்டு விழுமியங்கள் சம்பந்தமான கருப்பொருட்களைக் கொண்ட கதைகளைத் தெரிவு செய்து வில்லுப்பாட்டு நிகழ்ச்சி ஒன்றினைத் தயாரித்து நிகழ்த்திக் காட்டுக. |

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 3.0 | : | இசை உருப்படிகளைச் சுருதி, இராக, தாளத்துடன் பாடிக்காட்டுவார். |
| தேர்ச்சிமட்டம் 3.1 | : | இராகங்களின் ஆரோகண, அவரோகணங்களை ஸ்வரஸ்தான சுத்தத்துடன் பாடுவார். |
| செயற்பாடு 3.1.2 | : | சங்கராபரணம், மலஹரி, ஹம்சத்வனி, சுத்தசாவேரி, கல்யாணி ஆகிய இராகங்களின் ஆரோகண, அவரோணங்களை சுருதி ஸ்வரஸ்தான சுத்தத்துடன் பாடுவோம். |
| நேரம் | : | 40 நிமிடங்கள் (01 பாடவேளை) |
| தர உள்ளீடு | : | சுருதிப்பெட்டி, வயலின்/ஹார்மோனியம், சங்கராபரணம், மலஹரி, ஹம்சத்வனி, சுத்தசாவேரி, கல்யாணி ஆகிய இராகங்களின் ஆரோகண, அவரோகணம் எழுதப்பட்ட அட்டை. ஸ்வரஸ்தான வரைபடம் செயற்பத்திரம் 3.1.2.2 |

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :**

- மேற்கூறிப்பட்ட இராகங்களின் ஆரோகண, அவரோகணங்களை ஒவ்வொரு இராகமாகப் பாடிக்காட்டியும், வாத்தியத்தில் வாசித்தும் செவிமடுக்கச் செய்க.
- செவிமடுத்த இராகங்களை இனங்காணச் செய்க.
- இனங்கண்ட இராகங்களை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் விடயங்கள் வலியுறுத்தப்படும் வகையில் கலந்துரையாடுக.

| | | | | |
|---|---|---|---|---|
| • சங்கராபரணத்தின் | ஆ | - | ஸரிகமபதநிஸ் | 29வது மேள இராகம் |
| | அ | - | ஸ்நிதபமகரிஸ | |
| ஹம்சத்வனியின் | ஆ | - | ஸரிகபநிஸ் | 29இன் ஜன்னியம் |
| | அ | - | ஸ்நிபகரிஸ | |
| சுத்தசாவேரியின் | ஆ | - | ஸரிமபதஸ் | 29வது மேள கர்த்தாவின் ஜன்னியம் |
| | அ | - | ஸ்தபமரிஸ | |
| கல்யாணியின் | ஆ | - | ஸரிகமபதநிஸ் | 65 வது மேள இராகம் |
| | அ | - | ஸநிதபமகரிஸ | |
| மலஹரியின் | ஆ | - | ஸரிமபதஸ் | 15 இன் ஜன்னியம் |
| | அ | - | ஸதபமகரிஸ | |

என்பதனை அட்டை மூலம் காண்பித்து மாணவர் அறிந்து கொள்ளச் செய்க.

- ஸ்வரஸ்தான வரைபடத்தினைக் காண்பித்து குறிப்பிட்ட இராகங்களின் ஸ்வரஸ்தானங்களை மாணவர் இனங்கண்டு கூறுவதற்கு இடமளிக்க.

I. கல்யாணி - ஸட்ஜம், சதுஸ்ருதிரிஷபம், அந்தரகாந்தாரம், பிரதி மத்திமம், பஞ்சமம், சதுஸ்ருதிதைவதம், காகலி நிஷாதம்.

II. சங்கராபரணம்- ஸட்ஜம், சதுஸ்ருதிரிஷபம், அந்தரகாந்தாரம், சுத்த மத்திமம், பஞ்சமம், சதுஸ்ருதிதைவதம், காகலி நிஷாதம்.

II. மலகரி - ஸட்ஜம், சுத்தரிஷபம், அந்தரகாந்தாரம், சுத்த மத்திமம், பஞ்சமம், சுத்ததைவதம்.

IV. ஹம்சத்வனி - ஸட்ஜம், சதுஸ்ருதிரிஷபம், அந்தாரகாந்தாரம், பஞ்சமம், காகலிநிஷாதம்.

V. சுத்தசாவேரி - ஸட்ஜம், சதுஸ்ருதிரிஷபம்,சுத்தமத்திமம், பஞ்சமம், சதுஸ்ருதிதைவதம்.

- இவ் இராகங்களின் ஆரோகண அவரோகணங்களை முழுமையாகப் பாட மாணவர்களை செவிமடுக்கச் செய்க.
- குறிப்பிட்ட இராகங்களின் ஆரோகண, அவரோகணங்களைப் பாட மாணவர் அதைக் கேட்டுப் பாடுவதற்கு வழிப்படுத்துக.
- மாணவருடன் சேர்ந்து குறிப்பிட்ட இராகங்களின் ஆரோகண, அவரோகணத்தை பாடுக.
- மாணவர்களை குழுவாகவும் எழு மாற்றாகத் தெரிவு செய்து தனியாகவும் பாடச் செய்க.

(15 நிமிடம்)

படி 3.1.2

- மாணவர்கள் ஒவ்வொருவரிடமும் செயற்பத்திரத்தை இணைப்புடன் வழங்குக.
- மாணவர்கள் ஒவ்வொருவரிடமும் கொடுக்கப்பட்ட இராகத்தை பாடிப்பழகச் சந்தர்ப்பம் அளிக்குக.
- பயிற்சியின் போது சரியாகப் பாடுகின்றார்களா என்பதை உறுதி செய்க.

(15 நிமிடம்)

படி 3.1.3

- ஒவ்வொரு மாணவர்க்கும் தத்தமது பேறுகளை தகுந்த முறையில் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குக.
- ஒவ்வொருவரும் தத்தமது பேறுகளைச் சமர்ப்பிக்கும் போது ஏனையவர்களும் அதனை அவதானித்துக் கருத்துக் கூறுவதற்கு இடமளிக்க.
- மாணவர்களின் குறைளை இனங் கண்டு முழுமைப்படுத்துக.
- கலந்துரையாடலிற் பின்வரும் விடயங்களை மீண்டும் வலியுறுத்துக.

- இராகங்களின் ஆரோகண, அவரோணங்களை ஸ்வரஸ்தான சுத்தத்துடன் பாடுவதற்கு வழிப்படுத்துக.
- மாணவருடன் சேர்ந்து இரகங்களின் ஆரோகண, அவரோகணங்களை சுருதி ஸ்வரஸ்தான சுத்தத்துடன் பாடுக.

(10 நிமிடம்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்:**

- இராகங்களின் ஆரோகண, அவரோகணங்களைக் குறிப்பிடுவர்.
- இராகங்களின் ஸ்வரஸ்தானங்களைக் கூறுவர்.
- இராகங்களின் ஆரோகண, அவரோகணங்களை ஸ்வரஸ்தான சுத்தத்துடன் பாடுவர்.
- ஆசிரியரால் பாடிக்காட்டப்படும் ஆரோகண அவரோகணங்களை இனங்கண்டு கூறுவர்.

**செயற்பத்திரம் 3.1.2.2**

- சங்கராபரணம்,மலஹரி,ஹம்சத்வனி,சுத்தசாவேரி,கல்யாணி ஆகிய இராகங்களின் ஆரோகண, அவரோகணங்களை சுருதி,ஸ்வரஸ்தான சுத்தத்துடன் பாடிப்பயிற்சி செய்க.
- குறித்த இராகங்களின் ஆரோகண, அவரோகண ங்களை சுருதி, ஸ்வரஸ்தான சுத்தத்துடன் பாடுக.

**இணைப்பு:-**

| இராகம் | ஆரோகண, அவரோகணம் | | ஸ்வரஸ்தானம் |
|---|---|---|---|
| 1) சங்கராபரணம் | 1) ஸரிகமபதநிஸ்<br>ஸ்நிதபமகரிஸ | 29 | 1) ஸட்ஜம்,சதுஸ்ருதிரிஷபம்,அந்தரகாந்தாரம்,<br>சுத்தமத்திமம்,பஞ்சமம்,சதுஸ்ருதிதைவதம்,<br>காகலி நிஷாதம் |
| 2) மலஹரி | 2) ஸரிமபதஸ்<br>ஸதபமகரிஸ | 15 | 2) ஸட்ஜம்,சுத்தரிஷபம்,அந்தரகாந்தாரம்,<br>சுத்தமத்திமம்,பஞ்சமம், சுத்ததைவதம், |
| 3) ஹம்சத்வனி | 3) ஸரிகபநிஸ்<br>ஸநிபகரிஸ் | 29 | 3) ஸட்ஜம்,சதுஸ்ருதிரிஷபம்,அந்தரகாந்தாரம்,<br>பஞ்சமம், காகலிநிஷாதம் |
| 4) சுத்தசாவேரி | 4) ஸரிமபதஸ்<br>ஸ்தபமரிஸ | 29 | 4) ஸட்ஜம்,சதுஸ்ருதிரிஷபம்,சுத்தமத்திமம்,<br>பஞ்சமம்,சதுஸ்ருதிதைவதம், |
| 5) கல்யாணி | 5) ஸரிகமபதநிஸ்<br>ஸ்நிதபமகரிஸ | 65 | 5) ஸட்ஜம்,சதுஸ்ருதிரிஷபம்,அந்தரகாந்தாரம்,<br>பிரதிமத்திமம்,பஞ்சமம்,சதுஸ்ருதிதைவதம்,<br>காகலிநிஷாதம் |

தேர்ச்சி 3.0 : இசை உருப்படிகளைச் சுருதி, இராக, தாளத்துடன் பாடிக் காட்டுவார்.

தேர்ச்சிமட்டம் 3.2 : அப்பியாச உருப்படிகளை இராக, தாளத்துடன் பாடுவரார்.

செயற்பாடு 3.2.5 : துருவ, அடதாள அலங்காரங்களை இராக, தாளத்துடன் பாடுவோம்.

நேரம் : 01 மணி 20 நிமிடங்கள் (02 பாடவேளைகள்)

தர உள்ளீடு :
- சுருதிப்பெட்டி அலங்காரம் எழுதப்பட்ட அட்டை, மாயாமாளவகௌளை இராகஸ்வரஸ்தான வரைபடம். செயற்பத்திரம் 3.2.2.5

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :

படி 3.2.1

- அலங்காரம் எழுதப்பட்ட அட்டையை காட்சிப்படுத்தி ஆசிரியர் துருவதாள, அடதாள அலங்காரங்களை தாளத்தோடு பாடிக்காட்டி மாணவர் செவிமடுக்கச் செய்க.
- மாணவர் செவிமடுத்தவற்றில் பின்வரும் விடயங்களைக் கலந்துரையாடுக.

- சதுஸ்ரஜாதி துருவதாளம் அங்க அடையாளம்
  $1_4$ 0 $1_4$ $1_4$ மொத்த அட்ஷரம் 14
- கண்டஜாதி அடதாளம் அங்க அடையாளம்
  $1_5$ $1_5$ 0 0 மொத்த அட்ஷரம் 14 என்பதை விளக்குக.
- மாயாமாளவகௌளை ஸ்வரஸ்தான வரைபடத்தைக் காண்பித்து அந்த இராகத்தின் ஆரோகண, அவரோகணத்தை ஸ்வரஸ்தான சுத்தமாகப் பாடுவதற்கு வழிப்படுத்துக.
- துருவ அடதாளங்களைப் போட்டுக் காட்டி நெறிப்படுத்துவதற்கேற்ப மாணவரும் அதே போன்று செயற்பட வழிப்படுத்துக.
- துருவ, அடதாள அலங்காரங்களை ஒவ்வொரு ஆவர்த்தனமாகப் பாடமாணவர் தொடர்ந்து பாடுவதற்கு வழிப்படுத்துக.
- அலங்காரத்தை தாளத்தோடு பாட மாணவர் தொடர்ந்து தாளம் போட்டு பாடுவதற்கு இடமளிக்க.
- மூன்று காலங்களிலும் அலங்காரங்களைப் பாடுவதற்கு நெறிப்படுத்துக.
- மூன்று காலங்களிலும் பாடும் போது ஏற்படும் தாள அட்சர வேறுபாட்டை மாணவர் அறிந்து கொள்ளச் செய்க.
- மாணவருடன் சேர்ந்து அலங்காரங்களை இராக, தாளத்துடன் மூன்று காலங்களிலும் பாடுக.
- மாணவரைச் சிறிய குழுக்களாகவும் எழுமாற்றாகத் தெரிவு செய்து, தனித்தனியாகவம் பாடச் சந்தர்ப்பம் வழங்குக.

(30 நிமிடம்)

படி 3.2.2

- வகுப்பிலுள்ள மாணவர்களை சிறு குழுக்களாகப் பிரித்துச் செயற்பத்திரத்தை இணைப்புடன் வழங்குக.
- அறிவுறுத்தலுக்கேற்ப ஒவ்வொரு குழுவும் சரியாகப் பாடிப் பயிற்சி செய்கிறார்களா என உறுதிப்படுத்துக.

(30 நிமிடம்)

படி 3.2.3

- ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குக.
- ஏனைய குழுக்களுடன் அதனை அவதானித்து கருத்துக் கூறுவதற்கு இடமளிக்க.
- குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடலொன்றை மேற்கொள்க.

| |
|---|
| • சதுஸ்ரஜாதி துருவதாளம், கண்டஜாதி அடதாள அலங்காரங்களின் அங்கம், மொத்த அட்ஷரம், என்பவற்றைக் குறிப்பிட்டு இரு அலங்காரங்களையும் இராக, தாளத்துடன் மூன்றுகாலங்களிலும் மாணவருடன் சேர்ந்துபாடுக. |

(20 நிமிடம்)

**கணிப்பீட்டு, மதிப்பீட்டு நியதிகள் :**

- சதுஸ்ர ஜாதி துருவதாள, கண்ட ஜாதி அடதாள அங்க அடையாளம், மொத்த அட்ஷரம் என்பவற்றைக் குறிப்பிடுவர்.
- அலங்காரத்தை இராக, தாளத்தோடு மூன்று காலங்களிலும் பாடுவர்.

## செயற்பத்திரம் 3.2.2.5

| |
|---|
| • சதுஸ்ரஜாதி துருவதாள அலங்காரத்தையும், கண்டஜாதி அடதாள அலங்காரத்தையும் இராக தாளத்துடன் மூன்று காலங்களிலும் பாடிப் பயிற்சி செய்க.<br>• குறித்த அலங்காரங்களை இராக, தாள, ஸ்வரஸ்தான அதிதத்துடன் பாடுக. |

# சப்த தாளம் அலங்காரம்

இராகம் : மாயாமாளவகௌளை தாளம் - சதுஸ்ர ஜாதி துருவதாளம்
சதுஸ்ர துருவ தாளத்தின் அங்கங்கள்: $1_4$ 0 $1_4$ $1_4$
இதன் மொத்த அட்சரங்கள் 14

| $1_4$ | 0 | $1_4$ | $1_4$ |
|---|---|---|---|
| ஸரிகம | கரி | ஸரிகரி | ஸரிகம // |
| ரிகமப | மக | ரிகமக | ரிகமப // |
| கமபத | பம | கமபம | கமபத // |
| மபதநி | தப | மபதப | மபதநி // |
| பதநிஸ் | நித | பதநித | பதநிஸ் // |
| ஸ்நிதப | தநி | ஸ்நிதநி | ஸ்நிதப // |
| நிதபம | பத | நிதபத | நிதபம // |
| தபமக | மப | தபமப | தபமக // |
| பமகரி | கம | பமகம | பமகரி// |
| மகரிஸ | ரிக | மகரிக | மகரிஸ// |

தாளம் :- கண்டஜாதி அடதாளம்
கண்டஜாதி அடதாளத்தின் அங்கங்கள்: $1_5$ $1_5$ 0 0
இதன் மொத்த அட்சரங்கள் 14

| $1_5$ | $1_5$ | 0 | 0 |
|---|---|---|---|
| ஸரீகா | ஸாரிகா | மா | மா // |
| ரிகாமா | ரீகமா | பா | பா // |
| கமாபா | காமபா | தா | தா // |
| மபாதா | மாபதா | நீ | நீ// |
| பதாநீ | பாதநீ | ஸ்ா | ஸ்ா // |
| ஸ்நீதா | ஸ்ாநிதா | பா | பா // |
| நிதாபா | நீதபா | மா | மா // |
| தபாமா | தாபமா | கா | கா// |
| பமாகா | பாமகா | ரீ | ரீ // |
| மகாரீ | மாகரீ | ஸா | ஸா // |

தேர்ச்சி 3.0 : இசை உருப்படிகளைச் சுருதி, இராக, தாளத்துடன் பாடிக்காட்டுவார்.

தேர்ச்சிமட்டம் 3.2 : அப்பியாசகான உருப்படிகளை இராக,தாளத்துடன் பாடுவார்.

செயற்பாடு 3.2.6 : "ஏழுமலை மேல்" என்னும் கீதத்தை இராக, தாளத்துடன் பாடுவோம்.

நேரம் : 01 மணி 20 நிமிடங்கள் (02 பாடவேளைகள்)

தர உள்ளீடு : சுருதிப்பெட்டி, ஒலிப்பதிவுநாடா, ஒலிப்பதிவுக்கருவி, கீதம் எழுதப்பட்ட அட்டை செயற்பத்திரம் 3.2.2.6

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :**

படி 3.2.1

- கீதத்தை ஒலிப்பதிவு நாடாவில் ஒலிக்கச் செய்தோ, ஆசிரியர் பாடிக்காட்டியோ செவிமடுக்கச் செய்க.
- செவிமடுப்பதன் மூலம் அதனை இனங்காணச் செய்க.
- இனங்கண்ட பாடலில் பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுக.

- கீதம் அமைந்த இராகம் - சங்கராபரணம்
- தாளம் - திஸ்ரதிரிபுடை
- அப்பியாசகான உருப்படிகளில் அலங்காரங்களுக்குப் பின் கீதம் கற்பிக்கப்படுகிறது.
- முதன் முதலில் சாகித்திய ரூபமாகக் கற்கும் அப்பியாசகான உருப்படிவகை கீதமாகும்.
- கீதத்தில் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற அங்க வித்தியாசங்கள் இல்லை.
- மாணவர் சங்கராபரண இராகத்தின் ஆரோகண, அவரோகணத்தைப் பாடுவதற்கு வழிப்படுத்துக.
- கீதத்தைக் காட்சிப்படுத்தி, அதனைப் பகுதிபகுதியாக ஸ்வர சாகித்தியமாகப் பாட மாணவர் தொடர்ந்து பாடுவதற்கு இடமளிக்க.
- மாணவருடன் சேர்ந்து தாளத்துடன் கீதத்தை முழுமையாகப் பாடுக.
- மாணவரைச் சிறிய குழுக்களாகவும், எழுமாற்றாகத் தெரிவு செய்து தனித்தனியாகவும் பாடச் சந்தர்ப்பம் வழங்குக.

(30 நிமிடம்)

படி 3.2.2

- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப மாணவரைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தை இணைப்புடன் கொடுத்து கீதத்தைப் பாடுவதற்குப் பயிற்சி பெற வழிகாட்டுக.
- ஒவ்வொரு குழுவும் கீதத்தைச் சரியாகப் பாடிப் பயிற்சி செய்கிறார்களா என்பதை உறுதிப்படுத்துக.

(30 நிமிடம்)

படி 3.2.3

- ஒவ்வொரு குழுவும், குழுவாகவும், தனியாகவும் கீதத்தைப் பாடச் சந்தர்ப்பம் வழங்குக.
- ஒரு குழு பாடும் போது, ஏனைய குழுக்கள் அதனை அவதானித்து தமது கருத்துக்களைத் தெரிவிக்க இடமளிக்க.
- குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடலொன்றை மேற்கொள்க.
- மாணவரின் குறைகளை இனங்கண்டு முழுமைப்படுத்துக.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் மீளவும் கலந்துரையாடுக.

| |
|---|
| • 'ஏழுமலை மேல்' என்னும் கீதம் சங்கராபரண இராகத்தில் திஸ்ர திரிபுடை தாளத்தில் அமைந்துள்ளது. |
| • அப்பியாசகான உருப்படிகளில் அலங்காரங்களுக்குப் பின் கீதம் கற்பிக்கப்படுகிறது. |
| • முதன் முதலில் சாகித்திய ரூபமாகக் கற்கும் அப்பியாசகான உருப்படிவகை கீதமாகும். |
| • பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற அங்க வேறுபாடுகள் கீதத்தில் இல்லை. |
| • மாணவருடன் சேர்ந்து கீதத்தை முழுமையாகப் பாடுக. |

(20 நிமிடம்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்:**

- 'ஏழுமலை மேல்' என்னும் கீதம் அமைந்துள்ள இராக, தாளத்தைக் குறிப்பிடுவர்.
- கீதத்தை இராக, தாளத்துடன் பாடுவர்.

## செயற்பத்திரம் - 3.2.2.6

சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குக

| |
|---|
| • 'ஏழுமலை மேல்' என்னும் கீதத்தை இராக தாளத்துடன் பாடிப் பயிற்சி செய்க. |
| • குறித்த கீதத்தை இராக, தாளத்துடன் பாடுக. |

## சஞ்சாரி கீதம் (ஏழு மலை)

இராகம் - சங்கராபரணம்

தாளம் - திஸ்ர திரிபுடை

29 வது மேளகர்த்தா இராகம்

ஆரோகணம் - ஸ ரி க ம ப த நி ஸ்

அவரோகணம - ஸ நி த ப ம க ரி ஸ

இதன் ஸ்வரஸ்தானங்கள் : - ஸட்ஜம், சதுஸ்ருதி ரிஷபம். அந்தரகாந்தாரம், சுத்தமத்திமம், பஞ்சமம், சதுஸ்ருதிதைவதம், காகலிநிஷாதம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| $1_3$ | 0 | 0 | $1_3$ | 0 | 0 |
| பா ம / | கம / | பா // | பமப / | கா / | மரி // |
| ஏழு | மலை | மேல் | எழுந்த | ஜோ. | தியே |
| ப ம க / | ரீ / | ஸா // | ஸதநி / | ஸா / | ஸா // |
| எம்பெரு | மா. | னே. | இரங்கி | வா | வா |
| ரி நி ஸ / | ரிக / | மரி // | மகம / | பா / | பா // |
| இதுவே | தரு | ணம் | சரண | சே / | வை |
| த நி ப / | தநி / | ஸ்ா // | ஸ்தநி / | ஸ்ா / | ஸ்ா // |
| எளியற் | கருள் | வாய் | இனிய | கோ. | வே |
| ரி நி ஸ் / | தநி / | ஸ்ரி // | ஸ்நிஸ் / | ரிக் / | ம்ரி // |
| பதம | லரை | நினைந் | துருகி | நா. | டியே |
| ம் க் ம் / | ரிக் / | ஸ்ரீ // | ஸ்தநி / | ஸ்ரி / | ரீ // |
| இளைத்து | மெலிந் | தபின் | கதியு | னைய | லால் |
| க் ரி ஸ் / | ரிக் / | ம்ா // | க்ரிஸ் / | ரிக் / | ஸ்ரி // |
| காண்கி | லே. | னே | கருணை | வடி | வமே |
| ஸ் நி க் / | ரிஸ் / | நித // | பமப / | கரி / | ஸா // |
| கனக | மலர்ப் | பதம் | அருள் | வர | தா |

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 3.0 | : | இசை உருப்படிகளைச் சுருதி, இராக, தாளத்துடன் பாடிக்காட்டுவார் |
| தேர்ச்சிமட்டம் 3.2 | : | அப்பியாசகான உருப்படிகளை இராக, தாளத்துடன் பாடுவார். |
| செயற்பாடு 3.2.7 | : | தானவர் ணத்தின் பூர்வாங்கப் பகுதியை இராக, தாளத்துடன் பாடுவோம்.<br>நின்னுகோரி- மோகனம் / ஆலிலைமேல்- மோகனம் /<br>ஸாமிநின்னோ - சங்கராபரணம் |
| நேரம் | : | 02 மணித்தியாலம் (03 பாடவேளைகள்) |
| தர உள்ளீடு | : | சுருதிப்பெட்டி அல்லது ஹார்மோனியம், வர்ணம் ஸ்வரசாகித்தியமாக எழுதப்பட்ட அட்டை, மோகனம், சங்கராபரணம் ஆகிய இராகங்களின் ஆரோகணம், அவரோகண வரைபடம். செயற்பத்திரம் 3.1.2.7 |

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :**

படி 3.1.1 :

- எடுத்துக் கொண்ட வர்ணத்தின் பூர்வாங்கப் பகுதியை முழுமையாகப் பாடியோ/ஒலிப்பதிவுக் கருவி மூலம் ஒலிக்கச் செய்தோ மாணவரைச் செவிமடுக்கச் செய்க.
- செவிமடுப்பதன் மூலம் அதனை இனங்காணச் செய்க.
- மாணவர் இனங்கண்ட பாடலில் பின்வரும் விடையங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுக.

- எடுத்துக் கொண்ட தான வர்ணம் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்துக.
- தான வர்ணத்தின் அமைப்பானது பல்லவி, அனுபல்லவி, முத்தாயிஸ்வரம், சரணம், சரண ஸ்வரங்கள் என்பதைப் பற்றிக் குறிப்பிடுக.
- தற்போது எடுத்துக் கொண்ட பகுதியானது பல்லவி, அனுபல்லவி, முத்தாயி ஸ்வரங்களைக் கொண்ட பூர்வாங்கப் பகுதி என்பதையும் மாணவர் அறிந்து கொள்ளச் செய்க.
- எடுத்துக் கொண்ட தான வர்ணத்தின் இராகம், தாளம், இயற்றியவர் பெயர் என்பற்றைக் குறிப்பிடுக.
- தானவர்ணத்தைப் பாடுவதனால் உருப்படிகளை அழகுப்படுத்தி மெருகுடனும், கமகத்துடனும் பாடுவதற்குப் பயிற்சி ஏற்படுகின்றதென்பதை வலியுறுத்துக.
- எடுத்துக் கொண்ட வர்ணம் அமைந்துள்ள இராகத்தின் ஆரோகண - அவரோகணத்தை மாணவர் பாடுவதற்கு வழிப்படுத்துக.
- தானவர்ணத்தின் பூர்வாங்கப் பகுதியை ஸ்வர, ஸாகித்தியரூபமாகப் பகுதி பகுதியாக கற்பிக்க, மாணவர் அதனைச் செவிமடுத்துப் பாட வழிப்படுத்துக.
- தானவர்ணத்தின் பூர்வாங்கப் பகுதியை இராக, தாளத்துடன் பாட மாணவர் தொடர்ந்து பாடுவதற்கு இடமளிக்க.
- தானவர்ணத்தின் பூர்வாங்கப் பகுதியை முதலாம், இரண்டாம் காலத்தில் பாடுவதற்கு நெறிப்படுத்துக.
- மாணவருடன் சேர்ந்து இராக தாளத்துடன் பூர்வாங்கப் பகுதியைப் பாடுக.
- மாணவரைக் குழுவாகவும், எழுமாற்றாகத் தெரிவு செய்து தனியாகவும் பாடச் சந்தர்ப்பம் வழங்குக.

(45 நிமிடம்)

படி 3.2.2

- மாணவரைக் குழுக்களாகப் பிரித்து செயற்பதித்தை இணைப்புடன் வழங்கி தானவர்ணத்தின் பூர்வாங்கப் பகுதியை ஸ்வர ஸாகித்யமாக 1ம் 2ம் காலங்களில் பயிற்சி செய்ய வழிப்படுத்துக.

- ஒவ்வொரு குழுவும் சரியாகப் பாடிப்பழகுகின்றார்களா என்பதை உறுதிப்படுத்துக.

(45 நிமிடம்)

படி 3.1.3

- ஒவ்வொரு குழுவும் குழுவாகவும், தனியாகவும் வர்ணத்தின் பூர்வாங்கப் பகுதியைப் பாடச் சந்தர்ப்பம் வழங்குக.

- ஒரு குழு பாடும்போது, ஏனைய குழுக்கள் அதனை அவதானித்து தமது கருத்துக்களைத் தெரிவிக்க இடமளிக்க.

- ஒரு குழு ஸ்வரப்பகுதியைப் பாட மறு குழு அதன் சாகித்தியப் பகுதியைப் பாடும்படி செய்து இதேபோன்று மறு குழுவையும் இச் செயற்பாட்டில் ஈடுபடச் சந்தர்ப்பம் வழங்குக.

- மாணவரின் குறைகளை இனங்கண்டு முழுமைப்படுத்துக.

- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடுக.

- எடுத்துக் கொண்ட தானவர்ணமானது பல்லவி, அனுபல்லவி, முக்தாயிஸ்வரம், சரணம், சரண ஸ்வரங்கள் என்னும் அமைப்பினைக் கொண்டது.

- 'நின்னுக்கோரி' என்னும் வர்ணம் மோகன இராகத்திலும் ,
'ஆலிலைமேல்' என்னும் வர்ணம் மோகன இராகத்திலும்
'ஸாமிநின்னே' என்ற வர்ணம் சங்கராபரண இராகத்தில் அமைந்துள்ளது.

- இம் மூன்று வர்ணங்களும் ஆதிதாளத்தில் அமைந்துள்ளது.

- நின்னுக்கோரி என்னும் வர்ணம் இராமநாதபுரம் ஸ்ரீநிவாஸய்யங்காராலும் ஸ்வாமிநின்னே என்னும் வர்ணம் வீணைகுப்பய்யராலும் ஆலிலைமேல் என்னும் வர்ணம் டைகர் வரதராச்சாரியராலும் இயற்றப்பட்டுள்ளது.

- தானவர்ணத்தினைப் பாடுவதனால் உருப்படிகளை அழகுடனும், மெருகுடனும், கமகத்துடனும் பாட வழிவகுக்கின்றது.

- எடுத்துக் கொண்ட தானவர்ணத்தின் பூர்வாங்கப் பகுதியை ஸ்வர ஸாகித்யமாக, இராக, தாளத்துடன் 1ஆம், 2ஆம் காலங்களில்ப் பாடுக.

(30 நிமிடம்)

**கணிப்பீட்டு, மதிப்பீட்டு நியதிகள்:-**

- எடுத்துக் கொண்ட தானவர்ணத்தின் இராக, தாளம், இயற்றியவர் பெயர் என்பவற்றைக் குறிப்பிடுவர்.
- எடுத்துக் கொண்ட வர்ணத்தின் பூர்வாங்கப் பகுதியை இராக, தாளததுடன் பாடுவர்.

## செயற்பத்திரம் 3.2.2.7

சகல குழுவிற்கும் இச் செயற்பத்திரத்தை வழங்குக

- கற்றுக் கொண்ட தானவர்ணத்தின் பூர்வாங்கப் பகுதியை ஸ்வர, ஸாகித்தியமாக இராக தாளத்துடன் பாடுக.
- கற்றுக் கொண்ட வர்ணத்தின் பூர்வாங்கப்பகுதியை ஸ்வர, ஸாகித்தியமாக இராக, தாளத்துடன் பாடுக.

# தான வர்ணம்

இராகம் - மோகனம் தாளம் - ஆதி

ஆ - ஸ ரி க ப த ஸ்
அ - ஸ் த ப க ரி ஸ } (28 ஆவது) மேள கர்த்தாவின் ஜன்யம்

இயற்றியவர் - இராமநாதபுரம் ஸ்ரீநிவாஸய்யங்கார்

இவ்விராகத்தில் வரும் ஸ்வரஸ்தானங்கள் : ஸட்ஜம், சதுஸ்ருதிரிஷபம். அந்தரகாந்தாரம், பஞ்சமம் சதுஸ்ருதிதைவதம்

## பல்லவி

$1_4$ 0 0

கா கா ரீ; ஸஸரிரி ககரிரி / ஸரிகரி ஸரிஸத / ஸரிகப கரிஸரி //
நின்னு கோ.ரி .. யு - ன் ன .. னு .. ரா .. ....

கபககரிஸ - ரிகரிரி ஸத ஸரிகரி / கபக- பதப - தஸ் / தாப கதபகரி //
நி.......... கி... ..... ல் .... லோ க ... நா ய. கா.....

## அனுபல்லவி

கா கா பா; ககபப ததபா / தஸ்தத பகதப / தகதப கரிஸரி //
நன்னு பா. லி .. ம் - ப வை.. .. .. யா .. .....

ககபப தப -தஸ்த ஸ்ரிஸ் - க்ரீஸ் / தஸ்ரீஸ்தா - பத / ஸ்தாப கரிஸரி //
ந ... மீ .. த .. க்ரு. ப .. ஜீ ... ட ... ரா .. ... ... ... ..

## முக்தாயிஸ்வரனம்

காரிக- ரிஸரீ- ஸரிஸக ரிகஸரி / ஸதஸரி கரிகப / கபதா பா ;//
கபதப- தஸ்ரிக்- ரீக்ஸ்ாரி - தா / ஸ்பாத - ஸ்ரீக்ஸ் / ,தபா கரிஸரி //

## சரணம்

கா கா கா,ரி ரிகபக பாபா / கக தத பா - கத / தப - கபகரிஸரி //
ஸன்னு தா. ங க... ஸ்ரீ... நி... ... .. .. வா .. ஸ

(1) கா; ரீ ஸா ரீ ; தா ; / ரீ தா ஸா ; / ரீ ; கா ரீ //
(ஸன்னு)

(2) காகரி கரிஸரி - காக - பததஸரி / காக - கதபகரி / காக - ஸ்தபகரி //
(ஸன்னு)

(3) பாதத பாகரி - ஸாரிக - ரீஸத / ஸாரிக - பாதா / ஸ்ஸ்ாத பாகரி //

(4) ஸ்ா ரிக்ரிஸ் - ரிஸ்த - ஸ்தப கரிஸரி / ஸ்ா ; ; ஸஸ / ரிரிகக பபதத //
ஸ்ரிக்ரிக்ரி - தஸ்ரிஸ்ரிஸ - பதஸ்த / ஸ்த - கபதபதப / ரிஸ்தப கரிஸரி //
(ஸன்னு)

# தான வர்ணம்

இராகம் - மோகனம்
தாளம் - ஆதி
இயற்றியவர் - டைகர் வரதாச்சாரியார்

ஆ -ஸரிகபதஸ்
அ -ஸ்தபகரிஸ
} 28 வது மேளத்திற் பிறந்தது

## பல்லவி

காகா - கததப -கரிரிஸ- ரீரீ-- / ரிஸரிககரி- ஸா/ ரி -தஸரி- பதஸரி//
ஆ ...லி . . . . . லை. . .மேல். . . கண்.. . . . . . வ .எர்ந்.. த....

கபதப- ககரீ - பகரி - தபாகரி / ஸ்தஸ்- பதகப- க / தபகரி- ஸதஸரி//
நீ......... ல..... மு... கி... லே மு............... ..குந் .. .. .. ... . தா.....

## அனுபல்லவி

தப தா தா - பகரி - கபக - தாதப/ கபத-ரிகப - ஸா/ ரிகபத - ஸ்ா; //
சோ.....லை - ம... - லை -. . . . . மா. . . .. . . த வ.... ........னே...
ஸ்தஸ்பா- தஸ்ரி- க்க்ரி - ப்க்ரிஸ்ரி / ஸ்தரிரி- ஸ்ஸதப-/ தஸ்தப - கரிஸரி//
சோ. . .. . ...-தி . . ....யு.. . . .........ரு... ..வா...........ன.............. வ...............னே...........

## முக்தாயிஸ்வரம்

காபத- பகாரி- ஸரிகரி- ஸரிஸத / ஸபத - ஸாரி ஸரி / கப- ஸதபகபா //
கபதபகரி- ஸாரி - தஸரி -கபதா / ஸ்தா - க்ரிஸ்தப- / ஸ்தப- பகரிஸரி

## சரணம்

தா தா - தாபக - பதஸ்த - பகதப / தா,- ஸ்தப - கப / ,.கரிஸ - தஸரிகப //
பா-....................................ல.............................. னை........க்.........கா ...ப்- பா.......யே

## சிட்டைஸ்வரங்கள்

1. தா; - பா; - காபா -, ரீக / ஸா, - ரீ, - தா / ,. ஸாரீ - காப //
(பால)

2. தாஸ்த-பகரிக-தாபகரி-ஸரிக/ தாஸரி - கபதஸ்/ தஸ்தப - கரிகப //
(பால)

3. தஸ் - பதஸ் - கபதஸ் - ரிகபத-ஸ்தப/கரிஸ-பகரிஸ-த/ பகரிஸ-கரிகப //
தபதஸ்ரி-க்ரிக்ஸரிகப-தஸ்ரிக்/ ப்க்ரிஸ்ரிக்-ஸ்த/ பகரிஸ-கரிகப//
(பால)

ஸ்ா, தஸ்ரிஸ்ா - தஸ்தப - கரிஸத / ஸா, ரி தா ஸ ரி/ , கப - ஸரிகபத //
ஸ்தபக - பாதஸ் - தபத -கபகபரி / பகரி-கபககரி/ ஸதஸரி-கபதா//
பகரி-கதபதா-ஸ்தாஸ் பதகப / தபத - கபதாத / பகபத - ஸ்ா ; //
ரீஸ்தப -தாக் - தஸ்ரி - க்ாரி -பக்ரீ / ஸ்தஸ்ரிக்-ஸ்தப / கரிஸா,- ரிகப//
(பால)

# தான வர்ணம்

இராகம் - சங்கராபரணம் (29 ஆவது)

தாளம் - ஆதி

ஆ - ஸ ரி க ம ப த நி ஸ்
அ - ஸ் நி த ப ம க ரி ஸ

இயற்றியவர் - வீணைகுப்பய்யர்

ஸட்ஜ பஞ்சமத்தை தவிர இவ்விராகத்தில் வரும் ஸ்வரஸ்தானங்கள், சதுஸ்ருதிரிஷபம், அந்தர காந்தாரம், சுத்தமத்திமம், சதுஸ்ருதிதைவதம் காகலிநிஷாதம்.

## பல்லவி

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | $1_4$ | | 0 | | 0 | |
| ஸ்ா; | நிஸ்தநி | பாமப | காமா/ | பாதநி | பாதநி / | ஸ்ரிஸ்நி | தபதநி // |
| ஸா.................... | | மி....... | நின் | னே .. | கோ | ....... | ரி.. |
| ஸ்ாஸ்த | பமபா | பமகரி | ஸரிகஸ/ | நிபதநி | ஸாபம / | கரிகம | பாதநி// |
| சால | ..ம | ரு..... | லு.. | கொ .... | ன்... ன..... | தி..... | ர...... |

## அனுபல்லவி

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஸாதத | பமதபா. | மகப | காமரி / | கமபத | தபமப / | தநிஸ்நி | ஸ்ாரிக்// |
| தா... | ....ம | ஸ.... | ........ | மு ...ஸே.... | ய | .............. | க..... |
| ம்க்ரிஸ் | ஸ்ரிஸ்நி | தபதநி | ஸ்ரிஸ / | ஸ்தபப, | மகரி / | ஸமகம | பாதநி // |
| த ......ய | ..ஜ" | ...ட | ..... ர | ... | கு... | மா .... | ரா ... |

## முக்தாயிஸ்வரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஸ்ரிநிஸ் | தநிஸ்ப | தநிஸ்த | பமபத / | மபகம | பரிகம / | ஸரிகம | பதநிஸ் // |
| ரிக்ம்க் | ரிக்ரிஸ் | நிபதநி | ஸ்ாபா / | ஸ்நிதப, | மகரி / | ஸரீக | மபதநி // |

## சரணம்

பாதநி ஸ்ஸ்நித பமகரி காமா / பாமத, பஸ்நி / தபமக மரிகம //
நீ ... .... ர ...ஜா ..... / சஷி-நீ ...பை ...... ....... //
(1) பா, ம; பா , கா ம, ரீக / ஸா. ரி ; நீ / , ஸாரி, காம //
(நீ ர)
(2) பதாப மகமப , மகம ரிகாரி/ ஸநிதநி பதநிஸ/ ரீநிஸ, ரிகம //
(நீ ர)
(3) மாதப மகமா பகமரி கஸாநி/ ஸமகரி ஸநிதநி/ ஸரிகமபாகம//
பதநிப தநிஸ்ரி/ ஸ்க்ரீ ஸநிதநி/ஸ்ாரிநி தபாத / மகரிஸரிகாம //
(நீ ர)
(4) பாமப கமரிக ஸா-மக ரிஸநிப / தாநிஸ ரிஸநீ / ஸரிகம பாதப//
ஸ்ாநிரீ ஸ்ம்க் ரிக்ஸ்ா நிபதநி / ஸ்ாஸ்ா நிதபா/ மகரிஸ, ரிகம//
(நீ ர)

தேர்ச்சி 3.0 : இசை உருப்படிகளை இராக, தாளத்துடன் பாடுவார்.

தேர்ச்சிமட்டம் 3.2 : அப்பியாசகான உருப்படிகளை இராக தாளத்துடன் பாடுவார்.

செயற்பாடு 3.2.8 : தானவர்ணத்தின் உத்தராங்கப் பகுதியை இராக, தாளத்துடன் பாடுவோம்.

நின்னுகோரி - மோகனம் / ஆலிலைமேல் - மோகனம்

ஸாமிநின்னே - சங்கராபரணம்

நேரம் : 2 மணித்தியாலம் (03 பாடவேளைகள்)

தர உள்ளீடு :

- சுருதிப்பெட்டி அல்லது ஹார்மோனியம்
- தானவர்ணம் ஸ்வரசாகித்யமாக எழுதப்பட்ட அட்டை.
- மோகனம், சங்கராபரண இராக ஆரோகண அவரோகண வரைபடம்
- செயற்பத்திரம் 3.2.2.8

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :**

படி 3.2.1

- எடுத்துக் கொண்ட வர்ணத்தின் உத்தராங்கப் பகுதியை முழுமையாகப் பாடியோ ஒலிப்பதிவுக் கருவி மூலம் ஒலிக்கச் செய்தோ மாணவரைச் செவிமடுக்கச் செய்க.
- செவிமடுப்பதன் மூலம் அதனை இனங்காணச் செய்க.
- மாணவர் இனம் கண்ட வர்ணத்தின் உத்தராங்கப் பகுதியில் பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுக.
- எடுத்துக்கொண்ட தான வர்ணம் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்துக.
- எடுத்துக்கொண்ட வர்ணத்தின் அமைப்பிலே எற்கனவே கற்ற பூர்வாங்கப் பகுதியைப் பாடி இதனை அடுத்து உத்தராங்கப் பகுதியை பாடவேண்டும் என்பதை வலியுறுத்துக.

- உத்தராங்கப் பகுதியானது சரணம், சரண ஸ்வரங்களைக் கொண்ட பகுதியாகும்.
- வர்ணம் அமைந்துள்ள இராகத்தின் ஆரோகண, அவரோகணத்தை மாணவர் பாடுவதற்கு இடமளிக்க.
- தானவர்ணத்தின் சரணம் சரண ஸ்வரங்களைப் பகுதி பகுதியாகப் பாட மாணவர் அதனைச் செவிமடுத்துப் பாடுவதற்கு வழிப்படுத்துக.
- தானவர்ணத்தின் சரணம், சரண ஸ்வரங்களை இராக, தாளத்துடன் பாட மாணவர் தொடர்ந்து பாடுவதற்கு இடமளிக்க.
- தானவர்ணத்தின் உத்தராங்கப் பகுதியை இரண்டாம் காலத்தில்ப்பாட மாணவர் தொடர்ந்து பாடுவதற்கு நெறிப்படுத்துக.
- மாணவருடன் சேர்ந்து இராக, தாளத்துடன் உத்தராங்கப் பகுதியைப் பாடுக.
- மாணவருடன் சேர்ந்து எடுத்துக்காண்டவர்ணத்தை இராக, தாளத்துடன் முழுமையாகப் பாடுக.
- மாணவரை குழுவாகவும் ,எழுமாற்றாகத் தெரிவு செய்து தனித்தனியாகவும் பாடச்சந்தர்ப்பம் வழங்குக.

(45 நிமிடம்)

படி 3.2.2

- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப மாணவரைக் ்களாகப் பிரித்து செயற்பத்திரத்தைக் கொடுத்து தானவர்ணத்தினை ஆம் 2ஆம் காலத்தில் பாடிப் பயிற்சி பெற வழிப்படுத்துக.
- ஒவ்வொரு குழுவும் தானவர்ணத்தினைச் சரியாகப் பாடிப் பயிற்சி செய்கிறார்களா என்பதை உறுதிப்படுத்துக.

(45 நிமிடங்கள்)

படி 3.2.3

- ஒவ்வொரு குழுவும், குழுவாகவும், தனியாகவும் தானவர்ணத்தினைப் பாடச் சந்தர்ப்பம் வழங்குக.
- ஒரு குழு 1ஆம் காலத்தில் பாட மற்றய குழு அதனை 2ஆம் காலத்தில் பாடிப் பூர்த்தி செய்ய வழிப்படுத்துக.
- ஒரு குழு பாடும் போது ஏனைய குழுக்கள் அதனை அவதானித்துத் தமது கருத்துக்களைத் தெரிவிக்க இடமளிக்க.
- தவறுகள் இருப்பின் அவற்றைத் திருத்தி முழுமை பெறச் செய்க.
- குழுச் செயற்பாட்டில் பெற்ற விடயங்களை அடிப்படையாகக் கொண்டு மாணவர்களை மீளவும் பாடச் செய்து நெறிப்படுத்துக.

> - எடுத்துக் கொண்ட வர்ணத்தின் ஏற்கனவே கற்ற பூர்வாங்கப் பகுதியைப் பாடி அதனைத் தொடர்ந்து உத்தராங்கப் பகுதியை பாட வழிப்படுத்துக.
> - மாணவருடன் சேர்ந்து எடுத்துக்கொண்ட தான வர்ணத்தை ஸ்வர ஸாகித்தியமாக இராக, தாளத்துடன் முழுமையாகப் பாடுக. (பூர்வாங்கம், உத்தராங்கம்)
> - முதலாங்காலத்தில் பாடிய பின் மாணவருடன் சேர்ந்து வர்ணத்தை முழுமையாக இரண்டாங்காலத்திலப் பாடுக.

(30 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்:**

- எடுத்துக்கொண்ட தானவர்ணத்தின் உத்தராங்கப் பகுதியின் அமைப்பையும், பாடும் முறையையும் வெளிப்படுத்துவர்.
- எடுத்துக் கொண்ட தானவர்ணத்தின் உத்தராங்கப் பகுதியை இராக தாளத்துடன் பாடுவர்.
- எடுத்துக்கொண்ட தானவர்ணத்தை முழுமையாக இராக, தாளத்துடன் பாடுவர்.

## செயற்பத்திரம் 3.2.2.8

சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குக.

> - நின்னுக்கோரி அல்லது ஆலிலைமேல் அல்லது ஸ்வாமிநின்னே ஆகிய தானவர்ணங்களில் நீர் கற்றுக் கொண்ட தானவர்ணத்தை ஸ்வர, ஸாகித்தியமாக இராக, தாளத்துடன் 1 ஆம் 1ஆம் காலங்களில் முழுமையாகப் பாடிப் பயிற்சி செய்க.
> - கற்றுக்கொண்ட தானவர்ணத்தை ஸ்வர, ஸாகித்தியமாக இராக, தாளத்துடன் 1 ஆம், 2 ஆம் காலங்களில் முழுமையாகப்பாடுக.

தேர்ச்சி 3.0 : இசை உருப்படிகளைச் சுருதி, இராக, தாளத்துடன் பாடிக்காட்டுவார்.

தேர்ச்சிமட்டம் 3.3 : இசை உருப்படிகளை இராக, தாளத்துடன் பாடுவார்.

செயற்பாடு 3.3.4 : "மூலாதார மூர்த்தி" என்னும் கீர்த்தனையை இராக, தாளத்துடன் பாடுவோம்.

நேரம் : 01 மணி 20 நிமிடங்கள் (02 பாடவேளைகள்)

தர உள்ளீடு : சுருதிப்பெட்டி, ஒலிப்பதிவு நாடா, ஒலிப்பதிவுக் கருவி கீதம் எழுதப்பட்ட அட்டை செயற்பத்திரம் 3.3.2.4

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :**

படி 3.3.1

- கீர்த்தனையை ஆசிரியர் பாடிக்காட்டியோ ஒலிப்பதிவு நாடாவில் ஒலிக்கச் செய்தோ மாணவரைச் செவிமடுக்கச் செய்க.
- செவிமடுப்பதன் மூலம் அதனை இனங்காணச் செய்க.
- இனங்கண்ட பாடலில் பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுக.

> - கீர்த்தனையின் இராகம் - ஹம்சத்வனி.
> - அதன் தாளம் - ஆதி
> - பல்லவி, அனுபல்லவி, சரணம் என்னும் அங்க வித்தியாசங்களுடன் கூடிய அமைப்பு முறையைக் கீர்த்தனை கொண்டுள்ளது.
> - மாணவர் ஹம்சத்வனி இராகத்தின் ஆரோகண, அவரோகணத்தைப் பாடுவதற்கு நெறிப்படுத்துக.
> - கீர்த்தனையைக் காட்சிப்படுத்தி, அதனைப் பகுதி பகுதியாகப் பாட மாணவர் தொடர்ந்து பாடுவதற்கு இடமளிக்க.
> - மாணவருடன் சேர்ந்து தாளத்துடன் கீர்த்தனையை முழுமையாகப் பாடுக.
> - மாணவரை சிறிய குழுக்களாகவும் எழுமாற்றாகத் தெரிவுசெய்து தனித்தனியாகவும் பாடச் சந்தர்ப்பம் வழங்குக.

(30 நிமிடம் )

படி 3.3.2

- வகுப்பிலுள்ள மாணவர் தொகைக்கேற்ப மாணவரைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தை இணைப்புடன் வழங்குக.
- ஒவ்வொரு குழுவும் அறிவுறுத்தலுக்கேற்ப கீர்த்தனையைச் சரியாகப் பாடிப் பயிற்சி செய்கிறார்களா என்பதை உறுதிப்படுத்துக.

(30 நிமிடம்)

படி 3.2.3

- ஒவ்வொரு குழுவும், குழுவாகவும், தனியாகவும் கீர்த்தனையைப் பாடச் சந்தர்ப்பம் வழங்குக.
- மாணவரின் குறைகளை இனங்கண்டு முழுமைப்படுத்துக.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடுக.

- கீர்த்தனை அமைந்துள்ள இராகம் - ஹம்சத்வனி
- தாளம் - ஆதி
- இயற்றியவர் - பாபநாசம்சிவன்
- கீத்தனையானது பல்லவி, அனுபல்லவி, சரணம் எனும் அங்கவித்தியாசங்களையுடைய உருப்படியாகும்.
- கீர்த்தனையை மாணவருடன் சேர்ந்து முழுமையாகப் பாடுக.

(20 நிமிடம்)

**கணிப்பீட்டு, மதிப்பீட்டு நியதிகள் :**

- மூலாதாரமூர்த்தி என்னும் கீர்த்தனை அமைந்துள்ள இராகத்தைக் கூறுவர்.
- அதன் தாளத்தைக் குறிப்பிடுவர்.
- கீர்த்தனையை இராக தாளத்துடன் பாடுவர்.

## செயற்பத்திரம் 3.3.2.4

சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குக.

- 'மூலாதார மூர்த்தி' என்னும் கீர்த்தனையை இராக, தாளத்துடன் பாடுக பாடிப் பயிற்சி செய்க.
- குறித்த கீர்த்தனையை இராக, தாளத்துடன் பாடுக.

# கீர்த்தனை
## மூலாதார மூர்த்தி

இராகம் :- ஹம்ஸத்வனி — தாளம் : ஆதி

ஆ ஸரிகபநிஸ } 29
அ ஸ்நிபகரிஸ

இயற்றியவர் :- பாபநாசம்சிவன்

### பல்லவி

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பா,ஸ் | நிபபா | காரீ | காகா | / | பா; | ;; | / | ;; | காபா | // |
| | மூல | ,, தா | .ர | மூர்த் | / | தி | .. | / | ,, | கஜ | // |
| | ஸ்ாநீ | ஸ்ா | நீஸ்ா | .ரீபா | / | நீஸ்ா | காபா | / | நிநீ | பாகா | // |
| | முக | னே | சர | ணம்உ_ | / | னது | உப | / | ஹுயுயச | ரணம் | // |
| 2) | பாரிஸ் | நிபகப | காரீ | காகா | / | பாரிஸ் | பா; | / | ;; | காபா | // |
| | மூ.ல | ..த. | .ர | மூர்த் | / | தி.. | . | / | . . | கஜ | // |
| | .ரீரீ. | ஸ்ா | நீஸ்ா | .ரீபா | / | நீஸ்ா | காபா | / | நிரிஸ்நி | பாகா | // |
| | முக | னே. | சர | ணம்உ_ | / | னது | உப | / | ய.ச. | ரணம் | // |
| 3) | பநிரிஸ் | நிபகப | காரீ | காகா | / | பா; | . . | / | . . | . . | // |
| | மூ. ல | ..த .. | ர | மூர்த் | / | தி | . . . | / | . . | . . | // |

### அனுபல்லவி

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கபாஸ் | ; நீ | ஸ்ா; | ரீரீ | / | க்ாக்ா | க்ரிரீ | / | ஸ்ாக்ரி | ஸ்நிஸ்ா | // |
| வே.ல | .யு | த. | குஹன் | / | தனக் | குமுன் | / | தோன்.. | றி.ய | |
| ஸநிபஸ்; | ஸ்நி | ஸ்ா; | ரீரீ | / | க்ாக்ப் | க்ாரீ | / | ஸ்ரிக்ரி | ஸ்நிஸ்ா | // |
| வே.ல | .யு. | த. | குஹன் | / | தனக் | குமுன் | / | தோன்.. | றி.ய | |
| ஸ்ரீஸ். | .நிஸ்ா | .நீஸ் | நிகபநி | / | ஸ்நிபா | ;கப | / | காஸா | ரிகபநி | // |
| விமலா | .உமை | .யாள்த | ருமகனே | | அமலா | .எமை | / | யாள்மு | னிவர் தொழும். | // |

### சரணம்

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பாநீ | பாநீ | பாஸ்நி | பாகா | / | பாஸ்நி | பாகா | / | பநிபா | காரீ | // |
| அன் | புடன் | தும்.. | பைஅ | / | றுகம் | .புல் | / | ..லை | எடுத் | // |
| காகப | காரீ | ரிஸாரி | ; கா | / | பா,ஸ் | நிஸ்ாநி | / | பா ; | பாபக | // |
| தருச் | சனை | செய். | தாலும் | / | போ. | தும். | / | .. | அன்பர் | // |
| பா ஸ்ா | ; ஸ்நி | ஸ்ா, | ஸ்; ஸ்ரி | / | க்ாரீ | ; ஸ்ா | / | ஸ்நிக்ரி | ஸ்நிஸ்ா | // |
| துன்பம் | .து | டைத் | .துப்பே | / | ரின்பம் | .த | / | ரும்.வ. | ர.தா | // |
| ஸ்ாக்ரி | ; ஸ்நி | பாஸ்ப | ஸ்நிபா | / | கா; | ரீஸ | / | ரீகா | பாநீ | // |
| துணை | .. புரி | ப்ரண | வா.. | / | கா; | ரக | / | ணப | தியே | // |
| ஸ்க்ரிஸ் | நிபகா | ; ரீ | காகா | / | பா ; | ;; | / | ;; | ;; | // |
| மூலா | ..தா | ர | மூர்த் | / | தி.. | .. | | | | |

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 3.0 | : | இசை உருப்படிகளை சுருதி இராக, தாளத்துடன் பாடிக்காட்டுவார். |
| தேர்ச்சிமட்டம் 3.3 | : | இசை உருப்படிகளை இராக, தாளத்துடன் பாடுவார். |
| செயற்பாடு 3.3.5 | : | 'திமிரஉததி' என்னும் திருப்புகழை இராக, தாளத்துடன் பாடுவோரி. |
| நேரம் | : | 40 நிமிடங்கள் (01 பாடவேளை) |
| தர உள்ளீடு | : | சுருதிப்பெட்டி/ஹார்மோனியம், திருப்புகழ் எழுதப்பட்ட அட்டை செயற்பத்திரம் 3.3.2.5 |

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :**
படி 3.3.1

- திமிர உததி என்னும் திருப்புகழைப் பாடிக்காட்டி மாணவரைச் செவிமடுக்கச் செய்க.
- செவிமடுப்பதன் மூலம் அதனை இனங்காணச் செய்க.
- இனங்கண்ட பாடலில் பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுக.

> - சந்தப் பாவலர் என அழைக்கப்படும் அருணகிரி நாதரால் திருப்புகழ் பாடப்பட்டது.
> - சந்தங்களைப் பிரதானமாகக் கொண்ட உருப்படியே திருப்புகழ் ஆகும்.
> - திமிர உததி என்னும் திருப்புகழ் மோகன இராகத்தில், ஆதி தாளத்தில் (திஸ்ரநடை) அமைந்துள்ளது.
> - இதன் சந்தம் - தனன தனன தனன தனன //
>   தனன தனன தனன தானா //
> - பாடப்பெற்ற தலம் - பழநி
> - திருப்புகழ் என்னும் உருப்படி பெருமானே என்ற சொல்லில் முடிவடையும்.
> - திருப்புகழைக் காட்சிப்படுத்தி பகுதி பகுதியாகப் பாட மாணவர் தொடர்ந்து பாடுவதற்கு இடமளிக்க.
> - மாணவருடன் சேர்ந்து திருப்புகழைச் சந்த அமைப்பிற்கேற்ப இராக, தாளத்துடன் முழுமையாகப் பாடுக.
> - மாணவரைச் சிறிய குழுக்களாகவும் எழுமாற்றாகத் தெரிவு செய்து தனித்தனியாகவும் பாடச் சந்தர்ப்பம் வழங்குக.

(15 நிமிடம்)

படி 3.3.2

- வகுப்பிலுள்ள மாணவர் தொகைக்கேற்ப மாணவரைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தை இணைப்புடன் வழங்குக.
- ஒவ்வொரு குழுவும்அறிவுறுத்தலுக்கேற்ப திருப்புகழைப்பாடிப் பயிற்சி செய்கிறார்களா என்பதை உறுதி செய்க.

(15 நிமிடம்)

படி 3.3.3

- ஒவ்வொரு குழுவும் குழுவாகவும் தனித்தனியாகவும் திருப்புகழைப் பாடச் சந்தர்ப்பம் வழங்குக.
- ஒரு குழு பாடும் போது ஏனைய குழுக்கள் அதனை அவதானித்துக் கருத்துக்களைக் கூற இடமளிக்க.
- மாணவரின் குறை களை இனங்கண்டு முழுமைப்படுத்துக.
- பின்வரும் விடயங்களை மீள வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலொன்றை மேற்கொள்க.

| |
|---|
| • தகிட தகிட - தனன, தனன திமிர உததி என்னும் திஸ்ர நடையமைப்பினை மாணவர் தெரிந்து கொள்ளச் செய்க. |
| • திமிர உததி என்னும் திருப்புகழை மாணவருடன் சேர்ந்து சந்த அமைப்பிற்கேற்ப மோகன இராகத்தில், ஆதி தாளத்தில் (திஸ்ரநடை) முழுமையாகப் பாடுக. |

(10 நிமிடம்)

**கணிப்பீட்டு, மதிப்பீட்டு நியதிகள் :**

- திமிர உததி என்னும் திருப்புகழின் இராகம், தாளம், அருளியவர், பாடப்பெற்ற தலம் ஆகியவற்றைக் குறிப்பிடுவர்.
- இத்திருப்புகழை இராக, தாளத்துடன் பாடுவர்.

## செயற்பத்திரம் 3.3.2.5

| |
|---|
| • திமிர உததி என்னும் திருப்புகழை இராக, தாளத்துடன் பாடிப் பயிற்சி செய்க. |
| • குறித்த திருப்புகழை இராக, தாளத்துடன் பாடுக. |

## திருப்புகழ் (திமிரவுததி)

இராகம் - மோகனம்
தாளம் - ஆதி (திஸ்ரநடை)

அருளியவர் - அருணகிரிநாதர்
பாடப்பெற்ற தலம் - பழநி

| | | | |
|---|---|---|---|
| தனன | தனன | தனன | தனன |
| | தனன | தனன | தனதானா |
| திமிர | வுததி | யனைய | நரக |
| | செனன | மதனில் | விடுவாயேல் |
| செவிடு | குருடு | வடிவு | குறைவு |
| | சிறிது | மிடியு | மணுகாதே |
| அமரர் | வடிவு | மதிக | குலமும் |
| | அறிவு | நிறையும் | வரவேநின் |
| அருள | தருளி | எனையு | மனதோ |
| | டடிமை | கொளவும் | வரவேணும் |
| சமர | முகவே | லசுரர் | தமது |
| | தலைக | ளுருள | மிகவே நீள் |
| சலதி | யலற | நெடிய | பதலை |
| | தகர | அயிலை | விடுவோனே |
| வெமர | வணையி | லினிது | துயிலும் |
| | விழிகள் | நளினன் | மருகோனே |
| மிடறு | கரியர் | குமர | பழநி |
| | விரவு | மமரர் | பெருமாளே |

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 3.0 | : | இசை உருப்படிகளை சுருதி, இராக, தாளத்துடன் பாடிக்காட்டுவார். |
| தேர்ச்சிமட்டம் 3.3 | : | இசை உருப்படிகளை இராக, தாளத்துடன் பாடுவார். |
| செயற்பாடு 3.3.6 | : | 'தாயினும் நல்ல' என்னும் தேவாரத்தினை பண்ணோடு பாடுவோம். |
| நேரம் | : | 40 நிமிடங்கள் (01 பாடவேளை) |
| தர உள்ளீடு | : | சுருதிப்பெட்டி, சல்லாரி, தேவாரம் எழுதப்பட்ட அட்டை, செயற்பத்திரம் 3.3.2.6 |

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :**

படி 3.3.1

- ஆசிரியர் தாயினும் நல்ல என்னும் தேவாரத்தை பாடிக்காட்டி மாணவரைச் செவிமடுக்கச் செய்க.
- செவிமடுப்பதன் மூலம் அதனை இனங்காணச் செய்க.
- இனங்கண்ட பாடலில் பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுக.

- 'தாயினும் நல்ல' என்னும் தேவாரத்தில் அமைந்துள்ள பண் - புறநீர்மை, இராகம் - பூபாளம், தாளம் - ஆதி.
அருளியவர்- திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்,தலம் - திருக்கோணேஸ்வரம் ஆகியவற்றை மாணவர் அறிந்து கொள்ளச் செய்க.
- மாணவர் இத்தேவாரத்தைப் பொருள் உணர்ந்து உச்சரிப்புத் தெளிவுடன் சொல்லுவதற்கு வழிப்படுத்துக.
- தேவாரத்தினைப் பகுதி பகுதியாகப் பாட மாணவர் தொடர்ந்து பாடுவதற்குஇடமளிக்க.
- மாணவருடன் சேர்ந்து தேவாரத்தினை பண்முறைக்கேற்ப தாளத்துடன் முழுமையாகப் பாடுக.
- மாணவரைச் சிறிய குழுக்களாகவும், எழுமாற்றாகத் தெரிவு செய்து, தனித்தனியாகவும் பாடச்சந்தர்ப்பம் வழங்குக.

(15 நிமிடம்)

படி 3.3.2

- வகுப்பிலுள்ள மாணவர் தொகைக்கேற்ப மாணவரைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தை இணைப்புடன் வழங்குக.
- ஒவ்வொரு குழுவும்அறிவுறுத்தலுக்கேற்ப தேவாரத்தினைப்பாடிப் பயிற்சி செய்கிறார்களா என்பதை உறுதி செய்க.

(15 நிமிடம்)

படி 3.3.3

- ஒவ்வொரு குழுவும் குழுவாகவும் ,தனித்தனியாகவும் தேவாரத்தினைப் பாடச் சந்தர்ப்பம் வழங்குக.

- ஒரு குழு பாடும் போது ஏனைய குழுக்கள் அதனை அவதானித்துக் கருத்துக்களைத் தெரிவிக்க இடமளிக்க.

- மாணவரின் குறைகளை இனங்கண்டு முழுமைப்படுத்துக.

- பின்வரும் விடயங்களை மீள வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலொன்றை மேற்கொள்க.

- தேவாரத்தில் அமைந்துள்ள பண் - புறநீர்மை, இராகம் - பூபாளம். தாளம் - ஆதி, அருளியவர்- திருஞானசம்பந்தமூர்த்திநாயனார், தலம் - திருக்கோணேஸ்வரம்
ஆகியவற்றை மீண்டும் வலியுறுத்திக் கூறி மாணவருடன் சேர்ந்து தேவாரத்தினைப் பண்முறைக் கேற்ப தாளத்துடன் முழுமையாகப் பாடுக.

(10 நிமிடம்)

**கணிப்பீட்டு, மதிப்பீட்டு நியதிகள் :**

- தாயினும் நல்ல என்னும் தேவாரம் அமைந்துள்ள பண், இராகம், தாளம், அருளியவர், தலம் ஆகியவற்றைக் குறிப்பிடுவர்.

- பண்முறைக்கேற்ப தேவாரத்தினைத் தாளத்துடன் பாடுவர்.

- இந்தப்பண்ணில் அமைந்த வேறு தேவாரங்களையும் இனங்காண்பர்

## செயற்பத்திரம் 3.3.2.6

- தாயினும் நல்ல என்னும் தேவாரத்தினைப் பண்முறைக்கேற்ப தாளத்துடன் பாடுக.
- குறித்த தேவாரத்தினை பண்முறைக்கேற்ப தாளத்துடன் பாடுக.

## தேவாரம்

பண் - புறநீர்மை | தாளம் - ஆதி
இராகம் - பூபாளம் | பாடியவர் - திருஞானசம்பந்தர்
பாடப்பட்ட தலம் - திருக்கோணேஸ்வரம்

தாயினும் நல்ல தலைவ ரென்றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவி நின்றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயினும் பிணியும் தொழிலர் பால் நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோண மாமலை அமர்ந்தாரே

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ;காரிகா | பா, தா பா ; | / | ;பபா தாப | / | பாபா தபகா | // |
| தாயினும் | நல் ல..................... | | தலைவரென் | | றடி - யார் | |
| ;கபதாபா | காபா கரிஸா | / | ;கரிகா பா | / | ; ; ; ; | // |
| தம் மடி | போற் றிசைப் | | பார்க ... ள் | | ......................... | |
| ;கபாதபா | காபா கரிஸா | / | ;கரி காகா | / | பா ; ததபா | // |
| தம் மடி | போற் றிசைப் | | பார் | | க .............. ள் ...... | |
| ;பகாபாதா, | ஸ்ா ஸ்ா; | / | ;ஸ்ஸ், ரிஸ்ா | / | ஸ்ாதத பா ; | // |
| வா யினும் | ம னது......ம் | | மரு வி நின் .. | | றகலா | |
| ;பகாபாதா, | ஸ்ா,ஸ்ரி ஸ்ரிகா; | / | ;க்பாக்ரீ, ஸ்ாஸ்ா | / | ஸ்ாதத பா ; | // |
| வா யினும் | ம ன து..ம் | | மரு வி நின் .. | | றகலா | |
| ;பதாஸ்ா | ஸ்ாஸ்ா, ததபா | / | ; கபாதாப | / | கபதப கரிஸா | // |
| மாண்பினர் | காண்.. ப.ல. | | - வே-- | | ட -- ர் -- | |

**இதேபோன்று பின்வரும் நான்கு வரிகளையும் பாடுக.**

நோயினும் பிணியும் தொழிலர் பால் நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோண மாமலை அமர்ந்தாரே.

### தாயினும் நல்ல

**பொருள்:**

திருக்கோணமலையைக் கோயிலாகக் கொண்டு உறைந்துள்ள இறைவர் தாயைக் காட்டிலும் பேரன்புடைய தலைவர் என்று போற்றுகின்ற அடியவர்களின் வாயிலும் மனத்திலும் நீங்காதிருப்பவர். அடியவர்கள் விரும்பும் வடிவில் வந்து அருளும் வடிவங்கள் பலவற்றில் காணப்படுபவர். அன்பர் அல்லாதார் என்று பாகுபாடின்றி எவர் உள்ளத்திலும் நுழைந்து நின்று இயங்கும் ஒழுக்கமுடையவர் ஆவார்.

தேர்ச்சி 4.0 : கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார்.

தேர்ச்சிமட்டம் 4.2 : இராகத்தின் பிரிவுகளைக் குறிப்பிடுவார்.

செயற்பாடு 4.2.2 : ஜன்ய இராகத்தின் பிரிவுகளில் உபாங்க, பாஷாங்க. வர்ஜ, வக்ர இராகங்களின் விளக்கத்தைப் பெறுவோம்.

நேரம் : 40 நிமிடங்கள் (01 பாடவேளை)

தர உள்ளீடு : சுருதிப்பெட்டி, ஒலிப்பதிவுப் பெட்டி, முன்னைய தரங்களிற் பயின்ற, மேற்குறிப்பிட்ட ஜன்ய இராக வகையில் அமைந்த பாடல்கள் அல்லது இவை அடங்கிய ஒலி நாடா ஜன்ய இராகங்களின் ஆரோகண, அவரோகணங்களை விளக்கும் வரைபடம், செயற்பத்திரம் 4.2.2.2

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :**

படி 4.2.1.

- முன்னைய தரங்களில், ஏற்கனவே பயின்ற மேற் குறிப்பிடப்பட்ட ஜன்ய இராக வகையில் அமைந்த பாடல்களைப் பாடிக் காட்டுக. அல்லது ஒலிப்பதிவுக் கருவியில் இசைக்கச் செய்க.
- மாணவர் செவிமடுப்பதன் மூலம் ஜன்னிய இராகத்தினை இனங்காணச் செய்க.
- தர உள்ளீட்டிற் குறிப்பிட்ட அட்டவணை வரை படங்களைத் தகுந்தவாறு காட்சிப்படுத்துக.
- மாணவர் கேட்டும், பார்த்தும் இனங்கண்ட விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுக.
- கலந்துரையாடலின் போது, பின்வரும் விடயங்களை வலியுறுத்துக.

| |
|---|
| • ஜன்ய இராக விளக்கம்.<br>• ஜன்ய இராகத்தின் பிரிவுகள்<br>• உபாங்க, பாஷாங்க, வர்ஜ, வக்ர இராகங்களின் விளக்கம். |

(10 நிமிடம்)

படி 4.2.2

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்துச் செயற்பத்திரந்தை வழங்குக.
- அறிவுறுத்தலுக்கேற்ப செயற்பாட்டில் ஈடுபடுகிறார்களா என்பதை உறுதி செய்க.

(15 நிமிடம்)

படி 4.2.3 :

- ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குக.
- ஏனைய குழுக்கள் அதனை அவதானித்துக் கருத்துக்களைக் கூற இடமளிக்குக.
- குழுக்களின் பேறுகளை தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடலை மேற்கொள்க.
- கலந்துரையாடலில் பின்வரும் விடயங்களை மீளவும் வலியுறுத்துக.

- தாய் இராகங்களில் இருந்து பிறந்த ராகம் ஜன்ய ராகமாகும். தாய் இராகத்தின் ஸ்வரங்களை அனுசரித்தே ஜன்ய இராகங்கள் அமைந்திருக்கும்.
- ஜன்ய இராகத்தில் உபாங்கம், பாஷாங்கம், வர்ஜம், வக்ரம், நிஷாதாந்திய, தைவதாந்திய, பஞ்சமாந்தியம் எனும் ஏழு பிரிவுகள் உண்டு.
- தாய் இராகத்தில் வரும் ஸ்வரங்களை மட்டும் எடுத்துக் கொள்ளும் இராகம் உபாங்க இராகமாகும். உ+ம்:- மோகனம், மத்திமாவதி, ஹம்சத்வனி.
- தாய் இராகத்தில் வரும் ஸ்வரங்களையும் எடுத்து அழகிற்காக வேறு தாய் இராகத்தில் வரும் ஸ்வரங்களையும் எடுக்கும் இராகம் பாஷாங்கராகம் உ+ம:- பிலகரி, பைரவி.
- பாஷாங்க இராகத்தில் அழகிற்காக எடுத்துக் கொள்ளும் ஸ்வரம் அன்னிய ஸ்வரம் எனப்படும்.
- அன்னிய ஸ்வரங்கள் ஆரோகண அவரோணத்திலோ அல்லது பிரயோகங்களிலோ வரும்.
- அன்னிய ஸ்வரக் குறியீடு *
- ஸ்வரங்கள் விலக்கப்பட்டு வரும் இராகம் வர்ஜ இராகம் அதாவது ஆரோகணத்திலோ அவரோகணத்திலோ அல்லது இரண்டிலுமோ ஸ்வரங்கள் விலக்கப்பட்டு வருதல் உ+ம்:- மோகனம்.
- ஸ்வரங்கள் ஆரோகண, அவரோகணத்தில் வரிசைக் கிரமமின்றித் திரிந்து திரிந்து வரும் இராகம் வக்ர இராகம் உ+ம்:- கமாஸ்
- உபாங்க, பாஷாங்க வர்ஜ, வக்ர இராகங்களுக்கான உதாரணங்கள் ஆரோகண, அவரோகணங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| உபாங்கம் | - | மோகனம் | - | ஸரிகபதஸ்<br>ஸ்தபகரிஸ |
| பாஷாங்கம் | - | பிலகரி | - | ஸரிகபதஸ்.<br>ஸ்நிதபமகரிஸ. |
| வர்ஜம் | - | மோகனம் | - | ஸரிகபதஸ்<br>ஸ்தபகரிஸ |
| வக்ரம் | - | கமாஸ் | - | ஸமகமபதநிஸ்<br>ஸ்நிதபமகரிஸ |

(15 நிமிடம்)

**கணிப்பீட்டு, மதிப்பீட்டு நியதிகள்:**

- ஜன்ய இராகப் பிரிவுகளான, உபாங்க இராகம், பாஷாங்க இராகம், வர்ஜ இராகம், வக்ர இராகம் முதலியவற்றை இனம் கண்டு வகைப்படுத்துவர்.
- ஜன்ய இராகப் பிரிவுகளுள் உபாங்க பாஷாங்க இராகப் பிரிவுகளை விளக்குவர்.
- ஜன்ய இராகப் பரிவுகளுள் வக்ர, வர்ஜ இராகப்பிரிவுகளை விளக்குவர்.
- இவ்விராகப் பிரிவுகட்கான உதாரணங்களையும், ஆரோகண அவரோகணங்களையும் குறிப்பிடுவர்.

## செயற்பத்திரம் 4.2.2.2

குழு 01

- ஜன்ய ராகப் பிரிவுகளுள் உபாங்க இராகம் பற்றி விளக்குக.
- உபாங்க இராகத்திற்கு உதாரணம் தந்து ஆரோகண அவரோகணத்தைக் குறிப்பிடுக.
- உபாங்க இராகத்தின் ஆரோகண அவரோணத்தை பாடிக் காட்டுக.

குழு 02

- ஜன்ய ராகப் பிரிவுகளுள் பாஷாங்க இராகம் பற்றி விளக்குக.
- பாஷாங்க இராகத்திற்கு உதாணரம் தந்து ஆரோகண, அவரோணத்தைக் குறிப்பிடுக.
- பாஷாங்க இராகத்தின் ஆரோகண அவரோகணத்தைப் பாடிக் காட்டுக.

குழு 03

- ஜன்ய இராகப் பிரிவுகளுள் வர்ஜ இராகம் பற்றி விளக்குவர்.
- வர்ஜ இராகத்திற்கு உதாரணம் தந்து ஆரோகண, அவரோகணத்தைக் குறிப்பிடுக.
- வர்ஜ இராகத்தின் ஆரோண, அவரோணத்தைப் பாடி காட்டுக.

குழு 04.

- வக்ர இராகப்பிரிவுகளுள் வக்ரராகம் பற்றி விளக்குக.
- வக்ர இராகத்திற்கு உதாரணம் தந்து ஆரோகண, அவரோகணத்தைக் குறிப்பிடுக.
- வர்ஜ இராகத்தின் ஆரோகண அவரோணத்தைப் பாடிக் காட்டுக.

தேர்ச்சி 4.0 : கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார்.

தேர்ச்சிமட்டம் 4.3 : பண்ணிசையின் சிறப்பினை விளக்குவார்.

செயற்பாடு 4.3.1 : பண்ணிசையின் சிறப்பினை அறிந்து கொள்வோம்.

நேரம் : 80 நிமிடங்கள் (02 பாடவேளைகள்)

தர உள்ளீடு : ஒலிப்பதிவு நாடா, ஒலிப்பதிவுகருவி செயற்பத்திரம் 4.3.2.1

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :**

படி 4.3.1.

- பண்ணிசையை ஒலிப்பதிவு நாடா மூலம் கேட்கச் செய்து பண்ணிசை பற்றி அறிமுகம் செய்க.
- பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்க.

- பண்ணிசை
  வரைவிலக்கணம் - பண் என்பது இராகமாகும். பண் என்ற பதத்திற்கு பாட்டு, சம்பூர்ண இராகம் என வேறு இரு பொருள்களும் உண்டு.
  பண்கள் தோன்றிய வரலாறு -
  இந்திய சங்கீத வரலாற்றை நோக்கின் நமக்குக் கிடைத்துள்ள இராக தாள அமைப்புடன் கூடிய உருப்படிகளில் மிகப் பழமையானது தேவாரம் என்பது புலனாகும். தற்காலத்தில் வழங்கும் பல இராகங்களுக்குத் தேவாரப்பண்களே ஆதி லட்சியங்களாகும்.

- அவற்றை வளர்த்த ஆலயங்கள், நாயன்மார்கள் 7ஆம், 8ஆம் நூற்றாண்டுகளில் நாயன்மார்களாற் பாடப்பட்ட தேவாரத் திருப்பதிகங்கள் சோழ மன்னரது ஆட்சிக் காலத்திலே மக்களிடையே பரப்பப்பட்டன. சோழ அரசர்கள், சிவநெறிச் செல்வர்களாக இருந்து ஆலயங்களில் ஓதுவார்களை அமர்த்தி, அவர்கள் மூலம் தேவாரப் பதிகங்களை, நாடு முழுவதும் பரப்பும் பணியில் ஈடுபட்டனர். தேவார திருப்பதிகள் இராஜராஜசோழன் காலத்தில் நம்பியாண்டார் நம்பியால் 12 திருமுறைகளாக வகுத்துத் தொகுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

- கி.பி. 7ம் நூற்றாண்டில் திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் கி.பி. 9ம் நூற்றாண்டில் சுந்தரமூர்த்தி நாயனாரும் வாழ்ந்த காலத்தில் தேவாரப் பதிகங்கள் தோன்றும் போதே இசைவடிவங்களுடன் மூவர் வாக்கிலும் இருந்தும் தோன்றிய சிறப்பை உடையன.

- பண்ணின் வகைகள்
  தேவாரப் பதிகங்கள் தற்போது 24 பண்களில் அமைந்துள்ளன. பண்கள் பாடப்பட வேண்டிய கான காலத்தைக் கொண்டு பகற்பண், இராப்பண், பொதுப்பண் எனப் பிரிக்கப்பட்டுள்ளது.

- பண்வகைகள் குறிக்கும் கர்நாடக இராகங்கள்

| பண் | | இராப்பண்கள் | | இராகம் |
|---|---|---|---|---|
| புறநீர்மை | - | சீகாமரம் | - | செந்துருத்தி |
| பஞ்சமம் | - | வியாழக்குறிஞ்சி | - | செவ்வழி |

பண்வகைகள் குறிக்கும் இராகங்கள்:-

(20 நிமிடம்)

படி 4.3.2

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்துச் செயற்பத்திரத்தினை இணைப்புடன் வழங்குக.
- அறிவுறுத்தலுக்கேற்ப செயற்பாட்டில் குழுக்களை ஈடுபடச்செய்க.
- ஒவ்வொரு குழுவையும் தமது பேறுகளைச் சமர்ப்பிக்கும் வகையில் ஆயத்தம் செய்விக்குக.

(30 நிமிடம்)

படி 4.3.3 :

- ஒவ்வொரு குழுவும் அறிக்கைகளை முன் வைக்கச் சந்தர்ப்பம் வழங்குக.
- ஏனைய குழுக்களும் அவற்றை அவதானித்துக் கருத்துக் கூற இடமளிக்க.
- குழுக்களின் பேறுகளை தொகுக்கும் வண்ணம் பின்வரும் விடயங்களை மீள வலியுறுத்துக.

- பண்ணிசை வரைவிலக்கணம்
பண் என்பது இராகம் ஆகும். பண் என்ற பதத்திற்குப் பாட்டு, சம்பூர்ண இராகம் என வேறு இரு பொருள்களும் உண்டு. பண்களின் சொருபங்களை அறியத் தேவாரங்களே சிறந்த லஷியமாகும்.

- பண்கள் தோன்றிய வரலாறு:
*இந்திய சங்கீத வரலாற்றை நோக்கின் உருப்படிகளில்* மிகப்பழமையானது தேவாரம் என்பது புலனாகும். தற்காலத்தில் வழங்கும் பல இராகங்களுக்குத் தேவாரப் பண்களே ஆதி லட்சியங்களாகும்.

- இந்திய சங்கீத சரித்திரத்திற் பாஷாங்க இராகம் என்பதை முதன் முதலாகத் தேவாரப் பண்களிலேயே காண்கிறோம்.

- தேவாரப் பண்களின் வர்ண மெட்டுக்கள் ஓதுவார்கள் மூலமும் குரு சிஷ்ய பரம்பரை மூலமாகவும் காப்பாற்றப்பட்டு வந்துள்ளன.

- பிற்காலத்தில் இராகங்களின் வளர்ச்சிக்கு பண்கள் மிக்க உதவியாக இருந்தன.

- அவற்றை வளர்த்த ஆலயங்கள், நாயன்மார்கள்:
7ம் 8ம் நூற்றாண்டுகளில் நாயன்மார்களாற் பாடப்பட்ட தேவாரத் திருப்பதிகங்கள் சோழமன்னரது ஆட்சிக் காலத்திலே, மக்களிடையே பரப்பப்பட்டன. சோழ அரசர்கள் சிவநெறிச் செல்வர்களாக இருந்து ஆலயங்களில் ஓதுவார்களை அமர்த்தி, அவர்கள் மூலம் தேவாரப் பதிகங்களை, நாடு முழுவதும் பரப்பும் பணியில் ஈடுபட்டனர். தேவார திருப்பதிகள் இராஜராஜசோழன் காலத்தில் நம்பியாண்டார் நம்பியால் 12 திருமுறைகளாக வகுத்துத் தொகுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் மூர்த்திநாயனார் ஆகிய மூவர் வாக்கிலிருந்தும் தேவாரப் பதிகள் தோன்றும் போதே இசைவடிவங்களுடன் தோன்றிய சிறப்பை உடையன.

- பண்ணின் வகைகள்:-
தேவாரப்பதிகங்கள் தற்போது 24 பண்களில் அமைந்துள்ளன. பண்பாட வேண்டிய கான காலத்தைக் கொண்டு பகற்பண், இராப்பண் பொதுப்பண் எனப் பிரிக்கப்பட்டுள்ளது.

- பண்வகைகள் குறிக்கும் இராகங்கள்.

| | | |
|---|---|---|
| பண் | - | இராகம் |
| பஞ்சமம் | - | ஆஹிரி |
| சீகாமரம் | - | நாதநாமக்கிரிய |
| புறநீர்மை | - | பூபாளம் |
| வியாழக்குறிஞ்சி | - | சௌராஷ்டிரம் |
| கௌசிகம் | - | பைரவி |
| செந்துருத்தி | - | மத்தியமாவதி |
| காந்தார பஞ்சமம் | - | கேதாரகௌளை |
| அந்தாளிக்குறிஞ்சி | - | ஸாமா |
| தக்கேசி, தக்கராகம் | - | காம்போதி |
| செவ்வழி | - | யதுகுலகாம்போஜி |
| பழம்பஞ்சுரம் | - | சங்கராபரணம் |
| இந்தளம் | - | மாயாமாளவகௌளை |
| பழந்தக்கராகம் | - | ஆரபி |
| கொல்லி, கொல்லிகௌவாணம்<br>காந்தாரம், பியந்தை காந்தாரம் | } | நவரோஜ் |
| குறிஞ்சி | - | ஹரிகாம்போஜி |
| மேகராகக்குறிஞ்சி | - | நீலாம்பரி |
| நட்டபாடை | - | கம்பீரநாட்டை |
| ஸாதாரி, நட்டஇராகம் | - | பந்துவராளி |
| யாழ்முறி | - | அடானா |

| பகற்பண் | இராப்பண் | பொதுப்பண் |
|---|---|---|
| புறநீர்மை | சீகாமரம் | செந்துருத்தி |
| பஞ்சமம் | வியாழக்குறிஞ்சி | செவ்வழி |
| இந்தளம் | அந்தாளிக் குறிஞ்சி | |
| காந்தார பஞ்சமம் | கொல்லி | |
| தக்கேசி | மேகராகக்குறிஞ்சி | |
| பழம்பஞ்சுரம் | பழந்தக்க ராகம் | |
| நட்டபாடை | | |
| சாதாரி | | |

(30 நிமிடம்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்:**

- பண்ணிசையின் தோற்றம் வளர்ச்சிபற்றிக் கூறுவர்.
- பண்களின் வகைகளை விளக்குவர்.
- பண்களுக்கும் கர்நாடக இராகங்களுக்கும் உள்ள தொடர்பினை தெரிந்து கொள்வர்

## செயற்பத்திரம் 4.3.2.1

* மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்துச் செயற்பத்திரங்களை வழங்குக.
* பின்னிணைப்பைப் பயன்படுத்தி பின்வரும் செயற்பாட்டில் ஈடுபடச்செய்க.

### குழு I

* பண்ணிசையின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றி விளக்குக.

### குழு II

* பண்களையும் கர்நாடக இராகங்களினையும் அட்டவணைப்படுத்துக.

### குழு III

* பண்ணிசை வளர்ச்சிக்குத் தென்னிந்திய அரசர்களின் பங்களிப்பு பற்றி எழுதுக.

### குழு IV.

* பண்களின் வகைகளையும் அவற்றிற்குரிய இராகங்களையும் எழுதுக.

## பண்ணிசை

இந்திய சங்கீத வரலாற்றை நோக்கின், நமக்குக் கிடைத்துள்ள இராக தாள அமைப்புடன் கூடிய உருப்படிகளில், மிகப் பழமையானது தேவாரம் என்பது புலனாகும். தற்காலத்தில் வழங்கும் பல இராகங்களுக்குத் தேவாரப் பண்களே ஆதி லட்சியங்களாகும்.

சைவசமயம் நலிவுற்றுச் சமண சமயம் ஓங்கி வளர்ந்த காலகட்டத்திற் தேவார முதலிகள் தோன்றிப் பண்ணிசை வளர்த்ததன் மூலம், சைவசமயத்தை ஓங்கி வளரச் செய்தனர்.

தேவாரத்தைத் திருவாய் மலர்ந்தருளிய, திருஞான சம்பந்தரும், திருநாவுக்கரசரும் கி.பி. 7ஆம் நூற்றாண்டிலும், சுந்தரமூர்த்திநாயனார் கி.பி. 9ஆம் நூற்றாண்டிலும் வாழ்ந்தவர்களாவர். தேவாரப் பதிகங்கள் தோன்றும் போதே இசை வடிவங்களுடன் மூவர் வாக்கில் இருந்தும் தோன்றிய சிறப்பை உடையன. இக் காரணத்தினாலேதான் தேவாரப் பதிகங்களுக்குத் தனிச் சுவையும் பிரகாசமும் இருப்பதோடு, கேட்போருக்குப் பக்தி உணர்வும் உண்டாகின்றது. தேவாரப் பண்களின் வர்ண மெட்டுக்கள், ஓதுவார்கள் மூலமாகவும், குருசிஷ்ய பரம்பரை மூலமாகவும் காப்பாற்றப்பட்டு வந்துள்ளன.

தேவாரம் என்பது தெய்வத்தன்மைவாய்ந்த "வாரப்" பாடல்களாகும். இசைத் தமிழைச் சேர்ந்த முதனடை, வாரம், கூடை, திரள் என்னும் நான்கு வகைகளில் ஒன்றாகிய "வாரம்" என்பது சங்கீதத்திலும் சாகித்தியத்திலும் சிறந்து விளங்குகின்றது.

திருஞானசம்பந்தருக்குப் பொற்றாளம் கிடைத்த வரலாற்றில் இருந்து, தேவாரம் தாளத்துடன் பாடப்பட்டது என்பது தெளிவாகின்றது.

பண் என்பது இராகம் ஆகும். பண் என்ற பதத்திற்குப் பாட்டு, சம்பூர்ண இராகம் என, வேறு இரு பொருள்களும் உண்டு. பண்களுக்கு இராகங்களைப் போல் ஸ்வரங்கள், ஜீவ ஸ்வரங்கள், நியாச ஸ்வரங்கள், அந்நிய ஸ்வரங்கள் ரக்திப்பிரயோகங்கள், சொருபத்தை விளக்கும் நுட்ப சுருதிகள், கமகங்கள் முதலியன உண்டு. பண்களின் சொருபங்களை அறியத் தேவாரங்களே சிறந்த லஷியமாகும். இராகங்களை ஔடவ, ஷாடவ, சம்பூர்ணம் என்று பிரிப்பதற்கும், பண்களே காரணமாய் இருந்தன.

இந்திய சங்கீத சரித்திரத்திற் பாஷாங்க இராகம் என்பதை, முதன் முதலாகத் தேவாரப் பண்களிலேயே காண்கிறோம். பாஷாங்க இராகம் என்பது ரக்தியின் பொருட்டுத், தனது தாய் இராகத்தில் வராத ஒன்று அல்லது இரண்டு அல்லது மூன்று ஸ்வரங்களைக் குறிப்பிட்ட பிரயோகங்களில எடுத்துக் கொள்ளும் இராகம் ஆகும். கௌசிகம் (பைரவி), வியாழக் குறிஞ்சி (சௌராஷ்டிரம்) போன்ற பண்கள் இதற்கு நல்ல உதாணங்களாகும்.

மேலும், காந்தார பஞ்சமம் (கேதாரகௌளை), செந்துருத்தி (மத்தியமாவதி) போன்ற பண்கள் உபாங்க இராகத்திற்கு உதாரணங்களாகும். செந்துருத்திப் பண்ணினைச் சுந்தரமூர்த்தி நாயனாரின் ஒரு பதிகத்திலேயே காணக் கூடியதாயுள்ளது. பந்துவாராளி என்ற பிரதிமத்திம இராகத்திற்கு ஒப்பானவை. சாதாரி, நட்டராகப் பண்கள் ஆகும்.

திருஞானசம்பந்தர் பாடிய 'மாதர் மடப்பிடியும்' என்ற பதிகத்திற்குத் திருநீலகண்ட யாழ்ப்பாணர் யாழ் வாசிக்க முடியாது வருந்திய சம்பவத்திலிருந்து, தேவாரம் பாடுகையில் யாழ் பயன்படுத்தப்பட்டமை தெளிவாகின்றது.

பிற்காலத்தில் இராகங்களின் வளர்ச்சிக்குத் தேவாரப் பண்கள் மிக்க உதவியாக இருந்தன. தேவாரப் பண்களில் ரக்தி இராகங்களே முக்கியமாகக் காணப்படுகின்றன. ஒவ்வொரு பண்ணிற்கும் உற்ற சுருதிகள், கமகங்கள், வக்ரப் பிரயோகங்கள், இராக இரஞ்சகப் பிரயோகங்கள், அந்நிய ஸ்வரப் பிரயோகங்கள், தாட்டுப் பிரயோகங்கள், உருப்படிகள் ஆரம்பிப்பதற்குத் தகுதியான ஸ்வரங்கள் முதலிய விடயங்களை அந்தந்தப் பண்களில் அமைந்துள்ள தேவாரப் பதிகங்களிற் காணலாம்.

24 பண்களும், பண்களுக்குச் சமமான கர்நாடக இராகங்களும் பின்வருமாறு:-

| பண் | | இராகம் |
|---|---|---|
| பஞ்சமம் | - | ஆஹிரி |
| சீகாமரம் | - | நாதநாமக்ரிய |
| புறநீர்மை | - | பூபாளம் |
| வியாழக் குறிஞ்சி | - | சௌராஷ்டிரம் |
| கௌசிகம் | - | பைரவி |
| செந்துருத்தி | - | மத்தியமாவதி |
| காந்தார பஞ்சமம் | - | கேதாரகௌளை |
| அந்தாளிக் குறிஞ்சி | - | ஸாமா |
| தக்கேசி, தக்கராகம் | - | காம்போதி |
| செவ்வழி | - | யதுகுலகாம்போஜி |
| பழம்பஞ்சுரம் | - | சங்கராபரணம் |
| கொல்லி, கொல்லிக் கௌவாணம்<br>காந்தாரம், பியந்தைக் காந்தாரம் | - | நவரோஜ் |
| மேகராகக் குறிஞ்சி | - | நீலாம்பரி |
| நட்டபாடை | - | கம்பீர நாட்டை |
| ஸாதாரி, நட்டராகம் | - | பந்துவராளி |
| யாழ்முரி | - | அடானா |
| இந்தளம் | - | மாயாமாளவகௌளை |
| பழந்தக்கராகம் | - | ஆரபி |
| குறிஞ்சி | - | ஹரிகாம்போஜி |

திருநாவுக்கரசரின் திருத்தாண்டகம், ஹரிகாம்போஜி இராகத்திலும் திருவாசகம் மோகன இராகத்திலும் பாடப்பட்டு வருவது மரபாகும். பண் என்பதை தாய் இராகம் என்றும், *திறம் என்பதை ஜன்யராகம் என்றும் கூறுவர்.*

தேவாரப் பதிகங்கள், தற்போது 24 பண்களில் அமைந்துள்ளன. பண்கள் பாடப்பட வேண்டிய கான காலத்தைப் கொண்டு, பகற்பண், இராப்பண், பொதுப்பண் எனப் பிரிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| பண் | - | சம்பூர்ண ராகம் |
| பண்ணியம் | - | ஷாடவ இராகம் |
| திறம் | - | ஔடவ இராகம் |
| திறத்திறம் | - | ஸ்வராந்தர இராகம் என்றும் கூறப்படும் |

| **பகற்பண்கள்** | **இராப்பண்கள்** | **பொதுப்பண்கள்** |
|---|---|---|
| புறநீர்மை | சீகாமரம் | செந்துருத்தி |
| பஞ்சமம் | வியாழக் குறிஞ்சி | செவ்வழி |
| இந்தளம் | அந்தாளிக்குறிஞ்சி | |
| காந்தாரபஞ்சமம் | கொல்லி | |
| தக்கேசி | மேகராகக் குறிஞ்சி | |
| பழம் பஞ்சுரம் | பழந்தக்கராகம் | |
| நட்டபாடை | | |
| சாதாரி | | |

தேவாரப் பதிகங்கள் பாடப்பட்ட காலத்தில் இந்தியா முழுவதும் ஒரே வகையான சங்கீதமே இருந்தது. அக்காலத்தில் ஹிந்துஸ்தானி சங்கீதம், கர்நாடக சங்கீதம் என்னும் பிரிவு ஏற்படவில்லை.

7ஆம், 8ஆம் நூற்றாண்டுகளில் நாயன்மார்களாற் பாடப்பட்ட தேவாரத் திருப்பதிகங்கள் சோழ மன்னரது ஆட்சிக் காலத்திலே , மக்களிடையே பரப்பப்பட்டன. சோழ அரசர்கள், சிவநெறிச் செல்வர்களாக இருந்து ஆலயங்களில் ஓதுவார்களை அமர்த்தி, அவர்கள் மூலம் தேவாரப் பதிகங்களை, நாடு முழுவதும் பரப்பும் பணியில் ஈடுபட்டனர். சோழன் காலத்தில் நம்பியாண்டார் நம்பியால் 12 திருமுறைகளாக வகுத்துத் தொகுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

தேர்ச்சி 4.0 : கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார்.

தேர்ச்சிமட்டம் 4.4 : இராகங்களின் இலட்சணங்களை விளக்குவார்.

செயற்பாடு 4.4.3 : கல்யாணி இராகத்தின் இலட்சணத்தை அறிந்து கொள்வோம்.

நேரம் : 40 நிமிடங்கள் (01 பாடவேளை)

தர உள்ளீடு :
- கல்யாணி இராகத்தின் ஆரோகண, அவரோகண வரைபடம்,
- கல்யாணி இராகத்தின் ஸ்வரஸ்தான வரைபடம்,
- சுருதிப்பெட்டி,
- இராகலட்சணம் எழுதப்பட்ட பிரதி,
- செயற்பத்திரம் 4.4.2.3

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :**

படி 4.4.1

- ஆசிரியர் கல்யாணி இராகத்தில் மாணவர் ஏற்கனவே கற்றுக் கொண்ட உருப்படி ஒன்றைப்பாடி குறிப்பிட்ட இராகத்தினை மாணவர் இனம் கண்டு கூறுவதற்கு வழிப்படுத்துக.

- கல்யாணி இராகத்தின் மேள எண், ஸ்வரஸ்தானங்களைக் குறிப்பிட்டு, ஆரோகண, அவரோகணங்களைப்பாடிக் காட்டி மாணவர் இராகத்தின் சொருபத்தினை விளங்கிக்கொள்ள வழிசெய்க.

- இனம்கண்ட இராகத்தினை அடிப்படையாகக் கொண்டு கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்க.

- கலந்துரையாடலில் பின்வரும் விடயங்களை வலியுறுத்துக.

> - கல்யாணி 65வது மேளகர்த்தா இராகம்
> - இதன் ஆரோகணம் : ஸரிகமபதநிஸ்
>   அவரோகணம் : ஸ்நிதபமகரிஸ
> - ஸ்வரஸ்தானங்கள் ஸட்ஜம், சதுஸ்ருதிரிஷபம், அந்தரகாந்தாரம், பிரதிமத்திமம், பஞ்சமம், சதுஸ்ருதி தைவதம், காகலிநிஷாதம்.
> - எல்லா ஸ்வரங்களும் தீவிரஸ்வரங்களாக அமைந்துள்ள இராகம்.
> - சங்கராபரண இராகத்தின் நேர் பிரதி மத்திம இராகம் கல்யாணியாகும்.
> - சஞ்சாரம்
> - உருப்படிகள்
> - கிரகபேதம் செய்விதலில் உண்டாகும் இராகங்கள்

(10 நிமிடம்)

படி 4.4.2 :

- மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரித்துச் செயற்பத்திரத்தினை இணைப்புடன் வழங்குக.

- ஒவ்வொரு குழுவும் செயற்பாட்டில் சரியாக ஈடுபடுகிறார்களா என்பதை உறுதி செய்க.

(15 நிமிடம்)

படி 4.4.3 :

- ஒவ்வொரு குழுவும் தமது கருத்துக்களை முன் வைக்கச் செய்த.
- ஏனைய குழுக்கள் அக்கருத்துக்களை அவதானித்து தத்தமது கருத்துக்களை கூற இடமளிக்க.
- குழுக்களின் பேறுகளை தொகுத்து கலந்துரையாடும் போது பின்வரும் விடயங்களை மீளவும் வலியுறுத்துக.

<table>
<tr><td>

- கல்யாணி 65வது மேளராகம், சம்பூர்ண ராகம்
- ஆ :- ஸரிகமபதநிஸ் அ :- ஸ்நிதபமகரிஸ
- ஸ்வரஸ்தானங்கள:- ஸட்ஜம், சதுஸ்ருதி ரிஷபம், அந்தரகாந்தாரம், பிரதிமத்திமம், பஞ்சமம், சதுஸ்ருதி தைவதம், காகலிநிஷாதம்.
- எல்லா ஸ்ரங்களும் தீவிர ஸ்வரங்களாக அமைந்துள்ள இராகம் பிரசித்தமான பிரதிமத்திம இராகம்.
- ஜண்டை ஸ்வர, தாட்டுஸ்வர பிரயோகங்கள் ரஞ்சகமானவை.
- சுலோகம், பத்யம், விருத்தம் பாட உகந்த ராகம்.
- கல்யாணி இராகத்தின் எல்லா ஸ்வரங்களும் இராகத்தின் சாயலை வெளிப்படுத்தும்.
- எப்பொழுதும் பாடலாம். விஸ்தாரமாக ஆலாபனை செய்யலாம்.
- சங்கராபரண இராகத்தின் நேர் பிரதி மத்திம இராகம்.
- சர்வ ஸ்வர கமக வரிக ரக்தி ராகம்
- உருப்படிகள் - உம்: கீதம் - பதந்தருவாய் - ஆதிதாளம்.<br>கீர்த்தனை - ஆடும் கலாப மயில் - ஆதிதாளம்<br>வர்ணம் - வனஜாஷி - அடதாளம்
- சஞ்சாரம் - உம்:<br>ஸ்ாநிதபமகரி - கமபதாநிஸ்ா - க்ஸ்நிதப - மகரிஸ
- இதன் ரிஷப, காந்தார, பஞ்சம, தைவத, நிஷாத ஸ்வரங்களைக் கிரகபேதம் செய்தால் முறையே ஹரிக்காம்போதி, நடபைரவி, சங்கராபரணம், கரஹரப்பியா, தோடி இராகங்கள் உண்டாகும்.

</td></tr>
</table>

(15 நிமிடம்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்** :

- கல்யாணி இராகத்தின் மேளஎண், ஆரோகண அவரோகணம், ஸ்வரஸ்தானங்களைக் கூறுவர்.
- எல்லா ஸ்வரங்களும் தீவிர ஸ்வரங்களாக அமைந்துள்ள இராகம் என்பதை குறிப்பிடுவர்.
- சங்கராபரண இராகத்தின் நேர் பிரதிமத்திம இராகம் கல்யாணி என்பதை கூறுவர்.
- கல்யாணி இராகத்தில் அமைந்துள்ள உருப்படிகளைக் குறிப்பிடுவர்
- சிறு சஞ்சாரம் எழுதும் திறனைப் பெறுவர்

## செயற்பத்திரம் : 4.4.2.3

சகல குழுக்களிலுமுள்ள அங்கத்தவர்கள் அனைவருக்கும் தனித்தனியாக செயற்பத்திரத்தினையும் இணைப்பையும் வழங்குக.

| |
|---|
| * தரப்பட்டுள்ள இணைப்பின் உதவியுடன் கல்யாணி இராகத்தின் இலட்சணத்தை கீழ்வரும் விடயங்களை உள்ளடக்கி முழுமைப்படுத்துக.<br>• மேள எண்<br>• ஆரோகண, அவரோகணம்<br>• ஸ்வரஸ்தானம்<br>• விஷேட பிரயோகங்கள்<br>• கிரகபேதம் செய்வதனால் உண்டாகும் இராகங்கள்<br>• சஞ்சாரம்<br>• உருப்படிகள் |

# இராக இலட்சணம் (கல்யாணி)

## கல்யாணி

கல்யாணி 65ஆவது மேளகர்த்தா இராகமாகும். ருத்ர சக்கரத்தில் ஐந்தாவது இராகமாகும். (ருத்ர-மா) கடபயாதி சங்க்யைக்காக மேசகல்யாணி என்று அழைக்கப்படுகிறது. இதன் ஆரோகண அவரோகணம்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆ | - | ஸ | ரி | க | ம | ப | த | நி | ஸ் |
| அ | - | ஸ் | நி | த | ப | ம | க | ரி | ஸ |

இந்த இராகம் எடுத்துக் கொள்ளும் ஸ்வரஸ்தானங்களாகவன:-

ஸட்ஜம், சதுஸ்ருதிரிஷபம், அந்தரகாந்தாரம், பிரதிமத்திமம், பஞ்சமம், சதுஸ்ருதி தைவதம், காகலிநிஷாதம் என்பனவாகும். இது பிரதிமத்திம இராகங்களில் பிரசித்தி பெற்ற இராகமாகும். அநேக ஜன்னிய இராகங்களைக் கொண்ட ஓர் ஜனக இராகமாகும்.

சம்பூர்ண இராகம் ஜண்டை ஸ்வரப் பிரயோகங்களும், தாட்டு ஸ்வரப் பிரயோகங்களும் இந்த இராகத்திற்கு இராகரஞ்சகமானவை. ஸர்வ ஸ்வர கமக வரிக ரக்தி இராகம். எல்லா ஸ்வரங்களும் இராகச்சாயா ஸ்வரங்கள் விஸ்தாரமான இராக ஆலாபனைக்கு இடம் கொடுக்கும் இராகம்.

எப்பொழுதும் பாட உகந்த இராகம் எனினும் மாலைவேளையில் பாட மிக ரஞ்சகமாக இருக்கும். சுலோகம், பத்யம், விருத்தம் பாட ஏற்ற இராகம். இது ஒரு மூர்ச்சனராக மேளஇராகம். இதன் ரிஷப, காந்தார, பஞ்சமம், தைவத, நிஷாத ஸ்வரங்களை கிரகபேதம் செய்வதால் முறையே ஹரிகாம்போஜி, நடபைரவி, சங்கராபரணம், கரஹரப்பிரியா, தோடி இராகங்கள் உண்டாகும். முதன் முதலில் மனித பார்வைக்கு வந்த பிரதிமத்திம இராகம் கல்யாணி இராகமாகும். சங்கராபரணத்தின் நேர்ப்பிரதி மத்யமராகமாகும்.

### சஞ்சாரம்

| | | | | |
|---|---|---|---|---|
| ஸ்ாநிதபமகரி | - | கமபதாநிஸ்ா | - | தநிஸ்ாநிதபம |
| கமபத மபதநி | - | ஸ்ாநிதநிஸ்ா | - | தக்ரிஸ்நிதஸ்ா |

### உருப்படிகள்

| | | | | |
|---|---|---|---|---|
| கீதம் | - | பதந்தருவாய் | - | ஆதி |
| வர்ணம் | - | வனஜாஷிரோ | - | ஆதி |
| | | வனஜாஷி | - | அடதாளம் - பல்லவி கோபாலய்யர் |
| கிருதி | - | நிதிசால | - | சாபு - தியாகராஜ ஸ்வாமிகள் |
| | | ஏதவுனரா | - | ஆதி - தியாகராஜ ஸ்வாமிகள் |
| | | ஆடும் கலாப மயில் | - | ஆதி - உடுமலைப் பேட்டை நாராயண ஸ்வாமி |
| | | வாசுதேவயனி | - | ஆதி - தியாகராஜ ஸ்வாமிகள் |
| | | கமலாம்பாம்பஜரே | - | ஆதி - தீஷிதர் |
| | | ஹிமாத்ரிஸுதே | - | ரூபகம் - சியாமாசாஸ்திரியர் |
| | | பதம் பாரெங்கும் | - | ஆதி - கனம் கிருஷ்ணய்யர். |

தேர்ச்சி 4.0 : கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார்.

தேர்ச்சிமட்டம் 4.4 : இராகங்களின் இலட்சணங்களை விளக்குவார்.

செயற்பாடு 4.4.4 : பிலஹரி இராகத்தின் இலட்சணத்தை அறிந்து கொள்வோம்.

நேரம் : 40 நிமிடங்கள் (01 பாடவேளை)

தர உள்ளீடு : பிலஹரி இராகத்தின் ஆரோகண அவரோகண வரைபடம், ஸ்வரஸ்தான வரைபடம், செயற்பத்திரம் 4.4.2.4

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :**

படி 4.4.1

- மாணவர்கள் ஏற்கனவே இந்த இராகந்தில் கற்றுக்கொண்ட ஜதிஸ்வரம், கீர்த்தனையைப் பாடிக் காட்டுவதன் மூலம் குறிப்பிட்ட இராகத்தை இனம்காணச் செய்க.

- பிலஹரி இராகத்தின் ஆரோகண, அவரோகணத்தை ஸ்வரஸ்தான வரைபடத்தின் உதவியுடன் பாடிக்காட்டி குறிப்பிட்ட இராகத்தின் சொருபத்தை இனம்காண வழிசெய்க.

- இனம் கண்ட இராகத்தின் அடிப்படையில் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ளும் போது பின்வரும் விடயங்களை வலியுறுத்துக.

> - பிலஹரி இராகம் ஜன்ய இராகமாகும். 29வது மேளமாகிய சங்கராபரணம் இதன் தாய் இராகமாகும்.
> - பிலஹரி இராகத்தின் ஆரோகணம் : ஸரிகபதஸ்<br>அவரோகணம் : ஸநிதபமகரிஸ
> - ஸ்வரஸ்தானங்கள் ஸட்ஜம், சதுஸ்ருதிரிஷபம், அந்தரகாந்தாரம், சுத்தமத்திமம், பஞ்சமம், சதுஸ்ருதிதைவதம், காகலிநிஷாதம், கைசிகிநிஷாதம்.
> - ஆரோகணத்தில் மத்திமம், நிஷாதம் விலக்கப்பட்டுள்ளது.
> - காலையில் பாட ஏற்ற இராகம்.
> - கைசிகிநிஷாதம் அன்னியஸ்வரமாகும். பதநிதபா, பநிதபா போன்ற பியோகங்களில் மட்டும் வரும்.
> - மனதிற்கு உற்சாகத்தையும் தைரியத்தையும் தரும் இராகமாகும்.
> - வீர ரசத்தையும் அற்புதரசத்தையும் வெளிப்படுத்தும்.
> - இசைநாடகத்திலும் நிருத்ய நாடகத்தில் பயன்படுத்தப்படும்.

(10 நிமிடம்)

படி 4.4.2

- மாணவர்களை இரு குழுக்களாகப் பிரித்துச் செயற்பத்திரத்தினை இணைப்புடன் வழங்குக.
- இரு குழுக்களும் செயற்பாட்டில் சரியாக ஈடுபடுகிறார்களா என்பதை அவதானிக்க.

(15 நிமிடம்)

படி 4.4.3

- ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளை முன்வைக்க சந்தர்ப்பம் வழங்குக.
- மற்றைய குழு அதனை அவதானித்துத் தமது கருத்துக்களைக் கூற இடமளிக்க.
- இரு குழுவினதும் பேறுகளை தொகுத்து வழங்கி கலந்துரையாடும் போது பின்வரும் விடயங்களை மீள வலியுறுத்தல் செய்க.

> - 29வது மேளகர்த்தாவாகிய சங்கராபரணத்தின் ஜன்யம் பிலஹரி இராகம்
> - ஆரோகணம் : ஸரிகபதஸ், அவரோகணம் : ஸ்நிதபமகரிஸ
> - ஸ்வரஸ்தானங்கள்: ஸட்ஜம், சதுஸ்ருதிரிஷபம், அந்தரகாந்தாரம், சுத்தமத்திமம், பஞ்சமம், சுத்ததைவதம், காகலிநிஷாதம், கைசிகி நிஷாதம்
> - அன்னியஸ்வரமாகிய கைசிகிநிஷாதம் பதநிதபா, பநிதபா போன்ற பிரயோகங்களில் மட்டும் வரும்.
> - ஏகான்யஸ்வர பாஷாங்க இராகம். ஔடவ சம்பூர்ண இராகம்.
> - காலையில் பாடலாம். கச்சேரியின் ஆரம்பத்தில் பாட உகந்த இராகம். உற்சாகத்தையும் தைரியத்தையும் உண்டு பண்ணும் இராகம்.
> - வீர ரசத்தையும், அற்புதரஸத்தையும் வெளிப்படுத்தும் இராகம் என்பதனால் இசை நாடகங்களிலும் நிருத்திய நாடகங்களிலும் பயன்படுத்தப்படுகின்றது.
> - உருப்படிகள்
>   - ஜதீஸ்வரம் - ஸாரிகாபா - ஆதி தாளம்
>   - கீர்த்தனை - இந்த இன்பம் - ஆதி
>   - க்ருதி - இனிநமக்கொரு - ருபகம்
>   - வர்ணம் - இந்தசௌ - ஆதி

(15 நிமிடம்)

**கணிப்பீட்டு, மதிப்பீட்டு நியதிகள் :**

- பிலஹரி இராகத்தின் தாய்ராகம், மேளஎண் ஆரோகண, அவரோகணம், ஸ்வரஸ்தானங்களைக் கூறுவர்.
- அன்னியஸ்வரத்தைக் குறிப்பிட்டு அதற்கான பிரயோகங்களைக் குறிப்பிடுவர்
- பிலஹரி இராகத்தைப் பாடும்போது உற்சாகம் தைரியம் போன்ற பண்புகள் வளர்ச்சியடையும் என்பதை உணர்வர்.
- இந்த இராகத்தில் அமைந்த உருப்படிகளை கூறுவர்.

## செயற்பத்திரம் 4.4.2.4

- செயற்பத்திரத்தை இரண்டு குழுவிற்கும் வழங்கி செயற்பாட்டில் ஈடுபடச் செய்க.

பின்வரும் வினாக்களுக்கு விடையளிப்பதன் மூலம் பிலஹரி இராகத்தின் இலட்சணத்தை முழுமைப்படுத்துக.

1. பிலஹரி இராகத்தின் தாய் இராகத்தினைக் குறிப்பிடுக.
2. பிலஹரி இராகத்தின் ஆரோகண, அவரோகணம் யாது,
3. ஆரோகணத்தில் விலக்கப்பட்ட ஸ்வரங்கள் எவை,
4. பிலஹரி இராகத்தின் ஸ்வரஸ்தானங்கள் எவை,
5. அன்னியஸ்வரத்தைக் குறிப்பிட்டு அன்னியஸ்வரம் வரும் பிரயோகங்களைத் தருக.
6. பிலஹரி இராகத்தின் கானகாலம் யாது,
7. இந்த கிராகத்தைப் பாடும்போது எவ்வகையான உணர்வுகள் ஏற்படும்
8. இந்த கிராகத்தை இசை, நாடகங்களிலும், நிருத்திய நாடகங்களிலும் கையாளப்படுவதற்கான காரணம் யாது.
9. இந்த கிராகத்தில் அமைந்த உருப்படிகளில் இரண்டினைக் குறிப்பிடுக.
10. சஞ்சாரம் எழுதுக.

# பிலஹரி

29ஆவது மேளமாகிய தீரசங்கராபரணத்தின் ஜன்யம் ஆகும்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆ | - | ஸ | ரி | க | ப | த | ஸ் | | |
| அ | - | ஸ் | நி | த | ப | ம | க | ரி | ஸ |

இந்த இராகம் எடுத்துக் கொள்ளும் ஸ்வரஸ்தானங்களாவன:-

ஸட்ஜம், சதுஸ்ருதிரிஷபம், அந்தரகாந்தாரம், சுத்தமத்திமம் - சதுஸ்ருதிதைவதம், காகலி நிஷாதம், கைசிகிநிஷாதம் என்பனவாகும்.

இது ஒரு ஔடவ சம்பூர்ண இராகம் ஆகும். இதன் ஆரோகணத்தில் மத்திம நிஷாதஸ்வரங்கள் வர்ஜம், ஏக அன்னியஸ்வர பாஷாங்க இராகம், கைசிகிநிஷாதம் அன்னிய ஸ்வரம், அன்னிய ஸ்வரமாகிய கைசிகிநிஷாதம் பதநிதபா - பதநிபா - பநிதபா என்னும் பிரயோகங்களில் மட்டும் வரும். ரிஷபம், தைவதம், நிஷாதம் இராகச் சாயா ஸ்வரங்கள் ஆகும். ரிஷப, பஞ்சம ஸ்வரங்கள் நியாச ஸ்வரங்கள். ஜண்டைஸ்வரப் பிரயோகங்களும் தாட்டுஸ்வரப் பிரயோகங்களும் இராக இரஞ்சகமானவை.

இந்த இராகம் காலையில் பாட உகந்தது. மனதிற்கு உற்சாகத்தையும், தைரியத்தையும் உண்டுபண்ணும் இராகம். இவ்விராகம் வீர ரஸத்தையும் வெளிப்படுத்தும். இசை நாடகங்களிலும், நிருத்ய நாடகங்களிலும் கையாளப்படும் இராகம். சுலோகங்கள், பத்யங்கள், விருத்தங்கள் பாட ஏற்ற இராகம். இதன் பஞ்சம மூர்ச்சனையே யதுகுலகாம்போஜி இராகம் ஆகும். கச்சேரியின் ஆரம்பத்தில் பாட உகந்த இராகமாகும்.

**சஞ்சாரம்**

ஸ ரி க பா ம க ரி - க ப த ஸ்ா நி த ப - த பா ம க ரி ஸா

க ப மா க ரி ஸ ா - ரி க பா ம க ரி - க ப த ஸ்ா ஸ் நி த ஸ்ா

**உருப்படிகள்**

| | | | |
|---|---|---|---|
| ஜதீஸ்வரம் | ஸாரிகாபா - | ஆதி | |
| தானவர்ணம் | இந்த சௌ - | ஆதி | - வீணைகுப்பய்யர் |
| க்ருதி | ஸ்ரீ சாமுண்டேஸ்வரி | ஆதி | - மைசூர் வாசுதேவச்சாரியார் |
| | இந்த கண்ணாந்த - | ரூபகம் | - தியாகராஜ சுவாமிகள் |
| | பரிதான மிச்சிதே - | ஜம்பை | - பட்டணம் சுப்ரமணிய ஐயர் |
| | இனி நமக்கொரு - | ரூபகம் | - கோடீஸ்வர ஐயர் |

தேர்ச்சி 4.0 : கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார்.

தேர்ச்சிமட்டம் 4.5 : இசைக் கருவிகளின் அமைப்பு பயன்பாடு பற்றி விளக்குவர்.

செயற்பாடு 4.5.3 : புல்லாங்குழலின் அமைப்பு, பயன்பாடு பற்றி அறிந்து கொள்வோம்.

நேரம் : 40 நிமிடங்கள் (01 பாடவேளை)

தர உள்ளீடு : புல்லாங்குழல் வாத்தியத்தின் படம், புல்லாங்குழல், புல்லாங்குழல் இசைஅடங்கிய ஒலிப்பதிவு நடா, ஒலிப்பதிவுக்கருவி
செயற்பத்திரம் 4.5.2.3

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :**

படி 4.5.1

- புல்லாங்குழல் இசை அடங்கிய ஒலிப்பதிவு நாடாவைப் போட்டுக் காட்டியோ புல்லாங்குழலை வாசித்துக் காட்டியோ மாணவரைச் செவிமடுக்கச் செய்க.
- செவிமடுத்தலின் மூலம் புல்லாங்குழல் இசையை இனம் காணச் செய்க.
- இனம் கண்டவற்றிலிருந்து பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்க.

> - புல்லாங்குழலின் பாகங்கள் குறித்த விளக்கப்படம்.
> - புல்லாங்குழலின் சிறப்பம்சங்கள்
> - புல்லாங்குழலின் அமைப்பு
> - புல்லாங்குழல் வாசிக்கும் முறை
> - புல்லாங்குழல் வாசிப்பதிற் பிரபல்யமானோர்.

(10 நிமிடம்)

படி 4.5.2

- மாணவர்களை குழுக்களாகப் பிரித்துச் செயற்பத்திரத்தினை இணைப்புடன் வழங்குக.
- அறிவுறுத்தலுக்கேற்ப செயற்பாட்டில் ஈடுபடுகின்றனரா என்பதை உறுதிப்படுத்துக.

(15 நிமிடம்)

படி 4.5.3 :

- ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குக.
- ஏனைய குழுக்கள் அதனை அவதானித்துத் தமது கருத்துக்களை கூறுவதற்கு இடமளிக்க.
- குழுக்களின் பேறுகளைத் தொகுத்திடும் வண்ணம் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்க.
- கலந்துரையாடலிற் பின்வரும் விடயங்களை மீளவும் வலியுறுத்துக.

> - இது முரளி, வேணு என்னும் வடமொழிப் பெயர்களாலும், குழல் என்னும் தமிழ்ச் சொல்லாலும் குறிப்பிடப்பட்டுகின்றது.
> - உலகிலே காணப்படும் மிகப்பழமையான துளைக்கருவி இதுவாகும்.
> - வாத்ய த்ரயத்தில் இது இரண்டாவது இடத்தை வகிக்கின்றது.

- கண்ணபிரான் வாசித்த புல்லாங்குழலிசையில் சகல ஜீவராசிகளும் மயங்கியதாகக் கூறப்படுகின்றது.
- ஆதி காலத்து மனிதன் வண்டுகளாற் துளை செய்யப்பட்ட மூங்கிற் கம்புகளினூடேயுள்ள துளையூடு காற்று நுழைந்து நாதஒலி வெளிப்பட்டதை அவதானித்தான். இதனை அடிப்படையாகக் கொண்டே புல்லாங்குழல் என்ற வாத்தியத்தை உருவாக்கினான் என்பர்.
- ஆதி காலத்தில் குழலும், யாழும் தமிழிசைக்குப் பக்க வாத்தியங்களாகப் பயன்படுத்தப்பட்டன.
- புல்லாங்குழலின் பாகங்கள் குறிப்பட்ட படத்தினைக் காட்சிப்படுத்துக.
- புல்லாங்குழலானது மூங்கிலாற் செய்யப்பட்ட உருளை வடிவினதாய் அமைந்த நீண்ட குழாயாகும். புல்லாங்குழலானது தந்தம், சந்தனமரம், கதிரமரம், கருங்காலி, வெண்கலம் முதலியவற்றாலும் செய்யப்படுகிறது எனினும் மூங்கிற் குழலே மிக இனிமையான இசை ஒலியைத் தருகிறது.
- இது 14 அங்குல நீளமும், 3/4 அங்குல விட்டமும் கொண்டகுழாய் ஆகும்.
- இதன் ஒரு முனை மூடியும் மறுமுனை திறந்தும் காணப்படும். மூடப்பட்ட முனையில் இருந்து 3/4 அங்குல தூரத்தில் ஊதும் தூவாரம் அமைந்துள்ளது. இவ்வூதும் துளையை 'முகரந்திரம்' அல்லது 'முத்திரைத்துளை' என்று கூறுவர். இத்துளைக்கு நேர்கோட்டில் சிறிதாக அமைந்த ஒன்பது ஸவரத்துளைகள் அமைக்கப்பட்டுள்ளன.
- புல்லாங்குழல் வாசிக்கையில், இடது கையின் கட்டைவிரல், சிறுவிரல் தவிர்ந்த மூன்று விரல்களையும், வலது கையின் கட்டை விரல் தவிர்ந்த நான்கு விரல்களையும், 7 துளைகளின் மீது வைத்து, முகரந்திரத்தினூடு காற்றைச் செலுத்தி ஊதி துளைகளை மூடித்திறந்து இசைஒலி பெறப்படுகின்றது. வலது பக்கத்தில் இறுதியாகப் அமைந்த துளையானது, அபூர்வமாக ஒரு சில சமயங்களில் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றது.
- 7 ஸ்வரங்களுக்கு 7 துளைகள் இருந்தபோதும் ஊதும் காற்றின் அளவைக் கொண்டே ஏனைய நுட்ப ஸ்வரங்களைச் சரியான முறையில் ஒலிக்கச் செய்வர்.
- முகரந்திரத்திற்கு நெருங்கியுள்ள துவாரமே அதி உயர் சுருதியுடைய ஸ்வரத்தை உண்டாக்குகின்றது. இதனைத் 'தாரரந்திரம்' என்பர்.
- உதட்டிற்கு வலப்பக்கமாகவே புல்லாங்குழல் வைத்து வாசிக்கப்படுகின்றது.
- இவ்வாத்தியம் 2 1/2 ஸ்தாயிகள் வரை வாசிக்கலாம்.
- இது சுருதி நிர்ணயிக்கப்பட்ட ஏகத்வனி வாத்யமாகும்.
- புல்லாங்குழலின் நீளத்தினதும், உள்கூட்டின் பரப்பினதும் வேறுபாடுகளினால் ஆதார சுருதி வேறுபடுகின்றது. நீளம் அதிகரித்தும், உட்கூட்டின் பரப்பு அதிகமாகவும் இருப்பின் ஆதார சுருதி குறையும். நீளம் குறைந்தும் உள்கூட்டின் பரப்பு குறைந்துமிருப்பின் ஆதார சுருதி அதிகமாக இருக்கும்.
- புல்லாங்குழல் வாத்தியத்தை வாசிப்பதில் மிகுந்த தேர்ச்சி பெற்றோர் சிலர் பின்வருமாறு -

  சங்கீத கலாநிதி - திருப்பாம்புரம் என்.சுவாமிநாதபிள்ளை
  T.R.மகாலிங்கம், ரமணி, T.R.நவனீதம், மாலி.

(15 நிமிடம்)

**கணிப்பீட்டு, மதிப்பீட்டு நியதிகள் :**

- புல்லாங்குழல் வாத்தியத்தின் சிறப்பம்சங்களை விளக்குவர்.
- புல்லாங்குழலின் அமைப்பை விளக்குவர்.
- புல்லாங்குழல் வாத்தியப் பாகங்களைக் குறிப்பிடுவர்.
- புல்லாங்குழலை வாசிக்கும் முறையைக் குறிப்பிடுவர்.
- புல்லாங்குழல் வாசிப்பதிற் தேர்ச்சி பெற்றோரைக் குறிப்பிடுவர்.
- புல்லாங்குழலின் அமைப்பைப் படம் வரைந்து பாகங்களைக் குறிப்பர்.

## செயற்பத்திரம் : 4.5.2.3

### குழு I

1. புல்லாங்குழல் வாத்தியத்தைப் படம் வரைந்து பாகங்களைக் குறிக்குக.
2. இவ்வாத்திய அமைப்பினை விளக்குக.

### குழு II

1. புல்லாங்குழல் வாத்தியத்தை வாசிக்கும் முறையை விளக்குக.
2. இவ்வாத்தியம் வாசிப்பதிற் பிரபல்யமடைந்த வித்துவான்கள் மூவரைக் குறிப்பிடுக.

### குழு III

1. புல்லாங்குழல் வாத்தியத்தின் சிறப்பம்சங்களைக் குறிப்பிடுக.

# இசைக்கருவி - புல்லாங்குழல்

புல்லாங்குழலானது முரளி, வேணு என்னும் வடமொழிப் பெயர்களாலும், குழல் என்னும் தமிழ்ச் சொல்லாலும் குறிப்பிடப்படுகிறது. உலகின் எல்லாப் பாகங்களிலும் காணப்படும் மிகப்பழமையான துளைக்கருவி புல்லாங்குழலே ஆகும்.

வீணை, வேணு, மிருதங்கம், எனப்படும் வாத்யத்ரயத்தில் வேணு இரண்டாம் இடத்தை வகிக்கின்றது. கண்ணபிரான் புல்லாங்குழல் வாசித்தாகவும், அவரது குழல் இசையில் சகல ஜீவராசிகளும் மயங்கியதாகவும் கூறப்படுகின்றது. ஆதிகாலத்தில் மனிதன், மூங்கில் காடுகளினூடாகப் போகும் போது அங்கு இனிமையானதொரு ஓசையைக் கேட்டான். அதனை உற்று அவதானிக்கும் போது வண்டுகளாற் துளை செய்யப்பட்ட மூங்கிற் கம்புகளினூடே காற்று நுழைந்து, அந்தத் துவாரங்களினின்று நாத ஒலி வெளிப்பட்டதை உணர்ந்தான். இவ்வனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு புல்லாங்குழல் என்ற வாத்தியத்தை உருவாக்கினான் . ஆதிகாலத்தில் யாழும், குழலுமே தமிழிசைக்குப் பக்கவாத்தியங்களாகப் பயன்படுத்தப்பட்டன.

புல்லாங்குழலானது மூங்கிலால் செய்யப்பட்ட உருளை வடிவமான நீண்ட குழாயாகும். இது சுமார் 14 அங்குல நீளமும், 3/4 அங்குல விட்டமும் உடைய குழாயாகும். இதன் இடப்பக்கம் மூடப்படும். வலப்பக்கம் திறந்தும் காணப்படும். மூடப்பட்ட முனையில் இருந்து 3/4 அங்குல தூரத்தில் ஊதும் தூவாரம் அமைந்துள்ளது. வாய்வைத்து ஊதும் துளைக்கு **'முகரந்திரம்'** அல்லது **'முத்திரைத்துளை'** என்று பெயர். இத்துவாரத்திற்கு நேர்கோட்டில் ஒன்பது ஸ்வரத்துளைகள் அமைக்கப்பட்டுள்ளன. இத்துளைகள் ஊதும் துளையை விடச் சற்று சிறியதாக இருக்கும்.

இடது கைவிரல்களில் கட்டைவிரல், சிறுவிரல் தவிர்ந்த மூன்று விரல்களையும், வலது கைவிரல்களில் கட்டை விரல் தவிர்ந்த நான்கு விரல்களையும், 7 துளைகளின் மீது வைத்து. முத்திரைத் துளைக்குள் வாயின் வழியாகக் காற்றைச் செலுத்தி, துளைகளை மூடித் திறக்கும் போது இசை உருவாகிறது . வலது பக்கத்தில் இறுதியாக உள்ள துளை திறந்தே இருக்கும். இத்துளையானது அபூர்வமாக ஒரு சில சமயங்களில் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றது.7 ஸ்வரங்களுக்கு 7 துளைகள் இருந்தாலும் மூச்சின் அளவைக் கொண்டே நுட்ப ஸ்வரங்களை சரியாக ஒலிக்க முடியும். முகரந்திரத்திற்கு நெருங்கியுள்ள துவாரம் தான் மிக உயர் சுருதியுடைய ஸ்வரத்தை உண்டாக்குவதாகும்.இத்துளையானது **'தாரரந்திரம்'** என அழைக்கப்படுகிறது.பொதுவாக உதட்டிற்கு வலப்பக்கமே புல்லாங்குழல் வைத்து வாசிக்கப்படுகிறது.

*இவ்வாத்தியத்தில் 2 1/2 ஸ்தாயி வரை வாசிக்கலாம்.இது சுருதி நிர்ணயிக்கப்பட்ட ஏகத்வனி* வாத்யமாகும். புல்லாங்குழலின் நீளம், உள் கூட்டின் அளவு இவற்றின் வேறுபாடுகளினால் ஆதார சுருதி வேறுபடும். நீளம் அதிகமாகவும், உள் கூட்டின் பரப்பு அதிகமாகவும் இருந்தால் ஆதார சுருதி குறையும். நீளம் குறைவாகவும் , உள்கூட்டின் பரப்பு குறைவாகவும் இருந்தால் ஆதார சுருதி அதிகமாக இருக்கும்.

புல்லாங்குழல் செய்வதற்கு தந்தம், சந்தனமரம், கதிரமரம், கருங்காலி, வெண்கலம் முதலியன பயன்படுத்தப்படுகின்றன. எனினும் மூங்கிற் குழலே, மிக இனிமையான இசை இசையை எழுப்பும் தன்மை உடையது.

சங்கீத கலாநிதி திருப்பாம்புரம் டி.என்.சுவாமிநாதபிள்ளை,T.R.மகாலிங்கம், ரமணி, T.R.நவனீதம் போன்ற தென்னிந்தியக் கலைஞர்களும் இவ் வாத்தியம் வாசிப்பதில் நல்ல தேர்ச்சி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 4.0 | : | கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார். |
| தேர்ச்சிமட்டம் 4.6 | : | உருப்படிகளின் இலட்சணங்கள் பற்றி விளக்குவார். |
| செயற்பாடு 4.6.2 | : | வர்ணத்தின் இலட்சணத்தை அறிந்து கொள்வோம். |
| நேரம் | : | 40 நிமிடங்கள் (01 பாடவேளை) |
| தர உள்ளீடு | : | சுருதிப் பெட்டி, ஒலிப்பதிவுக் கருவி, தானவர்ணம் பதவர்ணம் ஒலிப்பதிவு செய்த ஒலிப்பதிவு நடா, செயற்பத்திரம் 4.6.2.2 |

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :

படி 4.6.1 :

- மேற்குறித்த இசை உருப்படிகளை ஒலிப்பதிவுக் கருவியில் இசைக்கச் செய்தோ அல்லது பாடிக் காட்டியோ மாணவரை செவிமடுக்கச் செய்க.
- செவிமடுத்த உருப்படிகளை இனம் காணச் செய்க.
- இனம் கண்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்க.

> - அப்பியாசகான உருப்படிகளில் வர்ணம் முக்கியமானது.
> - வர்ணத்தின் அங்கங்கள்.
>   - பூர்வாங்கம் - பல்லவி, அனுபல்லவி, முக்தாயிஸ்வரம்
>   - உத்தராங்கம் - சரணம் சரண ஸ்வரம் (வேறு பெயர்கள்)
> - வர்ணத்தின் வகைகள்
>   - தானவர்ணம் - பல்லவி, அனுபல்லவி, சரணத்திற்கு மட்டும் சாகித்தியம் உண்டு.
>   - பதவர்ணம் - எல்லா அங்கங்கட்கும் சாகித்தியம் உண்டு.
> - அப்பியாசகான உருப்படியாயினும் தானவர்ணம் கச்சேரியின் ஆரம்பத்திலும்,பதவர்ணம் நாட்டியக் கச்சேரிகளிலும் பயன்படுத்தப்படுகிறது.
> - பதவர்ணம் சௌக காலத்தில் அமைந்திருக்கும்.
> - பதவர்ணத்தின் வேறு பெயர்கள்.
> - வர்ணங்கள் அமைந்துள்ள தாளங்கள்.
> - பிரபல்யமான இராகமாலிகா வர்ணங்கள்.
> - பதஜதி வர்ணங்கள் என்ற பெயர்க் காரணம்.
> - தானவர்ணங்களை இயற்றிய மகான்கள்.
> - பதவர்ணங்களை இயற்றிய மகான்கள்.

(10 நிமிடம்)

படி 4.6.2

- மாணவர்களை இரு குழுக்களாகப் பிரித்துச் செயற்பத்திரத்தினை இணைப்புடன் வழங்குக.
- அறிவுறுத்தலுக்கேற்பச் செயற்பாட்டில் ஈடுபடுகிறார்களா என்பதை உறுதிசெய்க.

(15 நிமிடம்)

படி 4.6.3 :

- ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குக.
- மற்றய குழு அதனை அவதானித்துக் கருத்துக்களைக் கூற இடமளிக்குக.
- குழுக்களால் வெளிப்படுத்தப்பட்ட விடயங்களைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடலை மேற்கொள்க.
- கலந்துரையாடலின் போது பின்வரும் விடயங்களை மீள வலியுறுத்துக.

- அப்பியாசகான உருப்படி வகைகளுள் வர்ணம் மிக முக்கியமானது.
- வர்ணங்களை அப்பியாசிப்பதன் மூலம் உருப்படிகளை அழகுப்படுத்தி மெருகுடனும் கமகத்துடனும் பாடவும் வாசிக்கவும் முடியும்.
- வர்ணத்தில் வார்த்தைகள் குறைவாக இருக்கும்.
- இதன் சாகித்தியம் பக்தி விஷயமாகவோ, ச்ருங்கார விஷயமாகவோ சங்கீதத்தை ஆதரித்த பிரபுக்களைப் பற்றியதாகவோ இருக்கும்.
- வர்ணத்திற்கு பல்லவி, அனுபல்லவி, முக்தாயிஸ்வரம், சரணம் சரணஸ்வரங்கள் என்னும் அங்கங்கள் உண்டு.
- இவற்றுள் பல்லவி, அனுபல்லவி முக்தாயிஸ்வரம் பூர்வாங்கத்துள்ளும், சரணம் சரண ஸ்வரங்கள் உத்தராங்கத்துள்ளும் அடங்கும்.
- சரணம், உப பல்லவி, எத்துக் கடைப்பல்லவி சிட்டைப் பல்லவி எனவும் அழைக்கப்படும்.
- சரண ஸ்வரங்கள் எத்துக்கடை ஸ்வரங்கள் என்றும் சரணஸ்வரங்கள் என்றும் அழைக்கப்படும்.
- வர்ணம் - தான வர்ணம் பதவர்ணம் என இருவகைப்படும்.
- தானஜாதி சஞ்சாரங்களுடன் பிரகாசிக்கும் உருப்படி தானவர்ணமாகும்.
- தானவர்ணத்தில் பல்லவி, அனுபல்லவி, சரணம் ஆகிய பகுதிகளுக்கு மாத்திரம் சாகித்தியம் உண்டு.
- தான வர்ணங்களை கச்சேரியின் ஆரம்பத்தில் பாடினால் கச்சேரி சீக்கிரம் களைகட்டும் இரண்டு காலங்களிலும் பாடவும் வாசிக்கவும் முடியும்.
- ஆதி, அட, ஜம்பை போன்ற தாளங்களில் தான வர்ணங்கள் அமைந்திருக்கும்.
- பதவர்ணம் நாட்டியத்திற்காக ஏற்பட்ட உருப்படி.
- சௌக காலத்திலேயே அமைக்கப்பட்டுள்ளது.
- பதவர்ணத்தில் எல்லா அங்கத்திற்கும் சாகித்தியம் காணப்படும். தாது ஆடுவதற்கும் மாது அபிநயத்திற்கு ஏற்றதாகவும் அமைந்திருக்கும்.
- பதவர்ணங்கள் பெரும்பாலும் ஆதி, ரூபக தாளங்களில் அமைந்திருக்கும்.
- ஜதிகள் உள்ள பதவர்ணம் பதஜதிவர்ணம் என அழைக்கப்படும்.
- இராக மாலிகா வர்ணங்களில் அங்கங்கள் வெவ்வேறு இராகங்களில் அமைந்திருக்கும்.

  உ+ம் :- நவராகமாலிகா வர்ணம், தினராகமாலிகா வர்ணம், கனராகமாலிகா வர்ணம்
- தான வர்ண முறையில் அமைந்த ராகமாலிகா வர்ணங்களும், பதவர்ண முறையில் அமைந்த ராகமாலிகா வர்ணங்களும் உள்ளன.
- தானவர்ணங்களை இயற்றிய சில மகான்கள்:-

  பச்சிமிரியம் ஆதியப்பய்யர், சியாமா சாஸ்திரிகள் ,
  பல்லவி கோபாலய்யர், ஸ்வாதி திருநாள் மஹாராஜா.
- பதவர்ணங்களைச் செய்த சில மகான்கள்:-

  இராமசாமி தீக்ஷிதர், முத்துஸ்வாமி தீக்ஷிதர், பல்லவி ஷேசய்யர்,
  தஞ்சை வடிவேல் நட்டுவனார்.

(15 நிமிடம்)

**கணிப்பீட்டு, மதிப்பீட்டு நியதிகள் :**

- வர்ணத்தின் பொதுவான அம்சங்களைக் குறிப்பிடுவர்.
- தானவர்ணம், பதவர்ணம் எனும் இசை உருப்படிகளை வேறுப்படுத்தி இனம் காண்பர்.
- இவ்வுருப்படிகளின் அமைப்பைக் கூறுவர்.
- இவ்வுருப்படிகளின் சிறப்பையும், தனித்துவத்தையும் விளக்குவர்.
- இவ்வுருப்படிகளைப் பாடும் முறையைக் குறிப்பிடுவர்.
- இவ்வுருப்படி வகைக்கு உதாரணங்களைக் குறிப்பிடுவர்.
- இவ்வுருப்படி வகைகள் இயற்றிய வாக்கேயகாரர்களைக் குறிப்பிடுவர்.

## செயற்பத்திரம் 4.6.2.2

### குழு - 01

பின்வரும் விடயங்களைத் தொடர்புபடுத்தி தானவர்ணத்தின் இலட்சணத்தை விளக்கி எழுதுக.

- வர்ணத்தின் பொதுவான அம்சங்கள்.
- தானவர்ணத்தின் சிறப்பம்சங்கள்.
- தானவர்ணத்தின் இயற்றியவர்கள்.
- தானவர்ணத்திற்கு சில உதாரணங்கள்.

### குழு - 02

பின்வரும் விடயங்களைத் தொடர்புபடுத்தி பதவர்ணத்தின் இலட்சணத்தை விளக்கி எழுதுக.

- வர்ணத்தின் பொதுவான அம்சங்கள்.
- பதவர்ணத்தின் சிறப்பம்சங்கள்.
- பதவர்ணத்தின் இயற்றியவர்கள்.
- பதவர்ணத்திற்கு சில உதாரணங்கள்.

# உருப்படிகளின் இலட்சணம்
# தானவர்ணம், பதவர்ணம்

அப்பியாசகான உருப்படி வகைகளுள் வர்ணம் மிக முக்கியமானதாகும். வர்ணங்களை அப்பியாசம் செய்வதன் மூலம் உருப்படிகளை அழகுபடுத்தி, மெருகுடனும், கமகத்துடனும் பாடவும், வாசிக்கவும் முடியும். வர்ணத்தில் வார்த்தைகள் குறைவாகவே காணப்படும். இதன் சாகித்தியமானது பக்தி விஷயமாகவோ, சிருங்கார விஷயமாகவோ, சங்கீத வித்துவான்களை ஆதரித்த பிரபுக்களைப் பற்றியதாகவோ இருக்கும்.

வர்ணமானது பல்லவி, அனுபல்லவி, முக்தாயிஸ்வரம், சரணம், சரண ஸ்வரங்கள் என்னும் அங்கங்களைக் கொண்டுள்ளது. இவற்றுள் பல்லவி, அனுபல்லவி, முக்தாயிஸ்வரம் என்னும் அங்கங்களை பூர்வாங்கத்துள்ளும், சரணம் சரண ஸ்வரங்கள் என்னும் அங்கங்கள் உத்தராங்கத்தினுள்ளும் அடங்கும். சரணத்தை உபபல்லவி என்றும், எத்துக்கடைப்பல்லவி என்றும், சிட்டைப் பல்லவி என்றும் அழைப்பதுண்டு. சரண ஸ்வரங்களுக்கு எத்துக்கடை ஸ்வரங்கள் என்றும், சிட்டை ஸ்வரங்கள் எ ன்றும் வேறு பெயர்களுண்டு.

வர்ணங்களில் தானவர்ணம், பதவர்ணம் என்னும் இரு வகைகள் உண்டு.

தானஜாதி சஞ்சாரங்களுடன் பிரகாசிக்கும் உருப்படியே தானவர்ணமாகும். இவ் வர்ணத்தில் பல்லவி, அனுபல்லவி, சரணம் ஆகிய பகுதிகளுக்கு மாத்திரம் சாகித்தியம் காணப்படும். தானவர்ணங்களை கச்சேரிகளின் ஆரம்பத்தில் பாடினால், கச்சேரி விரைவில் களைகட்டும். இதனை இரண்டு காலங்களிலும் பாடவும், வாசிக்கவும் முடியும். தானவர்ணங்கள் ஆதிதாளம், அடதாளம், கண்டஜாதி திரிபுடைதாளம். சதுஸ்ரஜாதி அடதாளம் போன்ற தாளங்களில் இயற்றப்பட்டுள்ளன.

பதவர்ணமானது நாட்டியத்திற்காக ஏற்பட்ட உருப்படி வகையாகும். இது சௌக்க காலத்திலேயே அமைக்கப்பட்டுள்ளது. ஆபூர்வமாக சில பதவர்ணங்கள் மத்திம காலத்திலும் அமைந்துள்ளன.

உ+ம் :- மனவிசேகொனராதா - சங்கராபரணம் - ஆதி

பதவர்ணத்தில் எல்லா அங்கங்களிற்கும் சாகித்தியம் காணப்படும். இதன் தாது ஆடுவதற்கு ஏற்றதாகவும், மாது அபிநயத்திற்கு ஏற்றதாகவும் அமைந்திருக்கும். பதவர்ணங்கள் பெரும்பாலும், ரூபக தாளத்திலும் அமைந்துள்ளன. பதவர்ணங்களை சௌக்க வர்ணமென்றும், ஆடவர்ணமென்றும் அழைப்பதுண்டு. ஜதிகள் உள்ள பதவர்ணங்களும் உள்ளன. அவை பதஜதி வர்ணங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

இராகமாலிகா வர்ணங்களில் அங்கங்கள் வெவ்வேறு இராகங்களில் அமைந்திருக்கும். நவராகமாலிகா வர்ணமும், கனராகமாலிகா வர்ணமும், தினராகமாலிகா வர்ணமும் பிரசித்தமான உருப்படிகளாகும். தானவர்ண முறையில் அமைந்துள்ள இராகமாலிகா வர்ணங்களும், பதவர்ண முறையில் அமைந்துள்ள இராகமாலிகா வர்ணங்களும் உள்ளன.

தானவர்ணங்களை இயற்றிய சில மஹான்கள் பச்சிமிரியம் ஆதியப்பய்யர், சியாமா சாஸ்திரிகள், பல்லவி கோபாலய்யர், ஸ்வாதிதிருநாள்மஹாராஜா, வீணைகுப்பய்யர், டைகர் வரதாசாரியார், இராமநாதபுரம்ஸ்ரீனிவாஸயங்கர்.

பதவர்ணங்களை இயற்றிய சில மஹான்கள் - இராமஸ்வாமிதீக்ஷிதர், முத்துஸ்வாமிதீக்ஷிதர், பல்லவிசேஷய்யர், தஞ்சாவூர்வடிவேல்நட்டுவனார், இராமசாமிசிவன்.

தேர்ச்சி 5.0 : கர்நாடக இசையின் வளர்ச்சிக்கு வாக்கேயகாரர்கள் ஆற்றிய பங்களிப்பினை மதிப்பிடுவார்.

தேர்ச்சிமட்டம் 5.1 : வாக்கேயகாரர்களின் வாழ்க்கை வரலாற்றையும் இசைத் தொண்டினையும் மதிப்பிடுவார்.

செயற்பாடு 5.1.3 : கோபாலகிருஷ்ண பாரதியாரின் வாழ்க்கை வரலாற்றையும் இசைத் தொண்டினையும் அறிந்து கொள்வோம்.

நேரம் : 01 மணி 20 நிமிடங்கள் (02 பாடவேளைகள்)

தர உள்ளீடு : கோபாலகிருஸ் பாரதியாரின் படம் இவரது உருப்படிகள் அடங்கிய ஒலிப்பதிவு நாடா, ஒலிப்பதிவுக் கருவி, சுருதிப் பெட்டி, செயற்பத்திரம் 5.1.2.3

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :**

படி 5. 1. 1

- கோபாலகிருஷ்ணபாரதியாரின் படத்தைக் காட்சிப்படுத்தி இவரின் உருப்படிகள் அடங்கிய இவரின் உருப்படிகள் அடங்கிய ஒலிப்பதிவு நாடாவை ஒலிக்கச் செய்தோ ஆசிரியர் பாடிக்காட்டியோ வாக்கேயகாரரை இனங்காண வழிப்படுத்துக.

- கோபாலகிருஷ்ணபாரதியார் தொடர்பான பின்வரும் விடயங்கள் வலியுறுத்தப்படும் வகையில் கலந்துரையாடுக.

> - கோபாலகிருஷ்ணபாரதியார் (1810-1896)
>   இவர் 1810 ஆம் ஆண்டு நரிமணம் என்னும் இடத்தில் பிறந்தார்.
> - கல்வி - இவர் கோவிந்தசிவம் எனும் முதல் குருவிடம் சாஸ்திரங்களையும்,யோகம் முதலியவைகளையும் பயின்றார்.
>   - ஹிந்துஸ்தான் இசைவித்துவான் இராமதாஸ் என்பவரிடம் இந்துஸ்தானி இசைமுறையைக் கற்றார்.
>   - கனம் கிருஷ்ண ஐயரிடம் கர்நாட இசை முறையைக் கற்றார்.
> - இசைப்பணி
>   - இவர் கர்நாடக இசையிலும், இந்துஸ்தானி இசையிலும் தேர்ச்சி பெற்றிருப்பதால் புதிய வர்ணமெட்டுக்களுடன் கூடிய அநேக பக்திப் பாடல்களைப் பாடியுள்ளார். தியாகராஜரின் பஞ்சரத்தினக் கீர்த்தனைகளைப் பின்பற்றி தாமும் தமிழில் பஞ்சரத்தினக் கீர்த்தனைகளை இயற்றியுள்ளார். கீர்த்தனைகளால் தமிழிசையை வளப்படுத்தினார்.
> - முத்திரை கோபாலகிருஷ்ண, பாலகிருஷ்ண.
> - இயற்றிய உருப்படிகள்
>   நந்தனார் சரித்திரம்,பஞ்சரத்தினக் கீர்த்தனைகள், சிதம்பரக் கும்மிப்பாடல் போன்றவை.

(20 நிமிடம்)

படி 5.1.2

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தினை இணைப்புடன் வழங்குக.
- அறிவுறுத்தலுக்கேற்ப செயற்பாட்டில் குழுக்களை ஈடுபடச் செய்க.
- ஒவ்வொரு குழுவும் சரியாகச் செயற்படுகிறார்களா என்பதை உறுதிசெய்து முழுமைப்படுத்துக.

(30 நிமிடம்)

படி 5.1.3 :

- ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளை முன்வைக்க சந்தர்ப்பம் வழங்குக.
- ஏனைய குழுக்களும் அவற்றை அவதானித்துக் கருத்துக் கூற இடமளிக்க.
- பின்வரும் விடயங்கள் வலியுறுத்தப்படும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்க.

---

- கோபாலகிருஷ்ண பாரதியார்
  வாழ்க்கைக்காலம் : 1810 - 1896
  இவர்பிறந்த இடம் : நரிமணம்
  இவருடைய தந்தையார் இராமசாமி பாரதியாருக்கு மகனாக அவதரித்தார். இவருடைய முன்னோர்கள் இசையில் தேர்ச்சி பெற்றவர்கள்.
- கோவிந்தசிவம் என்பவர்தான் இவருடைய முதல் குரு. இவரிடமே சாஸ்த்திரங்களையும் யோகம் முதலியவைகளையும் பயின்றார்.
- இந்துஸ்தான் இசைவித்துவான் "இராமதாஸ்" என்பவரிடம இசைமுறையைக் கற்றார். கனம் கிருஷ்ண ஐயரிடம் கர்நாடக இசை முறையைக் கற்றார்.
- இசைப்பணி
  இவர் கர்நாடக இசையிலும் இந்துஸ்தானி இசையிலும் தேர்ச்சி பெற்றிருப்பதால் புதிய வர்ணமெட்டுக்களுடன் கூடிய அநேக பக்திப்பாடல்களைப் பாடியுள்ளார்.
  - தியாகராஜரின் பஞ்சரத்தினக்கீர்த்தனைகளைப் பின்பற்றித் தாமும் தமிழில் பஞ்சரத்தினக் கீர்த்தனைகளை இயற்றியுள்ளார்.
  - கீர்த்தனைகளால் தமிழிசையை வளப்படுத்தினார். "நந்தனார் சரித்திரம்" என்னும் இசை நாடகத்தை எழுதினார்.
- முத்திரை : கோபாலகிருஷ்ண, பாலகிருஷ்ண
- இயற்றிய உருப்படிகள்.
  பஞ்சரத்தினக்கீர்த்தனைகள்
  1. ஹரஹரசிவசங்கர - நாட்டை
  2. சரணாகதமென்று - கௌளை
  3. பிறவாதவரம் தாரும் - ஆரபி
  4. ஆடியபாதமே கதி - வராளி
  5. மறவாமல் எப்படியும் - ஸ்ரீ இராகம்

  மேலும் கும்மி, கோலாட்டம், ஊஞ்சல், நலங்கு,லாலி முதலிய பாடல்களையும் பாடியுள்ளார்.

அரிய கீர்த்தனைகளையும் இயற்றியுள்ளார்.

1. திருவடிசரணம் - காம்போஜி
2. நடனமாடினார் - வசந்தா
3. கண்ணாலே கண்டேன் - நாதநாமக் கிரியை

---

(30 நிமிடம்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- கோபாலகிஷ்ண பாரதியாரின் வாழ்க்கைக் காலத்தைக் குறிப்பிடுவர்.
- இவரது முத்திரையைக் கூறுவர்.
- இவரது இசைப்பணி பற்றி விளக்குவர்.
- இவரின் வரலாறு, இசைப்பணி என்பவற்றைக் கற்பதன் மூலம் இசைக்கலைஞர்களை ஊக்குவிக்கும் மனப்பாங்கை ஏற்றுக்கொள்வர்.

## செயற்பத்திரம் 5.1.2.3

சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குக.

1. கோபாலகிருஸ்ண பாரதியாரின் வாழ்க்கைக் காலத்தைக் குறிப்பிட்டு, அவரது வரலாற்றை எழுதுக.
2. இவருடைய முத்திரையைக் குறிப்பிடுக.
3. இவரது இசைப்பணி பற்றி விளக்குக.

# கோபாலகிருஷ்ண பாரதியார் (1810-1896)

"எந்நேரமும் உந்தன் சந்நிதியிலே - நான்
இருக்க வேணும் ஐயா"

என்று உள்ளமுருக தேவகாந்தாரியைப் பாடித் தமிழ் நாட்டில் ஆன்மீகத்தையும் தமிழிசையை வளர்த்த பெருந்தகை கோபாலகிருஷ்ணபாரதியார் அவர்கள்.

இவர் 1810ம் ஆண்டு நாகபட்டினத்தைச் சேர்ந்த நரிமணம் என்ற இடத்தில் இராமசாமி பாரதியாருக்கு மகனாக அவதரித்தார். இவருடைய முன்னோர்கள் இசையில் தேர்ச்சி பெற்றவர்கள். தந்தையும் பாட்டனாரும் வீணை வாசிப்பதில் விற்பன்னர்கள். **"கோவிந்த சிவம்"** என்பவர்தான் இவருடைய முதல்குரு. இவரிடமிருந்து சாஸ்திரங்களையும், யோகம் முதலியவைகளையும் பயின்றார். இளமையிலேயே பல இசை அரங்குகளையும், ஹரிகதை நிகழ்ச்சிகளையும் கேட்டுப் பயன் அடைந்தார்.

இந்துஸ்தான் இசைவித்துவான் **"இராமதாஸ்"** என்பரிடம் இந்துஸ்தானி இசைமுறையைக் கற்றார். **கனம் கிருஸ்ண ஐயரிடம்** கர்நாடக இசைமுறையைக் கற்றார். ஆனந்தாண்டவபுரத்தில் மிராசுதாராக இருந்த **அண்ணுஐயர்** கோபாலகிருஷ்ண பாரதியாரை மிகவும் ஆதரித்தார். அவருடைய உதவியால் பாரதியார் காலட்சேபம் செய்து பணம் சம்பாதித்தார்.

இவர் கர்நாடக இசையிலும், இந்துஸ்தானி இசையிலும் தேர்ச்சி பெற்றவராதலால் பல புதிய வர்ணமெட்டுக்களுடன் கூடிய அநேக பக்திப் பாடல்களைப் பாடியுள்ளார். **"கோபாலகிருஷ்ண"** என்ற முத்திரையுடன் அநேக கீர்த்தனைகளை தமிழில் இயற்றியுள்ளார். சேக்கிழார் எழுதிய பெரியபுராணத்தில் இருக்கும் 37 செய்யுட்களில் அடங்கிய நந்தனார் சரித்திரத்தை கோபாலகிருஷ்ண பாரதியார் **"நந்தனார் சரித்திரம்"** என்னும் இசை நாடகமாக எழுதினார். இந்த இசைநாடகத்தில் அழகிய கீர்த்தனைகளுடன், நொண்டிச்சிந்து, ஆனந்தக்களிப்பு, இருசொல் அலங்காரம், லாவணி, தண்டகம் முதலிய இசைமுறைகளும் கையாளப்பட்டுள்ளன. இந்நாடகம் தியாராஜசுவாமிகளின் **"பிரஹலாத பக்தி விஜயம்" "நௌகா சரித்திரம்"** ஆகிய இசைநாடகங்களோடு சரிசமமாகக் கருதப்படும் தகுதி வாய்ந்தது.

தியாகராஜரின் தூண்டுதலால் **"சபாபதிக்கு"** என்னும் ஆபோகி ராக கிருதியொன்றை இயற்றினார். மற்றும் தியாகராஜரின் பஞ்சரத்தினக் கீர்த்தனைகளைப் பின்பற்றி தாமும் தமிழில்,

1. ஹரஹர சிவசங்கர - நாட்டை
2. சரணாகதமென்று - கௌளை
3. பிறவாத வரம் தாரும் - ஆரபி
4. ஆடிய பாதமே கதி - வராளி
5. மறவாமல் எப்படியும் - ஸ்ரீராகம்

என்ற பஞ்சரத்தினக் கீர்த்தனைகளை இயற்றினார். இசைமேதைகளான மகா வைத்தியநாத ஐயரும் அவருடைய சகோரர் இராமசாமி ஐயரம் கோபாலகிருஷ்ண பாரதியார் வீட்டிற்குச் சென்று அவருடைய புதிய இசை உருப்படிகளை ஆவலுடன் கற்று வந்தனர். டாக்டர் உ.வே.சுவாமிநாதஐயரும் சிலகாலம் கோபாலகிருஷ்ண பாரதியாரிடம் இசை பயிலும் பேறு பெற்றார். மகா வித்வான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களும், மாயூரம் வேதநாயகம் பிள்ளை அவர்களும் கோபாலகிருஷ்ண பாரதியாரின் நெருங்கிய நண்பர்களாக இருந்து ஊக்கம் கொடுத்தனர்.

நாகப்பட்டினத்தில் **"நந்தனார் சரித்திரம்"** அரங்கேற்றம் நடைபெற்ற போது ஒரு பிரெஞ்சுக்காரர் (சீசய்யா துரை) இதனை ஒரு நூலாக வெளியிடுவதற்கு மிகவும் துணை புரிந்தார். ஒருமுறை இராமலிங்க அடிகளும் இச்சரித்திரத்தைக் கேட்டு மிகவும் பாராட்டினார்.

கோபால கிருஷ்ண பாரதியார் இயற்றியுள்ள ஏனைய இசைநாடகங்கள்.

1. இயற்பகை நாயனார் சரித்திரம்
2. திருநீலகண்ட நாயனார் சரித்திரம்
3. காரைக்கால் அம்மையார் சரித்திரம் என்பவையாகும்.

மேலும் இவர் **"ஞானச் சிந்து"**, **"ஞானக்கும்மி"** முதலியவைகளையும் இயற்றியுள்ளார். சிறுவர்கள் மனம் பண்படும் பொருட்டு கும்மி, கோலாட்டம், ஊஞ்சல், நலங்கு, லாலி முதலிய பாடல்களையும் பாடியுள்ளார். வேறுபல அரிய கீரத்தனைகளையும் இயற்றியள்ளார்.

எடுத்துக்காட்டுகள்.

| | | | |
|---|---|---|---|
| 1. திருவடி சரணம் | - காம்போஜி | 2. தில்லைத்தளம் | - சாமா |
| 3. நடனமாடினார் | - வசந்தா | 4. கனசபேசன் சேவடி | - கமாஸ் |
| 5. கண்ணாலே கண்டேன் | - நாதநாமக்கரியை | | |

மேலும் இவர் பெண்களுக்காக **"சாந்துப்பொட்டு தளதளங்க"** என்று தொடங்கும் **"சிதம்பரக்கும்பி"** என்ற பாடலை இயற்றினார். இது சிதம்பர ஆலயத்திலுள்ள விநாயகர் முதலியோருடைய சந்நிதிகளை முறையே தரிசித்து வரும்போது அம்மூர்த்திகளைப் பாடுவதாக அமைந்துள்ளது.

எப்படித் தியாகராஜர் தமது கிருதிகள் மூலம் தெலுங்கு மொழியை வளப்படுத்தினாரோ அதேபோல பாரதியாரும் தமது கீர்த்தனைகளால் தமிழிசையை வளப்படுகின்றார். எனவே தமிழிசைப் புலவர்களிலே இவரே முதலிடத்தை வகிக்கின்றார். இவரது பாடல்களில் பல வேதாந்தக் கருத்துக்கள் காணப்படுகின்றன. பாமரர்களும் விளங்கி இன்புறத்தக்க முறையிலே பாடல்களை இயற்றியுள்ளது பாராட்டத்தக்கதாகும். பாரதியாரின் சீடர்களில் மக்கியமானவர்கள்.

1. சிதம்பரம் பொன்னுச்சாமி தீட்சதர்
2. சிதம்பரம் ஸ்ரீ ராஜரத்தின தீட்சிதர்
3. மாயூரம் இராமசாமி ஐயர்
4. மாயூரம் நடேச ஐயர்
5. மாயூரம் சுப்பிரமணிய ஐயர்

கோபாலகிருஷ்ண பாரதியார் தனது 86வது வயதில் 1896ம் ஆண்டு மகாசிவராத்திரியன்று பூதவுடலை நீத்து புகழுடம்பெய்தினார்.

**பிற்குறிப்பு** - சிதம்பரக் கும்மியில் சில கண்ணிகள்

"சாந்துப் பொட்டுத் தளதளென்ன நல்ல
சந்தன வாடை குமுகுமென்ன
கூந்த லழகுக் காரியெல்லாங் காலைக்
குவித்துக் கும்மி யடியுங்கடி"

"தித்தியென் நீச டைனம் புரிய மெய்த
தேவர்கள் பூமழை தான் சொரிய
மத்தளங் கொட்டிய கோபால கிருஷ்ணனை
வாழ்த்திக் கும்மி யடியுங்கடி"

தேர்ச்சி 6.0 : கர்நாடக இசையின் தோற்றம், வளர்ச்சி தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வார்.

தேர்ச்சிமட்டம் 6.1 : கர்நாடக இசையின் தோற்றம், வளர்ச்சி தொடர்பான விடயங்களை விபரிப்பார்.

செயற்பாடு 6.1.4 : இந்தியாவின் 7ஆம் ,8ஆம் நூற்றாண்டில் கர்நாடக இசையின் கலாசார பின்னணி பற்றி அறிந்துகொள்வோம்.

நேரம் : 02 மணித்தியாலங்கள் (03 பாடவேளைகள்)

தர உள்ளீடு : இந்தியாவின் 7ஆம், 8ஆம் நூற்றாண்டில் கர்நாடக இசையின் கலாசார பின்னணி தொடர்பான விளக்கப் படங்கள், செயற்பத்திரம் 6.1.2.4

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :**

படி 6.1.1

- விளக்கப்படங்களைக் காட்சிப்படுத்தி அவதானிக்கச் செய்க.
- மாணவர் அவதானித்தவற்றை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் விடயங்கள் வலியுறுத்தப்படும் வகையில் கலந்துரையாடலை நிகழ்த்துக.

> - 7ஆம், 8ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் சமயங்களின் வளர்ச்சி.
> - கலைகளின் வளர்ச்சி.
> - பன்னிரு திருமுறைகள் தொகுக்கப்பட்டமை.
> - சமயக்குரவர், பல்லவ மன்னர் ஆற்றிய பங்கு.

(30 நிமிடம்)

படி 6.1.2

- வகுப்பில் உள்ள மாணவரின் தொகைக்கேற்ப மாணவரைச் சிறிய குழுக்களாகப் பிரித்துச் செயற்பத்திரத்தினை இணைப்புடன் வழங்குக.

  ஒவ்வொரு குழுவும் சரியாகச்செயற்படுகிறார்களா என்பதை உறுதி செய்து முழமைப்படுத்துக.

(45 நிமிடம்)

படி 6.1.3

: ஒவ்வொரு குழுவும் தமது செயற்பாட்டினை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குக.

: ஒரு குழு தமது செயற்பாட்டை முன்வைக்கும் போது ஏனைய குழுக்கள் தமது கருத்துக்களைத் தெரிவிக்க இடமளிக்க.

: பின்வரும் விடயங்கள் வலியுறுத்தப்படும் வகையில் கலந்துரையாடுக.

> - சமண மதம் ஆதிக்கம் பெற்று, ஏனைய மதங்கள் வலிமை குன்றிக் காணப்பட்டமை.
> - சைவ, வைணவ மதங்கள் புத்துயிர் பெற்றமை.
> - மன்னர்களின் ஆதரவுடன் சமயம், கலைகள், சாஸ்திரங்கள் வளர்க்கப்பட்டமை.
> - இசைக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, நடனக்கலை போன்றவை வளர்ச்சியடைந்தமை.
> - பன்னிரு திருமுறைகள் தொகுக்கப்பட்டமை.
> - இசைக் கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டமை.

(45 நிமிடம்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்:**

* இந்தியாவில் 7ஆம் ,8ஆம் நூற்றாண்டில் கர்நாடக இசையின் கலாசாரப் பின்னணி தொடர்பாக விளக்குவர்.
* அக்காலத்தில் வளர்ச்சி பெற்ற அம்சங்கள் பற்றிக் குறிப்பிடுவர்.
* வளர்ச்சியில் பங்கெடுத்தோர் பற்றிக் கூறுவர்.

**செயற்பத்திரம் 6.1.2.4**

சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தினை வழங்குக.

1. இந்தியாவில் 7ஆம், 8ஆம் நூற்றாண்டுகளில் பண்ணிசை வளர்ச்சிக்கு சமயக்குரவர்களும், பல்லவ கால மன்னர்களும் ஆற்றிய பங்களிப்பினைக் குறிப்பிடுக.

2. இந்தியாவில் 7ஆம், 8ஆம் நூற்றாண்டுகளில் பண்ணிசையுடன் சிற்பம், ஓவியம், நடனம் முதலிய நுண்கலைகள் வளர்ச்சியடைந்தமைக்கு சான்றுபகரும் அம்சங்களைக் குறிப்பிடுக.

3. இந்தியாவில், 7ஆம், 8ஆம் நூற்றாண்டுகளில் இசை வளர்ச்சி பற்றி விளக்குக.

# இந்தியாவில் 7ஆம், 8ஆம் நூற்றாண்டில் கர்நாடக இசையின் கலாசாரப் பின்னணி

கி.பி. 7ஆம், 8ஆம் நூற்றாண்டு பல்லவராட்சிக் காலப்பகுதியாகும். இக்காலத்துக் கலாசாரப் பண்பினை அறிந்து கொள்வதற்கு இக்காலத்துச் சமயநிலை பற்றி ஓரளவிற்காயினும் நாம் அறிதல் வேண்டும். சங்கமருவிய காலப் பகுதியின் ஆரம்பத்தில் சைவம், வைணவம், சமணம், சாக்கியமாகிய நால்வகைச் சமயங்களும் பகைமையின்றி வளர்ந்து வந்தன. எனினும் அக்கால முடிவில் சமண சமயமே உயர்நிலை பெற்றிருந்தது.

எவ்வகையிலும் சைவம், வைணவம் ஆகிய சமயங்களை அழித்துத் தம் சமயத்தைப் பரப்ப சமணர்கள் பல வழிகளைக் கையாண்டனர். இதன் விளைவாக மன்னரும், மக்களும் சமண சமயத்தைத் தழுவத் தொடங்கினர். சிவனுக்கும், திருமாலுக்கும் கட்டப்பட்ட கோவில்கள் போற்றுவாரின்மையால் அழியத் தொடங்கின. சைவமும், வைணவமும் அக்காலத்தில் ஒன்றுபட்டு நின்றிருந்த காரணத்தால் பரவிக்கொண்டு சென்ற சமண சமயத்தை எதிர்க்கும் ஆற்றலை அவை பெற்றிருந்தன.

சமண சமயத்தைத் தழுவிய மகேந்திரவர்மனை திருநாவுக்கரசரும், நின்ற சீர் நெடுமாறனை திருஞான சம்பந்தரும் சைவர்களாக்கிய காலந்தொட்டு சைவமும் வைணவமும் மீண்டும் தழைக்கலாயின. சைவத்திற்கும், வைணவத்திற்கும் புத்துயிரளித்தவர்கள் முறையே நாயன்மார்களும் ஆழ்வார்களுமாவர். இக்காலத்தில் எழுந்தவை பக்தி இலக்கியங்களாகும்.

சங்க காலத்தில் இருந்த உலகியல் சார்ந்த இசை பல்லவராட்சிக் காலத்தில் பக்தி இசையாக மறுமலர்ச்சி கண்டது. நாயன்மார்கள் இசையைத் தெய்வ வழிபாட்டுடன் இறுகப் பிணைந்தனர்.

சம்பந்தருக்குப் பொற்றாளம் கிடைத்த வரலாற்றில் இருந்து தேவாரம் தாளத்துடன் பாடப்பட்டது என்பது தெளிவாகத் தெரிகின்றது.

மேலும் தமிழ்நாடு கலைவளம் பெற்று விளங்கிய காலம் பல்லவராட்சிக் காலமாகும். இசை மட்டுமன்றி சிற்பம், ஓவியம், நடனம் முதலியன நுண்கலைகளும் அவர் காலத்தில் உயர்நிலை பெற்றிருந்தனவென்பதற்குப் பல ஆதாரங்கள் உண்டு. பல்லவர் காலத்துப் பெருங்கோவில்களில் நடன மண்டபம், தருக்க மண்டபம் முதலிய பல மண்டபங்கள் அமைக்கப்பட்டதிலிருந்து அக்கோவில்கள் சமயக்கல்வி, சாத்திரக்கல்வி, இசை, நடனம் முதலியவை வளர்த்தற்குரிய இடங்களாகவும் விளங்கின என்பது தெளிவாகின்றது. எல்லாச் சமயத்தவரும் தத்தம் மதங்களை வளர்த்தற் பொருட்டு பல்லவ மன்னர் பல மடங்களைக் கட்டினர். இம்மடங்கள் அறிவு வளர்ச்சிக்கும், கலை விருத்திக்கும் பெரிதும் பயன்பட்டன.

நாயன்மாரின் தேவார திருவாசகங்கள் கோவில்களிலும், விழாக்களிலும் ஒலிக்கத் தொடங்கின. பின்னர் இவை திருமுறையாகத் தொகுக்கப்பட்டன. அதுபோல பன்னிரு வைணவ ஆழ்வார்கள் இயற்றிய பாடல்கள் பின்னர் நாலாயிரத் திவ்விய பிரபந்தமாகத் தொகுக்கப்பட்டன. இவை நமக்குக் கிடைத்த பழங்கால இசை நூல்களாகும். தேவாரப் பண்களே, இந்திய இசை வரலாற்றிலே இராக தாள அமைப்பிலே நமக்குக் கிடைத்துள்ள மிகப் பழமையான உருப்படிகளாகும். தற்காலத்தில் வழங்கும் பல இராகங்களுக்கு தேவாரப் பண்களே ஆதி லக்ஷியங்களாக உள்ளன என்பது ஆய்வாளர் கருத்தாகும்.

பல்லவர் காலத்து மன்னர்களும் ஆலயங்களில் இன்னிசைப் பண் வளர அயராது உழைத்தனர். தேவாரப் பண்களைப் பண்ணோடு பாட மன்னர் பேராதரவு வழங்கியமை குறிப்பிடத்தக்கது. மகேந்திரவர்மன் **"விசித்திர சித்த" "சங்கீர்ண"** முதலிய பல விருதுகளைப் பெற்றுள்ளான். முன்னையது அருங்கலையுள்ளத்தையும், பின்னையது அவனது இசை ஈடுபாட்டினையும் காட்டுகின்றன. சங்கீர்ண என்ற தாள வகையைக் கண்டுபிடித்தமையாலேயே இவ்விருதுப் பெயர் கிடைத்ததாகச் சொல்லப்படுகிறது. குடுமியாமலை இசைக் கல்வெட்டும் மன்னனுடைய இசைப் புலமைக்குத் தக்க சான்றாகும். திருமயம் இசைக் கல்வெட்டும் இசை வளர்ச்சியினை எடுத்துக் காட்டுகிறது.

இறை வழிபாட்டிற்குச் சிறப்பாக உரிய தோத்திரப் பாமாலைகள் பதிகம் முதலிய பிரபந்த முறையில் வெளிவந்தமையால் ஒரு புதிய இலக்கிய மரபு தமிழ் மொழியில் ஆரம்பித்தது. இருப்பினும் சங்கம், சங்கமருவிய காலப் பகுதிகளில் பெருவழக்காயிருந்த அகத்திணை மரபையும் நாயன்மாரும், ஆழ்வார்களும் கைவிடவில்லை. தலைவன், தலைவியருக்கிடையில் அன்பை வெளிப்படுத்த வகுக்கப்பட்ட அகப்பொருள் துறைகள் யாவும் இறைவன் பால் அடியார் கொண்ட அன்பை வெளிப்படுத்தப் பயன்படுத்தப்பட்டன. திருநாவுக்கரசரின் **"முன்னம் அவளுடைய நாமம் கேட்டாள்"**, திருஞானசம்பந்தரின் **"சிறையாரும் மடக்கிளியே"** மாணிக்கவாசகரின் திருவெம்பாவைப் பாடல்கள் போன்றவற்றை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

தமிழ் நாட்டில் வழங்கி வந்த நாட்டுப்பாடல் வகைகளைத் தழுவிப் பல பதிகங்கள் பல்லவர் காலப் பகுதியில் பாடப்பட்டுள்ளன. தேவார திருப்பதிகங்கள் பெரும்பாலும் நாட்டு மக்கள் இறைவனை வழிபடும் போது ஓதுவதற்கு இயற்றப்பட்டனவாதலின், நாயன்மார்களும், ஆழ்வார்களும் நாட்டுப்பாடல் முறையில் அவற்றைப் பாடினார்கள் எனக் கருத இடமுண்டு. திருவாசகத்தில் உள்ள திருவம்மானை, திருச்சாழல், திருப்பொன்னூசல் முதலிய பதிகங்களும், பெரியாழ்வார் பாடியருளிய கண்ணன் குழல் வாரக் காக்கையை அழைத்தல் முதலிய பதிகங்களும் இதற்கு உதாரணங்களாகும். சுந்தரமூர்த்தி சுவாமிகளது திருப்பதிகங்களுள் சிலவும் நாட்டுப் பாடல்களிலுள்ள இசை முறை தழுவி அமைந்துள்ளனவாகக் காணப்படுகின்றன.

தேர்ச்சி 1.0 : இசை நிகழ்ச்சிகளில் இரசித்தவற்றை வெளிப்படுத்துவார்.

தேர்ச்சிமட்டம் 1.1 : வெவ்வேறு இசை நிகழ்ச்சிகளின் தனித்துவமான அம்சங்களை இனங் கண்டு வெளிப்படுத்துவார்.

செயற்பாடு 1.1.3 : நாட்டுக் கூத்துப் பாடல்களின் தனித்துவமான அம்சங்களை இனங்கண்டு வெளிப்படுத்துவோம்.

நேரம் : 40 நிமிடங்கள் (01 பாடவேளை)

தர உள்ளீடு : ஹார்மோனியம், நாட்டுக்கூத்துப் பாடல்கள் அடங்கிய ஒலி ஒளி நாடாக்கள், ஒலிப்பதிவுக் கருவி, தொலைக்காட்சிப் பெட்டி,
செயற்பத்திரம் 1.1.2.3

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :**

படி 1.1.1 :

- நாட்டுக் கூத்துப் பாடல்கள் அடங்கிய ஒலிப்பதிவு நாடாக்களை ஒலிக்கச் செய்தோ ஆசிரியர் பாடிக்காட்டியோ, நிகழ்ச்சியை நேரடியாகப் பார்க்கச் செய்தோ மாணவர்களை அவதானிக்கச் செய்க.
- மாணவர்கள் கேட்டும் பார்த்தும் இரசித்த விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுக.

- நாட்டுக்கூத்துப் பாடல் இடம்பெறும் கதை, சந்தர்ப்பம், கதாபாத்திரம் (காத்தவராயன்கூத்து, அரிச்சந்திரபுராணம், ஞானசவுந்தரி, வாலிவதம், காமன்கூத்து, சத்தியவான் சாவித்திரி, வசந்தன்கூத்து)
- பாடல்களின் இசையமைப்பு, பிற்பாட்டுக்காரரின் பங்களிப்பு, பக்கவாத்தியங்களின் அனுசரணை.
- கதைக்கேற்ப பாடல்களின் இசையின் பாவம், உணர்ச்சி ஆடல்முறை என்பவற்றின் வெளிப்பாடு
- (வடமோடி/தென்மோடி)

(10 நிமிடம்)

படி 1.1.2

- வகுப்பில் உள்ள மாணவர்களை இரண்டு குழுக்களாகப் பிரித்துச் செயற்பத்திரத்தை வழங்குக.
- ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளைச் சமர்ப்பிக்கும் வகையில் ஆயத்தம் செய்விக்க.
- ஒவ்வொரு குழுவினதும் செயற்பாட்டினை உறுதிப்படுத்துக.

(15 நிமிடம்)

படி 1.1.3 :

- ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குக.
- ஒரு குழு சமர்ப்பிக்கும் பொழுது மற்றைய குழுவும் அதனை அவதானித்துக் கருத்துக் கூற இடமளிக்க.
- குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்க.
- கலந்துரையாடலில் பின்வரும் விடயங்களை வலியுறுத்துக.

> - நாட்டுக் கூத்துப் பாடல்களாவன அதன் கதை, சந்தர்ப்பம், கதாபாத்திரம், என்பவற்றின் அடிப்படையில் பின்வருவனவற்றில் வேறுபட்டுக் காணப்படும்.
>   - பாடல்களின் இசையமைப்பு
>   - பிற்பாட்டுக்காரரின் பங்களிப்பு
>   - இசையின் பாவம்
>   - உணர்வுவெளிப்பாடு
>   - ஆட்டமுறைக்கேற்ற பாடல்
>   - உடை
>   - ஒப்பனை

(15 நிமிடம்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- நாட்டுக் கூத்துப் பாடல்களின் தனித்துவமான அம்சங்களை இனங்கண்டு இரசிப்பர்.
- நாட்டுக் கூத்துப் பாடல்களுக்கு அனுசரணையாக விளங்கும் பக்கவாத்தியங்கள் பற்றி கூறுவர்.
- வெவ்வேறு பிரதேசங்களின் நாட்டுக் கூத்துப் பாடல்களைப் பார்த்தும், கேட்டும் இரசிப்பதன் மூலம் அப்பிரதேச மக்களின் கலை உணர்வை மதிக்கும் மனப்பாங்கினைப் பெறுவர்.
- நாட்டுக்கூத்துப் பாடல்களை மாணவர் சேகரிப்பர்.

## செயற்பத்திரம் 1.1.2.3

இரண்டு குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தை வழங்குக

### குழு I , II

| | |
|---|---|
| 1. | நீர் பார்த்தோ, கேட்டோ இரசித்த நாட்டுக் கூத்துப் பாடல்களின் தனித்துவமான அம்சங்களைப் பட்டியற்படுத்துக. |

தேர்ச்சி 1.0 : இசை நிகழ்ச்சிகளில் இரசித்தவற்றை வெளிப்படுத்துவார்.

தேர்ச்சிமட்டம் 1.2 : இசை நிகழ்ச்சிகளில் தாம் அனுபவித்தவற்றை விமர்சிப்பார்.

செயற்பாடு 1.2.3 : நாட்டுக் கூத்துப் பாடல்களை இரசித்து அனுபவித்தவற்றை விமர்சிப்போம்.

நேரம் : 40 நிமிடங்கள் (01 பாடவேளை)

தர உள்ளீடு : ஹார்மோனியம், நாட்டுக்கூத்துப் பாடல்கள் அடங்கிய ஒலி, ஒளி நாடாக்கள், ஒலிப்பதிவுக் கருவி, தொலைக்காட்சிப்பெட்டி,செயற்பத்திரம் 1.2.2.3

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :**

படி 1.2.1 :

- நாட்டுக்கூத்துப் பாடல்கள் அடங்கிய ஒலிப்பதிவு நாடாக்களை ஒலிக்கச் செய்தோ ஆசிரியர் பாடிக் காட்டியோ, நிகழ்ச்சியை மாணவர்கள் நேரடியாகப் பார்க்கச் செய்தோ மாணவர்களை இரசிக்கத் தூண்டுக.
- மாணவர்கள் கேட்டும், பார்த்தும் இரசித்த விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுக.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்க.

> - நாட்டுக்கூத்துப்பாடல்களைக் கேட்கும்போது ஏற்படும் மன உணர்வு.
> - குறிப்பிட்ட நிகழ்ச்சியில் இடம் பெற்ற பாடல்கள் அதற்குப் பொருத்தமான இசையமைப்பு, சாகித்தியபாவம், பக்கவாத்தியங்கள் என்பவற்றின் ஒத்திசைவு, அணிசேர்தன்மை.
> - ஒத்திசைவுடன் கூடிய வெளிப்பாடு.
> - பாடல்களில் வெளிப்படுத்தப்படும் கலை உணர்வு, விறுவிறுப்பான தன்மை.
> - கதாபாத்திரங்களின் உடைகள், பிற்பாட்டுக்காரரின் பாடும் பங்கு.
> - நாட்டுக் கூத்துப் பாடல்களை இசைத்த, மாணவரின் சுயமான இரசனை அனுபவப்பகிர்வு.

(10 நிமிடம்)

படி 1.2.2. :

- வகுப்பிலுள்ள மாணவர்களை இரண்டு குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தினை வழங்குக.
- அறிவுறுத்தலுக்கேற்ப செயற்பாட்டில் குழுக்களை ஈடுபடச் செய்க.
- ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளைச் சமர்ப்பிக்கும் வகையில் ஆயத்தம் செய்க.

(15 நிமிடம்)

படி 1.2.3 :

- குழுக்கள் தமது பேறுகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குக.
- மற்றைய குழு அதனை அவதானித்து தமது கருத்துக்களைக் கூற இடமளிக்குக.
- சமர்ப்பித்தல் முடிந்தபின் குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடல் ஒன்றை நடாத்துக.
- கலந்துரையாடலில் பின்வரும் அம்சங்களை வலியுறுத்துக.

| |
|---|
| • நாட்டுக் கூத்துப்பாடல்கள் உ+ம் :- காத்தவராயன் கூத்து<br>அரிச்சந்திரபுராணம்<br>ஞானச்சவுந்தரி<br>சத்தியவான்சாவித்திரி |
| • நாட்டுக் கூத்துப் பாடல்களை கேட்டும், பார்த்தும், இரசிக்கும் போது ஏற்படும் மகிழ்ச்சியான உணர்வு. |
| • நிகழ்ச்சியில் இடம்பெறும் பாடல்கள், அதற்குப் பொருத்தமான இசையமைப்பு, பக்கவாத்தியங்கள் என்பவற்றின் ஒத்திசைவு, அணிசேர்தன்மை. |
| • ஒத்திசைவுடன் கூடிய வெளிப்பாடு. |
| • பாடல்களில் வெளிப்படுத்தப்படும் கலை உணர்வு, விறுவிறுப்பான தன்மை. |
| • கதாபாத்திரங்களின் உடைகள் பிற்பாட்டுக்காரரின் பாடும் பாங்கு. |
| • நாட்டுக் கூத்து பாடல்களின் தன்மை. |
| • மெட்டு, சாகித்யபாவம், அணிசேர் வாத்தியங்களின் ஒத்திசைவு, பிற்பாட்டுக்காரரின் பங்கு என்பவற்றை இரசிப்பதன் மூலம் முழுமையான விமர்சனத்தை வெளிப்படுத்தலாம். |

(15 நிமிடம்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

* நாட்டுக்கூத்துப் பாடலில் இரசித்து அனுபவித்தவற்றை விமர்சிப்பர்.
* நாட்டுக்கூத்துப் பாடல்களின் விசேட அம்சங்களைக் குறிப்பிடுவர்.
* நாட்டுக்கூத்துப் பாடல்களை இரசிப்பதன் மூலம் பாடகரின் கலை உணர்வை மதிப்பிடுவர்.
* இவ்வகைப் பாடல்களை இரசிப்பதன் மூலம் பாடகரின் ஆற்றலை மதிப்பிடுவர்.
* வெவ்வேறு பிரதேச வாரியான நாட்டுக்கூத்துப் பாடல்களை இரசிப்பதன் மூலம் அப்பிரதேசங்களின் கலை வடிவங்களை மதிக்கும் மனப்பாங்கினைப் பெறுவர்.

**செயற்பத்திரம் 1.2.2.3**

இரண்டு குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தை வழங்குக.

**குழு I,II**

| | |
|---|---|
| 1. | நீர் பார்த்தோ, கேட்டோ இரசித்த நாட்டுக்கூத்துப் பாடல் நிகழ்ச்சி பற்றி ஓர் விமர்சனக் கட்டுரை எழுதுக. |

தேர்ச்சி 2.0 : பல்வேறு இசை நிகழ்ச்சிகளைத் தாமே தயாரிப்பதன் மூலம் தமது ஆற்றுகைத்திறனை வெளிப்படுத்துவார்.

தேர்ச்சிமட்டம் 2.2 : நிகழ்ச்சிகளைக் கூட்டாகத் தயாரிப்பதன் மூலம் கூட்டு மனப்பாங்கினை வெளிப்படுத்துவார்.

செயற்பாடு 2.2.2 : வருட இறுதியில் மாணவர் ஆக்கங்களைக் கொண்ட நிகழ்ச்சிகளை மேடையேற்றுவோம்.

நேரம் : 01 மணி 20 நிமிடங்கள் (02 பாடவேளைகள்)

தர உள்ளீடு : மாதிரி அழைப்பிதழ், மாதிரி நிகழ்ச்சி நிரல், பிறிஸ்டல் போர்ட், நிறப்பேனாக்கள், ஒலிப்பதிவு நாடா, ஒலிப்பதிவுக் கருவி, கணினி, ஒளிப்பதிவு நாடா, ஒளிப்பதிவுக் கருவி.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :**

படி 2.2.1 :

- கலைநிகழ்ச்சி ஒன்றை ஒலிப்பதிவு, ஒளிப்பதிவு நாடாவில் போட்டுக் காட்டியும், கடந்த வருடங்களில் நடத்தியநிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டும் கலைநிகழ்ச்சி ஒன்றில் இடம்பெறும் நிகழ்ச்சிகள் பற்றிக் கலந்துரையாடுக.
- மேடையேற்றுவதற்குப் பொருத்தமான திகதி, நேரம், இடம், அதிதி என்பன பற்றித் தீர்மானிக்க.
- மேற்கூறப்பட்ட விடயங்களை உள்ளடக்கி, மாதிரி அழைப்பிதழ் ஒன்றின் உதவியுடன் அழைப்பிதழைத் தயாரிக்கச் செய்க. பாடசாலைகளின் வளத்திற்கமைய கணினியை உபயோகித்தும் அழைப்பிதழைத் தயாரிக்க வழிகாட்டுக.
- மேடையேற்றக்கூடிய நிகழ்ச்சிகள் தொடர்பாகக் கீழ்வரும் வகையில் கலந்துரையாடி, நிகழ்ச்சிகளைத் திட்டமிடுக.

- தனி இசை/குழு இசை
- இசையின் அடிப்படை அம்சங்கள் தொடர்பான பேச்சு அல்லது தாளலயம்.
- வில்லுப்பாட்டு
- பல்லியம்
- இசை வளர்ச்சியை விளக்கும் நாடகம்
- தேசிய கீதம், பாடசாலை கீதம்
- வரவேற்புரை, நன்றியுரை
- அதிதியின் உரை

  போன்றவை
- தெரிவு செய்யப்பட்ட நிகழ்ச்சிகளுக்கு ஏற்ப மாணவரைக் குழுக்களாகப் பிரிக்க.
- நிகழ்ச்சிகளுக்குப் பொருத்தமான ஒப்பனை, உடை, பக்கவாத்தியம் பற்றிக் கலந்துரையாடுக.
- நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்குபவர், அறிவிப்பாளர் ஆகியோரையும் தீர்மானிக்க.
- மாதிரி நிகழ்ச்சி நிரலின் உதவியுடன், நிகழ்ச்சி நிரலைத் தயாரிக்க வழிகாட்டுக.

(20 நிமிடம்)

படி 2.2.2 : நிகழ்ச்சிகளுக்குப் பொருத்தமாக மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து, குழு ஒவ்வொன்றும் மாணவர் ஒருவரின் தலைமையில் பயிற்சி பெறச் சந்தர்ப்பம் வழங்குக.

: சகல குழுக்களும் சரியான முறையில் செயற்படுவதை உறுதி செய்க. (30 நிமிடம்)

படி 2.2.3 : சகல குழுக்களும் தமது நிகழ்ச்சிகளைச் செய்துகாட்டச் சந்தர்ப்பம் வழங்குக.

: நிகழ்ச்சி நிரலின் ஒழுங்கில் ஒத்திகை பார்க்குக.

: ஒத்திகையின் போது நிகழ்ச்சிகளின் தரம் தொடர்பாக மாணவரின் கருத்தினைக் கூற இடமளிக்க.

: குறைகளை நிவர்த்தி செய்ய வழிகாட்டுக.

: மேடையேற்றல் தொடர்பாகப் பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடுக.

- அழைப்பிதழில் திகதி, நேரம், இடம், அதிதி, அழைப்பவர் போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும்.
- மேடையேற்றுவதற்குப் பொருத்தமான நிகழ்ச்சிகளைத் தெரிவு செய்து, அதில் நன்கு பயிற்சி பெறவேண்டும்.
- சகல மாணவர்களும் பங்கேற்கும் வகையில் நிகழ்ச்சிகள் திட்டமிடப்படல் வேண்டும்.
- நிகழ்ச்சி நிரலில் கலை நிகழ்ச்சிகளுடன், தேசியகீதம், பாடசாலைக் கீதம், வரவேற்புரை, நன்றியுரை அதிதியின் உரை என்பன இடம்பெறல் வேண்டும்.
- நிகழ்ச்சிகளுக்குப் பொருத்தமான வகையில் உடை, ஒப்பனை, பக்கவாத்தியங்கள் பயன்படுத்தப்பட வேண்டும்.
- நிகழ்ச்சியைத் திட்டமிட்டபடி அதிதியின் முன்னிலையில் குறித்த தினத்தில், குறித்த நேரத்தில் ஆற்றுகைப்படுத்த வேண்டும்.
- ஆற்றுகைப்படுத்தலின் போது நிகழ்ச்சி ஒழுங்கமைப்பாளர், அறிவிப்பாளரின் பங்கு அவசியம்.

(30 நிமிடம்)

**கணிப்பீட்டு, மதிப்பீட்டு நியதிகள் :**

- நிகழ்ச்சியொன்றை மேடையேற்றுவதற்கு அவசியமான விடயங்களைக் குறிப்பிடுவர்.
- மேடையேற்றக்கூடிய நிகழ்ச்சிகளைத் தெரிவு செய்வர்.
- தமது ஆக்கங்களைக் கொண்டு நிகழ்ச்சிகளைத் திட்டமிடுவர்.
- நிகழ்ச்சி நிரலின் ஒழுங்கில் ஆற்றுகைப்படுத்துவர்.
- கூட்டாகச் செயற்படும் போது தலைமைத்துவப்பண்பு, விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கு, ஒற்றுமை, பிறர் கருத்தை மதிக்கும் பண்பு, நேரம் பேணல் போன்ற இன்னோரன்ன திறன்கள் விருத்தியாவதை ஏற்றுக் கொள்வர்.

தேர்ச்சி 3.0 : இசை உருப்படிகளைச் சுருதி, இராக, தாளத்துடன் பாடிக்காட்டுவார்.

தேர்ச்சிமட்டம் 3.2 : அப்பியாசகான உருப்படிகளை இராக, தாளத்துடன் பாடுவார்.

செயற்பாடு 3.2.9 : சப்த தாள அலங்காரங்களை இராக தாளத்துடன் பாடுவோம்.

நேரம் : 40 நிமிடங்கள் (01 பாடவேளை)

தர உள்ளீடு : சுருதிப்பெட்டி/ஹார்மோனியம்
சப்த தாள அலங்காரங்கள் எழுதப்பட்ட அட்டை, செயற்பத்திரம் 3.2.2.9

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :**

படி 3.2.1 :

- சப்த தாள அலங்காரங்கள் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்துக.
- ஏற்கனவே கற்ற அலங்காரங்கள் பற்றி மாணவர் கற்றுக் கொண்டதை நினைவுபடுத்துக.
- மாணவர்கள் ஒருங்கிணைந்து ஏற்கனவே கற்ற அலங்காரங்களைப் பாடுவதற்கு நெறிப்படுத்துக.
- அலங்காரங்களைப் பாடும்போது கவனிக்க வேண்டிய பின்வரும் விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்க.

> - தாளங்களை விளக்குவதற்காக ஏற்பட்ட வரிசைகளே அலங்காரங்கள் என்பதை அறிந்துகொள்ளச் செய்க.
> - அலங்காரங்கள் அமைந்துள்ள ஸப்த தாளங்களின் அங்க அடையாளங்களையும், மொத்த அட்சரங்களையும், தாளம் போடும் முறையையும் மாணவர் இனங்கண்டு கூற வழிப்படுத்துக.
> - அலங்காரம் அமைந்துள்ள மாயாமாளவகௌளை இராக ஆரோகண அவரோகணத்தை மாணவர் பாட இடமளிக்க.
> - ஏழு அலங்காரங்களையும் தாளம் போட்டுப் பாட இடமளிக்க.
> - அலங்காரங்களை மூன்று காலங்களிலும் பாடிப் பயிற்சி பெற வழிப்படுத்துக.
> - மூன்று காலங்களிலும் பாடும் போது ஏற்படும் தாள அட்சர வேறுபாட்டை மாணவர் தெரிந்து கொள்ளச் செய்க.
> - மாணவர் சேர்ந்து பாடும் போது தவறுகள் ஏற்படும் பட்சத்தில் ஆசிரியர் பாடிக் காட்டி நிவர்த்தி செய்க.

(15 நிமிடம்)

படி 3.2.2.

- வகுப்பில் உள்ள மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரங்களை வழங்குக.
- அறிவுறுத்தலுக்கேற்ப ஒவ்வொரு குழுவும் செயற்படுகிறார்களா என்பதை உறுதிப்படுத்துக.

(15 நிமிடம்)

படி 3.2.3

- ஒவ்வொரு குழுவும் தமக்குக் கொடுக்கப்பட்ட அலங்காரங்களை பாடச் சந்தர்ப்பம் வழங்குக.
- ஏனைய குழுக்கள் அதனை அவதானித்து குறை நிறைகளைக் கூற இடமளிக்க.
- குறை நிறைகளை இனங்கண்டு முழுமைப்படுத்துக.
- குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் பின்வரும் செயற்பாட்டில் ஈடுபடுக.

- சப்த தாள அலங்காரங்களின் அங்கங்களையும், மொத்த அட்சரங்களையும் மீண்டும் வலியுறுத்துக.
- தாளங்களை சரியாகப் போடுவதற்கு நெறிப்படுத்துக.
- மாணவருடன் சேர்ந்து சப்த தாள அலங்காரங்களை இராக தாளத்துடன் மூன்று காலங்களிலும் பாடுக.

(10 நிமிடம்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- அலங்காரங்களில் வரும் சப்த தாளங்களின் அங்கங்களையும், அங்கக் குறியீடுகளையும், மொத்த அட்சரகாலங்களையும் குறிப்பிடுவர்.
- சப்த தாள அலங்காரங்களை இராக தாளத்துடன் மூன்று காலங்களிலும் பாடுவர்.
- மாயாமாளவகௌளை இராகத்தின் ஆரோகண அவரோகணத்தை ஸ்வரஸ்தான சுத்தத்துடன் பாடுவர்.

## செயற்பத்திரம் 3.2.2.9

மாணவர்களை 04 குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தினை வழங்குக.

குழு 01

- மாயாமாளவகௌளை இராகத்தின் ஆரோகண, அவரோகணத்தைப் பாடுக.
- ஏக தாளம், ரூபகதாள, மட்டிய தாளம் ஆகியவற்றின் அங்கங்களையும், அங்க அடையாளங்களையும், மொத்த அட்சரகாலங்களையும் கூறுக.
- ஏகதாளம், ரூபகதாளம், மட்டியதாள அலங்காரங்களை இராக, தாளத்துடன் மூன்று காலங்களிலும் பாடுக.

குழு 02

- மாயாமாளவகௌளை இராகத்தின் ஆரோகண, அவரோகணத்தைப் பாடுக.
- சதுஸ்ர ஜாதி துருவதாளத்தின் அங்கங்களையும், அங்க அடையாளங்களையும் மொத்த அட்சரகாலத்தையும் கூறுக.
- சதுஸ்ர ஜாதி துருவதாள அலங்காரத்தை இராக, தாளத்துடன் மூன்று காலங்களிலும் பாடுக.

குழு 03.

- மாயாமாளவகௌளை இராகத்தின் ஆரோகண, அவரோகணத்தைப் பாடுக.
- கண்டஜாதி அடதாளத்தின் அங்கங்களையும் அங்க அடையாளங்களையும் கூறுக.
- கண்ட ஜாதி அடதாள அலங்காரத்தை இராக, தாளத்துடன் மூன்று காலங்களிலும் பாடுக.

குழு 04

- மாயாமாளவகௌளை இராகத்தின் ஆரோகண, அவரோகணத்தைப் பாடுக.
- திஸ்ர திரிபுடை, மிஸ்ர ஜம்பை தாளங்களின் அங்கங்களையும், அங்க அடையாளங்களையும், மொத்த அட்சரகாலத்தினையும் கூறுக.
- திஸ்ர திரிபுடை, மிஸ்ர ஜம்பை தாள அலங்காரங்களை இராக, தாளத்துடன் மூன்று காலங்களிலும் பாடுக.

தேர்ச்சி 3.0 : இசை உருப்படிகளைச் சுருதி, இராக, தாளத்துடன் பாடிக்காட்டுவார்.

தேர்ச்சிமட்டம் 3.2 : அப்பியாசகான உருப்படிகளை இராக, தாளத்துடன் பாடுவார்.

செயற்பாடு 3.2.10 : 'அன்பேதான்' என்னும் கீதத்தை இராக, தாளத்துடன் பாடுவோம்.

நேரம் : 01 மணி 20 நிமிடங்கள் (02 பாடவேளைகள்)

தர உள்ளீடு : சுருதிப்பெட்டி
ஒலிப்பதிவுக் கருவி, ஒலிப்பதிவு நாடா,
கீதம் எழுதப்பட்ட அட்டை,செயற்பத்திரம் 3.2.2.10

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :**

படி 3.2.1 :

- கீதத்தை ஒலிப்பதிவு நாடாவில் ஒலிக்கச் செய்தோ, ஆசிரியர் பாடிக்காட்டியோ மாணவரைச் செவிமடுக்கச் செய்க.
- செவிமடுப்பதன் மூலம் அதனை இனங்காணச் செய்க.
- இனங்கண்ட பாடலில் பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுக.

- 'அன்பே தான்' எனும் கீதம் பிலஹரி இராகத்தில் ஆதி தாளத்தில் அமைந்துள்ளது.
- இதனை இயற்றியவர் திரு.L.திலகநாயகம் போல் ஆவார்.
- அப்பியாசகான உருப்படிகளில் அலங்காரங்களுக்குப் பின் கீதம் கற்பிக்கப்படுகிறது.
- முதன் முதலில் சாகித்திய ரூபமாகக் கற்கும் அப்பியாசகான உருப்படிவகை கீதமாகும்.
- கீதத்தில் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற அங்க வித்தியாசங்கள் இல்லை.
- மாணவர் பிலஹரி இராகத்தின் ஆரோகண, அவரோகணத்தைப் பாடுவதற்கு வழிப்படுத்துக.
- கீதத்தைக் காட்சிப்படுத்தி, அதனைப் பகுதி, பகுதியாக ஸ்வர சாகித்தியமாகப் பாட, மாணவர் தொடர்ந்து பாடுவதற்கு இடமளிக்க.
- மாணவருடன் சேர்ந்து தாளத்துடன் கீதத்தை முழுமையாகப் பாடுக.
- மாணவரைச் சிறிய குழுக்களாகவும், எழுமாற்றாகத் தெரிவு செய்து தனித்தனியாகவும் பாடச் சந்தர்ப்பம் வழங்குக.

(30 நிமிடம்)

படி 3.2.2. :

- வகுப்பில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப மாணவரைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தையும் இணைப்பையும் வழங்கி கீதத்தைப் பாடுவதற்குப் பயிற்சி பெற வழிகாட்டுக.
- ஒவ்வொரு குழுவும் கீதத்தைச் சரியாகப்பாடிப் பயிற்சி செய்கிறார்களா என்பதை உறுதி செய்க.

(30 நிமிடம்)

படி 3.2.3 :

- ஒவ்வொரு குழுவும் குழுவாகவும், தனியாகவும் கீதத்தைப் பாடச் சந்தர்ப்பம் வழங்குக.
- ஒரு குழு பாடும் போது ஏனைய குழுக்கள் அதனை அவதானித்து தமது கருத்துக்களைத் தெரிவிக்க இடமளிக்க.
- மாணவரின் குறைகளை இனங்கண்டு முழுமைப்படுத்துக.
- பின்வரும் விடயங்களை மீளவலியுறுத்தும் வகையில் கலந்துரையாடுக.

> - 'அன்பே தான்' என்னும் கீதம் பிலஹறி இராகத்தில் ஆதி தாளத்தில் அமைந்துள்ளது.
> - இதனை இயற்றியவர் திரு.L.திலகநாயகம்போல் ஆவார்.
> - அப்பியாசகான உருப்படிகளில் அலங்காரங்களுக்குப் பின் கீதம் கற்பிக்கப்படுகிறது.
> - முதன் முதலில் சாகித்திய ரூபமாகக் கற்கும் அப்பியாசகான உருப்படிவகை கீதமாகும்.
> - பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற அங்க வேறுபாடுகள் கீதத்தில் இல்லை.
> - மாணவருடன் சேர்ந்து கீதத்தை முழுமையாக இராக தாளத்துடன் பாடுக.

(20 நிமிடம்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- 'அன்பே தான்' என்னும் கீதம் அமைந்துள்ள இராக, தாளத்தைக் குறிப்பிடுவர்.
- கீதத்தை இராக, தாளத்துடன் பாடுவர்.

## செயற்பத்திரம் 3.2.2.10

சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குக.

> - 'அன்பே தான்' என்னும் கீதத்தை இராக, தாளத்துடன் பாடிப் பயிற்சி செய்க.
> - கீதத்தை இராக, தாளத்துடன் பாடுக.

# கீதம்

அன்பே தான் நல் இன்ப ஊற்று
அன்பே தான் நல் உறவின் ஊற்று
அன்பே தான் அகிம்சையின் ஊற்று
அன்பே தான் நல் வேதத்தின் ஊற்று

இராகம் :- பிலகரி

தாளம் :- ஆதி
இயற்றியவர் - திரு.L.திலகநாயகம் போல்

ஆரோகணம் : ஸ ரி க ப த ஸ்
அவரோகணம் : ஸ் நி த ப ம க ரி ஸ
} 29

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஸ ரி கா / | பா | /பா | // | தஸ்நித | /பம | / கரி | // |
| அன்பே | தான் | நல் | | இன்ப | ஊற் | று. | |
| க ப ம க / | ரிக | / ரிஸ | // | ஸரிகக | / பா | / பா | // |
| அன்பே | தான் | நல் | | உறவின் | ஊ | ற்று. | |
| கா ப த / | ஸ்ா | / ; | // | ஸ்ரீஸ்ஸ் | /நித | / பத | // |
| அன்பே | தான் | . | | அகிம்சையின் | ஊற் | று | |
| பத *நிப / | தப | / மக | // | பமகரி | / ஸா | /ஸா | // |
| அன்பே | தான் | நல் | | வேதத்தின் | ஊ | ற்று | |

தேர்ச்சி 3.0 : இசை உருப்படிகளைச் சுருதி, இராக, தாளத்துடன் பாடிக்காட்டுவார்.

தேர்ச்சிமட்டம் 3.2 : அப்பியாசகான உருப்படிகளை இராக, தாளத்துடன் பாடுவார்.

செயற்பாடு 3.2.11 : 'கணநாதா குணம் நீதா' என்னும் கீதத்தை இராக, தாளத்துடன் பாடுவோம்.

நேரம் : 01 மணி 20 நிமிடங்கள் (02 பாடவேளைகள்)

தர உள்ளீடு : சுருதிப்பெட்டி
ஒலிப்பதிவுக் கருவி, ஒலிப்பதிவு நாடா,
கீதம் எழுதப்பட்ட அட்டை.
செயற்பத்திரம் 3.2.2.11

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :**

படி 3.2.1 :

- கீதத்தை ஒலிப்பதிவு நாடாவில் ஒலிக்கச் செய்தோ, ஆசிரியர் பாடிக்காட்டியோ மாணவரைச் செவிமடுக்கச் செய்க.
- செவிமடுப்பதன் மூலம் அதனை இனங்காணச் செய்க.
- இனங்கண்ட பாடலில் பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுக.

- 'கணநாதா குணம் நீதா' எனும் கீதம் மலஹரி இராகத்தில் ஆதி தாளத்தில் அமைந்துள்ளது.
- இதனை இயற்றியவர் திரு.T.V. பிச்சையப்பா ஆவார்.
- அப்பியாசகான உருப்படிகளில் அலங்காரங்களுக்குப் பின் கீதம் கற்பிக்கப்படுகிறது.
- முதன் முதலில் சாகித்திய ரூபமாகக் கற்கும் அப்பியாசகான உருப்படிவகை கீதமாகும்.
- கீதத்தில் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற அங்க வித்தியாசங்கள் இல்லை.
- மாணவர் மலஹரி இராகத்தின் ஆரோகண, அவரோகணத்தைப் பாடுவதற்கு வழிப்படுத்துக.
- கீதத்தைக் காட்சிப்படுத்தி, அதனைப் பகுதி, பகுதியாக ஸ்வர சாகித்தியமாகப் பாட, மாணவர் தொடர்ந்து பாடுவதற்கு இடமளிக்க.
- மாணவருடன் சேர்ந்து தாளத்துடன் கீதத்தை முழுமையாகப் பாடுக.
- மாணவரைச் சிறிய குழுக்களாகவும் எழுமாற்றாகத் தெரிவு செய்து தனித்தனியாகவும் பாடச் சந்தர்ப்பம் வழங்குக.

(30 நிமிடம்)

படி 3.2.2

- வகுப்பில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப மாணவரைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்துடன் இணைப்பையும் வழங்கி கீதத்தைப் பாடுவதற்குப் பயிற்சி பெற வழிகாட்டுக.
- ஒவ்வொரு குழுவும் கீதத்தைச் சரியாகப்பாடிப் பயிற்சி செய்கிறார்களா என்பதை உறுதி செய்க.

(30 நிமிடம்)

படி 3.2.3

- ஒவ்வொரு குழுவும் குழுவாகவும், தனியாகவும் கீதத்தைப் பாடச் சந்தர்ப்பம் வழங்குக.
- ஒரு குழு பாடும் போது, ஏனைய குழுக்கள் அதனை அவதானித்து தமது கருத்துக்களைத் தெரிவிக்க இடமளிக்க.
- மாணவரின் குறைகளை இனங்கண்டு முழுமைப்படுத்துக.
- பின்வரும் விடயங்களை மீளவலியுறுத்தும் வகையில் கலந்துரையாடுக.

<table>
<tr><td>

- 'கணநாதா குணம் நீதா' என்னும் கீதம் மலஹரி இராகத்தில் ஆதி தாளத்தில் அமைந்துள்ளது.
- இதனை இயற்றியவர் திரு.T.V.பிச்சையப்பா.
- அப்பியாசகான உருப்படிகளில் அலங்காரங்களுக்குப் பின் கீதம் கற்பிக்கப்படுகிறது.
- முதன் முதலில் சாகித்திய ரூபமாகக் கற்கும் அப்பியாசகான உருப்படிவகை கீதமாகும்.
- பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற அங்கவேறுபாடுகள் கீதத்தில் இல்லை.
- மாணவருடன் சேர்ந்து கீதத்தை இராக தாளத்துடன் பாடுக.

</td></tr>
</table>

(20 நிமிடம்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- 'கணநாதா குணம் நீதா' என்னும் கீதம் அமைந்துள்ள இராக, தாளத்தைக் குறிப்பிடுவர்.
- கீதத்தை இராக, தாளத்துடன் பாடுவர்.

## செயற்பத்திரம் 3.2.2.11

சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குக.

<table>
<tr><td>

- **'கணநாதா குணம் நீதா' என்னும் கீதத்தை இராக, தாளத்துடன் பாடிப் பயிற்சி செய்க.**
- **கீதத்தை இராக, தாளத்துடன் பாடுக.**

</td></tr>
</table>

# கீதம்

இராகம் - மலஹரி
தாளம் - ரூபகம்
இயற்றியவர் திரு.T.V.பிச்சையப்பா

ஆ - ஸரிமபதஸ்
அ - ஸ்தபமகரிஸ
} 15

| $0 \ 1_4$ | $0 \ 1_4$ | $0 \ 1_4$ | $0 \ 1_4$ |
|---|---|---|---|
| தஸ்தபமப<br>க ண நா. தா. | ரிம ப த பா<br>குணம் நீ . தா | த ப ம க ரி ஸ<br>கு ரு ம ணி யே. | ரி ம க ரி ஸா<br>கு க நே. சா |
| ரி ம ப த ம ப<br>சித்தி வினாயக | த த ப த ஸ்ஸ்<br>சி வ கு ம ரா - | ரிஸ் த ஸ் த ப<br>சித்தி யருள் வாய் | த ப ம க ரி ஸ<br>சக்தி யுமை பாலா |
| ஸ ரி ம ம க ரி<br>க ரு ணைகடலே | ஸ ரி க ரி ஸத<br>க ரி மு க னே | ரிம ப த ம ப<br>சித்தி வினா ய க | தப ம க ரி ஸ<br>ஸர ணம் ஸ ரணம் |

தேர்ச்சி 3.0 : இசை உருப்படிகளைச் சுருதி, இராக, தாளத்துடன் பாடிக்காட்டுவார்.

தேர்ச்சிமட்டம் 3.3 : இசை உருப்படிகளை இராக, தாளத்துடன் பாடுவார்.

செயற்பாடு 3.3.7 : 'ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி' என்னும் கீர்த்தனையை இராக, தாளத்துடன் பாடுவோம்.

நேரம் : 1 மணி 20 நிமிடங்கள் (02 பாடவேளைகள்)

தர உள்ளீடு : சுருதிப்பெட்டி, ஒலிப்பதிவுக் கருவி, ஒலிப்பதிவு நாடா, கீர்த்தனை எழுதப்பட்ட அட்டை.
செயற்பத்திரம் 3.3.2.7

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :**

படி 3.3.1 :

- கீர்த்தனையை ஆசிரியர் பாடிக்காட்டியோ அல்லது ஒலிப்பதிவு நாடாவில் ஒலிக்கச் செய்தோ, மாணவரைச் செவிமடுக்கச் செய்க.
- செவிமடுப்பதன் மூலம் அதனை இனங்காணச் செய்க.
- இனங்கண்ட பாடலில் பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுக.

- கீர்த்தனையின் இராகம் - கல்யாணி
- கீர்த்தனை அமைந்துள்ள தாளம் - ஆதி
- கீர்த்தனையானது பல்லவி, அனுபல்லவி, சரணம் என்னும் அங்கவித்தியாசங்களுடன் கூடிய உருப்படிவகை.
- மாணவர் கல்யாணி இராகத்தின் ஆரோகண அவரோகணத்தைப் பாடுவதற்கு வழிப்படுத்துக.
- கீர்த்தனையைக் காட்சிப்படுத்தி, அதனைப் பகுதி, பகுதியாகப் பாட மாணவர் தொடர்ந்து பாடுவதற்கு இடமளிக்க..
- மாணவருடன் சேர்ந்து தாளத்துடன் கீதத்தை முழுமையாகப் பாடுக.
- மாணவரைச் சிறிய குழுக்களாகவும், எழுமாற்றாகத் தெரிவு செய்து தனித்தனியாகவும் பாடச் சந்தர்ப்பம் வழங்குக.

(30 நிமிடம்)

படி 3.3.2. :

- வகுப்பில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப மாணவரைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தையும், இணைப்பையும் வழங்கி கீர்த்தனையைப் பாடுவதற்குப் பயிற்சி பெற வழிகாட்டுக.
- ஒவ்வொரு குழுவும் கீர்த்தனையைச் சரியாகப் பாடிப் பயிற்சி செய்கிறார்களா என்பதை உறுதி செய்க.

(30 நிமிடம்)

படி 3.3.3 :

- ஒவ்வொரு குழுவும் குழுவாகவும், தனியாகவும் கீர்த்தனையைப் பாடச் சந்தர்ப்பம் வழங்குக.
- ஒரு குழு பாடும் போது, ஏனைய குழுக்கள் அதனை அவதானித்து தமது கருத்துக்களைத் தெரிவிக்க இடமளிக்க.
- மாணவரின் குறைகளை இனங்கண்டு முழுமைப்படுத்துக.
- பின்வரும் விடயங்களை மீளவலியுறுத்தும் வகையில் கலந்துரையாடுக.

> - கீர்த்தனை அமைந்துள்ள இராகம் - கல்யாணி.
> - தாளம் - ஆதி
> - இயற்றியவர் - ஸ்ரீமதி நீலா இராமமூர்த்தி
> - கீர்த்தனையானது பல்லவி, அனுபல்லவி, சரணம் எனும் அங்க வித்தியாசங்களையுடைய உருப்படி வகையாகும்.
> - மாணவருடன் சேர்ந்து கீர்த்தனையை முழுமையாகப் பாடுக.

(20 நிமிடம்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி என்னும் கீர்த்தனை அமைந்துள்ள இராகத்தைக் கூறுவர்.
- தாளத்தைக் குறிப்பிடுவர்.
- கீர்த்தனையை இராக, தாளத்துடன் பாடுவர்.

## செயற்பத்திரம் - 3.3.2.7

சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தினை வழங்குக.

> - 'ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி' என்னும் கீர்த்தனையை இராக, தாளத்துடன் பாடிப் பயிற்சிசெய்க.
> - கீர்த்தனையை இராக, தாளத்துடன் பாடுக.

## கீர்த்தனை

இராகம் - கல்யாணி
ஆ - ஸ ரி க ம ப த நி ஸ் } 65
அ - ஸ் நி த ப ம க ரி ஸ

தாளம் - ஆதி
இயற்றியவர் - ஸ்ரீமதி நீலாஇராமமூர்த்தி

### பல்லவி

ஸ்ாஸ்நி தாபா பதாபம காமா / பா ; ; பத / பா; தாநீ//
ஸ்ரீ ரா .. ஜ ரா ஜே ஸ்வ ரி த யா பரி

ஸ்ரிக்ரி ஸ்நிதபா ஸ்நிதப மகாம / பா ; ; ஸ்நி / பமகா பதநீ
ஸ்ரீ....ரா .. ஜ ரா ஜே ஸ்வ ரி த யா பரி
(ஸ்ரீராஜ)

### அனுபல்லவி

ஸ்ா, தா ; நீ ஸ்ா; ரீரீ / க் ம் ப் ம் க் ரிஸ்ா / ஸ்ா,த நீஸ்ா //
வ ரா ஹி வை ஷ்ணவி வா ரி ஜ லோ சனி

ஸ்நிதப மகமா தாநீ ரீகா / ரிக்ப்ம் க்ரீஸ்ா / க்ரிஸ்நி த நிஸ்ா //
வ ரா .. ஹி வைஷ் ணவி வா..... ரி....ஜ லோ... ச.. னி

ஸ்ா, ஸ் ரீஸ்ா ஸ்ரிஸ்நி தாபா / ஸ்ாஸ்நி தாபா / மாபா தாநீ //
வா ம க்ஷி கா... மாக்ஷி விசாலா - க்ஷி மீ.. னாக்ஷி
(ஸ்ரீராஜ்)

### சரணம்

ஸ்நிபா ; பா பாபா மாமா / பாதா ;நீ / ஸ்நிதா பாமா //
நி - தம் ,உ னது மலர் பதம் ,து ணை.. என

பநிதா ; பாமா கரிகா கமபா / தாநீ ஸ்நிநித / பா; ; ; //
நி - னை க்கும் வ-ரம் எனக் க... ருள்வா ய்.......

சிதம்பரேஸ்வரி ஸ்ரீ ஜெகதீஸ்வரி
சித்ரூபிணி சக்தி ஸ்வரூபிணி அம்பா
(ஸ்ரீராஜ)

தேர்ச்சி 3.0 : இசை உருப்படிகளைச் சுருதி, இராக, தாளத்துடன் பாடிக்காட்டுவார்.

தேர்ச்சிமட்டம் 3.3 : இசை உருப்படிகளை இராக, தாளத்துடன் பாடுவார்.

செயற்பாடு 3.3.8 : 'நாடித்தேடி' என்னும் திருப்புகழை இராக, தாளத்துடன் பாடுவோம்.

நேரம் : 40 நிமிடம் (01 பாடவேளை)

தர உள்ளீடு : சுருதிப்பெட்டி/ ஹார்மோனியம், திருப்புகழ் எழுதப்பட்ட அட்டை, செயற்பத்திரம் 3.3.2.8

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :**

படி 3.3.1 :

- நாடித்தேடி என்னும் திருப்புகழைப் பாடிக் காட்டி மாணவரைச் செவிமடுக்கச் செய்க.
- செவிமடுப்பதன் மூலம் அதனை இனங்காணச் செய்க.
- இனங்கண்ட பாடலில் பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுக.

> - சந்தங்களைப் பிரதானமாகக் கொண்ட உருப்படியே திருப்புகழ்.
> - இது சந்தப்பாவலர் என அழைக்கப்படும் அருணகிரிநாதரால் பாடப்பட்டது.
> - திருப்புகழ் என்னும் உருப்படி பெருமாளே என்ற சொல்லில் முடிவடையும்.
> - நாடித்தேடி என்னும் திருப்புகழ் பாகஸ்ரீ இராகத்தில், ஆதிதாளத்தில் (திஸ்ரநடை) அமைந்துள்ளது.
> - இதன் சந்தம் - தான தான தனதான /<br>தான தான தனதான //
> - பாடப்பெற்ற தலம் - திருவானைக்கா இறைவன் மேல் பாடப்பெற்றது.
> - திருப்புகழைக் காட்சிப்படுத்தி பகுதி பகுதியாகப் பாட மாணவர் தொடர்ந்து பாடுவதற்கு இடமளிக்க.
> - மாணவருடன் சேர்ந்து திருப்புகழை சந்த அமைப்பிற்கேற்ப இராக, தாளத்துடன் முழுமையாகப் பாடுக.
> - மாணவரைக் குழுவாகவும், எழுமாற்றாகத் தெரிவு செய்து தனியாகவும் பாடச் சந்தர்ப்பம் வழங்குக.

(15 நிமிடம்)

படி 3.3.2. :

- வகுப்பிலுள்ள மாணவர் தொகைக்கேற்ப மாணவரைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தையும், இணைப்பையும் வழங்குக.
- ஒவ்வொரு குழுவும் அறிவுறுத்தலுக்கேற்ப திருப்புகழைப்பாடிப் பயிற்சி செய்கிறார்களா என்பதை உறுதி செய்க.

(15 நிமிடம்)

படி 3.3.3 :

- ஒவ்வொரு குழுவும் குழுவாகவும், தனியாகவும் திருப்புகழைப் பாடச் சந்தர்ப்பம் வழங்குக.
- ஒரு குழு பாடும் போது ஏனைய குழுக்கள் அதனை அவதானித்து தமது கருத்துக்களைக் கூற இடமளிக்க.
- மாணவரின் குறைகளை இனங்கண்டு முழுமைப்படுத்துக.
- பின்வரும் விடயங்களை மீள வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலொன்றை மேற்கொள்க.

> - திஸ்ரநடை அமைப்பினை மாணவர் தெரிந்து கொள்ளச் செய்க.
> - நாடித்தேடி என்னும் திருப்புகழை மாணவருடன் சேர்ந்து சந்த அமைப்பிற்கேற்ப பாகஸ்ரீ இராகத்தில், ஆதி தாளத்தில் (திஸ்ர நடை) முழுமையாகப் பாடுக.

(10 நிமிடம்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- நாடித்தேடி என்னும் திருப்புகழின் இராகம், தாளம், அருளியவர் என்பவற்றைக் குறிப்பிடுவர்.
- திருப்புகழை இராக, தாளத்துடன் பாடுவர்.

## செயற்பத்திரம் 3.3.2.8

சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குக.

> - நாடித்தேடி என்னும் திருப்புகழை இராக, தாளத்துடன் பாடிப் பயிற்சிசெய்க.
> - திருப்புகழை இராக, தாளத்துடன் பாடுக.

இணைப்பு

### திருப்புகழ்

இராகம்- பாகஸ்ரீ
தாளம் - ஆதி (திஸ்ரநடை)

அருளியவர் - அருணகிரிநாதர்
பாடப்பெற்ற தலம் - திருவானைக்கா

நாடித் தேடித் தொழுவார் பால்
நானதாகத் திரிவேனோ
மாடற் கூடற் பதிஞான
வாழ்வைச்சேரத் தருவாயே
பாடற் காதற் புரிவோனே
பாலைத் தேனுள் தருவோனே
ஆடற் தோகைக் கினியோனே
ஆனைக் காவிற் பெருமாளே.

தேர்ச்சி 3.0 : இசை உருப்படிகளைச் சுருதி, இராக, தாளத்துடன் பாடிக்காட்டுவார்.

தேர்ச்சிமட்டம் 3.3 : இசை உருப்படிகளை இராக, தாளத்துடன் பாடுவார்.

செயற்பாடு 3.3.9 : 'என்ன புண்ணியம்' என்னும் தேவாரத்தை பண்ணோடு பாடுவோம்.

நேரம் : 40 நிமிடங்கள் (01 பாடவேளை)

தர உள்ளீடு : சுருதிப்பெட்டி, சல்லாரி, தேவாரம் எழுதப்பட்ட அட்டை, செயற்பத்திரம் 3.3.2.9

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :**

படி 3.3.1 :

- ஆசிரியர் 'என்ன புண்ணியம்' என்னும் தேவாரத்தைப் பாடிக்காட்டி மாணவரை செவிமடுக்கச் செய்க.
- செவிமடுப்பதன் மூலம் அதனை இனங்காணச் செய்க.
- இனங்கண்ட பாடலில் பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுக.

| |
|---|
| • 'என்ன புண்ணியம்' என்ற தேவாரம் அமைந்துள்ள பண் - நட்டராகம், இராகம் - பந்துவராளி, தாளம் - ஆதி, அருளியவர் - திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், தலம் - திருவலஞ்சுழி என்பவற்றை மாணவர் அறிந்து கொள்ளச் செய்க. |
| • மாணவர் இத்தேவாரத்தைப் பொருள் உணர்ந்து உச்சரிப்புத் தெளிவுடன் சொல்லுவதற்கு வழிப்படுத்துக. |
| • தேவாரத்தினைக் காட்சிப்படுத்தி அதனைப் பகுதி பகுதியாகப் பாட மாணவர் தொடர்ந்து பாடுவதற்கு இடமளிக்க. |
| • மாணவருடன் சேர்ந்து தேவாரத்தினை பண்முறைக்கேற்ப தாளத்துடன் முழுமையாகப் பாடுக. |
| • மாணவரைச் சிறிய குழுக்களாகவும், எழுமாற்றாகத் தெரிவு செய்து தனித்தனியாகவும் பாடச் சந்தர்ப்பம் வழங்குக. |

(15 நிமிடம்)

படி 3.3.2.

- வகுப்பில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப மாணவரைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தையும் இணைப்பையும் வழங்குக.
- ஒவ்வொரு குழுவும் அறிவுறுத்தலுக்கேற்ப தேவாரத்தினைப் பாடி பயிற்சி செய்கிறார்களா என்பதை உறுதி செய்க.

(15 நிமிடம்)

படி 3.3.3 :

- ஒவ்வொரு குழுவும் குழுவாகவும், தனியாகவும் தேவாரத்தினைப் பாடச் சந்தர்ப்பம் வழங்குக.
- ஒரு குழு பாடும் போது, ஏனைய குழுக்கள் அதனை அவதானித்து தமது கருத்துக்களைத் தெரிவிக்க இடமளிக்க.
- மாணவரின் குறைகளை இனங்கண்டு முழுமைப்படுத்துக.
- பின்வரும் விடயங்களை மீளவும் வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்க.

| |
|---|
| • இத்தேவாரத்தின் பண் - நட்டராகம், இராகம் - பந்துவராளி, தாளம் - ஆதி, அருளியவர் - திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார். தலம் - திருவலஞ்சுழி ஆகியவற்றை மீண்டும் வலியுறுத்திக் கூறி மாணவருடன் சேர்ந்து தேவாரத்தினை பண்முறைக்கேற்ப தாளத்துடன் முழுமையாகப் பாடுக. |

(10 நிமிடம்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- நட்ட இராகப் பண்ணிற்குரிய இராகத்தினைக் கூறுவர்.
- இத்தேவாரத்தின் பண், தாளம், அருளியவர், பாடப்பட்ட தலம் ஆகியவற்றைக் குறிப்பிடுவர்.
- பண் முறைக்கேற்ப தேவாரத்தினை தாளத்துடன் பாடுவர்.

## செயற்பத்திரம் 3.3.2.9

சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தை வழங்குக.

| |
|---|
| • என்னபுண்ணியம் என்னும் தேவாரத்தினை பண்முறைக்கேற்ப, தாளத்துடன் பாடிப் பயிற்சி செய்க.<br>• தேவாரத்தைப் பண்ணுடன் பாடுக |

# தேவாரம்

பண் - நட்டராகம்
இராகம் - பந்துவராளி

தாளம் - ஆதி
பாடியவர் - திருஞானசம்பந்தர்
தலம் - திருவலஞ்சுழி

என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே
- இருங்கடல் வையத்து
முன்னம் நீபுரி நல்வினைப் பயனிடை
- முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு வலஞ் சுழி
- வாணனை வாயாரப்
பன்னி ஆதரித்து ஏத்தியும் பாடியும் வழிபடுமதனாலே.

| | | | | |
|---|---|---|---|---|
| ;கரீக | மா பா; | தா பா / | ;பா, தபா | / பா, பதமா,// |
| என்ன | புண் | ணி யம் | செய்தனை | நெஞ்சமே |
| ;பஸ்ா | நிதா ; , | நிஸ்தரீ / | ஸ்ா ; ; ; / | ; ; ; ; // |
| இருங் | கடல் | வையத் | து. . . . . . . . . . . . . | |
| ; பா ; | தா, நீ | ஸ் ரீ ஸ்ா / | ; ஸ்ா ரி ஸ்ா,/ | தாதாநிரிஸ்ா // |
| மு ன் | ன ம் | நீ புரி | நல்வினைப் | பய னிடை |
| ; நிஸ்ா | ரீஸ்ா , | நிதாபமா / | கம கா ; ; | / ; ; ; ;// |
| முழு | மணித் | தரளங் | கள் . . . . . . .. . . . . . . . | |

### என்ன புண்ணியம்

**பொருள்:**

மணமே, சிறந்த மணியாகிய முத்துக்கள் பொருந்திய காவேரியாறு சூழப் பெற்ற திருவலஞ்சுழிப் பெருமானைப் பக்தியோடு பலமுறை வாயாரப் புகழ்ந்தும் பாடியும் வழிபடும் போறு இப்போது நீ பெற்றுள்ளமையால், பெரிய கடல் சூழ்ந்த இவ்வுலகத்தில் முன்னே நீ செய்துள்ள நல்வினைப் பயன்களுக்கு இடையே, இப்பேறு பெறுவதற்கு ஏதுவாய் என்ன புண்ணியம் செய்தாய்? அது பெரிது.

தேர்ச்சி 3.0 : இசை உருப்படிகளைச் சுருதி, இராக, தாளத்துடன் பாடிக்காட்டுவார்.

தேர்ச்சிமட்டம் 3.3 : இசை உருப்படிகளை இராக, தாளத்துடன் பாடுவார்.

செயற்பாடு 3.3.10 : அவரவர் சமயத்திற்கேற்ற பக்திப்பாடலைப் பாடுவோம்.

நேரம் : 40 நிமிடங்கள் (01 பாடவேளை)

தர உள்ளீடு : சுருதிப்பெட்டி, ஒலிப்பதிவுப்பெட்டி, கற்பிக்க எடுத்துக் கொண்ட பக்திப் பாடல்கள் அடங்கிய ஒலிநாடா, பக்தி பாடல்கள் எழுதப்பட்ட அட்டைகள் செயற்பத்திரம் 3.3.2.10

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :**

படி 3.3.1 :

- கற்பிக்க எடுத்துக் கொண்ட பக்திப்பாடல்களை ஒலிப்பதிவுக் கருவியில் இசைக்கச் செய்து, அல்லது பாடிக் காண்பித்து மாணவரைச் செவிமடுக்கச் செய்க.
- செவிமடுத்த இப்பக்திப் பாடல்களை அடிப்படையாகக் கொண்டு கீழ்வரும் விடயங்களைத் தெளிவுறுத்தும் வண்ணம் கலந்துரையாடலை மேற்கொள்க.

- எந்த மதத்திற்குரிய பாடல்கள், பாடல்களில் குறிப்பிடப்படும் தெய்வங்கள் வெளிப்படுத்தப்படும் பக்தி உணர்வு.
- பாடல்களின் பொருள் விளக்கம், தாளம், மெட்டு, இயற்றியோர், பாடியோர் பற்றிய விளக்கம்.
- பாடல்கள் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தி, பாடல்களைப் பகுதி பகுதியாகப் பாட மாணவர் தொடர்ந்து பாடுவதற்கு இடமளிக்க.
- பாடல்களைத் தாளத்துடன் பாட மாணவர் தொடர்ந்து பாடச் செய்க.
- மாணவருடன் சேர்ந்து பாடல்களை முழுமையாக உரிய மெட்டு, தாளத்துடன் பாடுக.
- மாணவரைக் குழுவாகவும், எழுமாற்றாகத் தெரிவு செய்து தனியாகவும் பாடக் கேட்க.

(15 நிமிடம்)

படி 3.3.2. :

- மாணவர்களின் தொகைக்கேற்ப குழுக்களாகப் பிரித்துச் செயற்பத்திரத்தை வழங்குக.
- வழங்கப்பட்ட வழிகாட்டலுக்கேற்ப குழுக்கள் ஒவ்வொன்றும் தமது பயிற்சியை மேற்கொள்கின்றனரா என்பதை உறுதிப்படுத்துக.

(15 நிமிடம்)

படி 3.3.3

- ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளைத் தகுந்த முறையிற் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குக.
- ஏனைய குழுக்கள் அவற்றை அவதானித்து தமது கருத்தினைக் தெரிவிக்க இடமளிக்க.
- குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடலை மேற்கொள்க.
- கலந்துரையாடலின் போது கீழ்வரும் விடயங்களை மீண்டும் வலியுறுத்துக.

- எடுத்துக் கொண்ட பக்திப்பாடல்கள் குறிப்பிடும் சமயம், குறிப்பிடும் தெய்வம் போன்றவை.
- பக்திப் பாடல்களின் பொருள் விளக்கம்.
- பக்திப் பாடலின் தாளம், மெட்டு இயற்றியோர் பாடியோர் போன்ற விடயங்கள்.
- பாடல்களை உரிய மெட்டு, தாளத்துடன் முழுமையாகப் பாடுக.

(10 நிமிடம்)

**கணிப்பீட்டு, மதிப்பீட்டு நியதிகள் :**

- பக்திப் பாடல்களை பக்தி உணர்வுடன் பாடுவர்.
- பக்திப் பாடல்களைத் தகுந்த மெட்டுடனும் தாளத்துடனும் பாடுவர்.
- பக்திப் பாடல்களை இயற்றியோர், பாடியோர் பற்றிக் குறிப்பிடுவர்.
- பக்திப்பாடலில் குறிப்பிடும் தெய்வம், சமயம், பொருள் விளக்கங்களை வெளிக்கொணர்வர்.

## செயற்பத்திரம் 3.3.2.10

சகல குழுக்களுக்கும் இச் செயற்பத்திரத்தை வழங்குக.

- வகுப்பறையில் நீங்கள் கற்ற பக்திப் பாடல்களில் (நீர்விரும்பிய ஒரு பாடலை) உரிய மெட்டு, தகுந்த தாளத்துடன் பாடுக.

தேர்ச்சி 3.0 : இசை உருப்படிகளைச் சுருதி, இராக, தாளத்துடன் பாடிக்காட்டுவார்.

தேர்ச்சிமட்டம் 3.3 : இசை உருப்படிகளை இராக, தாளத்துடன் பாடுவார்.

செயற்பாடு 3.3.11 : மாயாமாளவகௌளை, மோஹனம் ஆகிய இராகங்களில் அமைந்த ஸ்வரக் கோர்வைகளை இராக, தாள, ஸ்வரஸ்தான சுத்தத்துடன் பாடுவோம்.

நேரம் : 01 மணி 20 நிமிடங்கள் (02 பாடவேளைகள்)

தர உள்ளீடு :

- மாயாமாளவகௌளை, மோஹன இராகங்களில் அமைந்த ஸ்வரக் கோர்வைகள் எழுதப்பட்ட அட்டை, மாயாமாளவகௌளை, மோஹனம் ஆகிய இராகங்களின் ஆரோஹண, அவரோஹண வரைபடங்கள், செயற்பத்திரம் 3.3.2.11

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :**

படி 3.3.1

- மாயாமாளவகௌளை, மோஹனம் ஆகிய இராகங்களில் மாணவர் ஏற்கனவே படித்த பாடல்கள், உருப்படிகளை நினைவுபடுத்தி, அந்த இராகங்களின் சாயல்களைப் பரிச்சயப்படுத்தியும், அவற்றின் ஆரோஹண, அவரோஹணங்களைப்பாடிக் காட்டியும் அல்லது பாடச் செய்தும் ஸ்வரஸ்தானங்களை அறிமுகம் செய்க.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்க.

> - ஸ்வர ஸஞ்சாரங்களைப் பாடும் இராகங்கள் மாயாமாளவகௌளை, மோகனம் என்பதனைக் குறிப்பிடுக.
> - பார்த்துப்பாடல் அமைந்துள்ள சஞ்சாரங்களின் ஆரோஹண அவரோஹணங்களை உரிய ஸ்வரஸ்தானங்களுடன் 1ஆம் 2ஆம் காலங்களில் பாடி இராகத்தின் சாயல்களை மனதில் நிச்சயப்படுத்திக் கொள்ள வழிசமைக்க.
> - பார்த்துப்பாடல்களுக்கான சஞ்சாரங்களை நன்கு பார்வையிட்டு அவற்றிலுள்ள கோர்வைகள், ஒரு அட்சரத்திற்குரிய ஸ்வரங்களின் எண்ணிக்கை ஸ்தாயி, அங்கக் குறியீடுகள் போன்ற இசைக் குறியீடுகளை விளங்கிக்கொள்ள நெறிப்படுத்துக.
> - ஸ்வரக் கோர்வைகளைத் தாளமின்றி ஸ்வரஸ்தான சுத்தமாகப் பாடிப் பின்னர் தாளத்துடன் சஞ்சாரங்களைப் பாடுவதற்கு வழிப்படுத்துக.
> - ஸ்வரக்கோர்வைகளைப் பாடும்போது மாணவருக்கு ஏற்படும் ஐயப்பாடுகளை நீக்க வழி செய்க.

(30 நிமிடம்)

படி 3.3.2

- மாணவரைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தை வழங்குக
- ஒவ்வொரு குழுவும் சரியாகப் பாடுகின்றனரா என உறுதிப்படுத்துக.
- ஒவ்வொரு குழுவும் தத்தமது பேறுகளைச் சமர்ப்பிக்கும் வகையில் ஆயத்தம் செய்ய ஊக்கமளிக்குக.

(30 நிமிடம்)

படி 3.3.3

- ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளை முன்வைக்க வழிப்படுத்துக.
- ஏனைய குழுக்கள் அதனை அவதானித்துத் தத்தமது கருத்துக்களை கூற இடமளிக்குக.
- கீழ்க்காணும் கருத்துக்களை மையமாகக் கொண்டு மீண்டும் ஒரு கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்க.

- ஸ்வர ஸஞ்சாரங்களைப் பாடும் இராகங்கள் :- மாயாமாளவகௌளை, மோஹனம் என்பனவாகும்.
- பார்த்துப்பாடல் அமைந்துள்ள சஞ்சாரங்களின் ஆரோஹண அவரோஹணங்களை 1ஆம் 2ஆம் காலங்களில் ஸ்வரஸ்தான சுத்தமாக பாடச் செய்க.
- ஸஞ்சாரங்களை நன்கு பார்வையிட்டு அதன் கோர்வைகள், தாளம், ஒரு அட்சரகாலத்திற்கு எடுத்துக் கொள்ளும் ஸ்வர எண்ணிக்கை, ஸ்தாயி, அங்கக் குறியீடுகளை விளங்கிக் கொள்ள நெறிப்படுத்துக.
- ஸ்வர ஸஞ்சாரங்களை முதலில் தாளமின்றி ஸ்வரஸ்தான சுத்தமாகப் பாடிப் பின்னர் தாளத்துடன் பாடுவதற்கு வழிப்படுத்துக.
- ஸ்வரக் கோர்வைகளைப் பாடும்போது அவற்றின் விசேட ஸஞ்சாரங்கள், ஜீவஸ்வரங்களை அவதானித்துப் பாடச் செய்க.
- ஸ்வரக்கோர்வைகளை இராக, தாள, ஸ்வரஸ்தான சுத்தத்துடன் பாடுக.

(20 நிமிடம்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- மாணவர் இவ்விரு இராகங்களின் ஸ்வரக் கோர்வைகளை ஆதி, ரூபக தாளங்களில் பாடுவர்.
- வெவ்வேறு இராகங்களிலும், தாளங்களிலும் அமைந்த ஸ்வரக் கோர்வைகளைப் பார்த்துப் பாடுவதன் மூலம் ஸ்வர, தாள, இராக ஞானங்களை விருத்திசெய்வர்.
- மாயாமாளவகௌளை, மோஹன இராகங்களை இனங்காணும் திறனைப் பெறுவர்.

## செயற்பத்திரம் 3.3.2.11

### குழு I

- பின்வரும் ஸ்வரக் கோர்வையைப் பார்த்துப் பாடிப் பயிற்சி செய்க
- கொடுக்கப்பட்ட ஸ்வரக்கோர்வையை இராக, தாளத்துடன் பாடுக.

இராகம் :- மாயாமாளவகௌளை தாளம்:- ரூபகம்

| 0 | | $1_4$ | |
|---|---|---|---|
| ஸ்ா ஸ்நி | / | தப மக மப தநி | // |
| ஸ்ரி க்ம | / | க்ரி ஸ்நி தப மக | // |
| மப தப | / | மக ரிஸ ரிக மப | // |
| தநி ஸ்ரி | / | ஸ்நி தப தநி ஸ்ா | // |

### குழு II

- பின்வரும் ஸ்வரக் கோர்வையைப் பார்த்துப் பாடிப்பயிற்சி செய்க.
- கொடுக்கப்பட்ட ஸ்வரக்கோர்வையை இராக, தாளத்துடன் பாடுக.

இராகம் :- மோஹனம் தாளம் :- ஆதி

| $1_4$ | | 0 | | 0 | |
|---|---|---|---|---|---|
| கபதஸ்ாஸ்பத | / | ஸ்ரிகா | / | க்ரிஸ்த | // |
| ரிஸ்ாதபதகக | / | தபகரி | / | ஸரிகா | // |

### குழு III

- பின்வரும் ஸ்வரக் கோர்வையைப் பார்த்துப் பாடிப் பயிற்சி செய்க.
- கொடுக்கப்பட்ட ஸ்வரக்கோர்வையை இராக, தாளத்துடன் பாடுக.

இராகம் :- மாயாமாளவகௌளை தாளம் :- ஆதி

| $1_4$ | 0 | | 0 | |
|---|---|---|---|---|
| கம பத நிஸ் ரிஸ்/ | ஸ்நி தப | / | தநி ஸ்ா | // |
| ஸ்நி தநி ஸ்ரி க்ா/ | ம்க் ரிஸ் | / | நித பா | // |

### குழு IV

- பின்வரும் ஸ்வரக் கோர்வையைப் பார்த்துப் பாடிப் பயிற்சி செய்க
- கொடுக்கப்பட்ட ஸ்வரக்கோர்வையை இராக, தாளத்துடன் பாடுக.

இராகம் :- மோஹனம் தாளம் - ரூபகம்

| 0 | | | $1_4$ | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| தப கரி | / | ஸத | ஸ்ரி | கரி | கப | // |
| தஸ் ஸத | / | பக | பத | ஸ்ரி | ஸ்ா | // |
| பத ரிஸ் | / | தப | ஸ்த | பக | தப | // |
| கரி கா | / | ரிக | பக | பத | ஸ்ா | // |

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 4.0 | : | கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார். |
| தேர்ச்சிமட்டம் 4.1 | : | கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களை விளக்குவார். |
| செயற்பாடு 4.1.2 | : | 35 தாள விளக்கத்தைப் பெறுவோம். |
| நேரம் | : | 40 நிமிடங்கள் (01 பாடவேளை) |
| தர உள்ளீடு | : | 35 தாள அட்டவணை,செயற்பத்திரம் 4.1.2.2 |

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :**

படி 4.1.1 :

- 35 தாள அட்டவணையைக் காட்சிப்படுத்தி மாணவர் அவதானித்த விடயங்களை கலந்துரையாடுக.
- இக்கலந்துரையாடலில் பின்வரும் அம்சங்களை வலியுறுத்துக.

> - ஸப்த தாளங்களும் அங்க அடையாளங்களும்.
> - லகுவின் ஐந்து ஜாதி பேதங்கள்
> - லகுவின் ஜாதிபேதத்தால் 7 தாளங்களும் 35 தாளங்களாக உருவாகும் விதம்.

(10 நிமிடம்)


படி 4.1.2.

- வகுப்பிலுள்ள மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தையும், இணைப்பையும் வழங்குக.
- அறிவுறுத்தலுக்கேற்ப செயற்பாட்டில் ஈடுபடச் செய்க.
- அறிவுறுத்தலுக்கேற்ப மாணவர்கள் செயற்படுகிறார்களா என்பதை உறுதி செய்க.

(15 நிமிடம்)

படி 4.1.3

- ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குக.
- ஏனைய குழுக்களும் அவற்றை அவதானித்துக் கருத்துக் கூற இடமளிக்க.
- குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடலொன்றை மேற்கொள்க. கலந்துரையாடலில் பின்வரும் விடயங்களை மீள வலியுறுத்துக.

> - ஸப்த தாளங்கள் ஏழு. அவை முறையே
>
> | | | |
> |---|---|---|
> | துருவம் | - | 1 0 1 1 |
> | மட்டியம் | - | 1 0 1 |
> | ரூபகம் | - | 0 1 |
> | ஜம்பை | - | 1 U 0 |
> | திரிபுடை | - | 1 0 0 |
> | அட | - | 1 1 0 0 |
> | ஏகம் | - | 1 |
>
> - லகுவின் ஐந்து ஜாதிபேதங்களாவன திஸ்ரலகு, சதுஸ்ரலகு, கண்டலகு, மிஸ்ரலகு, சங்கீர்ணலகு என்பனவாகும்.
> - சப்த தாளங்கள் ஏழிலும் வரும் அங்கம் லகு.
> - லகுவின் ஜாதி பேதத்தால் ஒரு தாளம் ஐந்து தாளங்களாக விரிவடையும்.
>
> உ+ம்
>
> 
> 
>
> - மேற்குறிப்பிட்டவாறு 7 தாளங்களும் (7x5) 35 தாளங்களாகின்றன.

(15 நிமிடம்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- சப்த தாளங்களை வரிசைப்படுத்துவர்
- ஐந்து ஜாதிகளையும் அவற்றின் அட்சரங்களையும் கூறுவர்.
- லகு ஜாதி பேதமடையும் அங்கம் என்பதைக் குறிப்பிடுவர்.
- லகுவின் ஜாதி பேதத்தினால் 35 தாளங்கள் உருவாகும் முறையை விளக்குவர்.

## செயற்பத்திரம் 4.1.2.2

சகல குழுக்களுக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குக.

- லகுவின் 5 ஜாதிகளையும் குறிப்பிடுக.
- சப்த தாளங்களையும் அவற்றின் அங்க அடையாளங்களையும் குறிப்பிடுக.
- 35 தாளங்கள் உருவாகும் முறையை விளக்குக.


# முப்பத்தைந்து தாள விளக்கம்

திரியாங்கங்கள் ஆகிய அனுத்ருதம், த்ருதம், லகு என்பவற்றின் ஜாதி பேதமடையும் அங்கம் லகுவாகும். லகுவானது திஸ்ரஜாதி, சதுஸ்ரஜாதி,கண்டஜாதி, மிஸ்ரஜாதி, சங்கீர்ணஜாதி என்னும் ஐந்து ஜாதிகளை உடையது. ஸப்த தாளங்கள் ஏழும் லகுவின் 5 ஜாதி பேதங்களினால் 7X5=35 தாளங்கள் ஆகின்றன.

உதாரணமாக :- துருவதாளத்தை எடுத்துக் கொண்டால் அது -

1. திஸ்ரஜாதி துருவதாளம்
2. சதுஸ்ரஜாதி துருவதாளம்
3. கண்டஜாதி துருவதாளம்
4. மிஸ்ரஜாதி துருவதாளம்
5. சங்கீர்ணஜாதி துருவதாளம்

என விரிவடையும்




இவ்வாறே மட்டியதாளமும், ருபதாளமும், ஜம்பை தாளமும், திரிபுடை தாளமும், அடதாளமும், ஏகதாளமும் விரிவடைகின்றன. லகுவிற்கு மட்டுமே ஜாதி பேதங்கள் உண்டு. த்ருதத்திற்கும், அனுத்ருதத்திற்கும் பேதம் கிடையாது.

சப்த தாளங்களும் லகுவின் ஜாதி பேதங்களினால் 35 தாளங்களாக உருவாகின்றன

| ஜாதிகள் | அங்கம் | மொத்த அட்சரங்கள் |
|---|---|---|
| **துருவதாளம்** | **1011** | |
| 01. திஸ்ரஜாதி துருவதாளம் | $1_3$ 0 $1_3$ $1_3$ | 3+2+3+3 = 11 |
| 02. சதுஸ்ரஜாதி துருவதாளம் | $1_4$ 0 $1_4$ $1_4$ | 4+2+4+4 = 14 |
| 03. கண்டஜாதி துருவதாளம் | $1_5$ 0 $1_5$ $1_5$ | 5+2+5+5 = 17 |
| 04. மிஸ்ரஜாதி துருவதாளம் | $1_7$ 0 $1_7$ $1_7$ | 7+2+7+7 = 23 |
| 05. சங்கீர்ணஜாதி துருவதாளம் | $1_9$ 0 $1_9$ $1_9$ | 9+2+9+9 = 29 |
| **மட்டியதாளம்** | **101** | |
| 06. திஸ்ரஜாதி மட்டியதாளம் | $1_3$ 0 $1_3$ | 3+2+3 = 08 |
| 07. சதுஸ்ரஜாதி மட்டியதாளம் | $1_4$ 0 $1_4$ | 4+2+4 = 10 |
| 08. கண்டஜாதி மட்டியதாளம் | $1_5$ 0 $1_5$ | 5+2+5 = 12 |
| 09. மிஸ்ரஜாதி மட்டியதாளம் | $1_7$ 0 $1_7$ | 7+2+7 = 16 |
| 10. சங்கீர்ணஜாதி மட்டியதாளம் | $1_9$ 0 $1_9$ | 9+2+9 = 20 |
| **ரூபக தாளம்** | **01** | |
| 11. திஸ்ரஜாதி ரூபக தாளம் | 0 $1_3$ | 2+3 = 05 |
| 12. சதுஸ்ரஜாதி ரூபக தாளம் | 0 $1_4$ | 2+4 = 06 |
| 13. கண்டஜாதி ரூபக தாளம் | 0 $1_5$ | 2+5 = 07 |
| 14. மிஸ்ரஜாதி ரூபக தாளம் | 0 $1_7$ | 2+7 = 09 |
| 15. சங்கீர்ணஜாதி ரூபக தாளம் | 0 $1_9$ | 2+9 = 11 |
| **ஜம்பை தாளம்** | **1 U o** | |
| 16. திஸ்ரஜாதி ஜம்பை தாளம் | $1_3$ U 0 | 3+1+2 = 06 |
| 17. சதுஸ்ரஜாதி ஜம்பை தாளம் | $1_4$ U 0 | 4+1+2 = 07 |
| 18. கண்டஜாதி ஜம்பை தாளம் | $1_5$ U 0 | 5+1+2 = 08 |
| 19. மிஸ்ரஜாதி ஜம்பை தாளம் | $1_7$ U 0 | 7+1+2 = 10 |
| 20. சங்கீர்ணஜாதி ஜம்பை தாளம் | $1_9$ U 0 | 9+1+2 = 12 |
| **திரிபுடை தாளம்** | **100** | |
| 21. திஸ்ரஜாதி திரிபுடை தாளம் | $1_3$ 0 0 | 3+2+2 = 07 |
| 22. சதுஸ்ரஜாதி திரிபுடை தாளம் | $1_4$ 0 0 | 4+2+2 = 08 |
| 23. கண்டஜாதி திரிபுடை தாளம் | $1_5$ 0 0 | 5+2+2 = 09 |
| 24. மிஸ்ரஜாதி திரிபுடை தாளம் | $1_7$ 0 0 | 7+2+2 = 11 |
| 25. சங்கீர்ணஜாதி திரிபுடை தாளம் | $1_9$ 0 0 | 9+2+2 = 13 |
| **அட தாளம்** | **1100** | |
| 26. திஸ்ரஜாதி அட தாளம் | $1_3$ $1_3$ 0 0 | 3+3+2+2 = 10 |
| 27. சதுஸ்ரஜாதி அட தாளம் | $1_4$ $1_4$ 0 0 | 4+4+2+2 = 12 |
| 28. கண்டஜாதி அட தாளம் | $1_5$ $1_5$ 0 0 | 5+5+2+2 = 14 |
| 29. மிஸ்ரஜாதி அட தாளம் | $1_7$ $1_7$ 0 0 | 7+7+2+2 = 18 |
| 30. சங்கீர்ணஜாதி அட தாளம் | $1_9$ $1_9$ 0 0 | 9+9+2+2 = 22 |
| **ஏக தாளம்** | **1** | |
| 31. திஸ்ரஜாதி ஏக தாளம் | $1_3$ | 03 |
| 32. சதுஸ்ரஜாதி ஏக தாளம் | $1_4$ | 04 |
| 33. கண்டஜாதி ஏக தாளம் | $1_5$ | 05 |
| 34. மிஸ்ரஜாதி ஏக தாளம் | $1_7$ | 07 |
| 35. சங்கீர்ணஜாதி ஏக தாளம் | $1_9$ | 09 |

தேர்ச்சி 4.0 : கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார்.

தேர்ச்சிமட்டம் 4.2 : இராகத்தின் பிரிவுகளைக் குறிப்பிடுவார்.

செயற்பாடு 4.2.3 : ஜன்ய இராகத்தின் பிரிவுகளில் நிஷாதாந்திய, தைவதாந்திய, பஞ்சாமாந்திய இராகங்கள் பற்றிய விளக்கத்தைப் பெறுவோம்

நேரம் : 40 நிமிடங்கள் (01 பாடவேளை)

தர உள்ளீடு : சுருதிப்பெட்டி, ஒலிப்பதிவுப் பெட்டி,
மேற்குறிப்பிட்ட ஜன்ய இராக வகையில் அமைந்த பாடல்கள் அல்லது இவை அடங்கிய ஒலி நாடா.
மேற்குறித்த ஜன்ய இராகங்களின் ஆரோகண அவரோகணங்களை விளக்கும் வரைபடம்.
மேற்குறித்த, ஜன்ய இராகப் பிரிவுகளை விளக்கும் அட்டவணை, செயற்பத்திரம் 4.2.2.3

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :**

படி 4.2.1

- மேற்குறிப்பிட்ட ஜன்ய இராக வகையுள் அடங்கிய பாடல்களைப் பாடிக்காட்டுக அல்லது ஒலிப்பதிவுக் கருவியில் இசைக்கச் செய்க.
- தர உள்ளீட்டிலுள்ள அட்டவணை, வரைபடங்களைத் தகுந்தவாறு காட்சிப்படுத்துக.
- மாணவர் அவதானித்த விடயங்கள் பற்றிக் கலந்துரையாடுக.
- கலந்துரையாடலின் போது கீழ்வரும் அம்சங்களை வலியுறுத்துக.

| |
|---|
| • ஜன்ய இராக விளக்கம் |
| • ஜன்ய இராகத்தின் பிரிவுகள் (7 பிரிவுகள்) |
| • நிஷாதாந்திய, தைவதாந்திய, பஞ்சமாந்திய இராகங்களின் விளக்கம். |

(10 நிமிடம்)

படி 4.2.2

- ஒவ்வொரு மாணவருக்கும் செயற்பத்திரத்தினை வழங்குக.
- அறிவுறுத்தலுக்கேற்ப செயற்பாட்டில் ஈடுபடுகின்றார்களா என்பதை உறுதிப்படுத்துக.

(15 நிமிடம்)

படி 4.2.3 :

- மாணவர் தமது பேறுகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் அளிக்குக.
- ஏனைய மாணவர் அதனை அவதானித்துத் தமது கருத்துக்களைக் கூற இடமளிக்க.
- மாணவர் பேறுகளைத் தொகுத்திடும் வண்ணம் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்க.
- கலந்துரையாடலில் பின்வரும் விடயங்களை வலியுறுத்துக.

> - தாய் இராகங்களில் இருந்து பிறந்த இராகம் ஜன்ய இராகமாகும். இவை தாய் இராகத்தின் ஸ்வரங்களை அனுசரித்தே காணப்படும்.
> - ஜன்ய இராகத்தில், உபாங்கம், பாஷாங்கம், வர்ஜம், வக்ரம், நிஷாதாந்தியம், தைவதாந்தியம், பஞ்சமாந்தியம் என்னும் ஏழு பிரிவுகள் உள.
> - மத்தியஸ்தாயி நிஷாதத்திற்கு மேல் சஞ்சாரம் இல்லாத இராகம் நிஷாதாந்திய இராகம் ஆகும்.
>   உ-ம் : நாதநாமக்கிரியை ஆ: ஸரிகமபதநி அ: நிதபமகரிஸநி
> - மத்தியஸ்தாயி தைவதத்திற்கு மேல் சஞ்சாரம் இல்லாத இராகம் தைவதாந்திய இராகம் எனப்படும்.
>   உ-ம் : குறிஞ்சி ஆ: ஸநிஸரிகமபத அ: தபமகரிஸநிஸ
> - மத்தியஸ்தாயி பஞ்சமத்திற்கு மேல் சஞ்சாரமில்லாத இராகம் பஞ்சமாந்திய இராகம் எனப்படும்.
>   உ-ம் : நவரோஜ் ஆ: பதநிஸரிகமப அ: மகரிஸநிதப

(15 நிமிடம்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்:**

- ஜன்ய இராகப் பிரிவுகளான நிஷாதாந்திய, தைவதாந்திய பஞ்சமாந்திய இராகங்களை இனங்கண்டு வகைப்படுத்துவர்.
- மேற்குறிப்பிட்ட இராகங்களின் விளக்கங்களை அறிந்து குறிப்பிடுவர்.
- இவ்விராகப் பிரிவுகட்கான உதாரணங்களையும் ஆரோகண, அவரோகணங் களையும் குறிப்பிடுவர்.

## செயற்பத்திரம் 4.2.2.3

சகல மாணவருக்கும் இச் செயற்பத்திரத்தை வழங்குக.

பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.

1. தாரஸ்தாயி ஸட்ஜத்தை எட்டாத சஞ்சாரங்கள் கொண்ட இராகப்பிரிவுகள் எத்தனை வகைப்படும்.

2. அவ்விராக வகைகளைத் தருக.

3. I. மத்தியஸ்தாயி நிஷாதத்திற்கு மேல் சஞ்சாரமில்லாத இராகம் எது.
   II. இவ்விராகத்திற்கு, ஆரோகண அவரோகணத்துடன் கூடிய உதாரணம் ஒன்று தருக.

4. I. மத்தியஸ்தாயி தைவதத்திற்கு மேல் சஞ்சாரமில்லாத இராகம் எது.
   II. இவ்விராகப்பிரிவுக்கு, ஆரோகண அவரோகணத்துடன் கூடிய உதாரணம் ஒன்று தருக.

5. I. மத்தியஸ்தாயி பஞ்சமத்திற்கு மேல் சஞ்சாரம் இல்லாத இராகம் எது.
   II. இவ்விராகப் பிரிவுக்கு, ஆரோகண அவரோகணத்துடன் கூடிய உதாரணம் ஒன்று தருக.

தேர்ச்சி 4.0 : கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார்.

தேர்ச்சிமட்டம் 4.4 : இராகங்களின் இலட்சணங்களை விளக்குவார்.

செயற்பாடு 4.4.5 : மாயாமாளவகௌளை, மோகனம் ஆகிய இராகங்களின் இலட்சணங்களை அறிந்து கொள்வோம்.

நேரம் : 40 நிமிடங்கள் (01 பாடவேளை)

தர உள்ளீடு : • மாயாமாளவகௌளை, மோகன இராகங்களின் ஆரோகண, அவரோகண வரைபடம், ஸ்வரஸ்தான வரைபடம், சுருதிப்பெட்டி, இராகலட்சணம் எழுதப்பட்ட பிரதி, செயற்பத்திரம் 4.4.2.5

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :**

படி 4.4.1

- மாயாமாளவகௌளை, மோகனம் ஆகிய இராகங்களில் மாணவர் ஏற்கனவே கற்றுக்கொண்டவற்றை (அப்பியாச வரிசைகள், உருப்படிகள்) பாடுவதன் மூலம் குறிப்பிட்ட இராகங்களை மாணவர் இனங்காணச் செய்க.
- மாயாமாளவகௌளை, மோகனம் ஆகிய இரண்டு இராகங்களினதும் ஆரோகண, அவரோகணங்களை ஸ்வரஸ்தான வரைபடத்தின் உதவியுடன் பாடிக்காட்டி இராகத்தின் சொருபத்தினை விளங்கச் செய்க.
- இனங்கண்ட இராகத்தின் அடிப்படையில் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்க.
- கலந்துரையாடலில் பின்வரும் விடயங்களை வலியுறுத்துக.

- மாயாமாளவகௌளை இராகம் ஒரு ஜனகராகமாகும்.
  இதன் மேள எண் 15.
- ஆ:- ஸரிகமபதநிஸ் அ:- ஸ்நிதபமகரிஸ
- ஸ்வரஸ்தானங்கள் : ஸட்ஜம், சுத்தரிஷபம், அந்தரகாந்தாரம், சுத்தமத்திமம், பஞ்சமம், சுத்ததைவதம், காகலிநிஷாதம்.
- இரட்டைப்பெயர்களுடன் விளங்கும் ஸ்வரஸ்தானங்கள் வராததினாலும் ஜண்டைஸ்வரப் பிரயோகங்களும் பொருத்தமாக இந்த ராகத்திற்கு வரக்கூடியதனாலும் மாணவர்கள் முதல் முதலில் ஸ்வரவரிசைகள் பயிலவேண்டும் என்ற சம்பிரதாயம் ஏற்பட்டது.
- மோகனம் ஓர் ஜன்யராகம். தாய்ராகம் ஹரிகாம்போஜி மேளஎண் 28.
  ஆ : ஸரிகபதஸ் அ : ஸ்தபகரிஸ
- ஸ்வரஸ்தானங்கள் : ஸட்ஜம், சதுஸ்ருதிரிஷபம், அந்தரகாந்தாரம், பஞ்சமம், சதுஸ்ருதிதைவதம்.
- திருவாசகம் மோகன இராகத்தில் பாடப்படும்.

(10 நிமிடங்கள்)

படி 4.4.2

- மாணவர்களை இரு குழுக்களாகப்பிரித்து செயற்பத்திரத்தையும், இணைப்பையும் வழங்குக.
- அறிவுறுத்தலுக்கேற்ப செயற்பாட்டில் குழுக்களை ஈடுபடச்செய்க.
- ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளைச் சமர்ப்பிக்கும் வகையில் ஆயத்தம் செய்வதற்கு ஊக்கமளிக்க.

(15 நிமிடங்கள்)

படி 4.4.3

- ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளை சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குக.
- ஏனைய குழுக்கள் அதனை அவதானித்து கருத்துக் கூற இடமளிக்க.
- குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடல் ஒன்று மேற்கொள்க.
- கலந்துரையாடலில் கீழ்வரும் விடயங்களை வலியுறுத்துக.

**மாயாமாளவகௌளை**

- மாயாமாளவகௌளை 15வது மேளகர்த்தா இராகம் ஆகும். அக்னி சக்கரத்தில் மூன்றாவது இராகம் (அக்னி - கோ)
- இந்த இராகத்தின் பழைய பெயர் மாளவகௌளை என்பதாகும். இது கடபயாதி ஸங்க்யைக்காக மாயாமாளவகௌளை என அழைக்கப்படுகிறது.
- ஆரோகணம் - ஸரிகமபதநிஸ் அவரோகணம் - ஸநிதபமகரிஸ
  ஸ,ப தவிர இந்த இராகத்தில் வரும் ஸ்வரஸ்தானங்கள் சுத்தரிஷபம், அந்தரகாந்தாரம், சுத்தமத்திமம், சுத்ததைவதம், காகலி நிஷாதம்.
- ஹிந்துஸ்தானி இசையில் பைரவதாட் என்று அழைக்கப்படும்.
- சம்பூர்ணஇராகம், ஸர்வ, ஸ்வர, கமக, வரிக, ரக்தி புராதன இராகங்களில் ஒன்று. தோஷமற்ற இராகம். பூர்வாங்கமும் உத்தராங்கமும் ஒரே சீராய் அமைந்துள்ள இராகம். திரிஸ்தாயிஇராகம், பக்திரஸமும், கருணாரஸமும் பொருந்திய இராகம்.
- க.நி - ஜீவஸ்வரங்கள், க.ப ஸ்வரங்களில் நின்று சஞ்சாரம் செய்யலாம். இதன் ரி, ம ஸ்வரங்களை ஸட்ஜமாக வைத்துக்கொண்டால் ரஸிகப்ரியா, ஸிம்ஹேத்திரமத்தியமம் ஆகிய மேளங்கள் ஒலிக்கும்.
- இதன் பிரதி மத்திம இராகமே பந்துவராளி. தேவாரப் பண்களில் இந்தளம் என்பது இந்த இராகமேயாகும்.
- ஸஞ்சாரம் :- ஸரிகமபதநிஸ் - கமபதநிஸ்ரிஸா - ஸ்நிதபதநிஸா
  ஸ்நிததி - ஸ்ரிக்ரிகா - ம்க்ரிஸா
  ஸ்நிதாபாகமா - கமபதநி - ஸ்ரிஸ்நித பாமகா
  கமபதபம - கமகரிஸ - ஸநிதநி - ஸரிஸா
- உருப்படிகள் - கிருதி - மேருஸமான - மத்யாதி - தியாகராஜசுவாமி
  கிருதி - துளஸீதள - ரூபகம்
  கிருதி - ஸ்ரீநாதாதி - ஆதி - தீக்ஷிதர்
  கிருதி - மாயாதீதஸ்வரூபினி - ரூபகம் - பொன்னையா
  கீர்த்தனை - ஆடிக்கொண்டார் - ஆதி - முத்துத்தாண்டவர்

**மோகனம்**

- மோகனம் 28வது மேளகர்த்தாவாகிய ஹரிகாம்போஜியின் ஜன்னியம்.
  ஆ - ஸரிகபதஸ்
  அ - ஸ்தபகரிஸ

- ஸ, ப தவிர இந்த இராகத்தில் வரும் ஸ்வரஸ்தானங்கள் சதுஸ்ருதிரிஷம், அந்தரகாந்தாரம், சதுஸ்ருதி தைவதம்.

- வர்ஜஇராகம் ம,நி,வர்ஜம், ஔடவ இராகம், உபாங்க இராகம், இராகச் சாயாஸ்வரங்கள் - ரி, க, த. ஜண்டைஸ்வரப் பிரயோகங்களும், தாடுஸ்வரப் பிரயோகங்களும் இராக ரஞ்சகமானவை.

- ஸர்வ ஸ்வர கமக, வரிக, ரக்தி ராகம். புராதனராகம், சுபகரமான இராகம், திரிஸ்தாயி இராகம், எப்பொழுதும் பாடலாம். இரவில் பாட மிக ரஞ்சகமாக இருக்கும்.

- உருப்படிகள் - ஸ, க, த ஆகிய ஸ்வரங்களில் ஆரம்பிக்கின்றன.

- இது ஒரு ஸர்வ மூர்ச்சனாகாரக ஜன்ய இராகமாகும். ரி, க, ப, த ஆகிய ஸ்வரங்களை கிரகபேதம் செய்தால் முறையே மத்யமாவதி, ஹிந்தோளம். சுத்தஸாவேரி, உதயரவிசந்திரிகா ஆகிய இராகங்கள் பிறக்கின்றன.

- திருவாசகம் மோகனராகத்திலேயே தொன்று தொட்டு பாடப்பட்டு வருகிறது.

- முல்லைப் பண் என்பது மோகன இராகமே.

- ஸஞ்சாரம் - கபதஸ்ரஸ் - பதஸ்ரிகர்ரி - ஸரிகபகாகா - ஸரிகரீஸ தஸரிஸதாதப - பகபாஸரிஸததாப - கபகதாபகரி - ஸரிகபாகரி ஸரிகரீஸ - தஸரிஸ - ததஸதாப - பகபதஸதஸதஸா

- உருப்படிகள் -
  கீதம் - வரவீணா - ரூபகம்
  ஸ்வரஜதி - ஸாமிதயமீர - ஆதி
  தானவர்ணம் - நின்னுகோரி - ஆதி - இராமநாதபுரம் ஸ்ரீனிவாசய்யங்கார்
  ஸரஸிஜா - அட
  கிருதி - பவனுத - ஆதி - தியாகராஜசுவாமிகள்
  எவருரா - சாபு
  மயில்வாகனா - ஆதி - பாபநாசம்சிவன்
  கீர்த்தனை - அருமருந்தொரு - ரூபகம் - முத்துத்தாண்டவர்
  ஜாவளி - மேஹமெல்ல - ரூபகம் - பட்டாபிராமய்யர்

(15 நிமிடம்)

**கணிப்பீட்டு ,மதிப்பீட்டு நியதிகள் :**

- மாயாமாளவகௌளை, மோஹன இராகங்களின் மேள எண், ஆரோஹண, அவரோஹண ஸ்வரஸ்தானங்களைக் குறிப்பிடுவர்.
- பூர்வாங்கமும், உத்தராங்கமும் ஒரே சீராய் இருப்பதனால், இந்த இராகத்திலேயே மாணவர்கள் முதன் முதலில் ஸ்வர வரிசைகளைப் பயிலவேண்டும் என்ற சம்பிரதாயம் ஏற்பட்டதைக் குறிப்பிடுவர்.
- ஹிந்துஸ்தானி சங்கீதத்தில் "பைரவதாட்" என்பது இந்த இராகம் என்பதைக் ஏற்றுக் கொள்வர்
- மாயாமாளவகௌளை, மோஹன இராகங்களில் அமைந்த உருப்படிகளைக் இனங்காண்பர்.
- திருவாசகம் பாடப்படும் இராகம் மோஹனம் என்பதைக் குறிப்பிடுவர்.

**செயற்பத்திரம் 4.4.2.5**

குழுவில் உள்ள சகல அங்கத்தவர்களுக்கும் தனித்தனியாகச் செயற்பத்திரத்தினை வழங்குக.

**குழு I**

மாயாமாளவகௌளை இராகத்தின் இலட்சணத்தை பின்வரும் அம்சங்களின் அடிப்படையில் எழுதுக.

- மேளஎண்
- ஆரோகண, அவரோகணம்
- ஸ்வரஸ்தானங்கள்
- விஷேட பிரயோகங்கள்
- சஞ்சாரங்கள்
- உருப்படிகள்

**குழு II**

மோஹன இராகத்தின் இலட்சணத்தை பின்வரும் அம்சங்களின் அடிப்படையில் எழுதுக.

- தாய் இராகம்
- ஆரோகண, அவரோகணம்
- ஸ்வரஸ்தானங்கள்
- விஷேட பிரயோகங்கள்
- சஞ்சாரங்கள்
- உருப்படிகள்

# இராக இலட்சணம்

இராகம் - மாயாமாளவகௌளை.

15வது மேளகர்த்தா இராகம். அக்னி சக்கரத்தில் மூன்றாவது மேளம் (அக்னி - கோ) இந்த இராகத்தின் பழைய பெயர் மாளவகௌளை என்பதாகும். கடபயாதி ஸங்க்யைக்காக மாயாமாளவகௌளை என அழைக்கப்படுகிறது. இதன்

ஆ - ஸரிகமபதநிஸ்

அவ - ஸ்நிதபமகரிஸ

ஸட்ஜ பஞ்சமத்தைத் தவிர இவ்விராகத்தில் வரும் ஸ்வரஸ்தானங்கள் சுத்தரிஷபம், அந்தரகாந்தாரம், சுத்தமத்திமம், சுத்ததைவதம், காகலிநிஷாதம்.

ஸம்பூர்ண இராகம், ஸர்வ ஸ்வர கமக வரிக ரக்தி இராகம். க. நி ஜீவ ஸ்வரங்கள். க, ப ஸ்வரங்களில் நின்று சஞ்சாரம் செய்யலாம். எப்பொழுதும் பாடலாம். புராதன இராகங்களில் ஒன்று. பல ஜன்ய இராகங்களையுடைய மேள இராகம். தோஷமற்ற இராகம். பூர்வாங்கமும், உத்தராங்கமும் ஒரே சீராய் அமைந்துள்ள இராகம். உருப்படிகள் பெரும்பாலும் ஸ, க, த, நி ஸ்வரங்களில் ஆரம்பிக்கின்றன. பக்தி ரஸமும் கருணா ரஸமும் பொருந்திய இராகம். திரிஸ்தாயி இராகம்.

ஹிந்துஸ்தானி சங்கீதத்தில் 'பைரவதாட்' என்பது இவ்விராகமேயாகும். இரட்டைப் பெயர்களுடன் விளங்கும் ஸ்வரஸ்தானங்கள் இந்த இராகத்தில் வராததினாலும், ஜண்டை ஸ்வரப் பிரயோகங்களும், பலவித தாடு பிரயோகங்களும் இந்த இராகத்திற்கு பொருத்தமாக வரக் கூடியதனாலும், பூர்வாங்கமும் உத்தராங்கமும் ஒரே சீராக இருப்பதனாலும், இந்த இராகத்திலேயே மாணவர்கள் முதல் முதலில் ஸ்வர வரிசைகளைப் பயில வேண்டும் என்ற சம்பிரதாயம் ஏற்பட்டது.

இதன் பிரதி மத்திம இராகமே பந்துவராளி இராகம். மூர்ச்சனாகாரக மேள இராகம். இதன் ரி, ம ஸ்வரங்களை ஸட்ஜமாக வைத்துக் கொண்டால் முறையே ரஸிகப்பிரியா (72), ஸிம்ஹேந்திர மத்யமம் (57) ஆகிய மேளங்கள் ஒலிக்கும். தேவாரப் பண்களிற் பண் இந்தளம் என்பது இந்த இராகமேயாகும்.

### ஸஞ்சாரம்

ஸரிகமபதநிஸ் - கமபதநிஸ்ரிஸ்ா - ஸ்நிதபதநிஸ்ா - ஸ்நிதநி - ஸ்ரிக்ரிக்ா - மக்ரிஸ்ா - ஸ்நிதபாகமா - கமபதநி - ஸ்ரிஸ்நித பாமகா - கமபதபம - கமகரிஸ - ஸநிதநி - ஸரிஸா

### உருப்படிகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கிருதி | - | மேருஸமான | - மத்யாதி | - | தியாகராஜசுவாமி |
| கிருதி | - | துளஸீதளமுலசே | - ரூபகம் | - | தியாகராஜசுவாமி |
| கிருதி | - | ஸ்ரீ நாதாதி | - ஆதி | - | தீக்ஷிதர் |
| கிருதி | - | மாயாதீத ஸ்வரூபிணி | - ரூபகம் | - | பொன்னையா |
| கீர்த்தனை | - | ஆடிக்கொண்டார் | - ஆதி | - | முத்துத்தாண்டவர் |

**இராகம் - மோஹனம்**

28ஆவது மேளகர்த்தாவாகிய ஹரிகாம்போஜியின் ஜன்யம்.
இதன் ஆ - ஸரிகபதஸ்
அ - ஸ்தபகரிஸ

ஸட்ஜ பஞ்சமங்களைத் தவிர இந்த இராகத்தில் வரும் ஸ்வரஸ்தானங்கள் சதுஸ்ருதி ரிஷபம், அந்தர காந்தாரம், சதுஸ்ருதி தைவதம்.

வர்ஜ இராகம். ம.நி வர்ஜம். ஔடவ இராகம். உபாங்க இராகம். ரி.க.த இராகச் சாயாஸ்வரங்கள் ககபப தத ஸ்ஸ் போன்ற ஜண்டை ஸ்வரப் பிரயோகங்களும் தக்ரிஸ்தப, தரிஸ்தப, கதபகரி, ரிபகரிஸ போன்ற தாடு ஸ்வரப் பிரயோகங்களும் இராக ரஞ்சகமானவை. ஸர்வ ஸ்வர கமக வரிக ரக்தி இராகம். க,ப ஆகிய ஸ்வரங்களில் நின்று ஸஞ்சாரம் செய்யலாம். திரிஸ்தாயி இராகம். சுபகரமான இராகம். புராதன இராகம். எல்லா வகையான உருப்படிகளையும் இவ்விராகத்தில் காணலாம். சுலோகங்கள் பத்யங்கள், விருத்தங்கள் பாடுவதற்கேற்ற இராகம். விஸ்தாரமான ஆலாபனைக்கு இடங்கொடுக்கும் இராகம். வர்ணணைக்கேற்ற இராகம். எப்பொழுதும் பாடலாம். எனினும் இரவில் பாட மிக்க ரஞ்சகமாக இருக்கும். இசை நாடகங்களிலும் நிருத்திய நாடகங்களிலும் காணப்படும் இராகம், உருப்படிகள் ஸ, க, த ஆகிய ஸ்வரங்களில் ஆரம்பிக்கின்றன.

பிறநாட்டு சங்கீதங்களில் காணப்படும் இராகங்களில் இதுவுமொன்றாகும். இது ஒரு ஸர்வஸ்வர மூர்ச்சனாகாரக ஜன்ய இராகமாகும். ரி, க, ப, த ஆகிய ஸ்வரங்களை கிரக பேதம் செய்தால் முறையே மத்யமாவதி, ஹிந்தோளம், சுத்தஸாவேரி, உதய ரவிசந்திரிகா ஆகிய இராகங்கள் பிறக்கின்றன.

மாணிக்கவாசகரின் திருவாசகம் தொன்றுதொட்டு மோஹன இராகத்திலேயே பாடப்பட்டு வருகிறது. முல்லைப்பண் என்பது மோஹன இராகமே.

**ஸஞ்சாரம்**

| | | | |
|---|---|---|---|
| கபதஸ்ாஸ் | - பதஸ்ரிக்ரி | - ஸரிக்ப்கா்கா | - ஸ்ரிக்ரீஸ் - |
| தஸ்ரிஸ்தாதப | - பகபாஸ்ரிஸ்ததாப | - கபகதாபகரி | - ஸரிகபாகரி - |
| ஸரிகரீஸ | - தஸரிஸ | - ததஸதாப | - பகபதஸதஸத ஸா. |

**உருப்படிகள்**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கீதம் | - | வரவீணா | - | ரூபகம் | | |
| ஸ்வரஜதி | - | ஸாமிதயமீர | - | ஆதி | | |
| தானவர்ணம் | - | நின்னுகோரி | - | ஆதி | - | இராமநாதபுரம் ஸ்ரீநிவாசய்யங்கார் |
| | - | ஸரஸிஜா | - | அட | | |
| கிருதி | - | பவனுத | - | ஆதி | - | தியாகராஜ ஸ்வாமிகள் |
| கிருதி | - | எவரூரா | - | சாபு | - | தியாகராஜ ஸ்வாமிகள் |
| கிருதி | - | மயில்வாகனா | - | ஆதி | - | பாபநாசம் சிவன் |
| கீர்த்தனை | - | அருமருந்தொரு | - | ரூபகம் | - | முத்துத்தாண்டவர் |
| ஜாவளி | - | மோஹமெல்ல | - | ரூபகம் | - | பட்டாபி ராமய்யர் |

தேர்ச்சி 4.0 : கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார்.

தேர்ச்சிமட்டம் 4.4 : இராகங்களின் இலட்சணங்களை விளக்குவார்.

செயற்பாடு 4.4.6 : சங்கராபரண இராகத்தின் இலட்சணத்தை அறிந்துகொள்வோம்.

நேரம் : 40 நிமிடங்கள் (01 பாடவேளை)

தர உள்ளீடு :
- சங்காராபரண இராகத்தின் ஆரோகண, அவரோகண வரைபடம்
- ஸ்வரஸ்தான வரைபடம், சுருதிப்பெட்டி, செயற்பத்திரம் 4.4.2.6

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :**

படி 4.4.1

- சங்கராபரண இராகத்தில் மாணவர் ஏற்கனவே கற்றுக்கொண்ட "கதமோஹா" என்னும் திவ்யநாம கீர்த்தனையைப்பாடிக்காட்டி குறிப்பிட்ட இராகத்தை மாணவர் இனங்காணச் செய்க.
- சங்கராபரண இராகத்தின் ஆரோகண, அவரோகணத்தையும் இந்த இராகத்திலமைந்த சஞ்சாரங்களையும் பாடிக்காட்டி இராகத்தின் சொரூபத்தை விளங்கிக் கொள்ளச் செய்க.
- இனங்கண்ட இராகத்தை அடிப்படையாகக் கொண்டு கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்க.
- கலந்துரையாடலில் கீழ்க்கண்ட விடயங்களை வலியுறுத்துக.

> - சங்கராபரண இராகத்தின் மேள எண் 29.
>   இதன் ஆரோகணம் : ஸரிகமபதநிஸ்
>   அவரோகணம் : ஸ்நிதபமகரிஸ
> - ஸ்வரஸ்தானங்கள் ஸட்ஜம், சதுஸ்ருதிரிஷபம், அந்தரகாந்தாரம், சுத்தமத்திமம், பஞ்சமம், சதுஸ்ருதிதைவதம், காகலிநிஷாதம்.
> - வெண்பா இந்த இராகத்திலேயே பாடப்படும்.
> - எல்லா ஸ்வரங்களும் இராகச்சாயாஸ்வரங்கள்
> - ஸஸ ரிரி கக மம பப போன்ற ஜண்டைஸ்வர பிரயோகங்களும் ரிநிஸ்தநிபதம போன்ற ஸ்வர பிரயோகங்களும் ரஞ்சகமானவை.
> - வடதேசத்து இசையில் இவ்விராகம் "பிலாவல்" என்றும், மேலைத்தேய இசையில் "மேஜர்ஸ்கேல்" எனவும் அழைக்கப்படும்.

(10 நிமிடம்)

படி 4.4.2 :

- மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தையும், இணைப்பையும் வழங்குக.
- ஒவ்வொரு குழுவும் செயற்பாட்டில் சரியாக ஈடுபடுகிறார்களா என்பதை உறுதிசெய்க.

(15 நிமிடம்)

படி 4.4.3 :

- ஒவ்வொரு குழுவும் தத்தமது கருத்துக்களை முன்வைக்க வழிப்படுத்துக.
- ஏனைய குழுக்கள் அக்கருத்துக்களை அவதானித்து தமது கருத்துக்களை வழங்க இடமளிக்க
- குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ளும்போது பின்வரும் விடயங்களை வலியுறுத்துக.

> - சங்கராபரணம் 29ஆவது மேளகர்த்தா இராகமாகும்.
> - இதன் ஆ : ஸரிகமபதநிஸ்
>   அ : ஸ்நிதபமகரிஸ
> - ஸ்வரஸ்தானங்கள் : ஸட்ஜம். சதுஸ்ருதிரிஷபம், அந்தரகாந்தாரம், சுத்தமத்திமம், பஞ்சமம், சதுஸ்ருதிதைவதம், காகலி நிஷாதம்.
> - பூர்வாங்கமும் உத்தராங்கமும் ஒரே சீராய் அமைந்துள்ள இராகம்
> - வடதேசத்து இசையில் "பிலாவல்" என்றும் மேலைத்தேய இசையில் "மேஜர்ஸ்கேல்" எனவும் அழைக்கப்படும்.
> - தேவாரத்தில் வரும் "பண்பழஞ்சுரம்" என்பது இந்த இராகமே. வெண்பா இந்த இராகத்திலேயே பாடப்படும்.
> - உருப்படிகள் ஸ, ரி, ம, ப ஸ்வரங்களில் ஆரம்பிக்கும்.
> - இதன் ரி, க, ம, ப, த ஸ்வரங்களின் மூர்ச்சனைகள் முறையே கரஹரப்பிரியா, தோடி, கல்யாணி, ஹரிகாம்போஜி, நடபைரவி ஆகும்.
> - தஞ்சாவூர் சமஸ்தானத்தை அலங்கரித்த நரசய்யா என்பவர் இந்தராகத்தைப் பாடுவதில் திறமை வாய்ந்தவர்.
> - புராதன நூல்களில் இந்தராகம் காணப்படுகிறது.

(15 நிமிடம்)

**கணிப்பீட்டு, மதிப்பீட்டு நியதிகள் :**

- சங்கராபரண இராகத்தின் மேள எண், ஆரோகண அவரோகணம் ஸ்வரஸ்தானத்தை கூறுவர்.
- வெண்பா பாடப்படும் இராகம் சங்கராபரணம் என்பதைக் குறிப்பிடுவர்.
- வடதேசத்து இசையில் இவ்விராகம் "பிலாவல்" என்றும், மேலைத்தேய இசையில் "மேஜர்ஸ்கேல்" எனவும் அழைக்கப்படும் என்பதைக் கூறுவர்.
- சங்கராபரண இராகத்தின் விசேஷ பிரயோகங்களை குறிப்பிடுவர்.
- சங்கராபரண இராகத்தில் அமைந்த உருப்படிகளைக் குறிப்பிடுவர்.

## செயற்பத்திரம் 4.4.2.6

குழுவில் உள்ள அங்கத்தவர்கள் அனைவருக்கும் செயற்பத்திரத்தை வழங்கி செயற்பாட்டில் ஈடுபடச் செய்க.

பின்வரும் அம்சங்களை அடக்கியதாக சங்கராபரண இராகத்தின் இலட்சணத்தை எழுதுக.

1. மேளஎண்
2. ஆரோகண, அவரோகணம்
3. ஸ்வரஸ்தானங்கள்
4. விசேஷ பிரயோகங்கள்
5. மேலைத்தேய இசையிலும், ஹிந்துஸ்தானி இசையிலும், தேவார இசையிலும் வழங்கப்படும் பெயர்கள்.
6. சங்கராபரண இராகத்தில் அமைந்த உருப்படிகள்
7. சஞ்சாரங்கள்
8. இந்த இராகத்தை பாடுவதில் திறமைபெற்றவர் எனக் கருதப்பட்டவரின் பெயர்.

**இராகம் - சங்கராபரணம்**

29 ஆவது மேளகர்த்தா இராகம், பாண சக்கரத்தில் 5 ஆவது இராகம். (பாண - மா) கடபயாதி ஸங்க்யைக்காக தீரசங்கராபரணமென்று அழைக்கப்பட்டது.

ஆ - ஸரிகமபதநிஸ்
அவ - ஸ்நிதபமகரிஸ

ஸட்ஜ பஞ்சமங்களைத் தவிர இந்த இராகத்தில் வரும் ஸ்வரஸ்தானங்கள் சதுஸ்ருதி ரிஷபம், அந்தரகாந்தாரம், சுத்தமத்திமம், சதுஸ்ருதிதைவதம், காகலிநிஷாதம்.

ஸம்பூர்ண இராகம். ஸர்வ ஸ்வர கமக வரிக ரக்தி இராகம். எல்லா ஸ்வரங்களும் இராகச்சாயா ஸ்வரங்கள். ஸஸரிரி கக மம பப போன்ற ஜண்டைஸ்வர பிரயோகங்களும் ரிநிஸ்தநிபதம பகம ரிகஸ போன்ற தாடு ஸ்வரப் பிரயோகங்களும் இராக ரஞ்சகமானவை. ஸ்நிபா என்பது ஓர் அபூர்வமான விசேஷ பிரயோகம். விஸ்தாரமான ஆலாபனைக்கு இடங்கொடுக்கும் இராகம். சுலோகங்கள், பத்யங்கள், விருத்தங்கள் பாடுவதற்கேற்ற இராகம். எப்பொழுதும் பாடலாம். பூர்வாங்கமும், உத்தராங்கமும் ஒரே சீராய் அமைந்துள்ள மேள இராகங்களிலொன்று. உருப்படிகள் பெரும்பாலும் ஸ, ரி, ம, ப ஸ்வரங்களில் ஆரம்பிக்கின்றன.

வட தேசத்து சங்கீதத்தில் காணப்படும் "பிலாவல்" என்னும் இராகமும் மேல் நாட்டார் சங்கீதத்தில் "மேஜர் ஸ்கேல்" என்று வழங்கப்படும் இராகமும் இதுவேயாகும். தேவாரத்தில் வரும் பண் "பழம் பஞ்சுரம்" என்பது இந்த இராகமே. தஞ்சாவூர் ஸமஸ்தானத்தை அலங்கரித்த சங்கராபரணம் நரஸய்யர் என்பவர் இந்த இராகத்தைப் பாடுவதில் மிக்க திறமை வாய்ந்தவர். புராதன நூல்களில் இந்த இராகம் காணப்படுகிறது.

இதன் ரி, க, ம, ப, த மூர்ச்சனைகள் முறையே கரஹரப்பிரியா, தோடி, கல்யாணி, ஹரிகாம்போஜி, நடபைரவி ஆகும். வெண்பா இவ்விராகத்திலேயே பாடப்படுகிறது.

**சஞ்சாரம்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஸாபா | பமகமா | - | கமபதாநிஸ்ா - | ஸ்நிஸ்த | - | நிபதாநிஸ்ா |
| ஸ்ாஸ்நி | ஸ்ஸ்ரிஸ்நீ | - | ஸ்ரிக்ா | - | ஸ்ரிக்ம்க்ா | - | ம்க்ரிஸ்ாநீ |
| ஸரிகமபா | மகரீஸாநி | - | ஸகரீரிஸாநி | - | ஸநிஸதநிபதா | | |
| நிஸ்ா | கமபதநிஸ்ரிஸ்ா | - | நிதபா | | ஸ்தாபா | - | மகரீகமபா |
| ஸரீகமபா | பாதநிஸரீகமபா | - | | | மகரீஸா | - | நிஸதாநிஸா |

**உருப்படிகள்**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கீதம் | - | ஆரேதசரதராஜ | - | ஸிம்ஹநந்தனம் | | |
| தானவர்ணம் | - | ஸாமிநின்னே | - | ஆதி | - | வீணை குப்பய்யர் |
| தானவர்ணம் | - | சலமேல | - | அட | - | ஸ்வாதி திருநாள் |
| பதவர்ணம் | - | மனவிசெகொன | - | ஆதி | - | பொன்னையா |
| கிருதி | - | எந்துகுபெத்தல | - | ஆதி | - | தியாகராஜசுவாமிகள் |
| கிருதி | - | மரியாதகாதுரா | - | ஆதி | - | தியாகராஜசுவாமிகள் |
| கிருதி | - | ஸ்வரராகஸீதா | - | ஆதி | - | தியாகராஜசுவாமிகள் |
| கோவூர் பஞ்சரத்தினம் | - | ஸுந்தரேஸ்வரனே | - | ஆதி | - | தியாகராஜசுவாமிகள் |
| திவ்யநாம கீர்த்தனை | - | பாஹிராமச்சந்தர | - | ஆதி | - | தியாகராஜசுவாமிகள் |
| திவ்யநாம கீர்த்தனை | - | கதமோஹா | - | ரூபகம் | - | தியாகராஜசுவாமிகள் |
| கிருதி | - | அஷயலிங்கலிபோ- | | சாபு | - | முத்துஸ்வாமி தீஷிதர் |
| கிருதி | - | நாகலிங்கம் | - | ஆதி | - | முத்துஸ்வாமி தீஷிதர் |
| நவரத்னமாலிகை | - | ஸரோஜதளநேத்ரி | - | ஆதி | - | சியாமா சாஸ்திரி |
| நவரத்னமாலிகை | - | தேவிமீனநேத்ரி | - | ஆதி | - | சியாமா சாஸ்திரி |
| கிருதி | - | பாகு மீரகனு | - | ரூபகம் | - | வீணை குப்பய்யர் |

தேர்ச்சி 4.0 : கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார்.

தேர்ச்சிமட்டம் 4.5 : இசைக் கருவிகளின் அமைப்பு, பயன்பாடு பற்றி விளக்குவார்.

செயற்பாடு 4.5.4 : நாதஸ்வரத்தின் அமைப்பு பயன்பாடு பற்றி அறிந்து கொள்வோம்.

நேரம் : 80 நிமிடம் (02 பாடவேளைகள்)

தர உள்ளீடு : நாதஸ்வர வாத்தியத்தின் படம், நாதஸ்வரம், நாதஸ்வர இசை அடங்கிய ஒலிப்பதிவு நாடா, ஒலிப்பதிவுக் கருவி, செயற்பத்திரம் 4.5.2.4

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :

படி 4.5.1 :

- நாதஸ்வர இசை அடங்கிய ஒலிப்பதிவு நாடாவைப் போட்டுக்காட்டி, மாணவரை செவிமடுக்கச் செய்க.
- செவிமடுத்தலின் மூலம் நாதஸ்வரத்தை இனங்காணச் செய்க.
- இனங்கண்டவற்றிலிருந்து பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்க.

> - நாதஸ்வர வாத்தியத்தின் சிறப்பு அம்சங்கள்.
> - நாதஸ்வரத்தின் வகைகள்.
> - கோயில்களில் நாதஸ்வரம் பெறும் முக்கியத்துவம்.
> - நாதஸ்வர வாத்தியத்தின் பயன்கள்.
> - நாதஸ்வர வாத்தியத்தின் பாகங்கள் குறித்த விளக்கப்படம் காட்சிப்படுத்துக.
> - நாதஸ்வர வாத்திய அமைப்பு.
> - நாதஸ்வரத்தை வாசிக்கும் முறை.
> - நாதஸ்வரத்திற்கான சுருதி வாத்தியம்.
> - நாதஸ்வரத்திற்கு பக்கவாத்தியமாக வாசிக்கும் தாளக்கருவி.
> - 'பெரிய மேளம்' என்றழைக்கப்படும் நாதஸ்வர இசைக்கலைஞர் குழு.
> - நாதஸ்வரம் வாசிப்பதிற் பிரபல்யமானோர்.

(20 நிமிடம்)

படி 4.5.2

- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்துச் செயற்பத்திரத்தினை இணைப்புடன் வழங்குக.
- அறிவுறுத்தலுக்கேற்ப செயற்பாட்டில் ஈடுபடுகின்றனரா என்பதை உறுதிப்படுத்துக.

(30 நமிடம்)

படி 4.5.3 :

- ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குக.
- ஏனைய குழுக்கள் அதனை அவதானித்துத் தமது கருத்துக்களைக் கூறுவதற்கு இடமளிக்க.
- குழுக்களின் பேறுகளைத் தொகுத்திடும் வண்ணம் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்க.
- கலந்துரையாடலிற் பின்வரும் விடயங்களை மீளவும் வலியுறுத்துக.

- நாதஸ்வரமானது 'மங்கள வாத்தியம்' எனச் சிறப்புடன் அழைக்கப்படுகின்றது.
  கோயில் திருவிழாக்கள், கல்யாண வைபவங்கள், ஊர்வலங்கள், மற்றும் மங்களகரமான வைபவங்கள் சிறப்புற இவ்வாத்தியத்தினை வாசிப்பர்.

- இதனை நாயனம் என்றும் அழைப்பர்.

- இது துளைக் கருவி வகைகளில் ஒன்றாகும்.

- இது ஒரு காற்று வாத்தியமாகும்.

- நாதஸ்வரத்தில் இரண்டு வகை காணப்படுகின்றது.
  1. பாரி
  2. திமிரி

  பாரிநாதஸ்வரம், நீளம் அதிகமானதாயும் ஆதார சுருதி குறைவானதாகவும் இருக்கும். திமிரி நாதஸ்வரம் நீளம் குறைவானதாகவும் ஆதார சுருதி கூடியதாகவும் இருக்கும். தற்காலத்திற் பாரி நாதஸ்வரமே கையாளப்பட்டு வருகின்றது.

- இக்காலத்திற் கையாளப்படும் நாதஸ்வரம் சாதாரணமாக 2 கட்டைச் சுருதிக்குச் செய்யப்படுகின்றது.

- கோயில்களில் வெவ்வேறு நேரப் பூஜைகட்கு ஏற்ப, வெவ்வேறு வகையிலான இசையை வழங்கி, வழிபடுவோருக்கு இறைபக்தியை வளர்க்கும் பணியை நாதஸ்வர இசைக்கலைஞர்கள் உன்னதமாக நிறைவேற்றுகின்றனர்.

- கோயில்களில் இவ்வாத்தியத்தில் வாசிக்கும் மல்லாரி இசையுடன் இறைவன் வீதி உலாவருவது கண்கொள்ளாத காட்சியாகும். கோயிலைச் சுற்றியுள்ள ஊரில் உள்ளோர் இவ்விசை கேட்டு இறைவனின் வீதி உலாவை உணர்ந்து கொள்வர்.

- விடியற்காலையிற் பூபாளம், பௌளி இராகங்களிற் தொடங்கி, அர்த்த ஜாமம் முடிந்து பள்ளிஅறைக்கென இசைக்கும் ஆனந்தபைரவி நீலாம்பரி முதலிய இராகங்களையும், இசை வடிவங்களையும் நாதஸ்வரத்தில் வாசிக்கையில் கேட்க மிகவும் இனிமையாக இருக்கும்.

- இவ்விசை மக்களின் வாழ்க்கையோடு ஒன்றிப் போனதாகும்.

- இவ்வாத்தியம் திறந்த வெளியில் இசைக்க மிக ஏற்புடையது.
- நாதஸ்வரத்திலிருந்து வெளிப்படும் கனமான நாதம், வெகுதூரம் கேட்கக் கூடியதாக இருத்தல் சிறப்பானதாகும்.
- கும்பகோணம் கும்பேஸ்வரர் கோயிலிலும், ஆழ்வார் திருநகரிக் கோயிலிலும் கல் நாதஸ்வரங்கள் காணப்படுகின்றன.
- நாதஸ்வர வாத்தியத்தின் பாகங்கள் குறித்த படத்தினைக் காட்சிப்படுத்துக.
- இக்கருவி ஆச்சா மரத்தினால் செய்யப்படுகின்றது.
- சில வித்துவான்கள் இவ்வாத்திய மேற்பாகத்தை வெள்ளித் தகட்டினாலோ அன்றித் தங்கத் தகட்டினாலோ மூடிப் பயன்படுத்தினர்.
- அணைசு எனும் பகுதி றோஸ்வூட் என்ற மரத்தினாற் செய்யப்படும்.
- சீவாளி என்ற பகுதி கொறுக்கந்தட்டையிலிருந்து செய்யப்படுகின்றது.
- நாதஸ்வரமானது 2 முதல் 2 1/2 அடி நீளமானதும் மேலிருந்து கீழ் விரிந்து செல்லும் கூம்பு வடிவத்திலான மரக்குழாயால் ஆனதும் ஆகும்.
- இதன் அடிப்பாகத்தில் வரிசையாக ஏழு ஸ்வரத் துளைகளும், பக்கங்களிற் சப்தத்தை வகைப்படுத்தும் துவாரங்கள் ஐந்தும் காணப்படுகின்றன.
- நாதஸ்வரத்தின் மேற் பகுதியில் உலோகத்தினாற் செய்யப்பட்ட, கெண்டை பொருத்தப்பட்டுள்ளது.
- தேவைக்கேற்ப உபயோகித்திட சீவாளிகளும் (நறுக்குகள்) ஒரு குச்சியும் பொருத்தப்பட்டு உள்ளன. சீவாளியைக் கெண்டை எனும் பகுதியில் வைத்து, இசை ஒலியை உண்டுபண்ணுவர்.
- நாதஸ்வரத்தை இரண்டு கைகளினாலும் நேராகப் பிடித்துச், சீவாளியை வாய்க்குள் வைத்து ஊதி வாசிப்பர். இவ்வாறு ஊதுகையில் காற்று வாத்தியத்தின் உட்செலுத்தப்படுகின்றது. அதேவேளை, இரண்டு கைகளின் விரல்களாலும், ஸ்வரத்துளைகளைத் தேவைக்கேற்பத் திறந்தும் மூடியும் வாசிப்பதன் மூலம் தேவையான ஸ்வரங்கள் பெறப்படுகின்றன.
- நாதஸ்வரத்திற்குரிய சுருதி வாத்தியம் ஒத்து ஆகும். இது நாதஸ்வரத்தின் உருவத்தினை ஒத்ததாகும். இதில் ஆதார சுருதி மட்டுமே வெளிவரும் தற்காலத்தில் சுருதிப்பெட்டி போன்ற கருவிகளும் பயன்படுத்துவர்.
- நாதஸ்வரத்திற்குத், தகுந்த தாளக் கருவியாக அமைவது தவில் எனும் தோற்கருவியாகும்.

- நாதஸ்வர இசைக்கச்சேரி குழுவினரால் நடாத்தப்படும். இதில் நாதஸ்வரக் கலைஞர், ஒத்து இசைப்பவர், தவில் வித்துவான், தாளக் கலைஞர் (ஜால்ரா) ஆகிய நால்வகையினர் அடங்குவர். இந்நால்வர் ஒன்று சேர்ந்த குழுவைப் 'பெரிய மேளம்' என்று அழைப்பர்.

- சிறந்த நாதஸ்வரக் கலைஞராக விளங்கியோர்.
  திருவாவடுதுறை இராஜரத்னம்பிள்ளை
  காரைக்குறிச்சி அருணாசலம்பிள்ளை
  திருப்பாம்புரம் நடராஜசுந்தரம்பிள்ளை
  திருவீழிமிழலை சுப்பிரமணியபிள்ளை

(30 நிமிடம்)

கணிப்பீட்டு, மதிப்பீட்டு நியதிகள் :

- நாதஸ்வர வாத்தியத்தின் சிறப்பம்சங்களை விளக்குவர்.
- நாதஸ்வரத்தின் அமைப்பை விளக்குவர்.
- நாதஸ்வரத்தின் அமைப்பைப் படம் வரைந்து பாகங்களைக் குறிப்பர்.
- நாதஸ்வரத்தை வாசிக்கும் முறையைக் குறிப்பிடுவர்.
- நாதஸ்வரம் வாசிப்பதிற் தேர்ச்சி பெற்றோரைக் குறிப்பிடுவர்.
- நாதஸ்வரம் ஓர் மங்களகரமான வாத்தியம் என்பதனை ஏற்றுக்கொள்வர்.

**செயற்பத்திரம் 4.5.2.4**

**குழு I**

1. நாதஸ்வர வாத்தியத்தைப் படம் வரைந்து பாகங்களைக் குறிக்குக.
2. இவ்வாத்திய அமைப்பினை விளக்குக.

**குழு II**

1. நாதஸ்வர வாத்தியத்தின் சிறப்பம்சங்களைக் குறிப்பிடுக.
2. நாதஸ்வர வாத்தியத்தை வாசிக்கும் முறையை விளக்கி, இவ்வாத்தியம் வாசிப்பதிற் பிரபல்யம் அடைந்த வித்வான்களைக் குறிப்பிடுக.

## இசைக்கருவி - நாதஸ்வரம்

கோயில் திருவிழாக்களிலும், கல்யாண வைபவங்களிலும், ஊர்வலங்களிலும், மற்றும் மங்களகரமான வைபவங்களிலும் தனிச் சிறப்புடன் விளங்கும் ஒரு வாத்தியமாக நாதஸ்வரம் திகழ்கிறது. நாதஸ்வரத்தை நாயனம் என்றும் கூறுவர்.

நாதஸ்வரம் ஒரு காற்று வாத்தியம். மங்கள இசையை உண்டாக்கும் வாத்தியம். நாதஸ்வரத்தினின்றும் வெளிப்படும் நாதம் கனமுள்ளதாகவும் வெகுதூரம் கேட்கக் கூடியதாகவும் இருக்கும்.

இக்கருவி ஆச்சாமரம் என்னும் மரத்தால் செய்யப்படுகிறது. இவ்வாத்தியத்தின் மேற்பாகத்தை வெள்ளித் தகட்டினாலோ அல்லது தங்கத் தகட்டினாலோ மூடிச் சில வித்துவான்கள் பயன்படுத்தினர்.

கும்பகோணம் கும்பேசவரர் கோயிலிலும், ஆழ்வார் திருநகரிக் கோயிலிலும் கல் நாதஸ்வரங்கள் காணப்படுகின்றன.

### பாகங்கள்

1. வட்ட வடிவமாக விரிந்து காணப்படும் அணைசு.
2. உள்ளே கூடான நீண்ட மரக்குழலால் ஆகிய கூம்பு வடிவ உடல்.
3. உடலின் மேல் பொருத்தப்படும் கெண்டை.
4. கெண்டைக்கு மேல் அவ்வப்போது வைத்து இசைக்கப்படும் சீவாளி (இதற்கு நறுக்கு என்றும் பெயருண்டு)

அணைசு என்ற பகுதி "Rosewood" என்ற மரத்திலிருந்தும் சீவாளி என்ற பகுதி கொறுக்கந் தட்டையிலிருந்தும் செய்யப்படுகின்றன.

நாதஸ்வரமானது 2 முதல் 2 1/2 அடி நீளமும், மேலிருந்து கீழ் விரிந்து செல்லக் கூடியதுமான கூம்பு வடிவத்தில் உள்ள ஒரு மரக் குழாயாலானது. அதன் அடிப்பாகத்தில் வரிசையாக ஏழு ஸ்வரத்துளைகளும், பக்கங்களில் சப்தத்தை வகைப்படுத்தும் துவாரங்கள் ஐந்தும் காணப்படுகின்றன. மேல் பாகத்தில் உலோகத்திலான ஒரு கூம்பு (கெண்டை) பொருத்தப்பட்டுள்ளது. தேவைக்கேற்ப உபயோகித்துக் கொள்ள நறுக்குகளும் (சீவாளி) ஒரு குச்சியும் உள்ளன.

### வாசிக்கும் முறை

நாதஸ்வரத்தை இரண்டு கைகளாலும் நேராகப் பிடித்து சீவாளியை வாய்க்குள் வைத்து ஊதும் போது காற்று வாத்தியத்துள் செலுத்தப்படுகிறது. அதே சமயத்தில் இரண்டு கை விரல்களாலும் ஸ்வரத்துளைகளைத் தேவைக்கேற்ப மூடியும் திறந்தும் ஸ்வரங்களை எழுப்பி இசை உண்டாக்கப் படுகிறது.

நாதஸ்வரத்திற்குரிய சுருதி வாத்தியம் ஒத்து என்னும் கருவியாகும். இது உருவ அமைப்பில் நாதஸ்வரத்தைப் போன்றது. இக் கருவியிலிருந்து ஆதாரசுருதி மட்டும் தான் வெளிவரும். தற்போது இக் கருவிக்குப் பதிலாக சுருதிப்பெட்டி பயன்படுத்தப்படுவதும் உண்டு. நாதஸ்வரத்திற்கு தாளக் கருவியாக அமைவது தவில் எனும் தோற்கருவியாகும். நாதஸ்வரக் கலைஞர், ஒத்து இசைப்பவர், தவில் வித்துவான், தாளக் கலைஞர் (ஜால்ராக் கலைஞர்) ஆகிய நால்வரும் ஒன்று சேர்ந்த இசைக்குழுவைப் 'பெரிய மேளம்' என்று அழைப்பதுண்டு

நாதஸ்வரத்தில் இரண்டு வகை காணப்படுகின்றது.

1. பாரி
2. திமிரி

'பாரி' நாதஸ்வரம் நீளம் அதிகமானதாயும், ஆதாரசுருதி குறைவானதாயும் இருக்கும்.

'திமிரி'' நாதஸ்வரம் நீளம் குறைவானதாயும், ஆதாரசுருதி கூடியதாயும் இருக்கும்.

இன்று கையாளப்படும் நாதஸ்வரம் சாதாரணமாக 2 கட்டை சுருதிக்குச் செய்யப்படுகிறது. தற்காலத்தில் பாரி நாதஸ்வரமே கூடுதலாக பாவனையில் உள்ளது.

திறந்த வெளியில், இசைப்பதற்கு ஏற்றது. இவ்வாத்தியத்தின் நாதம் வெகுதூரத்திலிருந்து கேட்டாலும் இன்பம் தரவல்லது. இவ்வாத்தியத்தில் வாசிக்கப்படும் மல்லாரி இசையைக் கேட்டவுடனே இறைவன் வீதி உலாவிற்குப் புறப்படுகிறார் என்பது கோயிலைச் சுற்றியும், பக்கத்து ஊர்களுக்கும் தெரிந்துவிடும்.

கோவிலில் வெவ்வேறு நேரங்களில் நடைபெறும் பூஜைகளுக்கேற்ப வெவ்வேறு இசைகளை இசைத்து வழிபட வருவோர்க்குச் சிறந்த பணியைச் செய்பவர்கள் நாதஸ்வரக் கலைஞர்கள். விடியற் காலையில் இசைக்கப்படும் பூபாளம், பௌளி இராகங்களிலிருந்து அர்த்த ஜாமம் முடித்து பள்ளியறைக்கென இசைக்கப்படும் ஆனந்தபைரவி, நீலாம்பரி முதலிய இராகங்களையும் இசை வடிவங்களையும் வாசித்துப் பரவசமூட்டுவர்.

திருமண விழாக்களிலும் வேறுபல விழாக்களிலும் இவ்விசை மங்கல இசையாகக் கையாளப்படுகிறது.

மக்களின் வாழ்க்கையோடு ஒன்றிப்போன இசை நாதஸ்வர இசை என்றால் அது மிகையன்று.

திருவாவடுதுறை ராஜரத்தினம்பிள்ளை, காரைக்குறிச்சி அருணாசலம்பிள்ளை, திருப்பாம்புரம் நடராஜ சுந்தரம்பிள்ளை, திருவீழிமிழலை சுப்பிரமணியபிள்ளை போன்றோர் சிறந்த நாதஸ்வரக் கலைஞர்களாவர்.

தேர்ச்சி 4.0 : கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார்.

தேர்ச்சி மட்டம் 4.6 : உருப்படிகளின் இலட்சணங்கள் பற்றி விளக்குவார்.

செயற்பாடு 4.6.3 : 'பதம்' என்னும் இசை உருப்படியின் இலட்சணத்தை அறிந்து கொள்வோம்.

நேரம் : 40 நிமிடம் (01 பாடவேளை)

தர உள்ளீடு : சுருதிப்பெட்டி, ஒலிப்பதிவுக்கருவி, 'பதம்' ஒலிப்பதிவு செய்யப்பட்ட ஒலிநாடா, செயற்பத்திரம் 4.6.2.3

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :

படி 4.6.1

- மேற்குறித்த இசை உருப்படியை ஒலிப்பதிவுக் கருவியில் இசைக்கச் செய்க அல்லது பாடிக் காட்டுக.
- செவிமடுப்பதன் மூலம் உருப்படியை மாணவர் இனங்காணச் செய்க.
- இனங் கண்ட உருப்படி தொடர்பாக பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்க.

> - அபிநயத்திற்காக நாயக நாயகி பாவமாக இயற்றப்பட்ட உருப்படிகள் பதங்கள் என்றழைக்கப்படும்
> - பதங்களில் வரும் நாயகன், நாயகி, சகி என்னும் பாத்திர வாயிலாக தத்துவ உண்மைகள் வெளிப்படுத்தப்படுகின்றன.
> - பல்லவி, அனுபல்லவி, சரணம் என்னும் அங்க வித்தியாசங்கள் கொண்டது.
> - ஒன்றிற்கு மேற்பட்ட சரணங்களும் உண்டு. சரணங்கள் ஒரே தாதுவில் அமைந்திருக்கும்.
> - அனுபல்லவியிலோ, கடைசிச் சரணத்திலோ இயற்றியவர் முத்திரை காணப்படும்.
> - பதங்களை இயற்றிய வாக்கேயகாரர்
>   உ+ம்: ஷேத்ரக்ஞர், முத்துத்தாண்டவர் போன்றோர்.
> - இவ்வுருப்படிக்கு உதாரணங்கள்.
>   வேலவரே - பைரவி
>   தெருவில் வாரானோ - கமாஸ்
> - தமிழ், தெலுங்கு ஆகிய மொழிகளில் பதங்கள் இயற்றப்பட்டுள்ளன.

(10 நிமிடம்)

படி 4.6.2

- மாணவரை வகுப்பின் தொகைக்கேற்ப குழுக்களாகப் பிரித்துச் செயற்பத்திரத்தை இணைப்புடன் வழங்குக.
- அறிவுறுத்தலுக்கேற்ப செயற்பாட்டில் ஈடுபடுகிறார்களா என்பதை உறுதிப்படுத்துக.

(15 நிமிடம்)

படி 4.6.3

- ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குக.
- ஏனைய குழுக்கள் அதனை அவதானித்துக் கருத்துக் கூற இடமளிக்க.
- குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்க.
- இக் கலந்துரையாடலில் கீழ் வரும் விடயங்களை வலியுறுத்துக.

- அபிநயத்திற்காக நாயக, நாயகி பாவமாக இயற்றப்பட்ட உருப்படிகள் பதங்கள் என்றழைக்கப்பட்டன.
- நாயகன் பரமாத்மாவாகவும், நாயகி ஜீவாத்மாகவும் தோழி குருவாகவும் (மதுரபாவம்) நின்று மோட்சத்திற்கான தத்துவ உண்மைகளை நமக்குப் பதங்கள் எடுத்துரைக்கின்றன.
- முக்கியமாக நாட்டியத்திற்காக ஏற்பட்ட உருப்படியாயினும் அழகிய இசை மெட்டுக்காரணமாக கச்சேரிகளிலும் பாடப்படுகின்றன.
- பகிர் சிருங்காரம் (கௌரவ சிருங்காரம்), அந்தர் பக்தி என்னும் இரட்டைத் தாற்பரியமே பதத்தின் விஷேட அம்சமாகும்.
- பல்லவி, அனுபல்லவி, சரணம் என்றும் அங்க வித்தியாசம் கொண்டவை. ஒன்றுக்கு மேற்பட்ட சரணங்களும் உண்டு. அவை ஒரே தாதுவில் பாடப்படும்.
- பதங்கள் பெரும்பாலும் சௌக காலத்திலேயே பாடப்படும்
- சாகித்தியம் சுலபமாகவும், கிராமியச் சொற்களைக் கொண்டதாகவும் இருக்கும். அனுபல்லவி அல்லது கடைசி சரணத்தில் இயற்றியவர் முத்திரை காணப்படும்.
- பதங்களை இயற்றுபவர்கட்கு சாஸ்திர ஞானமும், கவித்துவமும், இராக ரஸ உணர்வும் இருப்பது மிக அவசியம்
- பெரும்பாலும் தமிழ்ப்பதங்கள் முருகக்கடவுள் மீதும், தெலுங்குப் பதங்கள் கிருஷ்ணபிரான் மீதும் பாடப்பட்டுள்ளன.
- தெலுங்குப் பதம் இயற்றியவர்கள்:
  ஷேத்ரக்ஞர், பரிமளரங்கர்
- தமிழ் பதங்கள் இயற்றியவர்கள்:
  முத்துத்தாண்டவர், கவிக்குஞ்சரபாரதி, கனம்கிருஷ்ணய்யர்
- பதங்களுக்கு உதாரணம்:
  வேலவரே
  தெருவில் வாரானோ

(15 நிமிடம்)

கணிப்பீட்டு, மதிப்பீட்டு நியதிகள்:

- பதம் என்னும் உருப்படியை இனங்காண்பர்.
- இவ்வுருப்படியின் இலட்சணத்தை விளக்குவர்.
- பதத்தின் சிறப்பையும் தனித்துவத்தையும் குறிப்பிடுவர்.

- இவ்வுருப்படி வகைகட்கு உதாரணங்கள் கூறுவர்.
- இவ்வுருப்படிகளை இயற்றிய வாக்கேயகாரர்களைக் குறிப்பிடுவர்.
- பதங்கள் அமைந்துள்ள மொழிகளையும், சிறப்பாக எத்தெய்வங்கள் மேற் பாடப்பட்டுள்ளன என்பதையும் குறிப்பிடுவர்.
- வெவ்வேறு உருப்படிகளுள் பதங்களை இனங்காண்பர்.
- பதங்களை கேட்டு இரசிப்பர்.

**செயற்பத்திரம் 4.6.2.3**

பின்வரும் விடயங்களை உள்ளடக்கி பதம் என்னும் இசை உருப்படியின் இலட்சணத்தை விளக்குக.

- அமைப்பு.
- சிறப்பும் தனித்துவமும்.
- சாகித்தியத்தின் தன்மை.
- உருப்படி அமைந்துள்ள மொழிகள்.
- சிறப்பாக பாடப்படும் தெய்வங்கள்.
- உருப்படியை இயற்றியவர்கள்.
- உருப்படிக்கு உதாரணம்.

# உருப்படி இலட்சணம்

## பதம்

கடவுள் தோத்திரமாக உள்ள பாட்டுக்களை எல்லாம் பதங்களென ஒரு காலத்தில் கூறிக் கொண்டிருந்தனர். ஆனால் பின்னர் அபிநயத்திற்காக நாயக நாயகி பாவமாக இயற்றப்பட்ட உருப்படிகள் பதங்களென அழைக்கப்பட்டு வந்தன. பதங்களை இயற்றிய வாக்கேயகாரர்கள் பதங்களில் வரும் நாயகன், நாயகி, சகி என்னும் பாத்திரங்கள் வாயிலாக தத்துவ உண்மைகளை வெளிப்படுத்தியுள்ளனர். பதங்களில் கேட்பது எளிய சொற்களாக இருந்தாலும் அவை உயர்ந்த கருத்தை உணர்த்துவதை நாம் புரிந்து கொள்ள முடியும். நாயகன் பரமாத்மாவாகவும், நாயகி ஜீவாத்மாவாகவும், தோழி குருவாகவும் (மதுர பாவம்) நின்று விண்ணகம் அடைய உதவுகின்ற உண்மைகளை நமக்குப் பதங்கள் எடுத்துரைப்பதை நாம் காண்கிறோம்.

முக்கியமாக இவை நாட்டியத்திற்காக ஏற்பட்ட உருப்படிகள் எனினும் மனதைக் கவரும்படியான அழகிய இசைமெட்டில் அமைந்துள்ளதால் கச்சேரிகளிலும் பாடப்படுகின்றன. சிருங்கார ரசமும், பக்தி ரசமும் அதிகம் பிரதிபலிக்கும்படியாகவே வாக்கேயகாரர்களால் இவை இயற்றப்பட்டுள்ளன. நாயகிகளும், சகிகளும் (தோழிகள்) பாடும் பதங்களே பெரும்பாலும் இருப்பினும் நாயகனால் பாடப்படும் பதங்களும் உள. பகிர் சிருங்காரம், (கௌரவ சிருங்காரம்) அந்தர் பக்தி என்னும் இரட்டைத் தாற்பரியத்துடன் கூடிய சாகித்தியமே பதத்தின் விசேட அம்சமாகும். ஏளனப் பதங்களும், நகைச்சுவைப் பதங்களும் இயற்றப்பட்டுள்ளன. இசைப் புலவர்களை ஆதரித்த பிரபுக்களைப் பற்றியும் சிலர் பதங்களை இயற்றியுள்ளனர். பதம் பல்லவி, அனுபல்லவி, சரணங்கள் என்னும் அங்கங்களைக் கொண்டது. சில பதங்களில் ஒன்றிற்கு மேற்பட்ட சரணங்களும் உண்டு. சரணங்கள் ஒரே தாதுவில் பாடப்படும். சங்கதிகளும், கடின சஞ்சாரங்களும் தாதுவில் இருக்கமாட்டா. இராக பாவம் ததும்பும் பதங்கள் பெரும்பாலும் சௌக காலத்திலேயே பாடப்படும். சாகித்தியம் சுலபமாகவும், கிராமியச் சொற்களைக் கொண்டவையாகவும் பதங்கள் விளங்குகின்றன. அனுபல்லவியிலோ, கடைசிச் சரணத்திலோ இயற்றியவரின் முத்திரை காணப்படும். பதங்களை இயற்றுவோருக்கு சாஸ்திர ஞானமும், கவித்துவமும், இராக ரஸ உணர்ச்சியும் இருப்பது மிக்க அவசியம். பெரும்பாலும் தமிழ்ப்பதங்கள் முருகக் கடவுள் மேலும், தெலுங்குப் பதங்கள் கிருஷ்ணபிரான் மேலும் பாடப்பட்டுள்ளன.

**பதங்களை இயற்றியவர்கள்:-**

i. தெலுங்குப் பதங்களை இயற்றியவர்கள் -

க்ஷேத்ரக்ஞர், பரிமளரங்கர், கஸ்தூரிரங்கர், சாரங்கபாணி, மெரட்டூர் வெங்கடராம சாஸ்திரி போன்றோராவர்.

ii. தமிழ்ப் பதங்களை இயற்றியவர்கள் -

முத்துத் தாண்டவர், கவிக்குஞ்சரபாரதி, கனம் கிருஷ்ணய்யர், மாம்பழக் கவிராயர், ஊத்துக்காடு வெங்கட ஸுப்பைய்யர் போன்றோர்.

**பதங்களுள் சில:-**

1. வேலவரே - பைரவி
2. தெருவில் வரானோ - கமாஸ்
3. வேலனை அணைந்தால் - கமாஸ்
4. திருவொற்றியூர் தியாகராஜன் - அடானா
5. பால் வடியும் முகம் - நாட்டைக் குறிஞ்சி

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 5.0 | : | கர்நாடக இசையின் வளர்ச்சிக்கு வாக்கேயகாரர்கள் ஆற்றிய பங்களிப்பினை மதிப்பிடுவார். |
| தேர்ச்சி மட்டம் 5.1 | : | வாக்கேயகாரர்களின் வாழ்க்கை வரலாற்றையும், இசைத் தொண்டினையும் மதிப்பிடுவார். |
| செயற்பாடு 5.1.4 | : | பாபநாசம்சிவனின் வாழ்க்கை வரலாற்றையும், இசைத் தொண்டினையும் அறிந்து கொள்வோம். |
| நேரம் | : | 01 மணி 20நிமிடங்கள் (02 பாடவேளைகள்) |
| தர உள்ளீடு | : | பாபநாசம் சிவனின் படம், இவரின் உருப்படிகள் அடங்கிய ஒலிப்பதிவுநாடா, ஒலிப்பதிவுக்கருவி,சுருதிப்பெட்டி, செயற்பத்திரம் 5.1.2.4 |

கற்றல் கற்பித்தற் செயல்ஒழுங்கு :

படி 5.1.1 :

- பாபநாசம் சிவனின் படத்தைக் காட்சிப்படுத்தி அவரின் உருப்படிகள் அடங்கிய ஒலிப்பதிவு நாடவை ஒலிக்கச்செய்தோ உருப்படியை ஆசிரியர் பாடிக்காட்டியோ வாக்கேயகாரரை மாணவர் இனங்காண வழிப்படுத்துக.
- பாபநாசம் சிவன் தொடர்பான பின்வரும் விடயங்கள் வலியுறுத்தப்படும் வகையில் கலந்துரையாடுக.

  - வாழ்ந்த காலப்பகுதி
  - பிறந்த இடம்
  - பெற்றோர்
  - இளமைப்பெயர்
  - முத்திரை
  - இசைக்கல்வி
  - இசைப்பணி
  - இயற்றிய உருப்படிகள்
  - கிடைத்த பட்டங்கள்

(20 நிமிடம்)

படி 5.1.2 :

- மாணவர்களை இரண்டு குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தை இணைப்புடன் வழங்குக.
- அறிவுறுத்தலுக்கேற்ப செயற்பாட்டில் குழுக்களை ஈடுபடச்செய்க.
- ஒவ்வொரு குழுவும் சரியாகச் செயற்படுகிறார்களா என்பதை உறுதிப்படுத்துக.

(30 நிமிடம்)

படி 5.1.3 :

- ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குக.
- மற்றைய குழுவும் அதனை அவதானித்துக் கருத்துக்களைக் கூறுவதற்கு இடமளிக்க.
- குழுக்களின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடலொன்றினை மேற்கொள்க.
- கலந்துரையாடலில் பின்வரும் விடயங்களை மினவும் வலியுறுத்துக.

- வாழ்ந்த காலப்பகுதி - 1890 - 1972
- பிறந்த ஊர் - தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த போலகம் ஆகும்.
- பெற்றோர் - இராமாமிர்தஐயர், யோகாம்பாள்.
- இளமைப்பெயர் - இராமையா
- முத்திரை - இராமதாஸ
- இசைக்கல்வி -
- ஆரம்பப் பயிற்சிகளை நூரணி மகாதேவ ஐயரிடமும் சாம்ப பாகவதரிடமும் கற்றார்.
- திருவனந்தபுரம் நீலகண்டசிவன் அவர்களது பஜனையில் சேர்ந்து பாடிப் பயிற்சி பெற்றார்
- கோனேரி இராஜபுரம் வைத்தியநாதஐயரிடம் சென்று ஏழு ஆண்டுகள் இசை நிகழ்ச்சிகளிற் கலந்து பயிற்சி பெற்றார்.
- இசைப்பணிகள் -
- தனது பஜனைகளை திருவையாறு உற்சவத்தில் வருடாவருடம் பாடினார்.
- இசை உருப்படிகள் பல இயற்றினார். (கிருதிகள், கீர்த்தனைகள், வர்ணங்கள்)
- அடையாறு கலாஷேத்திராவில் சங்கீதம் போதிக்கும் பணி மேற்கொண்டார்.
- ஹரிகதைகள் செய்வதன் மூலம் இசையைவளர்த்தார்.
- திரைப்படங்களில் நடித்தும் பாடல்கள் இயற்றியும் இசை அமைத்தும் பணிபுரிந்தார்.
- 400க்கு மேற்பட்ட உருப்படிகளை இயற்றினார்
- 300 இசை உருப்படிகள், 'கீர்த்தனை மாலை' என்னும் 'பெயருடன் 3 தொகுதிகளாக வெளியிட்டமை.

- இசை நாடகங்களுக்கு இசையமைத்துப் பணிபுரிந்தார்.
- பிரபல்யமான இராகங்களில் தனது இசை உருப்படிகளை இயற்றியுள்ளமை மூலம் இசை செழிக்க வழிவகுத்தார்.
  இராகங்கள் -
  உ+ம் : சங்கராபரணம் கோடி, கல்யாணி ,மோகனம், கரஹரப்பிரியா
- அபூர்வ இராகங்களில் உருப்படிகள் இயற்றி இராகங்கள் அழியாவண்ணம் பாதுகாத்தவர்.
  இராகங்கள் -
  உ+ம் : ஜோன்புரி, ஹுசேனி போன்றவை.
- பிரபல இசைக்கலைஞர்கள், சமகாலத்தில் தம் கச்சேரிகளிற் இவரது உருப்படிகளைச் சேர்த்துக் கொள்ளும் வகையில் இவரது இசைப்பணி சிறப்புற்று விளங்கியது.
  உ+ம் : அரியக்குடி இராமானுஜ ஐயங்கார், மகாராஜபுரம் விஸ்வநாதய்யர், செம்பை வைத்தியநாத பாகவதர், ஜி.என்.பாலசுப்ரமணியம், எம்.எஸ்.சுப்புலட்சுமி, எம்.எல்.வசந்தகுமாரி
- இவரது அழியாப் புகழ் பெற்ற பாடல்கள் சில
  'காவாவா கந்தா வாவா' - வராளி
  'காணக் கண் கோடி வேண்டும்' - காம்போதி
  'ஸ்ரீ வல்லி தேவ சேனாபதே' - நடனபரவி
- இசை கழகங்கள், இந்திய அரசு போன்றவற்றின் இசைப்பட்டங்கள் பெற்று சிறப்புற்றவர்.
  1962ல - 'சங்கீத கலாநிதி', 'இசைப்பேரறிஞர்' - சென்னை வித்வசபை தமிழிசைச் சங்கம்
  1950ல - 'சங்கீத சாகித்ய கலாமணி' - இந்திய நுண்கலைக்கழகம்
  1971ல் - 'சங்கீத கலாநிதி' - சென்னை சங்கீத அகெடமி
  1972ல் - 'பத்மபூஷண்' - இந்திய அரசு

(30 நிமிடம்)

கணிப்பீட்டு, மதிப்பீட்டு நியதிகள் :

- பாபநாசம் சிவனின் வாழ்க்கைக் காலத்தை குறிப்பிடுவர்.
- இவ் வாக்கேயகாரரின் இசைப்பணியைப் பற்றி விளக்குவர்
- இவ் வாக்கேயகாரரின் முத்திரையைக் குறிப்பிடுவர்
- இவருக்கு கிடைக்கப்பெற்ற பட்டங்களைக் கூறுவர்.
- இசைப் பெரியார்களை மதிக்கும் மனப்பாங்கை வெளிப்படுத்துவர்.

## செயற்பத்திரம் 5.1.2.4

பாபநாசம் சிவனின் வாழ்க்கை வரலாற்றைப் பின்வரும் விடயங்களைத் தொடர்புபடுத்தி விளக்குக

- வாழ்க்கைக் காலம்
- பிறந்த இடம்
- பெற்றோர்
- இளமைப் பெயர்
- இசைப் பயிற்சி
- முத்திரை
- இசைப்பணி
- பெற்ற பட்டங்கள்

## வாக்கேயகாரர் சரித்திரம்

### பாபநாசம்சிவன் (1890 - 1972)

20 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இணையற்ற தமிழ் வாக்கேயகாரர் பாபநாசம்சிவனாவார். இவர் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த "போலகம்" என்ற கிராமத்தில் இராமாமிர்தஐயர், யோகாம்பாள் ஆகியோருக்கு இரண்டாவது மகனாக கி.பி. 1890 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 26ந் திகதி பிறந்தார். இவரது இளமைப் பெயர் இராமையா என்பதாகும். தமது ஏழாவது வயதில் தந்தையை இழந்ததால் வறுமையில் வாடிய இவர் தமது தாயையும் அழைத்துக் கொண்டு திருவனந்தபுரத்தில் வாழ்ந்து கொண்டிருந்த மூத்த தமையனார் ராஜகோபாலனிடம் வந்து சேர்ந்தார். 1910 ஆம் ஆண்டில் அவர் தன் தாயாரை இழந்தார்.

சிறந்த வரப்பிரசாதமான சாரீரத்தையும், இசை உள்ளறிவையும் இவர் கொண்டிருந்ததால் இசையின் ஆரம்பப் பயிற்சிகளை ஆஸ்தானவித்துவான் நூரணிமகாதேவஐயர், சாம்பபாகவதர் ஆகியோரிடம் பெற்றுக் கொண்டார். இளமையில் திருவனந்தபுரம் நீலகண்டசிவன் அவர்களின் பஜனையில் சேர்ந்து பாடும் வாய்ப்பு இவருக்குக் கிட்டியது. பின்னர் கோனேரிராஜபுரம் வைத்தியநாத ஐயரிடம் 7 ஆண்டுகள் தங்கி, அவருடன் இசை நிகழ்ச்சிகளுக்குச் சென்று அவரது பாணியைக் கற்றுக் கொண்டார். இவருக்கு அதிகமாகப் பிடித்தது பஜனைகளில் கலந்து கொண்டு பாடுவதுதான்.

1917 இல் இவர் திருமணம் புரிந்த பின் தன் தமையன் வாழ்ந்த பாபநாசத்திற்கு வந்து தங்கியிருக்கையில் தஞ்சாவூர் கணபதி ஆச்சிரமத்தைச் சேர்ந்தவர்கள் இவரை முதன் முதலாகச் "சிவன்" என்று அழைத்தனர். அன்றிலிருந்து இராமையா "பாபநாசம் சிவன்" ஆனார். இச்சமயத்தில் இவர் செய்து வந்த பஜனைகள் புகழ் பெற்று திருவையாறு உற்சவங்களில் வருடாந்தம் இடம்பெற்று வந்தன. இக்கால கட்டத்திலேயே சிவன் உருப்படிகளை இயற்றத் தொடங்கினார். அடையாறில் உள்ள கலாஷேத்திரத்தில் சங்கீதம் போதிக்கும் பணியை ஆற்றினார். தமது முத்திரையாக "ராமதாஸ" என்பதை வைத்துக்கொண்டு கிருதிகள், பதங்கள், வர்ணங்கள் ஆகியவற்றை இயற்றுவதில் சிவன் அக்கறை கொண்டார்.

1921 இல் தொழில் செய்யவேண்டி சிவன் சென்னைக்கு வரவேண்டியதாயிற்று. இங்கு கோயில்களின் சந்நிதிகளின் முன் நின்று உளமுருகிப் பல பாடல்களை பக்தி ரசம் ததும்ப இயற்றிப் பாடினார். இப்படியாக இவர் பாடிய "காணக்கண் கோடி வேண்டும்" (காம்போதி), "காவாவா கந்தா வாவாவா" (வராளி), "ஸ்ரீவல்லி தேவ சேனாதிபதி" (நட பைரவி) மற்றும் தோடி இராகத்தில் அமைந்த "தாமதமேன், பராமுகம், கடைக்கண் நோக்கி" "கார்த்திகேய" ஆகிய பாடல்கள் இறவாவரம் பெற்றவை. இவருக்கு ஹரிகதை செய்யும் ஆற்றலும் நிறைய உண்டு. பல ஹரிகதைகளை சிறப்புற நிகழ்த்தி உள்ளார்.

1935 ஆம் ஆண்டு முதலாக குசேலர் என்ற படத்தில், குசேலராக நடித்தார். இதனைத் தொடர்ந்து சில படங்களிலும் நடித்துள்ளார். பின்னர் திரைப்படங்களுக்குப் பாடல் இயற்றி இசையமைக்கும் பணியிலும் பலகாலம் ஈடுபட்டிருந்தார். இவர் தமிழ், வடமொழி ஆகிய இரு மொழிகளிலும் சுமார் 400க்கு மேற்பட்ட உருப்படிகளை இயற்றியிருக்கிறார். இவற்றில் 300 உருப்படிகள் "கீர்த்தனை மாலை" என்னும் பெயரில் 3 தொகுதிகளாக ஸாஹித்தியமாக வெளியிடப்பட்டுள்ளன. இவரது சேவையைப் பாராட்டி சென்னை வித்துவத்சபையும், தமிழிசைச் சங்கமும் அவற்றின் மகாநாடுகளுக்கு இவரைத் தலைமை தாங்கும்படி செய்து இவருக்கு 1962இல் "சங்கீத கலாநிதி", "இசைப் பேரறிஞர்" என்ற பட்டங்களை வழங்கி கௌரவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இளம் கலைஞர்களையும், புதிய சாகித்தியங்களையும் ஊக்குவித்தும், வரவேற்றும் சம்பிரதாயத்திற்கு முக்கியமான இடம் அளித்தும் செயலாற்றி வந்த இவரது பண்பாடு போற்றுதற்குரியது.

இவர் சில இசை நாடகங்களுக்கும் இசை அமைத்துள்ளார். வர்ணங்கள், இராகமாலிகைகளையும் இயற்றியுள்ளார். இவர் பிரபல்யமான இராகங்களிலும், அபூர்வ இராகங்களிலும் உருப்படிகள் இயற்றியுள்ளார். (உ+ம்) சங்கராபரணம், தோடி, கல்யாணி, மோகனம், பைரவி, கரஹரப்ரியா, பேகட, ஹேமவதி, வாசஸ்பதி, வஸந்தா, கௌரிமனோகரி, ஆபோகி, ஆபேரி, சிவரஞ்சனி, சரஸ்வதி, மணிரங்கு, ஜோன்புரி, காபி, வராளி, ஹுசேனி, ரீதிகௌள, நாராயணகௌளை, ஹிந்தோளம்.

பிரபல இசைக்கலைஞர்களான அரியக்குடி இராமானுஜ அய்யங்கார், மகாராஜபுரம் விசுவநாதய்யர், செம்பைவைத்தியநாதாபாகவதர், முசிறிசுப்பிரமணியஅய்யர், செம்மங்குடி வைத்தியநாதபாகவதர், செம்மங்குடி ஸ்ரீனிவாச ஐயர், மதுரை மணி ஐயர், ஜி.என்.பாலசுப்பிரமணியம், பட்டம்மாள், வசந்தகோகிலம், எம்.எஸ்.சுப்புலட்சுமி, எம்.எல்.வசந்தகுமாரி ஆகியோர் இவரது பாடல்களை தமது கச்சேரிகளில் ஒரு முக்கிய அங்கமாகச் சேர்க்கத் தொடங்கியதிலிருந்து பாபநாசம் சிவனின் பாடல்கள் மிக்க பிரபல்யம் பெற்றுள்ளன என்பது புலனாகிறது.

1950இல் இந்திய நுண்கலைக் கழகத்தால் "சங்கீத சாஹித்ய கலாமணி" எனும் பட்டமளித்து கௌரவிக்கப்பட்டார். மேலும் 1971இல் சென்னை சங்கீத அகெடமி சிவனுக்குச் "சங்கீத கலாநிதி" பட்டத்தைச் சூட்டியது. அடுத்த ஆண்டில் இந்திய அரசின் "பத்ம பூஷண்" பட்டமும் சிவனுக்குக் கிடைத்தது. இத்தனை சிறப்புக்கள் பெற்ற அவரது வாழ்க்கை தூய்மையானதாகவும், எளிமையானதாகவும் அமைந்திருந்தது. 1973ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் முதல் நாள் இறைவனடி எய்தினார். இவரது புகழ் என்றும் அழியாது நிலைத்து நிற்கும் என்பதில் எந்தவித ஐயமுமில்லை.

தேர்ச்சி 6.0 : கர்நாடக இசையின் தோற்றம், வளர்ச்சி தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வார்

தேர்ச்சிமட்டம் 6.1 : கர்நாடக இசையின் தோற்றம், வளர்ச்சி தொடர்பான விடயங்களை விபரிப்பார்.

செயற்பாடு 6.1.5 : இந்தியாவில் 14ஆம், 15ஆம் நூற்றாண்டில் கர்நாடக இசையின் கலாசாரப்பின்னணியை அறிந்துகொள்வோம்.

நேரம் : 02 மணித்தியாலங்கள் (03 பாடவேளைகள்)

தர உள்ளீடு : இந்தியாவின் 14ஆம், 15ஆம் நூற்றாண்டில் கலாசாரப் பின்னணி தொடர்பான விளக்கப்படங்கள், செயற்பத்திரம் 6.1.2.5

கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு :

படி 6.1.1

- விளக்கப்படங்களைக் காட்சிப்படுத்தி அவதானிக்கச்செய்க.
- மாணவர் அவதானித்தவற்றை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் விடயங்கள் வலியுறுத்தப்படும் வகையில் கலந்துரையாடலை நிகழ்த்துக.

- கர்நாடக சங்கீதம், ஹிந்துஸ்தானி சங்கீதம் என்னும் பிரிவுகள் ஏற்பட்டமை.
- அப்பிரிவுகளுக்கான காரணங்கள்.
- தாளப்பாக்கம் அன்னமாச்சாரியார், தாளப்பாக்கம் சின்னையா, புரந்தரதாஸர் ஆகியோரின் பங்களிப்பு.
- திருப்புகழ் பாடல்கள் இயற்றப்பட்டமை.
- தாளங்களின் அமைப்பு பற்றி அருணகிரிநாதரின் பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ளமை.

(30 நிமிடங்கள்)

படி 6.1.2 :

- வகுப்பிலுள்ள மாணவரின் தொகைக்கேற்ப மாணவரைச் சிறிய குழுக்களாகப் பிரித்துச் செயற்பத்திரத்தை இணைப்புடன் வழங்குக.
- ஒவ்வொரு குழுவினரதும் செயற்பாட்டை உறுதிசெய்து முழுமைப்படுத்துக.

(45 நிமிடம்)

படி 6.1.3 :

- ஒவ்வொரு குழுவும் தமது செயற்பாட்டினை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குக.
- ஒரு குழு தமது செயற்பாட்டை முன்வைக்கும் போது ஏனைய குழுக்கள் தமது கருத்துக்களைத் தெரிவிக்க இடமளிக்க.
- பின்வரும் விடயங்கள் மீளவலியுறுத்தப்படும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்க.

- 14ஆம் நூற்றாண்டில் வட இந்தியாவில் முஸ்லீம் மன்னர்களின் ஆதிக்கத்தால் இந்திய சங்கீத முறையில் மாற்றம் ஏற்பட்டமை.
- இதன் பின் வட இந்திய சங்கீதம் (ஹிந்துஸ்தானி சங்கீதம்), தென்னிந்திய சங்கீதம் (கர்நாடக சங்கீதம்) என்னும் பிரிவுகள் ஏற்பட்டமை.
- இப்பிரிவுகள் பற்றி ஹரிபாலரது "சங்கீத ஸுதாகரம்" என்னும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளமை.
- 15ஆம் நூற்றாண்டில் -
  தாளப்பாக்கம் அன்னமாச்சாரியாரின் அத்யாத்ம சங்கீர்த்தனங்களில் முதன்முதலில் பல்லவி, சரணம் என்னும் அங்க வித்தியாசங்கள் காணப்பட்டமை.
- தாளப்பாக்கம் சின்னையாவின் கிருதிகளிலும் ,பின்னர் புரந்தரதாஸரின் கிருதிகளிலும் அனுபல்லவி என்னும் அங்கம் முதன்முதலில்க் காணப்பட்டமை.
- தாளப்பாக்கம் சின்னையா தெலுங்கு மொழியில் கீர்த்தனைகளும், மேலும் பல உற்சவ சம்பிரதாயக் கீர்த்தனைகளையும் இயற்றி பஜனைப் பத்ததிக்கு வழிவகுத்தமை. இதனால் இவர் பஜனைப் பத்ததியின் தந்தை என அழைக்கப்படுகின்றமை.
- அருணகிரிநாதர் சந்தங்களை அமைத்து, ஆயிரக்கணக்கான திருப்புகழ் பாடல்களை தமிழ் மொழியில் இயற்றியுள்ளமை.
- இவை சாதாரண தாளங்களிலும், அபூர்வ தாளங்களிலும் பல்வேறு நடைகளிலும் அமைந்துள்ளமை.
- 35 தாளம், 175 தாளம், 108 தாளம் ஆகிய தாளங்களின் அமைப்புகள் முழுவதும் இவரது பாடல்களில் இடம்பெற்றுள்ளமை.
- சந்தக் கனிவும், ஓசைச் சிறப்பும் இவரது பாடல்களில் காணப்படுவதால் "வாக்கிற்கு அருணகிரி" எனவும், அபூர்வ தாளங்களைப் பயன்படுத்தியமையால் "சந்தப் பாவலர் பெருமான்" எனவும் அருணகிரிநாதர் போற்றப்படுகின்றமை.
- இந்திய சங்கீதத்திலுள்ள பல தாளங்கள் அருணகிரிநாதருடைய திருப்புகழ் மூலம் பாதுகாக்கப்பட்டு வந்துள்ளமை.

(45 நிமிடங்கள்)

*கணிப்பீட்டு, மதிப்பீட்டு நியதிகள் :*

- 14ஆம் நூற்றாண்டில் இந்திய சங்கீதத்தில் ஏற்பட்ட பிரிவுகளைக் குறிப்பிடுவர்.
- பிரிவுகள் ஏற்பட்டமைக்கான காரணத்தைக் கூறுவர்.
- 15ஆம் நூற்றாண்டில் தாளப்பாக்கம் அன்னமாச்சாரியார், தாளப்பாக்கம் சின்னையா, புரந்தரதாஸர் ஆகியோர் கர்நாடக இசைக்காற்றிய பங்களிப்பினைக் குறிப்பிடுவர்.
- அருணகிரிநாதரின் இசைப்பணி பற்றி விளக்குவர்.
- இவற்றின் மூலம் 14ஆம், 15ஆம் நூற்றாண்டின் இந்தியாவின் கர்நாடக இசையின் தோற்றம், வளர்ச்சி பற்றிய அறிவினை வெளிப்படுத்துவர்.
- குறித்த நூற்றாண்டின் இந்தியாவின் கர்நாடக இசையின் தோற்றம் வளர்ச்சி பற்றிய தகவல்களைச் சேகரிப்பர்.

**செயற்பத்திரம் 6.1.2.5**

- இந்திய சங்கீதத்தில் 14ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட இரு பிரிவுகள் எவை.

  இப்பிரிவுகள் பற்றி எந்த நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- இப்பிரிவுகள் ஏற்பட்டமைக்கான காரணம் யாது.
- பின்வருவோர் கர்நாடக சங்கீதத்திற்கு ஆற்றிய பங்களிப்பினைக் குறிப்பிடுக.
  - தாளப்பாக்கம் அன்னமாச்சாரியார்
  - தாளப்பாக்கம் சின்னையா
  - புரந்தரதாஸர்
  - அருணகிரிநாதர்
- "வாக்கிற்கு அருணகிரி", "சந்தப் பாவலர் பெருமான்" என்னும் பெயர்களால் அருணகிரிநாதர் அழைக்கப்படுகின்றமைக்கான காரணத்தைக் கூறுக.

# இந்தியாவின் 14ஆம், 15ஆம் நூற்றாண்டின் கர்நாடக இசையின் கலாசாரப் பின்னணி

14ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஹரிபாலர் என்பவரால் எழுதப்பட்ட "சங்கீதஸுதாகரம்" என்னும் நூலில் தான் முதன் முறையாக இந்திய சங்கீதத்தில் ஏற்பட்ட இரு பிரிவுகள் பற்றிய குறிப்புக் காணப்படுகின்றது. அவை:-

1. கர்நாடக சங்கீதம்
2. ஹிந்துஸ்தானி சங்கீதம்

ஆனால் அதற்கு முன்னர் இந்தியா முழுவதிலும் ஒரே சங்கீதமே வழக்கத்திலிருந்தது. 14ஆம் நூற்றாண்டில் வடக்கில் முஸ்லிம் மன்னர்களின் ஆதிக்கம் இருந்த காலத்தில் பாரசீகம், அரேபியா போன்ற நாடுகளில் இருந்து வந்த சங்கீத முறைகள் இந்திய சங்கீதத்தில் கலந்ததன் காரணமாக வட இந்தியாவில் ஏற்கனவே இருந்து வந்த சங்கீத முறை மாறுதல் பெற்றது. ஆயினும் தென்னிந்தியாவில் பூர்வீகமான முறையே தொடர்ந்து பின்பற்றப்பட்டு வந்தது. எனவே அயல்நாட்டு முறை கலந்த வட இந்திய சங்கீதம் ஹிந்துஸ்தானி சங்கீதம் எனவும் பூர்வீக பத்ததியினையே தொடர்ந்து பேணப்பட்ட தென்னிந்திய சங்கீதம் கர்நாடக சங்கீதம் எனவும் வழங்கலாயிற்று.

கி.பி 15ஆம் நூற்றாண்டில் தாளப்பாக்கம் சின்னையாவும் அவரது முன்னோர்களும் தெலுங்கு மொழியில் சுமார் 20,000 கீர்த்தனைகளும், வேறும் பல உற்சவ சம்பிரதாயக் கீர்த்தனைகளும் இயற்றிப் பஜனைப் பத்ததிக்கு வழிவகுத்தனர். தாளப்பாக்கம் சின்னையா பஜனைப் பத்ததியின் தந்தையாவார். தாளப்பாக்கம் அன்னமாச்சாரியாரின் (1408-1503) அத்யாத்ம சங்கீர்த்தனங்களில் முதன் முதலில் பல்லவி, சரணம் என்னும் அங்க வித்தியாசங்களைக் காண்கிறோம். இவருடைய பேரனாகிய தாளப்பாக்கம் சின்னையாவின் கிருதிகளிலும் பின்னர் புரந்தரதாஸரின் கிருதிகளிலும் அனுபல்லவி என்னும் அங்கத்தையும் முதன் முதலில் காண்கிறோம். பல்லவி, அனுபல்லவி, சரணம் என்னும் பெயர்கள் வருவதற்கு முன்னர் பிரபந்தங்களின் அங்கங்களுக்கு உத்க்ருஹம், த்ருவம், மேளாபகம், ஆபோகம் என்னும் பெயர்கள் வழக்கில் இருந்தன.

அருணகிரிநாதர் சந்தங்களை அமைத்துத் தமிழ் மொழியில் ஆயிரக்கணக்கான திருப்புகழ் பாடல்களை இயற்றினார். திருப்புகழ் பாடல்கள் சாதாரண தாளங்களிலும், அபூர்வ தாளங்களிலும் பல்வேறு நடைகளிலும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். சந்தக் கனிவும், ஓசைச் சிறப்பும் அமையப்பெற்ற உறுதி பயக்கும் பண்பு வாய்ந்தவையாக இருப்பதால் "வாக்கிற்கு அருணகிரி" என்று அவர் பாராட்டப்படுகிறார்.

அதிகம் வழக்கில் இல்லாத அநேக தாளங்களைப் பயன்படுத்தியமையால் சந்தப் பாவலர் பெருமான் எனப் போற்றப்படுபவர் அருணகிரிநாதர் ஆவார். 35 தாளம், 175 தாளம், 108 தாளம் ஆகிய தாளங்களின் அமைப்புக்கள் எல்லாவற்றையும் இவரது பாடல்களிலே காணலாம். ஒவ்வொரு பாடலுக்கும் முன்னால் அதற்குரிய நடையும், தாள அமைப்பும் குறிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும். இந்திய சங்கீதத்தில் உள்ள பல தாளங்கள் அழிந்து போகாமல், திருப்புகழ் மூலம் பாதுகாத்த சிறப்பு அருணகிரிநாதருக்கே உரியது.

# பகுதி III

# கணிப்பீடும் மதிப்பீடும்

### 10.3.1. கணிப்பீடும் மதிப்பீடும்

கற்றல் - கற்பித்தற் செய்கையின் மூலம் எதிர்பார்க்கப்படும் கற்றற் பேறுகளைத் தெளிவாகப் பெற்றுக் கொள்வதற்கும். மாணவர்கள் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சி மட்டத்தை ஒன்றுக்கொன்று தொடர்பட்ட இரண்டு வேலைத்திட்டங்களாகக் கணிப்பீட்டையும், மதிப்பீட்டையும் கருதலாம். கணிப்பீடு சரியான முறையில் நடைபெறுமெனின், வகுப்பில் கற்கும் ஒவ்வொரு பிள்ளையும் உரிய தேர்ச்சியின் (நிபுணத்துவத்தின்) அண்மிய மட்டத்தையாவது பெற்றுக் கொள்வது கடினமல்ல. மதிப்பீட்டின் மூலம் எதிர்பார்க்கப்படுவது பிள்ளைகள் பெற்றுக் கொண்ட தேர்ச்சி எம்மட்டத்தில் காணப்படுகிறது என்பதைக் கண்டுகொள்வதாகும்.

கணிப்பீட்டைச் செயற்படுததும்போது ஆசிரியர்கள் மாணவர்களுக்கு இரண்டு விதமாக வழிகாட்டல்களை வழங்கலாம். இவ்வழிகாட்டல்கள் இரண்டும் பொதுவாகப் பின்னூட்டல் (Feed Back), முன்னோக்கிய ஊட்டல் (Feed Forward) என அழைக்கப்படுகின்றன. மாணவர்களின் பலவீனம், இயலாமை என்பவற்றை இனங்கண்டு கொண்ட பின், அர்களிடம் காணப்படும் கற்றல் தொடர்பான பிரச்சினைகளை நீக்கிக் கொள்வதற்கு பின்னூட்டலையும், மாணவர்களின் பலம், இயலுமை என்பவற்றை இனங்கண்டு கொண்டபின் அவற்றை மேலும் விருத்தி செய்து கொள்வதற்கு முன்னோக்கிய ஊட்டலையும் வழங்குவது ஆசிரியரின் கடமையோடு சார்ந்த பொறுப்பாகும்.

கற்றல் - கற்பித்தல் செய்கையின் வெற்றி பாடத்திட்டத்திலுள்ள தேர்ச்சிகளில் எத்தேர்ச்சிகளை மாணவர்கள் எந்த மட்டத்தில் அடைந்துள்ளனர் என்பதை அறிவதன் மூலம் இனங் காணப்படுகின்றது. கற்றல் - கற்பித்தல் செய்கையின் போது மாணவர்கள் அடைந்த தேர்ச்சி மட்டங்களை அளவிடுவது எதிர்பார்க்கப்படுவதோடு, அடைந்த தேர்ச்சி மட்டங்கள் பற்றிய விபரங்களை பெற்றோர் உள்ளிட்ட மற்றும் உரிய நபர்களுக்கும் தொடர்பாடல் செய்வது ஆசிரியரின் பொறுப்பாகும்.

உங்களிடம் முன்வைக்கப்பட்டுள்ள இப்பாடத்திட்டம் மாணவர் மையமான (Student Centered), தேர்ச்சி மட்ட (Competency-Based), செயற்பாடு சார்ந்த (Activity-Oriented) பிரவேசத்தைக் கொண்டது. வாழ்வைக் கருத்துள்ளதாக்கிக் கொள்வதற்கு, செயற்பாட்டினூடாகக் கற்றல் என்பது ஆசிரியரின் உருமாற்றப் பங்களிப்பில் காணப்படும் பிரதான அம்சமாகும்.

ஏற்கனவே தயாரிக்கப்பட்ட செயற்பாடுகளின் தொடரகத்தின் ஊடாகச் செயற்படுத்தப்படும் இப்பாடத்திட்டமானது, கற்றல்-கற்பித்தலை கணிப்பீடு-மதிப்பீடு என்பவற்றோடு ஒன்றிணைப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு செயற்பாட்டிலும் அதன் இரண்டாம் படியில் மாணவர்கள், குழுவாக ஆய்வில் ஈடுபடும்போது அவர்களை கணிப்பீடு செய்வதற்கும் செயற்பாட்டின் மூன்றாம் படியில் மாணவர்கள் தமது கண்டுபிடிப்புக்கள், பேறுகள் என்பவற்றைச் சமர்ப்பிக்கும்போது மாணவர்களை மதிப்பீடு செய்வதற்கும் ஆசிரியருக்கு முடியுமாகின்றது. மாணவர்கள் குழுவாக ஆய்வில் ஈடுபட்டிருக்கும்போது அவர்களினூடே சென்று அவர்களது வேலைகளை அவதானிப்பதன் மூலம், மாணவர்கள் முகங் கொடுக்கும் பிரசினங்களை வகுப்பறையில் தீர்ப்பதற்குரிய வசதிகளையும், வழிகாட்டல்களையும் வழங்குவது ஆசிரியரிடம் எதிர்பார்க்கப்படுகின்றது.

கணப்பீடு, மதிப்பீடு என்பவற்றை இலகுவாகச் செய்துகொள்வதற்கு ஐந்து பொது நியதிகள் முன்வைக்கப்படுகின்றன. இந்நியதிகளில் முதன் மூன்று நியதிகளும் உரிய தேர்ச்சி மட்டத்தோடு தொடர்பான அறிவு, மனப்பாங்கு, திறன்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டதாகவும், அடுத்த இரண்டு நியதிகளும் வாழ்க்கைக்குத் தேவைப்படும் முக்கியமான இரண்டு திறன்களை விருத்தி செய்து கொள்வதற்கானதாகவும் இருத்தல் வேண்டும். இந்த ஐந்து நியதிகளுடன் இணைந்ததான நடத்தை மாற்றங்கள் வகுப்பறையில் மாணவர்களிடம் காணப்படுகின்றதா என்பதைக் கண்டு கொள்வதற்கு ஆசிரியர் முயற்சி எடுக்க வேண்டியதோடு கண்ப்பீட்டின் மூலம் கண்டு கொள்ளப்படும் மாணவர்கள் பெற்றுள்ள இத்திறன்களின் அளவை மதிப்பீட்டின் மூலம் ஆசிரியர் அளந்து கொள்ள வேண்டும்.

கணிப்பீடு தொடர்பான வேலைத் திட்டங்களை அபிவிருத்தி செய்து கொள்வதன் மூலம் கற்றல் கற்பித்தல் செய்கையை வரிவுபடுத்திக் கொளிளலாம், இதற்காக முந்பல் செயற்பட்டுத்தொடரகத்தில் வழங்கப்பட்டுள்ள செயற்பாடுகளை கணிப்பீட்டு வகைகளை அடிப்படையாகக் கொண்டதான தொகுதிகளாக வேறாக்கிக் கொள்க.

மாணவர்களின் கற்றலை மலரச் செய்யக்கூடியதாக, உரிய பாடவிடயத்துடன் தொடர்பான செயற்பாட்டைத் தெரிவு செய்க. இனி, உரிய கற்றல் - கற்பித்தல் செய்கைக்கான சாதனங்களைத் தயாரித்துக் கொள்க. ஒவ்வொரு செயற்பாட்டின் ஆரம்பத்தில் உரிய உபகரணங்களைக் குழுக்களுக்கு வழங்க வேண்டும். கற்றல் - கற்பித்தல் செய்கையை விரிவாக்கும் போது அவை அமையக்கூடிய வகைகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

* எண்ணக்கருப்படம் (Concept Maps)
* சுவர்ப்பத்திரிகை (Wall News Papers)
* புதிர்ப்போட்டி (Quizzes)
* வினாவிடைப் புத்தகம் (Question and Answer Books)
* மாணவர் செயற்பாட்டுக் கோவை (Portfolios)
* கண்காட்சி (Exhibitions)
* விவாதம் (Debates)
* குழுக் கலந்துரையாடல் (Panel Discussions)
* கருத்தரங்கு (Seminars)
* சமயோசிதப் பேச்சு (Impromptu Speeches)
* நடிபங்கு (Role Plays)
* இலக்கியக் கருத்துக்களையும், விமர்சனங்களையும் முன்வைத்தல் (Presentation of Literature Reviews)
* வெளிக்களப் புத்தகம் / தினக் குறிப்புப் புத்தகம் / வேலைப்புத்தகம் (Field Books / Nature Diaries)
* செய்முறைச் சோதனை (Practical Tests)

பாட வழிகாட்டியின் மூன்றாம் பகுதி, உத்தேச கற்றல் - கற்பித்தற் செய்கைகளை விரிவாக்கும் வகைகளைக் கொண்ட செயற்பாடுகளையும் அதற்கான கற்றல் - கற்பித்தல் சாதனங்களையும் அறிமுகஞ் செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறான செயற்பாடுகளினுள் கணிப்பீடும், அதனோடு தொடர்பான மதிப்பீடும் இணைக்கப்பட்டுள்ளதோடு மாணவர்கள் ஆர்வத்தோடும் மகிழ்ச்சியோடும் கற்றலில் ஈடுபடுவதற்கு முடியுமாகின்றது.

* மாணவர் கற்றலில் உயர் அடைவைப்பெற வேண்டுமாயின் தொடர்ச்சியான கணிப்பீட்டிற்கு உட்படவேண்டியது அவசியமாகும்.
* மாணவர் கற்றல் அடைவு கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின்போதும், பாட அலகின் முடிவிலும், மாத முடிவிலும், தவணை முடிவிலும், ஆண்டு இறுதியிலும் கணிப்பீடும் மதிப்பீடும் செய்யப்படும்.
* கர்நாடக சங்கீத கணிப்பீட்டில் அறிமுறை, செய்ம்முறை ஆகிய இரண்டும் இடம்பெற வேண்டும்.
* இப்புதிய பாடத்திட்டத்தில் கற்றல் செயற்பாடுகள் தனியாள் நிலையிலும் குழுநிலையிலும் இடம்பெறுவதால் இவ்விரு நிலைகளிலும் மாணவர் கணிப்பிடப்படல் வேண்டும்.
* இரசித்தல், ஆக்கத்திறன் என்பவை தொடர்பான கணிப்பீட்டிற்கு வகுப்பறையில் கூடிய சந்தர்ப்பங்களை வழங்க வேண்டும். அவற்றை அவதானிப்பதன் மூலம் மதிப்பீடு செய்தல் வேண்டும்.
* மாணவர்களின் அறிதல் ஆட்சித்திறன், மனவெழுச்சிப் பண்புகள், உளவியக்கத்திறன்கள், கற்றவற்றை நடைமுறை வாழ்க்கையில் பயன்படுத்தும் ஆற்றல் என்பவற்றை விருத்தி செய்வதற்கு உதவுவதோடு அவர்களின் பலம், பலவீனம் என்பவற்றை இனங்கண்டு அவர்களுக்கு உதவும் வகையில் பாடசாலை மட்டக் கணிப்பீட்டுத் திட்டத்தை பாடசாலைகளில் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்காக முன்னர் கூறப்பட்ட மாதிரிக்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட செயற்பாடுகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

## 10.3.2. கற்றல் - கற்பித்தலை மேலும் விரிவுபடுத்தலுக்கான கருவிகள்

### கருவி - 01

01. கணிப்பீட்டுச் சந்தர்ப்பம் - முதலாம் தவணை

02. உள்ளடங்கும் தேர்ச்சிமட்டம் - 4.6

03. கருவிக்குரிய பாடப்பகுதிகள் - உருப்படிகளின் இலட்சணம்
    * கீதம்
    * ஜதிஸ்வரம்
    * ஸ்வரஜதி

04. கருவியின் தன்மை - வினாவிடைப் புத்தகம்

05. கருவியின் நோக்கம் -
    * கீதம், ஜதிஸ்வரம், ஸ்வரஜதி ஆகியவற்றின் இலட்சணங்களின் விளக்கத்தைப் பெறுவார்.
    * கொடுக்கப்பட்ட அம்சங்கள் தொடர்பான வினாக்களை விடைகளுடன் தயார் செய்து வினாவிடைப்புத்தக வடிவில் சமர்ப்பிப்பார்..

06. கருவியைப் பயன்படுத்தும் முறை பற்றிய ஆலோசனைகள் :-

ஆசிரியருக்கு -
* செயற்பாட்டை ஆரம்பிக்கு முன்னர் இக்கருவிபற்றி வகுப்பிற்கு அறிமுகஞ் செய்க.
* வினா விடைப் புத்தகம் தயாரிக்கும் முறைபற்றிய அறிவுறுத்தல்களை மேற்கொள்க.
* வினாக்களின் வகைகள் பற்றி மாணவர்களுக்கு ஆலோசனைகளை வழங்குக.
  உ- ம் : சுருக்கமான வினாவிடை, இடைவெளி நிரப்புதல்.
* கீதம், ஜதிஸ்வரம், ஸ்வரஜதி ஆகிய பகுதிகளில் வினாக்களையும் விடைகளையும் தயார் செய்யப் பணிக்குக.
* ஒவ்வொரு மாணவரும் தனித்தனியாகச் செயற்பட வேண்டும் என்பதனைக் கூறுக.
* கொடுக்கப்பட்ட கால எல்லைக்குள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதைக் கூறுக.

மாணவருக்கு :
* கொடுக்கப்பட்ட பகுதிகளில் வினாக்களை விடைகளுடன் தயார் செய்க.
* கொடுக்கப்பட்ட கால எல்லையை ஆசிரியரிடம் கேட்டறிக.
* ஒவ்வொரு மாணவரும் தனித்தனியாகச் செயற்பாட்டில் ஈடுபடுக.

| | | |
|---|---|---|
| 07. புள்ளிவழங்கும் நியதிகள் | : | * தயாரிக்கப்பட்டுள்ள வினாக்களின் தன்மையும் தரமும்.<br>* வினாக்கள் மாணவரின் சுய ஆக்கமாக இருத்தல்.<br>* விடைகளின் பொருத்தப்பாடு.<br>* உற்சாகத்துடன் செயற்படல்.<br>* குறித்த காலத்தில் சமர்ப்பித்தல். |
| 08. புள்ளித்திட்டம் (நியதிகளுக்கேற்ப) | : | * மிகநன்று - 4 புள்ளி<br>* நன்று - 3 ,,<br>* சாதாரணம் - 2 ,,<br>* விருத்தியடைய வேண்டும் - 1 ,, |

கருவி - 02

01. கணிப்பீட்டுச் சந்தர்ப்பம் - இரண்டாம் தவணை

02. உள்ளடங்கும் தேர்ச்சிமட்டம் - 3.3

03. கருவிக்குரிய பாடப்பகுதிகள் - கீர்த்தனை (மூலாதார மூர்த்தி)

04. கருவியின் தன்மை - செயன்முறைச் சோதனை

05. கருவியின் நோக்கம் -
* மத்யமகால கீர்த்தனையின் அமைப்பை விளக்குவார்.
* மூலாதார மூர்த்தி என்றும் கீர்த்தனையின் இராகம், தாளம், இயற்றியவர் பெயர்களை கூறுவார்.
* கீர்த்தனை அமைந்திருக்கும் இராகத்தின் ஆரோகண அவரோகணத்தைப் பாடுவார்
* "மூலாதார மூர்த்தி" - என்றும் கீர்த்தனையை இராக, தாளத்துடன் பாடுவார்

06. கருவியைப் பயன்படுத்தும் முறை பற்றிய ஆலோசனைகள் :-

ஆசிரியருக்கு -
* மாணவரைக் குழுவாகவோ, சோடி சேர்த்தோ தனியாகவோ பாடச் சந்தர்ப்பம் வழங்குக.
* பாடம் போது மதிப்பீட்டிற்குரிய நியதிகளுக்கேற்ப கணிப்பீடு செய்க.
* குழுநிலையில் அல்லது சோடியாக ஆற்றுகைப்படுத்தும் போது தனித்தனியான ஒவவொரு மாணவரது திறனையும் அவதானித்து மதிப்பீட்டிற்குரிய நிபந்தனைகளுக்கேற்ப கணிப்பீடு செய்க.

மாணவருக்கு :
* மூலாதார மூர்த்தி என்னும் கீர்த்தனையை இராக, தாளத்துடன் பாடிப்பயிற்சி செய்க.
* சரியான உச்சரிப்புத்தெளிவுடன் பாடலை மனனம் செய்க.
* பாடலை இராக, தாளத்துடன் பாடுக.

07. புள்ளி வழங்கும் நியதிகள் :
* தெளிவாக உச்சரிப்பார்
* இராகத்தோடு பாடுவார்
* சுருதியோடு பாடுவார்
* தாளம் போட்டுப் பாடுவார்
* மனனம் செய்து சரியாக ஒப்புவிப்பார்

08. புள்ளித்திட்டம் :
(நியதிகளுக்கேற்ப)

| | |
|---|---|
| * மிகநன்று | - 04 புள்ளி |
| * நன்று | - 03 ,, |
| * சாதாரணம் | - 02 ,, |
| * விருத்தியடையவேண்டும் | - 01 ,, |

**கருவி - 03**

01. கணிப்பீட்டுச்சந்தர்ப்பம் - மூன்றாம்தவணை

02. உள்ளடங்கும் தேர்ச்சி மட்டம் - 6.1

03. கருவிக்குரிய பாடப்பகுதிகள் - இந்தியாவின் 14 ஆம், 15 ஆம் நூற்றாண்டின் கர்நாடக இசையின் கலாசாரப்பின்னணி

04. கருவியின் தன்மை - வெளிக்களப்புத்தகம்

05. கருவியின் நோக்கம் -

* இந்தியாவின் 14 ஆம், 15ஆம் நூற்றாண்டின் கர்நாடக இசையின் கலாசாரப் பின்னணி தொடர்பாக விளக்குவார்.
* அக்காலப் பகுதியில் கர்நாடக இசையின் வளர்ச்சியினை குறிப்பிடுவார்.
* இசைவளர்ச்சியில் பங்கெடுத்தோர் பற்றிக் கூறுவார்.
* இந்தியாவின் 14 ஆம், 15 ஆம் நூற்றாண்டின் கர்நாடக இசையின் கலாசாரப்பின்னணி எனும் தலைப்பில் வெளிக்களப்புத்தகம் ஒன்றினைத் தயாரிப்பார்.

06. கருவியைப் பயன்படுத்தும் முறைகள் பற்றிய ஆலோசனை :

ஆசிரியருக்கு :

* வெளிக்களப்புத்தகத்தின் அமைப்புப்பற்றி விளக்குக.
  உ - ம் - புத்தக அமைப்பு
    - அட்டைப் படத்தினை தயார் செய்தல்
    - உள்ளடக்கம்
    - முகவுரை
    - நன்றியுரை ....................
* இந்தியாவின் 14 ஆம், 15 ஆம் நூற்றாண்டின் கர்நாடக இசையின் கலாசாரப்பின்னணி என்ற தலைப்பிற்கேற்ப தகவல்களைச் சேகரிப்பதற்கான ஆலோசனைகளை வழங்குக.
* தகவல்களுக்குப் பொருத்தமான படங்களை தேடிப்பெறல், கீறுவதற்கு நெறிப்படுத்துக
* சேகரித்த தகவல்களை ஒழுங்குபடுத்துவதற்கு ஆலோசனைகளை வழங்குக.
* ஒவ்வொரு மாணவரும் தனித்தனியாகச் செயற்பட வேண்டும் என்பதனைக் கூறுக
* கொடுக்கப்பட்ட காலஎல்லைக்குள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதனைக்கூறுக

| | | |
|---|---|---|
| மாணவருக்கு | : | * இந்தியாவின் 14ஆம், 15ஆம் நூற்றாண்டின் கர்நாடக இசையின் கலாசாரப்பின்னணி என்ற தலைப்பிற் கேற்ப எவ்வாறு தகவல் களைச் சேகரிக்க வேண்டும் என்பது பற்றிய ஆலோசனைகளை ஆசிரியரிடம் கேட்டறிக.<br><br>* வெளிக்களப்புத்தகத்தின் அமைப்பு பற்றியும் கேட்டறிக<br><br>* கால எல்லையை ஆசிரியரிடம் கேட்டறிக.<br><br>* ஒவ்வொரு மாணவரும் தனித்தனியாகச் செயற்பாட்டில் ஈடுபடுக.<br><br>* கொடுக்கப்பட்ட கால எல்லைக்குள் இந்தியாவின் 14 ஆம், 15 ஆம் நூற்றாண்டின் கர்நாடக இசையின் கலாசாரப் பின்னணி என்ற தலைப்பில் வெளிக்களப்புத்தகம் ஒன்றினைத் தயாரித்துச் சமர்ப்பிக்க. |
| 07. புள்ளி வழங்கும் நியதி | : | * தலைப்பிற்கேற்ப பொருத்தமான தகவல்களைச் சேகரிப்பார்<br>* ஆர்வத்துடன் விடயங்களைத் தேடிக் கொள்வார்<br>* நேர்த்தியாகப் புத்தகத்தை ஆக்குவார்<br>* தகவல்களில் நம்பகத் தன்மையைப் பேணுவார்<br>* குறித்த காலத்தில் சமர்ப்பிப்பார் |
| 08. புள்ளித்திட்டம்<br>(நியதிகளுக்கேற்ப) | : | * மிகநன்று - 04 புள்ளி<br>* நன்று - 03 புள்ளி<br>* சாதாரணம் - 02 புள்ளி<br>* விருத்தியடைய வேண்டும் - 01 புள்ளி |

කර්ණාටක සංගීතය 10 - (දෙ)
ගුරු මාර්ගෝපදේශ සංග්‍රහය

2010 / T / 10 / TIM / 2500